தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

பேராசிரியர் மலர்

15-4-55

Maximum light given.

மலர் 1 | 15—4—1955 | இதழ் 41 & 4

வாழ்த்தொலி

பெருகட்டும் !

நீங்கள் 'தென்றல்' இன்பத்தைச் சுவைத்தீர்கள்; தென்றல் உங்களையெல்லாம் அணைத்து மகிழ்ந்தது. இன்பத்தமிழ் தாங்கி, இலக்கியத்தின் புகழேந்தி, தென்புலத்தின் குரலொலிக்கும் தென்றலே வாழி வாழி என வாழ்த்தினீர்கள்! பலமுறை வாழ்த்தினீர்கள்! அதுகண்டு நாங்கள், பெற்ற பிள்ளையை-பேணிவளர்த்த திருமகனை-நானிலத்தோர் புகழக் கேட்டு பூரித்துப் பெருமைகொள்ளும் தாய்க்குலத்தைப்போல மகிழ்வுற்றோம் - மகிழ்வுறுகிறோம். இந்த முறை 'தென்றல்' உங்களை இறுகத் தழுவுகிறது. எழில்மேவி, எங்கெணும், கவின்மிகு கனிக்கொத்தும், கற்கண்டு கனிக்குழையும் பெற்று விளங்கிடும் சேர பூமியில் தோன்றி, செந்தமிழ் வளர்த்திட்ட நல்லிசைப்புலவன் - நாவன்மைமிக்கோன் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் தொண்டு கூறும் விளக்க இதழாக - அன்னவரின் புலமை சொல்லும் தமிழ்க் கருவூலமாக தென்றல் உங்களைத் தொட்டு மகிழ வந்திருக்கிறது. நீங்கள் தென்றலை மனமார வாழ்த்துவீர்கள்-மனச்சான்று சொல்லுகிறது! 'தமிழ்' மணம் வீசுகிறது; திருவிடத்தின்இலட்சிய மணம்வீசுகிறது 'என்றெல்லாம் புகழ்வீர்கள்-அதையும் நாங்கள் அறிவோம். அந்த வாழ்த்தொலி பெருகட்டும்!விலங்கு பூட்டப்பட்டிருக்கும் திருவிட மாதாவின் விடுதலைப்போருக்கான மறவர் படையைச் சேர்த்திடும் போர்ப்பணியில் தென்றலின் பங்கு வளரட்டும்!

மலர்

மலர் வெளியிட்டு. வரவையும், செலவையும் எடை போட்டுப் பார்க்கும் வாணிபநோக்கு தென்றலுக்கு என்றுமே இருந்ததில்லை. தென்றல் வாழ்வில் இதுவரை வரவுத்தட்டின் கனம் கூடியதும் கிடையாது. மலர்; இதழ்களின் வெற்றிக்குச் சின்னமாக அமையலாம். காலத்தால் புதைந்து, அல்லது கருமிகளால், கல்நெஞ்சக்காரர்களால் புதைந்துபோன தாயகத்தின் பண்பாடுகளை வெட்டி எடுத்து தரணிக்கு அள்ளித்தரும் நற்பணியாகவுமிருக்காலம். இதில் தென்றல் பேராசிரியர் மலர்' இரண்டாவது கருத்தின்படி பூத்த புதுமலராகும்.

அந்த இலக்கியங்கள்

பேராசிரியர் சுந்தரனார் யாத்த இலக்கியங்கள், காமக்குழம்பில் தோய்த்து எழுதப்பட்ட கடைத்தர நூல்களுக்குத் தீ மூட்டும் சக்தி பெற்றவை! கருகிப்போன அந்த ஏட்டுச்சுவடிகளின் சாம்பலை வெற்றித்திலகமாக இட்டுக்கொண்டு செங்கோலோச்சும் துறைத்தனத்தாரின் மன்றங்களிலே இருந்து தாயகத்தின் வாழ்விற்கு வாதிடக் கூடிய திறன்பெற்றவை! காலதேவனின் சிறுசிறு வினைகளால் கரைந்துபோன சான்றுகளை, தனக்கு சாதகமாக்கிக்கொண்டு 'ஆதாரம் காட்டு, ஆவன செய்வோம்' என்று பேசும் டில்லி மூல விக்ரகங்களின் காதுகளை செவிடுபடும்படி 'திருவிடம்' காட்டி தீர்க்கமான முடிவு கேட்கும் இலட்சியப் பெட்டகங்கள் பேராசிரியரின் கருத்தோவியங்கள்! முடியுடை வேந்தர் மூவராண்ட தமிழ்மக்கள் பண்பு, சுந்தரனாரின் இலக்கியங்களிலே புன்னகைபூத்து நிற்கின்றன. காவேரிக்கரையின் வளம், மதுரைப் பாண்டியரின் மாண்பு, சேரநாட்டு வீரம் இத்தனையும் சொல்லு[ம்] தென்னாட்டு வரலாற்றுப் புதைய[ல்]களாக அமைந்திருக்கின்ற[ன] அவரது நூல்கள்.

நாஞ்சில் வேண்டி அணிவகுத்[து] அறப்போர்க் களம்புகுந்தோ[ர்] நெஞ்சிலே குண்டுபாய்ச்சி, சந்தன [காட்டின்] 'காட்டின் வீதிகளிலே கொன்[று] வீழ்த்திய பட்டம்தாணுவின் 'கப்சி[...] தர்பார், நாளைவரும், இன்றே நாளை மறுதினம் வரும் என்[று] முன்கூட்டி எடுத்துரைத்த புரட்சி படைப்புகள் சுந்தரனாரின் [...] தனைச்செல்வங்கள்.

இதய ராஜா! இன்ப ரோஜா!

தன்கைப்பட்டு, கையிலே உருளும் சிற்றுளியின் கூர்பட்டு உருப்பெற்ற அந்தச்சிலையைப் பேசவைக்கும் சக்தி தன்னிடமில்லையே என அந்தச்சிலையின் சிற்பக் கலைஞன் வருந்தினுனா? மண்ணைப் படைத்த ஆண்டவனே, மனிதனைப் படைத்தான் எனப் புகழ் பாடித்திரியும் அந்தப் 'புத்திசாலி'களின் தயவைப்பெற்று பரமனின் 'கிருபாகடாஷம்' தேவை என வேண்டினுனா? இல்லை! ஒவ்வொரு அங்கத்திலும் உணர்ச்சி பாவங்களைத் தூவி அந்த சிங்காரச் சிலைகளை 'ரகசியம்' பேசும் காதல் புருக்களாக்கி விட்டான். முகப்புச் சித்திரத்தைப் பாருங்கள்; *இன்ப ரோஜாவே என்கிறான் அவன்; இதய ராஜாவே என்கிறாள் அவள்.*

"பூவையே, நான் உன்னை பூச்சூடத் தேடினேன். வாசமலர் வாடிப்போகும், ஓடிவா, ஓடிவா, என்றழைத்தேன். நெளிந்தோடி ஒளிந்து கொண்டாய்! உன்னிடை இப்போது என்னிடம்! என்ன சொல்கிறாய் வண்ணமயிலே!" இளைஞன் வர்ணிக்கிறான் இப்படி.

இதோ செந்தமிழ்க் காவியமாம், மனோன்மணீயம் கண்ட பேராசிரியர் சுந்தரனார் நடராசன் என்னும் பாத்திரம் வாயிலாகச் சொல்கிறார், பாருங்கள்!;

வாணீ! மங்காய்! வாழி நின்குணம்!
ஒருதின மிவ்வயி னுனையான் கண்டுழி
முருகவிழ் குவளைநின் மொய்குழற் சூட்டத்
தந்ததை யன்பாய் மந்தகா சத்தொடு
வாங்கியும்; மதியா தவள்போ லாங்கே
யோடுமவ் வாய்க்கால் நீரிடை விடுத்துச்
சிறுமியர் குறும்பு காட்டிச் சிரித்தனை
ஏதியா னெண்ணுவ னோவென வுடன்நீ
கலங்கிய கலக்கமென் கண்ணுள தின்றும்
அருங்கலை வாணீ! அறிவேன்! அறிவேன்!
உளத்தோ டுளஞ்சென் றென்றிடிற் பின்னர்
வியர்த்தமே செய்கையும் மொழியும்—

தமிழ்ப் பெருமக்கள்

சொல்லுகிறார்கள்

நுனிப்புல் மேய்வோரின் தீர்ப்[பு]களல்ல இவை. எங்கெங்கோ மு[...]கிக் கிடக்கும் பண்டைத்தமிழரி[ன்] எண்ணங்களை வடித்து நூலாக்[கித்] தரும் தமிழ்ப் பேராசிரியர் டாக்[டர்] மு. வரதராசனார் கூறுகிறா[ர்] சுந்தரனார் கருத்துக்கள் கால[ம்] கடந்துவாழும் கருத்துக்கள் என்[று] 'தமிழ் என் உயிருக்கு நேர்' எ[ன்று] மார்தட்டிப் பேசும் செந்தமி[ழ்] புலவர்களாம். டாக்டர் [...] மாணிக்கனார், பன்மொழிப்புல[வர்] கா. அப்பாதுரையார், அ. மு. பர[...] சிவானந்தம், கி. ஆ. பெ. விசு[வ]நாதம், கருமுத்து தி. சுந்தரம் 'மாசி', நா. பாண்டுரங்கன் ஆ[கி]யோரும் மற்றும்

பல தமிழ்ப் பெருமக்களு[ம்] மனோன்மணீயம் கண்ட சுந்த[ர]னாரைப் புகழ்கிறார்கள்; தமிழுக்[கு] இவர் செய்த தொண்டு குறித்[து] பெருமைப்படுகிறார்கள். அந்தகை[ய] மூதறிஞர்களின் நூற்றாண்டு விழ[ா]வுக்கு மலர் வெளியிட 'தென்றல்' கடமைப்பட்டுள்ளது என்றே நினை[க்]கிறோம்—தேவையுங்கூட. உலக[ம்] உள்ளவரை உயிருடன் வாழ[க்] கூடிய 'சிரஞ்சீவி' இலக்கியங்க[ளை] நமக்குத் தந்த அந்த இணையற்[ற] காவிய கர்த்தாவின் நினைவு மல[ர்] காலம் கடந்து உங்கள் கரங்களுக்[கு] வந்திருக்கின்றன; கல்லூரிகளி[ல்] தேர்வு நேரமாகையால் பேராசிரி[யர்]களெல்லாம் குறிப்பிட்ட தே[தி]களுக்குள் எழுதித்தர இயலாமை[யே] கால தாமதத்திற்கு மூலகார[ண]மென்பதை உங்களுக்கு சொல்லி[த்] தானாக வேண்டும். வருந்தற்க[!] வருந்தற்க!

மலர் நுகர்ந்து, மணத்தின்தர[ம்] கூறுங்கள்! முகஸ்துதிக்கு தென்றலில் இடமில்லை!

வாணியின் காதல்

Dr. மா. இராசமாணிக்கனார்
M.A.M.O.L.Ph.D

முன்னுரை

காதல் என்பது மணம் செய்து கொள்ளாத ஒருவன்-ஒருத்தியிடைத் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி; இவ்விருவர் உள்ளங்களிலும் காதலர் மாறி இடம் பெறுவர். அஃதாவது, காதலன் உள்ளத்தில் காதலி இடம் பெறுவாள்; இவ்வாறே காதலி உள்ளத்தில் காதலன் இடம் பெறுவான். தன்னைக் காதலனுக்கு அளிக்க வேண்டும் என்று காதலி நினைப்பாள். இவ்வாறே காதலிக்குத்தான் பயன்பட வேண்டும் என்று காதலன் நினைப்பான். சுருங்கக் கூறின், காதல் என்பது தன் உள்ளங் கவர்ந்த இளைஞனோடு ஒன்றி வாழத் தலைவியைத் தூண்டும் இயற்கை நிகழ்ச்சியாகும்; இங்ஙனமே இளைஞனையும் தூண்டும் இயற்கை நிகழ்ச்சியாகும். இதன் சிறப்பினைச் சங்க நூல்களில் பரக்கக்காணலாம்.

இக்காதலின்உண்மைத் தன்மையைப் பெற்றோர் பலர் உணராமல் பொய்யான கௌரவங்களை உளத்திற் கொண்டு, தம்மகள் விரும்பியவாறு மணம் முடிக்காமல், தாமே முயன்று வேறொருவனுக்கு மணம் முடித்தலும், தன் மனங்கொள்ளாத ஒருவனை மணக்க விரும்பாத பெண் தன் காதலனோடு ஓடி விடுதலும், அது முடியாதபொழுது தற்கொலை செய்து கொள்ளுதலும் சமுதாயத்திற் காண்கின்றோம். செல்வன் மகள் ஓர் ஏழையைக் காதலிக்கிறாள், இவ்வாறே செல்வன் மகன் எளிய பெண்ணைக் காதலிக்கிறான். காதலுக்கு உள்ள நெகிழ்ச்சி காரணமே தவிரச் செல்வமோ, சமுதாயத்திலுள்ள உயர்வு தாழ்வுகளோ, பிறவோ அல்ல. இந்த உண்மையைப் பெற்றோர் உணர்வதில்லை. "கைநிறைந்த பொன்னைவிட கண்நிறைந்த கணவனே மேல்." என்பதுதான் பெண்ணின் கவலை. அப்பெண்ணின் மனநிலை பெற்றோர்க்கு அமைவதில்லை. அவர்கள் சூழ்நிலையையும், பதவியையும் பிற ஆடம்பரங்களையுமே கவனிக்கின்றனர். கல்வியறிவும் மன உறுதியும் உடைய பெண்கள் தங்கள் மனக் கருத்தைச் சிறிதும் மறையாமல் பெற்றோரிடம் கூறிவிடுவர். அறிவுடைய பெற்றோர் அவர் விருப்பப்படியே நடப்பர். அந்நிலையில் அவளது மணவாழ்வு மணமுள்ளதாக ஒளிரும். தாம் நினைத்தபடியே நடத்த வேண்டும் என்னும் பிடிவாத குணமுள்ள பெற்றோர் புதியவனொருவனுக்குத் தம் மகளை மணமுடித்துவிடின், அம் மணவாழ்வு மணமற்ற மலர்போல ஒளி மழுங்கியதாக விருக்கும். அப்பெண் உணர்ச்சியற்றவளாய், நடைப்பிணமாய்வாழ்க்கை நடத்துவாளே தவிர வாழ்வரசிக்குரிய பொலிவுடன் விளங்கமாட்டாள். இந்நிலை வரும் பொழுது திருமணத்திற்கு முன்னரே காதலனும் காதலியும் ஓடிவிடுவர்; சிலர் தங்களை மாய்த்துக் கொள்வர்; சில பெண்கள் தம்மளவில் தற்கொலை செய்துகொள்வர். இந்நிகழ்ச்சிகளை நாம் நமது நாட்டிற் காண்கின்றோம். இலக்கிய அறிவும், பரந்த உலக அறிவும், எதனையும் எண்ணிப்பார்த்துச் செயலாற்றும் திண்மையும் பெற்றோர் பலரிடம் இல்லாமையே இச்சீர்கேடுகளுக்குக் காரணமாகும்.

தமது பெண் விரும்பும் காதலன் எச்சாதியானாயினும், எச்சமயத்தானாயினும் அவனுக்கு மணம் முடித்து வைத்தலே அறிவுடைப் பெற்றோர் கடமை. இக்கடமையுணர்ச்சியைப் பெற்றோர் உணர்ந்து நடப்பராயின் குடும்பத்தில் கணவன்-மனைவிப் போராட்டம், ஒழுக்கக் கேடு, கொலை, ஓடிவிடுதல் முதலிய இழி செயல்கள் மிகுந்த அளவு குறையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நிறைந்த கல்வியறிவும், பரந்த உலக அறிவும், உண்மை காணும் உள்ள உரமும், சமுதாய மூடக் கருத்துக்களுக்கு அஞ்சாத நெஞ்சமும் பெற்றோரிடம் தோன்றும் நாளில்தான் இக்குறைபாடுகள் நீங்கமுடியும்.

ஒரு பெண் ஓர் இளைஞனைக் காதலிக்கிறாள். அவள் தந்தை அவளை வேறொருவனுக்கு மணம் செய்விக்க விரும்புகிறான். இந்த ஏற்பாட்டைப் பெண் மறுக்கிறாள். அரசன் தந்தை வழி நிற்கும்படி மகளை வற்புறுத்துகிறான். அஞ்சாத நங்கை அரசனை மறுத்துரைக்கிறாள். தந்தை மகளை வெறுக்கிறான். இறுதியில் காதல் வெற்றி பெறுகின்றது. இந்நிகழ்ச்சி பேராசிரியர்,சுந்தரம் பிள்ளை எழுதியுள்ள மனோன்மணீய நாடகத்தில் ஒரு பகுதியாக வருகின்றது.

வாணி-நடராசன்

சீவகன் பாண்டிய நாட்டு மன்னன். குடிலன் முதலமைச்சன். சகடன் என்பவன் பாண்டியநாட்டுப் பிரபுக்களுள் ஒருவன். அவன் மகள் வாணி என்பவள். அவள் சிறந்த படிப்புடையவள்; பேரழகுடையவள்; வியத்தகு ஒழுக்கமுடையவள். இப்பெண்மணி பாண்டியன் மகளான மனோன்மணியின் உயிர்த்தோழி. இவள் நடராசன் என்ற இளைஞன்மீது காதல் கொண்டாள். நடராசன் சிறந்த அழகன்; நற்குணங்களுக்கு உறைவிடன்; எதனையும் எண்ணிப்பார்த்துச் செய்யும் ஆற்றலுடையவன்; பொறுமையில் மிக்கவன். இவனும் வாணியும் அடிக்கடி தனியே சந்தித்துப் பேசுதல் வழக்கம். ஒருவருள்ளத்தில் மற்றவர் குடிகொண்டு விட்டனர்.

தந்தையின் இடையீடு

சகடன் பணம் படைத்தவன்; பொய்யான கௌரவத்தை விரும்பியவன்; அதனால் குடிலன் மகனான பலதேவனுக்குத் தன் மகளைமணம் முடிக்க விரும்பினான்; இதனைத் தன் மகளிடமும் தெரிவித்தான். எதிர்பாராத் தந்தையின்முடிவைக் கேட்ட வாணி இடியோசை கேட்ட நாகம்போல நடுங்கினாள். அவள் அஞ்சா நெஞ்சினளாதலால் தன் தந்தையை நோக்கி, "அப்பா! என் உள்ளங்கவர்ந்தவர் நடராசன். ஆதலால், இனி ஒருவரையும் என் சிந்தையாலும் தொடேன். இது உறுதி," என்று ஆத்திரத்துடன் அறைந்தாள்.

அரசன் இடையீடு

தந்தை சகடன் அரசனைக் கொண்டு தன் மகளுக்கு அறிவுரை கூறத்துணிந்தான். அரசன் சீவகன் எடுப்பார் கைப்பிள்ளை; ஆழ்ந்த அறிவு இல்லாதவன்; எதனையும் எண்ணிச் செய்யும் ஆற்றல் அற்றவன். ஆதலால், அவன் சகடன் பேச்சைக் கேட்டு வாணியைச் சந்தித்தான். இவ்விருவருக்கும் இடையில் நடைபெறும் உரையாடலே இக்கட்டுரையின் உயிர்நாடிப் பகுதியாகும்.

மன்னன் :- வாணி! நலத்திலும் குலத்திலும் சிறந்த குடிலன் மகனான பலதேவனை மணக்க மறுப்பது ஏன்? பித்தனை மணக்க விரும்புகின்றாயே! உன் செயல் நகைப்புக்கு இடமாகும்.

வாணி :- பெருமானே, நாட்டையாளும் மன்னனாகிய உன்னிடம் என் மனநிலையை விரித்துக்கூற என்னிடம் இயல்பாக உள்ள நாணம் தடை செய்கிறது. ஆயினும் கூறுவேன், கேட்டருள்க. **காதல் வயப்படாத திருமணம் வாழ்க்கையின் அழிவுக்குத்தான் காரணமாகும்.**

மன்னன் :- பெண்ணே, நீ கூறுவது புதுமையாகயிருக்கின்றது. பெற்றோர் தம் பெண்ணுக்கு மணம் முடித்துவைப்பர். அப்பெற்றோர் சொற்படி நடந்துகொள்வதே பெண்கள் கடமை. பெற்றோர்க்கு மாறாக நடப்பது அறமாகாது.

வாணி ;- ஐயனே, காதலென்பது நாமாக ஆக்கிக்கொள்ளும் பொருளன்று. துன்பம் நிறைந்த இந்த உலகில் துன்புறும் ஆடவன் நெஞ்சம் குளிரச் செய்தும், தொழிலில் உண்டாகும் கவலையை ஆற்றியும், அவர்தம் நெறிமுறை காத்தும், முயற்சியில் சோர்கின்ற பொழுது ஊக்கம் ஊட்டியும் நற்றொண்டு செய்வது காதல். இக்காதல் இவ்வுலக இன்பத்துக்கு அளவுகோலாகும்; இல்லறம் என்பதற்கு நல்லுயிராகும். இரும்பும் காந்தமும் பொருந்தும் தன்மைபோல் இருவர் சிந்தையும் இயல்பாய் உருகி ஒன்றுபடுவதே காதலின் தன்மை. இக்காதல் ஒருவரால் ஆக்கப்படும் பொருள் ஆகாது.

மன்னன் :- இவையெல்லாம் யானறியேன்; பிஞ்சில் பழுத்த

(26-ம் பக்கம் பார்க்க)

வெள்ளை மெழுகு சீலை போர்த்தப் பட்ட வில்வண்டி கன்னி மாடத்தைவிட்டுப் புறப்பட்டது. அந்த வண்டியின் சக்கரங்களில், இரும்புப் பட்டாக்களுக்குப் பதிலாக ரப்பர் வளையங்களே பொருத்தப் பட்டிருந்ததால் மாடுகளின் குளம்படி ஒலிகளைத் தவிர வேறு எந்த ஓசையும் கேட்கவில்லை. கிறித்துவ மதத்தின் கத்தோலிக்கப்பிரிவைச்சார்ந்த அந்தக் கன்னிமாடத்தின் நான்கு இளம் பெண்கள் மட்டுமே அந்த வில்வண்டியில் அமர்ந்திருந்தனர். கன்னிமாடத்தின் தலைவி- திடீரென்று நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக இருக்கிறார்களே என்ற கவலையைக்கூட, ரோம் நாடு சென்று வந்த பாதிரி பரவசம் அவர்களைக் காணப் போகிறோம் என்ற மகிழ்ச்சி, கன்னிகா ஸ்திரீகளின் உள்ளங்களிலிருந்து அகற்றி விட்டது. கத்தோலிக்கர் வட்டாரத்தில் பேசப்படும் சொற்படி சொல்ல வேண்டுமானால், கர்த்தரின் தூதரைப் பார்க்கப் போகும் பேரின்பத்தில்தான் தலைவியைமறந்துபோனார்கள் அந்த நீலநிற அங்கி நேரிழைகள். ஒரு கையிலே கருப்பு உறை போட்ட பைபிள்; மற்றொரு கையிலே, கண்ணில்படும் சுவின்மிகு காட்சிகளைக்கருத்தோடுஇணைத்திடா வண்ணம் தடுத்திட ஜபமாலை! மின்னும் பந்தயக் குதிரைபோன்ற உடற் கட்டமைந்த அந்தப் பருவமங்கையர் ஆடாமல் அசையாமல் அமர்ந்திருந்தார்கள். புஷ்பாவும் அவர்களில் ஒருத்தி. 'கும்' என்ற சத்தத்தோடு வில்வண்டி ஓடிக்கொண்டிருந்தது.

★

'பொறுமைகூடாது; பேராசை தீது - இது பரமண்டலத்துப் பிதா

வின் போதனை' என்று இரவு பகல் இருபத்திநான்கு மணி நேரமும் உபதேசித்துவரும் அந்தக் கன்னி மாடத்திலேகூட பொறுமை குடியிருக்கத்தான் செய்தது. புஷ்பா என்றால் மற்ற பெண்களுக்கு நஞ்சுதான். கடித்துத் தின்பதைப் போல கடிந்து பேசுவார்கள். அவளுடைய பார்வையிலே ஏதோ சூது இருக்கிறது என்று பேசிக்கொள்வார்கள். புஷ்பாவின் மௌனத்திற்குப்புதுப்பொருள்காண்பார்கள். அத்தனை துன்பங்களையும் அவள் பொறுத்துக்கொண்டுதான் அந்தக் கன்னிமாடத்தில் 'இயந்திர வாழ்க்கை'யை மேற் கொண்டிருந்தாள். ஒன்றுவிடாமல் அத்தனை ...ண்டங்களையும் கன்னிமாடத்தின் ...லைவியிடம் சொல்லிவைத்தால் ...உடைய சகப்பெண்களுக்கு ...த்தான் என்பது புஷ்பாவுக் ...ரியும். ஆனால், மற்ற

கன்னிகாஸ்திரிகளைக் காட்டிலும் தான் அழகாக இருப்பதுதான் இவ்வளவு இடையூறுகளுக்கும் காரணம் என்பதையும் அவள் அறியாமலில்லை.

புஷ்பா, ஏன் எட்டி நின்று வீசும் அந்தச் சொல்லீட்டிகளைத் தாங்கிக்கொள்ள வேண்டும்? குடும்ப பாசத்திற்குக் கொள்ளி வைத்து விட்டு, அவள் ஏன் துறவிமடத்தில் சேர்ந்து அல்லலுற வேண்டும்? இளமையின் வனப்பைக் குன்றாது இழைத்துக் கொண்டிருக்கும் அவளுடைய நீண்ட கருங்கூந்தலுக்கு நீலத்துணியால் முக்காடு ஏன்? தங்கத்தகடு போன்ற நெற்றியை புருவத்தோடு சேர்த்து மறைத்துக் கொள்ள வேண்டிய அவசியமென்ன? அல்லி தர்பார் நடத்தக் கூடிய மிடுக்கிருந்தும் வாளுக்குப் பதிலாக வெள்ளியாலான சிலுவையல்லவா தொங்குகிறது! ஆரணங்கு இனியோ பாத்தரவின் அழகு இதழ்களைச் சுவைத்திட ஆயிரக் கணக்கான வைரங்கள் பதித்த சிங்காதனங்களை இழந்திடச் சித்தமாயிருந்த இளவரசுகளின் பிரேமை விளையாட்டுக்களைப் படிக்க வேண்டிய பருவத்தில் அப்போஸ் தலருடைய நடபடிகளைப் படிக்கிறாளே; சுவிசேஷச் சுவடிகளைக் கரைத்துக் குடிக்கிறாளே; என்ன காரணம்? கன்னிமாடத்தில் சேர்ந்த இந்த இரண்டு ஆண்டு காலத்திற்குள், இல்வாழ்வை மேற்கொண்டிருந்தவளானால் உலகப்பற்றில் எவ்வளவு ஊறி அமிழ்ந்திருப்பாள்! மாதா கோயிலின் மெழுகு திரியின் ஜோதியைத் தவிர இல்லறத்தின் ஜோதியை உணராதவளாக அல்லவா இப்போதிருக்கிறாள் புஷ்பா?

★

வில்வண்டி போய்ச் சேர வேண்டிய, அவர்களின் தேவாலயத்துக்கு வந்து விட்டது. சுற்றுவட்டாரத்து கிறித்துவமக்கள் திரளாகக் கூடியிருந்தார்கள். முப்பது வயதுக்கு மேற்படாத இளம் பாதிரி பரவசம் சிஷர்கள் புடைசூழ உபன்யாசம் செய்து கொண்டிருந்தார். புஷ்பா முன்னே இறங்க, அவளைத் தொடர்ந்து மற்ற பெண்கள் வண்டியைவிட்டு இறங்கினார்கள். பாதிரி; தன் மேலுதட்டை ஊஞ்சலாக்கிக் கொண்டிருக்கும் மீசையையும் இளந்தாடியையும் ஒருமுறை ஒதுக்கி விட்டுக்கொண்டார். பாதிரி பரவசத்தின் உபன்யாசம் கேட்பதற்காக கன்னிகாஸ்திரிகளுக்கு முதல் வரிசையில் இடம் ஒதுக்கித் தரப்பட்டது. புஷ்பா குனிந்த தலை நிமிரவில்லை. பாதிரியாரின் உபதேசத்திலும் அவள் நாட்டம் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. மேடு பள்ளமில்லாத ஓட்டமாங்கனியைப் போன்ற அவளுடைய நீண்ட அழகிய முகத்தின் இரு பக்கங்களையும் இறுக்கிக்கொண்டிருந்த நீலத்துணியின் 'மதக்' கட்டை தளர்த்தி விட்டுக்கொண்டிருந்தாள். அவளுடைய இடக்கரத்தின்கட்டைவிரலும், நடுவிரலும் அவளுடைய கன்னங்களுக்கும் துணிக்கும் இடையே போய் வந்து கொண்டிருந்தன.

மற்ற கன்னிகாஸ்திரிகள் வழக்கம்போலவே புஷ்பாவின் அமைதிக்குப் 'புதுப்பொருள்' காணும் ஆராய்ச்சியில் இறங்கிவிட்டார்கள்.

''மதம் அபின் என்று இங்கெல்லாம் மேடை அதிரப் பேசுகிறார்கள். அவர்களெல்லாம் ரோம் நகர் போய் பார்க்க வேண்டும். போப்பாண்டவரைப்பார்க்க'கிறிஸ்துமஸ்' தினத்தன்று எத்தனை லட்சம்பேர் கூடுகிறார்கள் என்பதை அவர்கள் ஒரு முறை நேரில் கண்டால் போதும். நிச்சயமாக அவர்கள் நம்மைத் தேடி ஓடிவந்துவிடுவார்கள்''

பாதிரி பரவசத்தின் பேச்சு இப்படி உச்சத்திற்குப் போய்க்கொண்டிருந்தது. சூழ்ந்திருந்த சூசை, ஆரோக்கியங்களின் முகத்தில் மகிழ்ச்சி கரை புரண்டு ஓடியது.

புஷ்பா இதையெல்லாம் கவனிக்கவில்லை. அவளுடைய அந்த இரண்டு விரல்கள், தன்னுடைய முகக்கட்டை அவிழ்த்துவிட்டன என்பதைக்கூட புஷ்பா தெரிந்து கொள்ளவில்லை. அவளுடைய நீல அங்கியில் கண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது மட்டும் வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிந்தது. ஆனால் அதையாரும் கவனிக்கவில்லை. எல்லோரும் ரோமாபுரியில் போப்பாண்டவரின் மதில் சுவர் ஓரத்தில் அல்லவா எண்ணத்தை விளையாட விட்டுக் கொண்டிருந்தார்கள்! எதிரே இருக்கும் புஷ்பாவா அந்தக் கண்களுக்குத் தெரியப் போகிறது! தெரியவே தெரியாது.

''புஷ்பா!!''—இப்படி ஒரு குரல் இரகசியமாக பக்கத்துப் பெண்ணிடமிருந்து வெளிவந்தது.

புஷ்பா நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை.

''புஷ்பா! புஷ்பா!''—மீண்டும்! ஆனால் கருநாகம் சீறுவதுபோல இருந்தது அந்தக் குரல்.

பாதிரி பரவசம் இந்தக் காட்சியை எப்படியோ பார்த்துவிட்டார். முன்னறிவிப்பின்றி உபன்யாசத்தை நிறுத்திவிட்டார். திடீரென்று ஏற்பட்ட அமைதி, கண்ணீர் சொரிந்து கொண்டிருந்த புஷ்பாவை நிமிர்ந்திடச் செய்து விட்டது. இவ்வளவு நேரமாக 'கணகண' வென வெண்கல மணி ஓசையென பிரச்சாரம் செய்துகொண்டிருந்த பாதிரியாரைப் பார்த்தாள் புஷ்பா. அதுவரை காத்திருந்த புஷ்பாவின் முக்காடு அவிழ்ந்து சரிந்துவிட்டது. ஊதப்பட்ட பலூனைப்போன்ற அவளுடைய கன்னத்தையும், கொம்பேறிமூக்கன் பாம்பைப்போன்ற நீண்ட தலை முடியையும் கண்டு பாதிரியார் மெய்மறந்தார். அவருடைய உதடுகள் அவருடைய இருதயத்திற்கு ஏதோ செய்தி சொல்லியனுப்பியது! என்ன அந்தச் செய்தி?

★

நடுநிசி! பாதிரி பரவசத்தின் உள்ளம் குழம்பியிருந்தது. ''பைபிளின் தத்துவத்தையே அலசிக் கொண்டிருக்கிறேன்'' என்று வெளிக்காட்டிக் கொண்டிருந்த சிந்தனை தோய்ந்த அவருடைய முகத்தில் கவலைக் குறிகள் முளைத்திருந்தன. படுக்குமுன் ஜபம் சொல்லி விட்டால் தலையைத் தலையணையில், சாய்ப்பதொன்றைத் தவிர வேறொன்றுமறியாதபாதிரிபரவசம் அன்று மட்டும் இரவு இரண்டு மணி வரை தூங்கவே இல்லை. பாவம், கல்லூரி வாழ்வெனும் கடந்தகால இன்ப நீர்ச்சுனையில் பரவசம் சிக்கித் தவித்தார். ''உலக இன்பம், உற்றார், உறவினர், இத்தனையும்

" பிரகதி "

துறந்து உன்னத வாழ்வை - தெய்வீக வாழ்வை மேற்கொள்ளலாமென்று எண்ணினேன்;இங்கேயும் வந்துவிட்டாள் புஷ்பா!'' இப்படி முணங்கிக்கொண்டே உலாத்தியவர் திடீரென்று ''சனியனே, புஷ்பா, இங்கே ஏன் வந்தாய்? நெஞ்சுப் புண்ணை ஆற்றி, நேர் வாழ்வைத் தொடங்கிய இந்தப் பரவசத்தைப் படுபாதாளத்தில் தள்ளப் பார்க்கிறாயா? புஷ்பா! புஷ்பா!'' என்று வாய்விட்டுக் கதறிவிட்டார். அப்போது யாரோ அறைக் கதவைத் தட்டினார்கள். மாதாகோயிலின்



காவல்காரனை மரியதாஸ்தான் இதையெல்லாம் ஒளிந்து நின்று கேட்டிருந்து ஓடிவருகிறானோ என்று பாதிரி பயந்துவிட்டார்: கௌரவம் காக்கப்பட வேண்டும் என்று எண்ணும்போது, யார் யாருக்குப் பயப்படுவது என்ற தராதரத்தை உலகத்தில் எவருமே பார்ப்பதில்லைதான். அந்தநேரத்தில் பெண்களை இழித்துரைக்கும் பேயன்கூட மனைவிக்குப் பயப்படுகிறான். அந்த நேரத்தில், பாட்டாளியின் வியர்வைக் கடலில் படகோட்டும் பணக்காரன் கூட வீட்டு வேலைக்காரனுக்கு அஞ்சிப் பதுங்குகிறான். அதுபோலத்தான் ஒரு நாளைக்கு ஆயிரம் தடவை தனக்கு மரியாதை செலுத்தும்மரியதாசுக்கு பாதிரி பரவசம் பயந்தார்! ஆனால் கதவைத் தட்டியது மரியதாசா? இல்லை!

ஆந்தைகூட அயர்ந்து விட்டிருக்கக் கூடிய அந்த நள்ளிரவிலே கதவைத் தட்டியது அவள்தான்—

(37-ம் பக்கம் பார்க்க)

கோலொடு நின்றான்

கி. ஆ. பெ. விசுவநாதம்

(1) "வேலொடு நின்றான்
இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு!"
என்பது திருக்குறளில் ஒரு குறள்.

(2) கல்வியைப்பற்றிக் கூறிப்பின் கல்லாமையைப் பற்றியுங் கூறியது போல வள்ளுவர் செங்கோன்மையைப் பற்றிக் கூறிப்பின் கொடுங்கோன்மையைப் பற்றியுங் கூறும் பொழுது இக்குறளை இரண்டாவதாகக் கூறியுள்ளார்.

(3) இதில் கோன்மை என்பது கோலின் தன்மை என்றாகி, அரசனது முறை செய்யுந் தொழிலைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

(4) கோடாத கோலைச் "செங்கோல்" என்றுங் கோடுங்கோலைக் "கொடுங்கோல்" என்றுங் குறிப்பிட்டு மன்னனது நன்முறையையும் வன்முறையையும் விளக்குவது ஒரு தமிழ்மரபு ஆகும்.

(5) மன்னன் கைப்பிடிக்கும் செங்கோலானது வணிகன் கைப்பிடிக்கும் துலாக்கோல்போல ஒரு பக்கமும் சாயாது நடுவுநிலையில் நிற்கவேண்டும் என்பது தமிழர் நெறி.

(6) தனக்குச் சேரவேண்டிய வரி அல்லாதபிறபொருள்களை மன்னன் மக்களிடத்தில் விரும்பிப் பெறுவது கொடுங்கோன்மையாகும் என்பது இக்குறளின் பொருள்.

(7) மன்னன் மக்களிடத்தில் பிற வழிகளில் கேட்டுப் பெறுகிற பொருள்களை "இரவு" என்று வள்ளுவர் இக்குறளில் குறிப்பிட்டுக் காட்டுவது அரசர்களது நெஞ்சத்தில் அம்பு கொண்டு எய்வதாக இருக்கிறது.

(8) மன்னன் மக்களிடம் கொடுங்கோன்மை யாற் பெற்ற செல்வம் எவ்வளவு உயர்வாக இருப்பினும், அது இரந்து பெற்ற இழிந்த செல்வமேயாம் என்பது வள்ளுவரது முடிவு.

(9) இரந்து பெறுகிற இழிகுணம் படைத்த ஒருவனைக் "கொடுங்கோலன்" எனக் கூறினாலும் அவனை மன்னனாக ஒப்புக்கொண்டதாக ஆகுமாம். ஆகவே, அவனை கொடுங்கோலன் என்று கூறாமல் வெறுங்கோலன் என்றேகூறியுள்ளதாகத் தெரிகிறது.

(10) உறுப்புகள் குறைந்துள்ள குருடும், நொண்டியும் ஊன்று கோல் கொண்டு நின்று புரியும் இரத்தல் தொழிலை வெறுங்கோல் கொண்டு நிற்கும் மன்னன் விரும்பிச் செய்வது வெறுப்பிற்கு உரியது என்று இக்குறள் கூறாமற் கூறுகிறது.

(11) கோலொடு நின்ற மன்னவன் மக்களிடம் பெறும் பொருளை "இரவு" என்று வள்ளுவர் சொல்லாற் குறிப்பிட்டு, கருத்தால் அதனைக் "களவு" என்று காட்டுவது கருதி மகிழவேண்டிய ஒன்று.

(12) கோல் கொண்டு நின்ற இத்தகைய மன்னர்களது கொடுஞ் செயலுக்கு காடுகளில் வேல் கொண்டு நின்று "இடு" வென்று கூறி வழிப்பறி செய்யும் கள்வரது கொடுஞ்செயலை இக்குறளில் உவமையாகக் கூறியிருப்பது நம் உள்ளத்தையெல்லாம் சுடுகிறது.

(13) "வேலொடு நின்றான்" என்ற சொற்களிலிருந்து அன்பு, அறம் முதலிய வேறு எதனொடும் நில்லாமை புலப்படுவதுபோல "கோலொடு நின்றான்" என்ற சொற்றொடரும் அறிஞர், அமைச்சர் முதலிய வேறு எவரொடும் நில்லாமையைப் புலப்புலப்படுத்துவது எண்ணி, எண்ணி வியக்கக் கூடியதாகும்.

(14) கொடாவிடில் துன்புறுத்துவோம் என்பதில் மட்டுமல்ல; "கொடுப்பதால் நன்மை ஏதும் கிடைக்காது" என்பதிலும்வேலொடு நின்ற கள்வனும், கோலொடு நின்ற மன்னனும் செயலொடு ஒத்து நிற்பது உய்த்துணரத் தக்கது.

(15) வேலொடு நின்றவன் முன்னும் கோலொடு நின்றவன் முன்னும் செல்வமொடு நிற்பதைக் காட்டிலும், வறுமையொடு நிற்பது நல்லது என்பது இக்குறளின் திரண்ட கருத்து.

(16) வேலொடு நிற்பவன் வாழும் காடும்; கோலொடு நிற்பவன் வாழும் நாடும் பொருளொடு நிற்பவன் வாழத் தகுதியற்றவை என்பது இக்குறளின் முடிவு.

(17) வேலொடு நிற்பவன் கொடுமை ஒருபொழுது மட்டுமே துன்பந்தரும். கோலொடு நிற்பவன் கொடுமையோ எப்பொழுதும் துன்பம் தரும். ஆதலின் கோலின் கொடுமைக்கு வேலின் வெம்மை ஏற்ற உவமையாக இல்லை என வள்ளுவர் உள்ளம் வருந்தியிருப்பதாகத் தெரிகிறது.

(18) இந்த உவமை பொருந்தாமையாலும் இதனினும் சிறந்த உவமை கிடைக்காமையாலுமே வள்ளுவர் இக்குறளில் "என்றது போலும்!" என ஐயப்பாட்டுடன் கூறியுள்ளார். இன்றேல் அவர் "என்றதுபோல" எனக்கூறியிருக்க வேண்டும்.

(19) உயிர்க்கு உடலாகவும், உடலுக்கு உயிராகவும் புவிமன்னர்களைக் கூறுவது கவிமன்னரது வழக்கு. ஆதலின் உடலை வருத்தும் வேலும் உயிரை வருத்தும் கோலும் இக்குறளிற் குடிகொண்டிருக்கின்றன போலும்!

(20) கோலைப் பிடிக்கவேண்டிய மன்னன் தன் பண்பை அடியோடு இழந்துவிட்டு வேலைப் பிடிக்கின்ற வேடனின் பண்பைப் பெற்றிருந்தாலும், அவன் மன்னனுமல்லன், மறவனுமல்லன், மனிதனுமல்லன் என்பதை இக்குறளாலும் நன்கறியலாம்.

(21) முறை செய்யும் மன்னவன் கொலை செய்யும் வேடனின் குணத்தைப் பெற்றுவிடுவானானால், கொடியோரைத் தேடித் தண்டித்து, நல்லோரைக் காக்கும் நற்றொழிலைச் செய்ய அவன் விரும்பமாட்டான் என்ற கருத்தும் இக்குறளில் மறைந்து காணப்படுகிறது.

(22) ஈகைத் தொழிலுக்குரிய மன்னன் இரத்தல் தொழிலில் புகுந்து மக்களிடம் விரும்பிக் கேட்டுப் பெறுகின்ற பொருளை **வழிப்பறிக்கொள்ளை** என்றுகுமானால், கொடாவிடில் துன்புறுத்துவேன் என அச்சுறுத்திப் பெறும்

பொருளை எதனோடு ஒப்பிடுவது? என்பதை எண்ணிப்பார்க்கத் தூண்டுகிறது இக்குறள்!

(23) கோலொடு நிற்கும் அரசர்கள் இன்று இல்லை. எனினும் கொடுமையொடுநிற்கும் அமைச்சர்களும், அதிகாரிகளும் இன்று உள்ளனர். அவர்கள், கோலொடும், வேலொடும், கொடுமையொடும் நிற்காமல் குறளொடு நிற்கவேண்டும் என்பது நமது ஆசை.

இவ் ஒரு குறள் இவ்வளவு பொருள்களைத் தருமானால், மற்ற 1329 குறள்களும் என்னென்ன தரும்? என்று எண்ணிப்பாருங்கள். எடுங்கள் குறளை! படியுங்கள் நன்றாக! சிந்தியுங்கள் ஆழ்ந்து! அவ்வளவோடு நின்றுவிடாதீர்கள்! செய்கையிலும் செய்துகாட்டி சிறப்பெய்தி வாழுங்கள். வாழட்டும் தமிழகம்!

சீன சரிதத்தில்

திராவிடம்

கி.பி. 630ல் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு மாமல்லன் தென்னாடு முழுவதையும் ஆண்டு வந்தான். அவன் ஆட்சிக் காலத்தில் சீனயாத்ரிகனான இயூன்-சங் கி.பி. 640ல் காஞ்சிபுரம் வந்து மாமல்லனை நேரில் பேட்டி கண்டான். அவன் தன்னுடைய குறிப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளான் என்று சீனாவின சரித்திரம் கூறுகிறது.

"காஞ்சிபுரமும் அதைச் சார்ந்த நாடும் திராவிட நாடாகும். திராவிட நாடு வளப்பமுள்ள பூமி. உழவுத் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. தானியங்களும், பழங்களும், மலர்களும் கிடைக்கின்றன. அப்பிரதேசம் வெப்ப மிகுந்தது. மக்கள் அஞ்சா நெஞ்சத்தினர். நம்பத் தகுந்தவர். உண்மை பேசுபவர். மக்கள் சேவையில் ஆர்வமிகுந்தவர். கற்றவர்கள் மிகவும் பெருமையாகக் கொண்டாடப் படுகின்றனர். பத்தாயிரம் பௌத்த சந்நியாசிகளும், ஏராளமான சைனர்களும் இருக்கின்றனர். வைதீக சமயக் கோயில்கள் நிறைய இருக்கின்றன. காஞ்சி மாநகரம் ஆறு கல் (மைல்) சுற்றளவுடன் பல்லாயிரக் கணக்கான மக்களையும், மாட மாளிகைகளையும் கொண்டு அழகாக அமைக்கப்பட்டு, சிறப்புற்றிருக்கிறது. அந்நகரில் பல பௌத்த மடங்கள் இருக்கின்றன."

பிரம்மசாரி

பிரம்மசாரியாக, உண்மையான பிரம்மசாரியாக நீ இருந்து பார்த்திருக்கிறாயா? வேறு ஓர் உயர்ந்த இலட்சியம் உனது உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, உன்னை அப்படியே விழுங்கி விடா விட்டால் பிரம்மசரியம் உன்னைக் கொன்றுவிடும். உன்னை மிருகமாக்கி, உனது உள்ளத்தைப் பேயாகச் சிதற அடித்துவிடும்.

— புதுமைப்பித்தன்

புதிய தமிழகத்தின் மூதாதை

பத்தொன்பதாம் நூற்றுண்டு தந்த தமிழ்ப் பேரறிஞர் - புதிய தமிழ்க்கலையின் பொன்னுர்ந்த தலையூற்று - இருபதாம் நூற்றுண்டின் தமிழக இயக்கங்களுக்கெல்லாம் மூலமுதல் தந்தை - அன்றே உலகம் போற்றும் மேதையாய் இருந்தும், தமிழகம் நின்று நின்று நினைந்து உரைத்தக்க அளவில் காலங் கடந்த அறிவு சான்ற பெரியார் - அவர் மரபில் வந்த புதிய தமிழகம், இன்று அவரதுபிறப்பின் நூற்றுண்டு நிறைவு விழாவின் போது அவர் பெரு வாழ்வை உள்ளவாறு உணர்ந்து மதிப்பிட்டு, அவர் நினைவால் தமிழகத்தின் வாழ்வு பெருக்க முன் வந்துள்ளது.

பலவகைச் சிறப்புக்குரிய அவரைத் தமிழகம் 'மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை' என்ற ஒரு தனிப் பெரும் சிறப்புப் பெயராலேயே இதுகாறும் அறிந்துவந்துள்ளது. ''நீராரும் கடலுடுத்த'' என்றுதொடங்கும் அவரது மனோன்மணீய நாடகத்தின் வணக்கச் செய்யுள், ஒரு நூற்றுண்டாகத் தமிழரின் மறு மலர்ச்சிப் பாடலாக, தமிழர் புதிய தேசியப் பாடலாக நாடெங்கும் உலவி வருகிறது. தமிழகம் முழு நிறை தன்னுட்சி பெற்றுத் தனித் தேசிய இனமாக, தன்னினமாகிய திராவிட இனச்சூழலிடையே தனிநாயகமாய் வீறுடன் அமையும் காலம் நெடுந் தொலைவில் இல்லை. அன்று அப்பாடலே தமிழினத்தின் முதல் விடுதலைப் பண்ணுகவும், முதன்மைத் தேசியப் பண்ணுகவும் இயங்கும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இத்தேசியப் பண்ணைத் தந்த அவரே எவரையும் விட முனைப்பாகப் புதிய தமிழகத்தின் தந்தை; விழிப்புற்ற தமிழினத்தின் மூல முதல்வர் ஆவார்.

பேராசிரியர் சுந்தரனுர் இற்றைக்குச் சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்னுல் 1855-ம் ஆண்டு ஏப்ரல் 4 தேதி வட திருவாங்கூரிலுள்ள ஆலப்புழை என்னும் நகரில் பிறந்தார். அவர் தந்தை அந் நகரில் அறுவை வணிகராய்ச் சிறந்த பெருமாள் பிள்ளை என்பவர். பள்ளிப் படிப்பின் போதே அவர் தந்தையிட மிருந்து திருக்குறள் முதலிய தமிழ் நூல்களைப் பயின்றுர். தம் 16-வது ஆண்டில் ஆலப்புழை ஆங்கிலப்பள்ளியில் முதல்வராகத் தேர்ந்து அது முதல் மாத வாரி உபகாரச் சம்பளம் பெற்றுர். அவர் உயர் படிப்பு திருவனந்தபுரம் அரசினர் கல்லூரியில் தொடர்ந்தது. கலை இளைஞர் (பி. ஏ.) தேர்வில் அவர் திருவனந்தபுரத்தில் முதல்வராகவும், சென்னை மாநிலத்தில் நான்காமவராகவும் தேறி, அரசினர் கல்லூரியிலேயே வரலாறு, ஆங்கிலம் ஆகிய இரண்டும் கற்பிக்கும் உரைவாணர் (லெக்சரர்) ஆனுர்

தம் 22-வது வயதில் சுந்தரனுர் சிவகாமி அம்மையார் என்னும் நங்கையை மணந்தார். அவர் புதல்வர் நடராசனுர் இன்று அவர் புகழ் மரபு காப்பவராவர். திருமணத்தை அடுத்து அவர் திருநெல்வேலி இந்து உயர்தரப்பள்ளித் தலைவராக ...ர்வுபெற்று, அந்நகரில் அயராது ...ழைத்தார். அவர் முயற்சியால் ...ளி இரண்டாந்தரக் கல்லூரி ...ர் வுற்று, இன்று மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரி, திருநெல்வேலி, என்னும் பெயருடன் முதல் தரக் கல்லூரியாய் இயங்குகிறது.

இரண்டு ஆண்டுகள் சென்றபின் 1879ல், அவர் மீண்டும் திருவனந்தபுரம் வந்தார். அரசினர் கல்லூரியில்மெய்விளக்கத்துறைப்பேராசிரியராயிருந்த (Professor of Philosophy) திரு ஹார்வி இங்கிலாந்து சென்றதால், அவர் பதவியில் அமர்ந்து தொண்டாற்றினுர். இந் நிலையிலேயே 1880-ல் அவர் பல்கலைக் கழக உச்சநிலைப்படியான கலைமன்னர் (எம். ஏ.) பட்டம் பெற்றுர். ஐந்தாண்டு இப்பணியாற்றிய பின் அரசர் ஆதரவால் உயர் அரசியல் பணியேற்று சிலகாலம் இருந்து, மீண்டும் அரசினர் கல்லூரிப்பணிக்கு வந்தார். திரு. ஹார்வியைப் போலவே கல்லூரி முதல்வர் திரு. ராஸும் தாய் நாடு சென்றதனுல், அவர் இருவர் பணியும் ஏற்றுர்.

ஜெர்மன் பல்கலைக்கழகமொன்று (காட்டிங் ஹாம் பல்கலைக் கழகம்) அவரை வர வழைத்துச் சிறப்பித்து மெய் விளக்கத்துறை முனைவர்(டாக்டர் அவ் ஃவிலாஸஃவி) பட்டம் வழங்கிற்று. இலண்டனில் மன்னுரிமை வரலாற்றுக் கழகம், மன்னுரிமை ஆசியக் கழகம் ஆகியவை அவருக்குத் தம் உறுப்பினர் பதவிகள் (F. R. H. S; M. R. A. S.) வழங்கின. சென்னை அரசியல் அவருக்கு நன்மதிப்புப் பட்டம் வழங்கிற்று. சென்னைப் பல்கலைக் கழகம் வரலாறு, மெய்விளக்கம், தமிழ்த் துறைகளில் அவரைத் தேர்வாளராகக் கொண்டது.

1897 செப்டம்பர் 11ல் தம் 42-வது வயதில் பேராசிரியர் திடுமென உலகவாழ்வு நீத்தார்.

உலக அரங்கிலும் பிறமொழியிலும் அறிவு நூல் துறைகளிலும் அன்று இந்தியாவிலேயே முதல் வரிசையிடம் வகித்தவர் பேராசிரியர் சுந்தரனுர். ஆனுல் இன்று தமிழகம் அவரைப் போற்றுவதற்கு அவர் தமிழ்ப்பணியும் தமிழினப் பணியுமே காரணமாகும். நெல்லையில் வாழ்ந்த காலத்தில் சுந்தர முனிவர் என்பவரிடத்திலும், சிலகாலம் நாகப்பட்டினத்தில் மறைமலையடிகளாரின் ஆசிரியரான நாராயணபிள்ளையிடத்திலும் தமிழ் அறிவு பெற்றுர். அத்துடன் மனோன்மணீயம் என்ற ஒப்பற்ற நாடகக்காப்பியத்தையும் நூற்றொகை விளக்கம் என்ற புத்தறிவு நூலையும் திருநெல்வேலியில் 1877ல் தொடங்கி, திருவனந்தபுரத்தில் 1880-ல் முடித்தார். இரண்டும் அவர் சீரிய தமிழ்ப் புலமையையும் காலங்கடந்த அவர்அறிவாராய்ச்சித் திறனையும், கலைத்திறனையும் காட்டுகின்றன. தவிரதிருவாங்கூர்மன்னர் வரலாறு, தமிழ் மொழி வரலாறு ஆகிய இரண்டு துறைகளிலும் ஊக்கம் செலுத்தி, அத்துறை ஆராய்ச்சிகளால் அவர் அரசியலாராலேயே நன்கு மதிக்கப்பட்டார். தமிழகத்தில் அறிவியல் (விஞ்ஞான) அறிவு பரப்ப அவர் அரசியலார் ஆதரவு பெற்று ஒரு சொற் பொழிவு மன்றம் அமைத்து, அதில் அத்துறை அறிவை வளர்த்தார். நூல் தொகை விளக்கம் இக்கழகத்தில் அவர் ஆற்றிய சொற் பொழிவுகளின் தொகுப்பு வடிவமேயாகும்.

தமிழ் மொழி, இலக்கியம், தமிழக வரலாற்றுராய்ச்சிகளுக்கு பேராசிரியரின் திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி முதல் அடிப்படைக் கல் நாட்டிற்று என்னலாம். அது 1895-ல் புத்தக வடிவமாக வெளியாயிற்று. இக்கட்டுரையும், திருவாங்கூர் மன்னர் கால ஆராய்ச்சி, பத்துப் பாட்டு ஆராய்ச்சி ஆகியவையும் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் மாத வெளியீட்டிலே முதலில் வெளிவந்தன.

தனித் தமிழின் தந்தை, திராவிட இயக்கத்தின்வழிகாட்டி என்று புகழப்படத் தக்கவர் மறைமலையடிகள். அவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எழுப்பிய தமிழார்வத்தின் ஒரு இளைப்பிழம்பேயாவர். ஒரே ஆசிரியரிடம் இருவரும் படித்த தொடர்பை முன்னிட்டும், அடிகளின் சொல்லாண்மை, அறிவாண்மைகண்டும், பேராசிரியர் அவரைத் திருவனந்தபுரத்துக்கு அழைப்பித்து ஆதரவு தந்தார். சிலகாலம் அடிகளைத் திருவாங்கூரிலேயே ஒரு பள்ளியில் தமிழாசிரியராக அமர்வித்தபின், அவரைச் சென்னைக் கிருஸ்தவக் கல்லூரித் தமிழாசிரியராக்க உதவினுர். அடிகளும் பேராசிரியருடைய மரபும் கருத்தும் பேணி, அவர்புகழை வளர்க்கும் இருபதாம் நூற்றுண்டுத் தூதராக விளங்கினுர். நாட்டை மறவாத நல்லறிஞரை நாடு மறவாமல் பேணிய பெருமை இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் அடிகளுக்கே உரியது.

மனோன்மணீய நாடகம் ஷேக்ஸ்பியரைப்பின்பற்றி இயற்றப்பட்ட ஒரு தலைசிறந்த தமிழ் நாடகம். பண்டை நாடகக் காப்பியமான சிலப்பதிகாரம் ஒருசேர இளவரசனுலேயே பாடப்பட்டது. அடுத்த ஒரு தமிழ் நாடகக் காப்பியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கிப்பால் அதே சேரநாட்டில் வாழ்ந்த பேராசிரியர் இயற்றிய மனோன் மணீயமேயாகும். தமிழுக்கு முன்னது எத்துணை பழம் பெருமையும் அருமையும் உடையதோ, அதே அளவிற்கு மனோன் மணீயம் புதுப்பெருமையும் அருமையும் உடையது. ஏனெனில் சிலப்பதிகாரம் அழிந்த முத்தமிழ்க்குச் சான்று. மனோன்மணீயம் வரவிருக்கும் புதிய முத்தமிழின் சின்னம்.

அறிஞரும் கலைஞரும் அருமையாக வழங்கிய திராவிடம் என்னும் சொல்லையும் 'மொழிப் பெயராக மட்டும் வழங்கிய தமிழ் என்னும் சொல்லையும் தமிழினத் தேசியக் கொடிகளாக வானளாவ உயர்த்திய பெருமை மனோன்மணீயம் ஆசிரியருக்கே உரியது. நூலினகத்தும் ஆசிரியர் தமிழகப்பற்று, நாஞ்சில் நாட்டு வருணனை, தாம்பிரவர்ணிப் புகழ் விருதுரைகள் ஆகியவை இலக்கியச் சிறப்புடனும் நாடகச் சிறப்புடனும் வீறு பெற்றுள்ளன. தவிர ஆசிரியர் தம் ஆசிரியரான சுந்தர முனிவர், ஆசிரியத் தந்தை, மனைத்தக்கமாண்புடையதம்மனைவி அவா ஆர்வ மிக்க தம் புதல்வர் ஆகியோரைத் தம் நாடகப் பேழையிலேயே அழகுச் சித்திரங்களாக்கிப் பெருமைப் படுத்தியுள்ளார். தம் கல்லூரி ஆசிரியரான ஹார்வி பெயரைத் தம் இல்லத்திற்குச் (ஹார்வி புரம்) சூட்டியதுடன் நில்லாது மனோன்மணீயத்தையும் அவருக்கே படையல் செய்துள்ளார்.

மனைவி பெயராலான சிவகாமி சரிதம் என்ற உட்காவியம் இனிய மனோன்மணீய நாடகக்கனியின் ஒரு இனிமை செறிந்த காவியச்சுளை ஆகும்.

பேராசிரியர் வளர்ந்த காலத் தமிழகம் ஒரு பிற்போக்குத் தமிழகம். யாழ்ப்பாணத்துப் பெருந்தமிழர் ஆறுமுக நாவலர், சென்னைப் பெருந்தமிழர் வடிவேலுச் செட்டியார், திரு. வி. கலியாணச்சுந்தரனுர் போன்றவர்கள் கூட வள்ளலாரின்புதுத்தமிழ் அருட்பாவையும் அவர் சமயச் சீர்திருத்த ஆர்வத்தையும் எதிர்த்து ஆங்கிலேயர் வழக்கு மன்றமேறிய காலம் அது. அப்பழைய அறிஞர் மரபு திருத்த ஒரு மறைமலையடிகளை உருவாக்கிய பெருமையும், அவர் வழி பெரியார் ஈ. வே. ரா., அறிஞர் அண்ணு ஆகியவர் வகுத்த புதிய தமிழகத்துக்கு வழி செய்த பெருமையும் பேராசிரியரையேசாரும். வாழ்க அவர் கனவு கண்டு இன்று நனவாகிவரும் தமிழகம்! வளர்கஅவர் வித்திட்ட வண்ணக் காவிய இலக்கிய நறுஞ்சோலை!

★

பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரை. M.A.L.T

காலம் கடந்து வாழும் கருத்துக்கள்

அறுபத் தைந்து ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட நாடக நூல் மனோன்மணீயம். அதன் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை வாழ்ந்த காலத்தில் இக்காலத்து அரசியற் கருத்துக்கள் பல இருந்ததில்லை. நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் அவ்வளவாகப் போற்றப்படாத காலம் அது. ஆயினும், இன்றைய தமிழ் மக்கள் உணர்ந்து போற்ற வேண்டிய அரசியற் கருத்துக்கள் பல இந்நூலில் உள்ளன. அதன் இலக்கியச் சுவை, தத்துவ விளக்கம், வாழ்க்கை அனுபவம், நீதிக் கருத்துக்கள் முதலியவை போற்றத்தக்கனவாக இருப்பது போலவே, அந்நூலில் உள்ள அரசியற் கருத்துக்களும் உணர்ந்து போற்றத்தக்கவைகளாக உள்ளன. அவற்றைக் கற்கும் போது, ஆசிரியர் சுந்தரம் பிள்ளையின் தொலை நோக்கும் தெளிவும் உணர்ந்து வியப்புறுகிறோம்.

நாடகத்தில் பாண்டிய வேந்தனைக் காண்கிறோம். அவன் பெயர் சீவகன்; அவனுக்கும் சேரனுக்கும்

டாக்டர் மு.வரதராசனார்

போர் நேர்கிறது. போர்க்கு ஏற்பாடுகள் நடக்கின்றன. சீவகன் தன் படை வீரர்களுக்கு ஊக்க மூட்டி வீர முழக்கம் செய்கிறான். "நம்முடைய தமிழ் மொழியைக் காப்பது நம் கடமை அல்லவா ? சுதந்தரம் அற்று வாழும் அற்பரிடம் அகப்பட்டு வருந்துமாறு தமிழ்மொழியை விடுவோமா ?" என்று முழங்குகிறான்.

விந்தம் அடக்கினேன் தந்தநல் தமிழ்மொழி
தற்சுதந் தரம்அறும் அற்பர் வாய்ப் படுமோ ?

இவ்வாறு பாண்டியன் சொன்னதைக் கேட்ட படை வீரர்கள்,

தமிழ் மொழிக்கு ஜே! ஜே!!

என்று ஆரவாரம் செய்கின்றனர்.

வேந்தன் தொடர்ந்து பேசும் போது. "தமிழ் மொழி நமக்குத் தாய்மொழி. பழமை உடையது, பெருமை உடையது, உரிமை உடையது, புகழ் உடையது நம் தாய் மொழி. நீங்கள் குழந்தைகளாக இருந்த போது, உங்கள் அன்னையர் உங்களுக்கு உறக்கம் வருமாறு பாடித் தாலாட்டியது இந்தத் தமிழ் மொழியில் தான். முன்னோரின் தீரத்தையும் அரியசெயலையும் வீரத்தையும் அன்பையும் அந்தத் தாலாட்டுப் பாடல்களில் அமைத்துப் பாட, நீங்கள் கண்ணீர் ததும்பக் கனிவுடன் கேட்டது இந்தத் தமிழ் மொழிதான். இந்தத் தமிழ்மொழியால் இப்போது ஆற்றல் இழந்து விட்டோம் என்றும் தோற்று விட்டோம் என்றும் சொல்லத் துணிவோர் யார்?" என்கிறான்.

பழையோர் பெருமையும் கிழமையும் கீர்த்தியும்
மன்னிய அன்பினும் அன்னையர் பாடி
நித்திரை வரும்வகை ஒத்தறுத்து உமது
தொட்டில்தா லாட்ட அவ் விட்டமாம் முன்னோர்
தீரமும் செய்கையும் வீரமும் பரிவும்
எண்ணி இருகணும் கண்ணீர் நிறையக்
கண்துயி லாதுநீர் கனிவுடன் கேட்ட
வண்டமிழ் மொழியால் மறித்திக் காலம்
'ஆற்றிலம் ஆண்மையும் உரிமையும் ஒருங்கே
தோற்றனம்' எனச்சொலத் துணிபவர் யாவர் ?

இந்த வீர மொழிகள் இன்றும் தமிழரின் உள்ளங்களைத் தட்டி எழுப்ப வல்லனவாக உள்ளன. ஒருவர் ஒருவரைக் கண்டால் பிற மொழியில்பேசுதலும், தாய்மொழியில் பேசினால் மதிப்புக் குறைவு என்று எண்ணுதலும், தாய்மொழியில் அறிவுக் கலைகளைக் கற்க முடியாது என்று தயங்குதலும், தாய் மொழியில் ஆட்சி நடத்துவதற்கு அஞ்சுதலும் முதலான தவறுகள் இன்னும் அடியோடு நீங்காமல் உள்ள இந்தத் தமிழர் சமுதாயத்திற்கு இவை இன்றும் தக்க அறிவுரைகளாக-இடித்துரைகளாக இருக்கின்றன.

மற்றோர் இடத்தில் பாண்டியனுடைய தூதன் சேரனுடன் பேசுவதாக உள்ளது. அப்பேச்சில் இக்காலத்து அரசியல் கருத்து ஒன்று அமைந்துள்ளது. திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தில் தமிழர் வாழும் பகுதி ஒன்று உள்ளது. அதற்கு நாஞ்சில்நாடு என்றுபெயர். அந்தப் பகுதி தமிழ் நாட்டோடு சேர வேண்டும் என்பதற்காகச் சில ஆண்டுகளாக இயக்கம் நடந்து வருகிறது. சென்ற ஆண்டில் அங்கே குழப்பம் விளைந்ததும், துப்பாக்கியாட்சி நடந்ததும், அதன் காரணமாக அமைச்சர் குழு மாறியதும் அங்குக் கண்டோம். திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தார் தமிழ்மக்களைப் புறக்கணித்தும் பழித்தும் வருவதனால், அவர்களை விட்டுப் பிரிய வேண்டும் என்ற முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மனோன்மணீய ஆசிரியர்க்கு இது அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே தெளிவாக விளங்கியிருந்தது. நாஞ்சில் நாடு என்னும் தமிழ்ப் பகுதியைப் பாண்டிய நாட்டோடு சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர் தம் நாடகத்தின் இடையே இந்தத் தூதுப்பேச்சில் அமைத்து வற்புறுத்திச் சென்றுள்ளார். தமிழர் மலையாளிகளைப் பார்த்துக் கேட்பது போல் அமைந்துள்ளது அந்தப் பகுதி:-

.... மன்னவா நீஆள்
வஞ்சிநா டதற்குத் தென்கீழ் வாய்ந்த
நன்செய் நா டென்றொரு நாடுள தன்றே ?
எங்கட்கு அந்நாடு உரித்தாம் அங்கு
பரவு பாடையும் விரவும்ஆ சாரமும்
நோக்கில் வேறொரு சாக்கியம் வேண்டா.

நாஞ்சில் நாட்டில் (நாகர் கோவில் பகுதியில்) பழகிய மொழியையும் அம்மக்களின் பழக்க வழக்கங்களையும் ஆராய்ந்தால், அந்தப் பகுதி தமிழ் நாட்டோடு சேர வேண்டும் என்பதற்கு வேறு சான்றுகள் தேவையில்லையாம்.

இவ்வாறு இன்றைய அரசியல் கருத்தை அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முந்திய நூலில் காணும் போது, நூலாசிரியரின் அறிவின் திறனை மிகப் போற்ற வேண்டியுள்ளது.

ஷேக்ஸ்பியர் போன்ற பெரும் புலவர்களின் நாடகங்களில் காலம் கடந்து வாழும் கருத்துக்கள் பல நிறைந்திருக்கக் காண்கிறோம். இத்தகைய கருத்துக்களை நாடகத்தில் வரும்அரசன் ஆண்டிகோமாளிபித்தன் முதலான எவர் வாயிலாக வாவது அமைப்பது நூலாசிரியர்களின் திறமையாகும். பாத்திரம் யார் என்று பாராமல், ஆசிரியரின் கருத்துக்கள் என்ன என்று அறிந்து அவற்றைப் பாராட்டுவது கற்பவரின் கடமையாகும். ஷேக்ஸ்பியரின் நாடகங்களைக் கற்று அவைபோன்ற இலக்கியச் செல்வத்தைத் தமிழுக்கு அளிக்க வேண்டும் என்று தொண்டு ஆற்றிய சுந்தரம் பிள்ளையும் இவ்வகையில் நல்ல வெற்றி பெற்று விளங்குகிறார்.

வாழியவே!

தீந்தமிழ்ச் செல்வம்! திராவிடர் நன்னூல் மனோன்மணீயம்
ஈந்து; தமிழின் சிறப்பினை ஈந்து; தமிழ்க்கிளையாம்
ஆந்திரம், கன்னடம், ஆளம், துளுவம் அவற்றிற்கெல்லாம்
வேந்தாம் தமிழென் றுரைத்தவர் நம்மரும் சுந்தரமே?

உள்ளம் இனிக்கும்! இனிக்கும் உடலுயிர்! தேன்கலந்த
வள்ளுவன் பாடல்! மறுவற ஓதி உணர்ந்தவர்கள்
கொள்ளார் தமிழில் புகுந்த மறுநூல் எனவுரைத்த
வள்ளல் கவிக்கடல் சுந்தரம் நீள்புகழ் வாழியவே!

கன்னித் தமிழைத் தமிழின் வளத்தைப் படையெடுத்த
புன்மொழி ஆரியம் பேச்சற் றொழிந்தது; நந்தமிழோ
எந்நிலை ஏற்றும் இளமை குறையா திருக்குமென்று
சொன்னார் கவிக்கடல் சுந்தரம் நீள்புகழ் வாழியவே!

நம்மின மூச்சும் உயிரும் உடலும் திராவிடமாம்!
இம்மியும் சோரோம்; கலங்கோம்; பெறுவோம்
என உரைக்கும்
செம்மலாம் அண்ணா அவர்கள் குறிக்கோள்
செழிக்குமுன்னே
தம்மினம் வாழ நினைத்தவர் நீள்புகழ் வாழியவே!

தீந்தமிழ் வாழ்த்தித் திராவிடம் வாழ்த்தித் திராவிடத்தைச்
சூழ்ந்த பகையாம் வடவர் தொடர்பைத் துணிந்திடித்து
வேந்தர் மடியில் வளர்ந்த தமிழின் விருதுநாட்டி
மாய்ந்தார்நம் சுந்தரம் பிள்ளை; அவர்புகழ் வாழியவே!

கவிஞர் வாணிதாசன்

மனோன்மணீயம்

தமிழ்நாட்டு முடிசூடி ஆண்ட முத்தமிழ்க்குலம் இன்று இல்லை. எனினும் சேரர் குலம் சாவாநிலையில் ஓரளவு உயிர்ப்பு கொண்டு உலவி வருகின்றது. சோழரும் பாண்டியரும் வாழ்ந்த வழியும் அறியக் கூடாத வகையில் மறைந்தொழிய, சேரநாட்டில் மட்டும் திருவாங்கூர் அரசர் பரம்பரை இன்றளவும் வாழ்வது கண்டு, மலையாளிகளைக் காட்டிலும் தமிழர்களாகிய நாம் மகிழ வேண்டியவர்களாகின்றோம். 'வென்வேலான் குன்றில் விளையாட்டு அகலேன் யான்' என்று அன்று கண்ணகி உரைத்துத் தங்கிய மலைநாட்டுப் பகுதி இன்று மலையாள மொழி வழங்கும் தனிநாடாக மாறினும், அன்று கன்னித்தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக அது இருந்ததை அறியாதார் யார்? ஆம்!

பேராசிரியர்
அ.மு. பரமசிவானந்தம்

அந்தத் தமிழ்ப் பகுதியில் அன்று பல புலவர்கள் தோன்றிப் பைந்தமிழைப் பாவாலும் நயத்தாலும் பண்பாட்டாலும் போற்றி வளர்த்தனர். சேரநாட்டு இளங்கோவடிகள் பரம்பரை இன்னும் செத்துமடியவில்லை என்பதைக் காட்ட இன்று நம்முன் காவியம் தந்த-நாடகக் காப்பியம் எழுதித் தந்த-பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் வாழ்ந்து மறைந்தார்கள்.

சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ் உலகில் என்றும் நிலைத்த இடம் பெற்றுவிட்டார்கள். 'மனோன்மணீயம்' என்ற ஒரு நாடகக் காப்பியம் அவரை என்றும் வாழச் செய்து விட்டது. அந்நூல் வெறும் கற்பனைக் கதையாக மட்டும் இருந்தால் அவரை நாம் போற்றியிருக்க மாட்டோம். காதலும் வீரமும் மட்டும் கலந்திருந்தாலும் நாள்தோறும் [illegible]வை இரண்டும் நாம் பலப்பல [illegible]களில் கண்டவைதானே [illegible] கவலையற்றிருப்போம். [illegible]வர்கள் வெறும் கதையினை-காதலும் சோகமும் வீரமும் வஞ்சமும் விரவிய வகையில் எழுதிச் செல்லவில்லை. அவர் தம் நூலின் வாயிலாகத் தமிழனுக்கு வாழ வழிகாட்டுகின்றார். தமிழினம் என்றும் ஒன்றுபட்டு வாழத் தேவையான நல்ல நெறி காட்டும் நூல் அவர்தம் மனோன்மணீயம். இரண்டு தமிழர்கள் மாறுபட்டுப் போரிழைக்கும் வகையில் கலாம் விளைத்தான் வஞ்சகன் குடிலன். மாறுபாட்டு நெறியிலே சென்றவர்தாம் இருபெரு வேந்தரும். எனினும் அம்மாறுபாட்டுக் காழ்ப்பிலே தாம்கலந்து வாழமுடியும் என்ற உண்மையையும் மறக்கவில்லை. தமிழ்ச் சமுதாயத்தைப் பிளக்கச் சதி செய்யும் வஞ்சகக் குடிலக் கொள்கையைஅவர்கள்வீழ்த்த முன் நின்றனர். தம் மாற்றான் தமிழன் என அறிந்து அவனிடம் பகைகொண்டு சாடுவதனினும், அப்பகைக்கு அடிப்படை எங்கே என்று கண்டு, தம்மைப் பிரிக்கச் சதிசெய்யும் குடிலஅடிப்படையைக் களைந்து வாழ்வதே சிறந்தது என்பதைப் பிள்ளை அவர்கள் தெள்ளத் தெளியக் காட்டுகின்றார்கள். இன்றைய தமிழ்ச் சமுதாயத்துக்கு வேண்டும் உண்மை நெறி அதுவன்றோ! தமக்குப் பொதுவாக உள்ள மாற்றானை மறந்து சிறுசிறு வேறுபாடுகளின் காரணமாகத் தமக்குள் வேறுபாட்டினை மேலும் வளர்த்துத் தாமே தம்மைக் கெடுத்துக்கொள்ளும் வகையில் தானே இன்றைய தமிழ்ச் சமுதாயம் சென்றுகொண்டிருக்கிறது. எத்தனை பிணக்குகள் நாட்டிலே! ஒரு சிறு வேறுபாடு தோன்றினாலும் அதற்காகத் தலைவர்கள் உட்பட, சாதாரண மக்கள் வரையில் தம்முள் பகைமை பாராட்டி மாறுபட்டு நிற்பதைக் காண்கின்றோமே! அந்த வேறுபாட்டில் 'குடிலர்'கள் கூத்தடித்து வாழ்கின்றார்கள். இந்த நிலை மாறி, 'எல்லோரும் தமிழர்' என்னும் உள்ளம் நாட்டில் பரவி, அனைவரும் உளம் ஒன்றி வாழ வேண்டுமானால், சுந்தரம் பிள்ளை அவர்தம் நாடகம் நம் வாழ்வில் அமைந்து, வழிகாட்டியாக நாம் அதைப் பெற முயல வேண்டும். இத்தகைய நல்வழி காட்டிய பேராசிரியர் புகழ் வாழ்க என்று வாழ்த்துவோம் நாம்.

மற்றும் அவர் நூலின் தொடக்கத்திலே கூறியுள்ள தமிழ்த்தாய் வாழ்த்து தமிழர் வாழ்விலேயே புத்தொளியை உண்டாக்கிவிட்டது. அன்னை தமிழையும் தெய்வமாகப் போற்றும் பண்பு நாட்டின் பழையதாயினும், அதைப் பிள்ளையவர்கள் போற்றும் முறையே சாலச் சிறந்தது. கடவுளுக்கு இணையாகத் தமிழைக்காட்டி, தான் படைத்த உலகும் பிறவும் நிலை மாறினும் தான் நிலைமாறாதிருக்கும் கடவுளைப் போன்று, கன்னித்தமிழ் தன்னிடைப் பிறந்த பிறமொழிகளெல்லாம் கலந்தும் சிதைந்தும் நிலைமாறியும் நிற்பினும் தான்மட்டும் இளமைகுன்றாவகையில் சிறந்திருப்பதை விளக்கும்போது தமிழர் தம்மை மறந்து தாமே தமிழாகஅமைகின்றனரன்றோ!

ஆம்! அந்த வாழ்த்துக்கிடையிலே தமிழ் நூல்களை எண்ணி எண்ணி அவற்றின் ஏற்றத்தைப் பாடும்போது, 'ஆகா' என்று இன்பக் கண்ணீர் பெருக்கும் தமிழர் வாழ்வு நாம் காண்பதன்றோ.

'வள்ளுவர் செய்திருக்குறளை
வழுவற நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி'

என்ற அடிகளைப் பாடும்போது தமிழர் தம் பரந்த பண்பாடும் சீரும் சிறப்பும் நம்மை நிமிர்ந்து நடக்கச் செய்யவில்லையா! இது போன்று இன்னும் பல நலங்கள் நூல்வழிச் செல்லின் காணலாம். இன்றைய தமிழ்ச் சமுதாயத்தை-உறங்கிய தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பிய பெருமை 'மனோன்மணீய' ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு உண்டு. தமிழ் வாழும் வரையில்-தரணிவாழும் வரையில்-அவர் புகழ் வாழும்! 'வாழ்க சுந்தரம் பிள்ளை, வளர்க அவர் தம் கருத்துக்கள்' என்று கூறி எழுத்தை முடிப்போம்.

கலாதேவிக்கு அமலன் அணிவிக்கும்
மூன்றுவது பொற்சரம்
சேஞ்சியின் செல்வன்
(தேசிங்கு ராஜன் சரிதை நாடக உருவில் செஞ்சி வரலாறு, கோட்டை வர்ணனையுடன்)
வண்ண முகப்பு. அழகிய பதிப்பு விலை ரூ 2—4—0
இலக்கியப் பூங்கா
17, கஸ்தூரிபாய் வீதி பண்ருட்டி S. A Dt

ஏழைகள் வாழ்த்துகிறார்கள்!
தொழிலாளிகள் புகழ்கிறார்கள்!!
பவானி சிட்பண்ட்ஸ்
REGD: 827.
தினசரி-வார-மாத சீட்டுகள் வெற்றிகரமாக நடைபெறுகின்றன
விவரங்கட்கு நிர்வாகி, 151, பிராடீஸ் ரோடு, சென்னை-4.

விரைவில் வருகிறாள்!
பவானி
நிர்வாக ஆசிரியர்: T. N. இராமசாமி
ஆசிரியர்கள்: M. K. நாதமணி, தன: நடராசன்
தித்திக்கும் திங்கள் ஏடு!
செந்தமிழ் பாடும் சிங்கார ஏடு!!
விவரங்கட்கு:
நிர்வாகி,
151, பிராடீஸ்ரோடு, மைலாப்பூர்.
சென்னை-4.

மறக்க முடியாது

தமிழ்மொழி மிகவும் தொன்மையான மொழி. பாரதியார் இம்மொழியை ஆதிசிவன் பெற்ற மொழி என்று கூறுகிறார். சிவபெருமான் தமிழை உண்டாக்கினர் என்று கூறுவதுகூட சரியல்ல என்றே நாம் கருதவேண்டும். ஆண்டவன் எவ்வாறுஆன்மாவைப் படைக்கவில்லை என்பதைச் சிவநெறி ஒத்துக்கொள்ளுகிறதோ, அதுபோலவே தமிழையும் ஆண்டவன் படைக்கவில்லை என்படதே உண்மை. கம்பன் இக்கருத்துக் கொண்டே "என்றுமுள தென் தமிழ்" என்று கூறினன்.

தமிழ்மொழி தொன்மையான மொழி என்பது மட்டுமல்ல, ஒரு காலத்தில் உலக முழுதும் பரவியிருந்த ஒரு மொழி என்று மேலைநாட்டு அறிஞர்கள் இன்று கூறக் கேட்கிறோம். நன்ருகச் செய்யப்பட்ட மொழி என்ற பொருளில் சமஸ்கிருதம் என வடமொழி கூறப்படுகிறது. மனித இனத்தில் உயர்ந்தவர்களே அறிந்து இன்புற வேண்டுமென்று செய்யப்பட்ட மொழியாதலால், அதனைத் "தேவ பாஷை" என்று கூறினர். எல்லா மக்களும் அறிந்து இன்புறும் மொழியான தமிழை "மானுஷ பாஷை" என்று கூறுவர். "தேவ பாஷை"யான சமஸ்கிருதம் (வடமொழி) நாளடைவில் பிராகிருத மொழியாயிற்று. பிராகிருதம் என்ருல் சிதைவுபட்ட மொழி என்று பொருள். அது அசோகன் காலத்தில் பாலி மொழியாகி விட்டது. சமஸ்கிருதம் இன்று வடநாட்டிலுள்ள பல மொழிக்கும் தாய்மொழியாக இருக்கிறது. இவ்வாறு மக்கள் பேசும் பல மொழிகளைத் தோற்றுவித்தபின் அது வளரும் திறம் இழந்துவிட்டது. அதனையொத்த தலைமையும் தொன்மையுமுடைய தமிழ் தன்னின் வேருகப் பல மொழிகளைத் தோற்றுவித்தபோதிலும், இன்றும் என்றும் வளர்ந்தோங்கும் தன்மை வாய்ந்ததாயிருக்கிறது.

இறைவன் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை. ஆகையால் அவனைப் "பிறப்பிலி" என்று சங்கச் சான்றோர் கூறுவர். இளங்கோவடிகளும் சிவனைப் "பிறவா யாக்கைப் பெரியோன்" என்று கூறுகின்ருர். அந்த எல்லையறு பரம்பொருளைப்போல, தமிழும் "அநாதி" என்று கண்டனர் பலர்: தமிழின் பிறந்திறவா வன்மையையும், மற்ற மொழிகளின் பிறந்திறக்கும் தன்மையையும் கண்டார், ஒரு தமிழ்த்தாயின் தவப்புதல்வர். அவர் வேறு யாருமல்லர். நூறு ஆண்டுகளுக்குமுன், திருவிதாங்கூர் நாட்டில் தோன்றி மேன்மையுற்ற பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள்.

திருவிதாங்கூர் ஆதிகால முதல் மிக்க அன்மைக்காலம் வரையில், தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகவே இருந்து வந்ததென்பதும், மூவேந்தர்களுள் ஒருவரான சேரரின் ஆளுகைக்குட்பட்டுச் சேரநாடுஎன்று பெருமை பெற்றிருந்ததென்பதும் யாவரும் அறிந்தவை. சேரன் தம்பி சிலம்பிசைத்த அந்த நாட்டிலே, பிறந்த சுந்தரம் பிள்ளையவர்கள் "மனோன்மணீயம்" என்ற ஒரு மணியாரத்தைச் செய்து வான்புகழ் கொண்டார். சுந்தரம் பிள்ளை "வான்புகழ்" கொண்டார் என்று என் கூறுகிறோம் என்ருல், அவர் அப்பெரு நூலை இயற்றிய பின், பல காலம் வாழவில்லை. இந்நூல் வெளிவந்த பின் ஆறு ஆண்டுகளே அவர் உயிருடனிருந்தார்! இவர் "மனோன்மணீய"த்திற்குப்பின் பெருநூல்கள் வெளியிடவில்லையாயினும், "திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி", "திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி" முதலியவற்றை வெளியிட்டு, டாக்டர் போப், சி. வை. தாமோதரம் பிள்ளை முதலியவர்களின் பாராட்டுக்களைப் பெற்ருர். இவருடைய ஆராய்ச்சித் திறனையும், நாடக நூல் இயற்றும் ஆற்றலையும், பத்துப் பாட்டு, திருக்குறள், திருவாசகம் போன்ற நூல்களில் உள்ள ஈடுபாட்டையும், தமிழ் உணர்வில்லாத பாவி மக்கள் கண்டால் கண்ணேறுபடுமென்ருே என்னவோ அவரை நாற்பத்தி இரண்டாவது ஆண்டிலேயே கூற்றுவன் கட்டிச் சென்ருன்போலும்! ஒரு நூருண்டுகளுக்குமுன் சுந்தரம் பிள்ளை அவர்கள் பிறந்தார். 58 ஆண்டுகளுக்குமுன் அவர் இப்பூத உடலைவிட்டு புகழுடம்பு எய்தினர். மனிதர்கள் பிறப்பதும் இறப்பதும் நாம் நாளும் காண்பது. ஆனுல் சுந்தரம் பிள்ளை அவர்கள் தக்காராய் இன்றும் நம்முடனே வாழும் அமரராகிவிட்டார். ஒருவர் தக்கரா தக்கவரல்லரா என்பதை அவர் விட்டு வைத்த பொருள்களைக் கொண்டு அறிந்துகொள் என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகின்ருர். "மனோன்மணீயம்" என்னும் மாணிக்கத்தைத் தந்து அவர் தக்கவராகிவிட்டார்.

"விதியே! தமிழ் இனத்தையும், மொழியையும் என்ன செய்யக் காத்துக்கொண்டிருக்கிருய். ஒரு பதினுயிரம் சனிவாய்ப்பட்டு அழிந்து வருகிறதே" என்று நெஞ்சு வெதும்பி, இந்த அவலநிலை என்று மாறுமோ என்று ஏங்கிய தமிழ்ப் பெருமக்களுக்கு ஆறுதல் மொழிகளைக் கூறினர். பத்துப் பாட்டின் இலக்கணக் கற்பனையும், திருக்குறளின் தெளிவு, பொருளாழம், கருத்தழகு முதலிய சிறப்பும் மலங்களைக் கரைத்து மனக் குற்றங்களைப் போக்கும் திருவாசகத்தின் செம்மையும் காட்டித் தமிழுக்கு எல்லை ஒன்று இல்லை என்றும், தமிழர் இனம் அமரத் தன்மை வாய்ந்தது என்றும் உறுதியுடன் கூறினர்.

பல உலகையும், மக்கள் கூட்டத்தையும் உண்டாக்கி நிலைபெறுவித்து முடிவில் அழிப்பதைத் தொழிலாகக் கொண்ட இறைவனைப்போல், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளை ஈன்றெடுத்த தமிழ்த்தாய், தன் இளமை மாருமல் கன்னியாகவே வாழ்ந்து வருகிருள். வடமொழியைப்போல பல மொழிகளைப் பெற்றெடுத்தும், வளர்ச்சி குன்ருமல் இன்றும் உலகிலே வளர்ச்சியுடன் நம்மிடையே வாழ்ந்து வருகிருள், நம் தமிழ் அன்னை. அந்தத் தமிழ் அன்னைக்கு ஒரு சிறு விரல் அணியாக "மனோன்மணீயம்" என்ற நூலைச் சுந்தரம் பிள்ளை அவர்கள் கொடுத்தார்.

"மனோன்மணீயம்" என்னும் நூல் ஆங்கில மேதை ஷேக்ஸ்பியர் நாடகம் போன்று மிகவும் சிறந்து உளது. லிட்டன் பிரபு ஆங்கிலத்தில் இயற்றிய "மறைவு வழி" (Secret Way) யைப் பின்பற்றி எழுதப்பட்ட இந்நூலில், கோல்டுசுமித் என்பார் ஆங்கிலத்திலே "பிரயாணி" (Traveiler) என்ற பாடலை யொட்டி, சிவகாமி சிதம்பரம்கதையை இடையில் சொருகியுள்ளார். ஆங்கிலக் கதைகளை யொட்டி எழுதப்பட்ட போதிலும், தமிழ் வழக்குத் தவருமல் தமிழர் பண்பாட்டிற்கு ஏற்ப, மிகவும் அழகாகத் திரு. சுந்தரம் பிள்ளையவர்கள் தமது நூலை இயற்றியுள்ளார்.

"கனவிற் கண்டது நனவில் எய்துதல், தேவர்க்காயினும் இசைதல் செல்லாது"என்பர் பழையோர். "கனு முந்துருத வினையில்லை" என்பர் முன்றுறையரையர். இவர்களுள் பின்னவர் கருத்தை மேற்கொள்வர் நமது சுந்தரம் பிள்ளை. கனவிலே காணும் பொருளும் மனிதர்க்கு கிட்டும் என்பது அவர் கண்ட தத்துவம். கனவு உலகத்திலே இருப்பவர்கள் புலவர்களும், விஞ்ஞானிகளும். அவர்களுடைய கண்களுக்கு, நாம் காணுதவற்றைக் காணும் திறன் உண்டு. எவ்வாறு கனவிலே கண்ட பெண்ணுன "மனோன்மணீயை" புருஷோத்தமன் அடைகின்ருனோ அதுபோலவே கனவிலே கண்ட இலட்சியங்களைப் பெருமக்கள் அடைகின்றனர். "ஆனந்த சுதந்திரத்தைப்"பாரதியார் அன்று கனவிலே கண்டார். நாம் இன்று அச்சுதந்திரத்தை உண்மையாகவே பெற்றுவிட்டோம். விஞ்ஞானிகள் கண்ட பல கனவுகள் இன்று உண்மையாகி வருவதையும் நாம் காண்கின்ருேம். இந்த உண்மையைக் கருதியே வள்ளுவப் பெருந்தகையும், எண்ணியவர்களுடைய உள்ளம்திண்மையாக இருக்குமானுல் கனவும் பலித்துவிடும் என்று கூறுகிருர்.

மக்கள் இனம் நல்ல வழியிலே சென்று நற்பயனையடைய வேண்டுமென்றுதான் நினைக்கின்றது. ஆனுல் சூழ்நிலையும், சந்தர்ப்பங்களும் மனித இனத்தை நல்வழியினின்று பிறழ்ந்து போகச் செய்துவிடுகிறது. ஆனுல் உள்ளத்துள் பொய்யாது வாழ்கின்றவன் இந்த நிலையினின்று விடுபட்டு வாழ்வாங்கு வாழும் செந்நெறியில் வந்து சேருகிருன். இக்கருத்தைச் சுந்தரம் பிள்ளை அவர்கள் மிகவும் தெளிவாகவும், அழகாகவும் "சிவகாமி சிதம்பரம்" கதையில் கூறுகின்ருர். உண்மைக் காதலின் உயர்வை அறியாமல் சிவகாமி, சிதம்பரனை மறந்தாள். ஆனுல் சிதம்பரத்தின் தூய காதல் அவளை நன்னெறிப்படுத்தி, அவளை அவனிடம் சேர்ப்பித்தது. மண்ணிலே நல்லவண்ணம்வாழ்வதற்கு மாசற்ற காதல் தேவை என்பதை உணர்ந்தாள் சிவகாமி. உலகியலிலே காதலர் இருவர் கருத்தொருமித்து நல்வாழ்வு வாழ்வதற்கு இடையூருகப் பல இடையீடுகள் வருகின்றன. ஆனுல் மெய்க்காதல் இவைகளையெல்லாம் வென்று வெற்றிபெறும் என்பதைக் காட்டுவதுதான் இலக்கியத்திலும் நாடகத்திலும் நாம் நாளும் காண்பது. இக்கருத்தைத் தத்துவ ஆசிரியர்கள் இறைவன்பால் ஏற்றிக் கூறுவர். இறைவனிடம் ஆன்மா சென்றடைவதற்குப் பல இன்னல்கள் வந்து சேரும் என்றும் அந்த இன்னல்களையெல்லாம் கடந்தால் "அந்தமில் இன்பத்து அரசாள் வேந்தாக வாழலாம்" என்றும் கூறுவர். சுந்தரம்பிள்ளை அவர்கள் தத்துவப் பேராசிரியர் ஆதலால் எல்லாவற்றையும் தத்துவக் கண்கொண்டே காண்கிருர். ஆனுல் நாம் உலகியலிலேயே அவர் காட்டும் உண்மைகளை நன்கு தெரிந்து கொள்ளவேண்டும்.

காதல் பாதை கரடு முரடானுலும், காதலர் இருவரும் எவர் பெரியர், எவர் சிறியர் என்று வேற்றுமை எண்ணுமல், வேற்றுமையில் ஒற்றுமையுற வாழ்ந்து நற்கனவுகளைக் கண்டால் உலகிலே நன்மை பெருகும். இக்குறிக்கோள் ஒன்றையே கருதி, சுந்தரம் பிள்ளை அவர்கள் தம் நூலை இயற்றியுள்ளார். அவருடைய குறிக்கோள் மேலானது. "எத்திசையும் புகழ் மணக்கத் தமிழ் அணங்கு" வாழ வேண்டுமென்று அவர் கனவு கண்டார். பஞ்சபூதத்தின் நுட்பம் கூறும் புத்தம் புதிய கலைகளுடன் தமிழ்மொழி மேன்மையுற வேண்டும் என்பது சுந்தரம் பிள்ளை போன்ற பெருமக்களின் பேரவா. சதுர்மறை ஆரியம் வருமுன் தமிழேஉலகமொழியாகஇருந்தது. தேன்போன்ற தமிழோசையை மீண்டும் உலகமெலாம் பரப்ப வேண்டும் என்று அவர் கருதினர். தெளிந்த தமிழ்அமுதத்தின் சுவையைக் கண்டார் அமரர்களுடைய சிறப்பைப் பெறுவார்கள். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது தமிழ்ப் பண்பாடு. உலகம் முழுதும் தமிழின் அருமையையும், எளிமையையும், தொன்மையையும், வன்மையையும் எடுத்துக்காட்ட வேண்டும். இவ்வாறு செய்யத் தவறினுல் நம்மைத் தமிழர்கள் என்று நாம் கூறுதற்கு உரிமையில்லை.

சுந்தரம் பிள்ளை அவர்களின் நூற்ருண்டு விழா நாளாகிய இந்நாளிலே, நாம் அவருக்குச் செய்யக் கூடிய கைம்மாறு, அவர் கண்ட கனவுகளை நனவில் உருவுபெற உறுதியுடன் உழைப்பதேயாகும். வையத்துள் வாழ்வதற்கே ஒரு இலக்கணமாக வாழ்ந்து வானுறையும் தெய்வமாகக் காட்சியளிக்கும் திரு. பிள்ளை அவர்கள் நமக்கு உறுதுணையாயிருந்து, எடுத்துக் கொள்ளும் முயற்சியிலே அயர்ச்சி நேரும்போது உள்ளத்தின் ஊன்று கோலாய் உணர்வு தந்து, நம தமிழ் புவிமிசை என்றும் பெற நின்று வாழ வழி யரு ராக.

வாழ்க சுந்தரம் பிள்ளை!

> "மாசி"

நாட்டிய ராணி

"கலை அரசி! சோலையிலே ஆடும் மயில்போல ஆடி என் சிந்தையைக் கவர்ந்தாய். ஆட்டத்தில் எனை மறந்தேன் சுந்தரி. ஆடும் உன் பாதத்தைத் தாங்கும் அரங்கமாக நானிருக்கக் கூடாதா யென்று கலங்குகிறேன் கண்ணே! ஒளி சிந்தும் முகத்தாளே.....ஒய்யாரி— பேசாத வாயால் சிரித்துக்கொல்லுகிருயே! அந்தத் தாக்குதலைத் தாங்கும் இரும்பு நெஞ்சு எனக்கில்லை இதயராணி! அங்கங்களை நெளித்துவிடுகிருய்......தங்கத்தின் சொலிப்போ? பிரமை தட்டுகிறது சிங்காரச்சிலையே!...இந்த கலைத் தேவிக்கு என்ன பரிசு தரப்போகிறேன் தெரியுமா?"

"காவியம் பாடும் ஓவியரே! என்ன பரிசு தரப்போகிறீரோ?"

"என்னையேதான் பரிசாகத் தரப்போகிறேன். வைரத்தை வாரித் தரலாமாவென்று சிந்தித்தேன். அது உன் சொக்கவைக்கும் புன்னகையைவிட தரத்தில் குறைந்தது தானென்ற முடிவுக்கு வந்தேன். நட்சத்திரங்களைக் கோர்த்துப் பாதச் சிலம்பாக்கிஆடும் அழகுக்காலுக்குப் போடலாமென்ருலோ......அதுகூட விழிவீச்சின் முன்னே நில்லாதே! சிந்தித்தேன்...சிந்தித்தேன் எதையுமே தருவதைவிட என்னையே காணிக்கையாகத் தர முன்வந்தேன். முல்லைக்கொடியாளே! வேதனை தரும் வெண்ணிலவு வேல் விழியே, உனை நெருங்கத் துரத்துகிறது."

"இவ்வளவுதானு! முடிந்ததா காவியம்?"

"பொன்னழகி! முடிவுகட்டி நீயாக மட்டப்படுத்துகிருயே. முடியாத தொடரோவியம் கண்ணே உன் புகழ்க்காவியம். பாடத்தெரியாத என்னைக்கூடப் பாட வைக்கிறது உன் பார்வை. சோலைக் குயிலின் இன்னிசையிலும், கோல மயிலின் நாட்டியத்திலும், கூத்தாடும் மலர் வகையிலுந்தான் இன்பம் பூத்துக்கிடப்பதாக கலைக் கனவு கண்டுகொண்டிருந்தேன். இப்போதோ என்எழிலோவியத்தை இங்கே காணுகிறேன்."

"அன்பு உங்கள் நெஞ்சைப் புகழ் பாடவைக்கிறது. அன்பரே! நான் சாதாரண ஒரு நாட்டியக்காரி செய்யும் காரியத்தைத்தானே செய்கிறேன்."

"சாதாரண நாட்டியப்பெண்ணுக்கும், கலைத்தேவியாகிய உனக்கும் நிறைய வித்தியாசமிருக்கிறது கண்ணே! நாட்டியப் போர்வை ...ன்றுதான். ஆனல், பாவங்கள் ...று வேறு! ரோஜா செடியிலே ...தம்வரை மலர் என்றுதான் ...கப்படுகிறது. ஆனல் அதே ...ன்ருகச் சேர்த்துக் கட்டப் ...மாலை என்றுதானே அழைக்கப்படுகிறது. அன்பே! தீக்காட்டிலே உலவியவனுக்கு சோலை வனத்தின் குளிர்ச்சி இப்போது தான் கனியே தெரிகிறது. கரடு முரடான பாதையிலே நடந்து வந்தவன்...கண்ணுடித் தரையிலே நடை பயிலுகிறேன். சோலை மலரே! உன் ஆனந்தக் கூத்துக்கு நான் அடிமையாகிவிட்டேன். இதழ் விரித்துச் சிரிக்கும் இன்பரோஜாவே ...அந்தச் சிரிப்பு என்னை எங்கெங்கோ இழுத்துக்கொண்டு செல்லுகிறதே! என் லட்சியப் பெண்ணே! உன்னைக் கற்பனையில் உருவாக்கி வைத்தேன். ஓவியத்தில் படம் பிடித்தேன். நடந்துவந்த கற்பனையின திருஉருவோ, உயிர்பெற்றெழுந்த ஓவியமோவென என் சிந்தையைக் குழப்பி வைக்கிருய். இந்த இன்பம் என்றும் சொந்தமானதா பைங்கிளியே.....நிலாச் சோறு நித்தங்கிடைக்குமா பூங்கொடி!"

"கருத்தைக் கான மொழியால் பேசும் ஓவியக் கலைஞரே! ருசிகண்ட பூனைக்குப் பானையிருக்குமிடமுந் தெரியும். அதற்குத் தாவும் முறையும் தெரியுமல்லவா? என் பொன்னுன நேசரே! உங்களின் இதயக் கோமிலிலே நான் குடிபுகுந்ததற்காக ஆயிரம்......!"

"ஆயிரம்...என்ன தருவாய்?"

"வாயிலே சொல்லமுடியாததைத் தருவேன்!"

"எங்கே இப்போதே கொடேன்!"

"அவ்வளவும் இப்போதேஅல்ல! நாளைக்கு ஒன்ருக...!"

"என் வேளைக்கு ஒன்ருக என்று மாற்றிக்கொள்ளேன்."

"கேலி வேண்டாம் - அப்புறம் எனக்கு வெட்கம் வரும், நான் போய்விடுவேன்."

"என்னையும் அழைத்துக் கொண்டுதானே!"

"குறும்புக்காரர்...!"

★

பேசாத வாயை அவனது அன்பு முத்திரைக்காகக் குவித்துத் தந்தாள். அவனுக்கோ இன்பம் கொள்ளை கொள்ளை! நடனமாடிய விரல்களால் அவனது பளிங்கு முகத்தைத் தடவிக்கொடுத்துக் கொண்டேயிருந்தாள். அவன் இன்ப ஊஞ்சலிலே இந்தத் துன்ப உலகை மறந்து ஆடிக்கொண்டேயிருந்தான்.

★

அவனே புகழ்தாங்கிய ஓவியக்காரன். அவளோ தலைசிறந்த நாட்டியக்காரி. பொன்னும், அணிமணியும் இவளை நாடி ஓடிவந்தது. அவன் தீட்டிய ஓவியமென்ருலோ காட்சிக்கு விருந்து. கலைத்தேவிக்கு ஜீவிய ஓவியங்களால் பொன்னுரம் பூட்டிவைத்தான். புகழ்தாங்கிய இவன்தான் பூஜித்து நின்ருன் பூங்கொடி-நாட்டியராணியை. ஆடும் அழகிக்குக் கலை நெஞ்சிலே இடந்தந்தான். காலம் காதல் வலை பின்னித் தந்தது ஓவியச்சிற்பிக்கு. அந்த வலைவீசி சந்தன மேனியளை சிறைபிடித்துக்கொண்டான். வந்து போன இரவுகள் புதுக்காதலர்களின் வாழ்விலே தேனைக்கொட்டியது.

அவளுக்கென்னமோ அவ்வளவு அதிகமான சுவையில்லை! மூன்ருவது, நாலாவது தட்வையாகப் பால் பருகுவதுபோல சலிப்பாகவே நடந்துகொண்டாள். ஆடிய பூங்கொடியின் 'புதுமலர்' என்றுதான் அவளை நம்பியிருந்தான் ஓவியன். அந்தப் புதுமலர்......யார்யாரின் மாளிகையையோ அலங்கரித்திருக்கிறதென்பது ஓவியனுக்குத் தெரியாத ஒரே உண்மை!

...எனவே, காலம் வளர வளர ஓவியனின் காதல் நாட்டியராணிக்குக் கசந்து வந்தது. சித்திரக்காரனின் சிக்குகளை அறுத்துக் கொண்டு ஓடோடத் துடித்தாள். இந்த 'விடுதலை' நினைவுகள் அலைமோதிய நெஞ்சோடு ஒருநாள்...

...மாடியிலே உலவிக்கொண்டிருந்தாள். நிலவொளி, தங்க மேனிக்கு மெருகேற்றியது. தாமரைக் கன்னத்தைக் கிள்ளி விட்டுக்கொண்டே சரசமாட வந்தான் ஓவியன். சூடுபட்டவளைப் போல ஒதுங்கிக்கொண்டாள். அவனே இன்ப உலகுக்குப்போக மலர்க்கரம் பற்றி இழுத்தான். கொஞ்சவந்த புருவைக் கொத்தித் துரத்தியது பெண்புரு! வீணை மீட்ட வந்தவனின் கரத்தைத் தந்திகளே கடித்தால்...?

"என்ன அன்பே இன்பம் கசக்கிறதா?"

"தொல்லைப்பட என்னுல் முடியாது. நான் அரங்குக்குப் போக வேண்டும். அங்கே ஆட்டத்துக்காக...!"

"ஆயிரம் பேர் காத்துக்கிடப்பார்களே இந்த ஒருவன் வேதனைப் பட்டால் என்ன என்று நினைக்கிருய். என் அப்படித்தானே! என்னைவிட அதிக மதிப்புத் தருகிருய் உன் இதயத்திலே அவர்களுக்காக. எனக்கு நீ துரோகம் செய்கிருய் அழகரசி!"

"அது என் தொழில்!"

"எது, துரோகம்புரிவதா?"

"இல்லை! ஆடுவது. ஆட்டந்தானே என் வாழ்வின் ஜீவன்!"

"என்னை வாழ்வின் திருவிளக்கு என்று புகழ்ந்தாயே!"

"ஓய்ந்திருந்த நேரத்தில்- உல்லாச போதையில்!"

"காமுகி-நீயும் நெளிந்தாடும் கருநாகந்தானு? என் லட்சியத்தைச் சுக்கு நூருக்கிவிட்டாயே துரோகி! பாம்பின் விஷத்தைப் பழரசமென்று நம்பினேனே. நாட்டியக்காரியா நீ...நாசகாரி, நீலி!"

...அந்த வேதனைக்குரல் மாடிச் சுவற்றிலே மோதி எதிரொலித்ததோடு நின்றுவிட்டது. அவள் உள்ளத்திலே எதிரொலிக்கவேயில்லை! பிரமை பிடித்த சித்திரக்காரன் அந்த அறையெங்கும் ஓடியாடித் தான் தீட்டியிருந்த உயர் ஓவியங்களையெல்லாம் சுக்குநூருக்கிவிட்டு...மாளிகையைவிட்டே வெளியேறினுன்...ஆடலழகியின் கடைசிச் சிரிப்பைக் கேட்டுக்கொண்டே! கோரத்தைக் கண்டு நிலவுகூடக் கண்ணை மூடிக்கொண்டது. அவளுக்குத்தான் இதயமில்லையே... எனவே, இளகவில்லை! அந்த அப்பாவி சித்திரக்காரன் ஓடியேவிட்டான்-அவனுக்கு வாரிசாக ஒரே ஒரு சீடனை மட்டும் விட்டுவிட்டு! அவனது பரம்பரையென்று ஒரே ஒருவன்தான் உலவிவந்தான்!

★

காலமென்ன ஓடாத சக்கரமா என்ன? இருந்த நிலையிலேயேயிருக்க! நிலையும்-நினைப்பும் மாறிக்கொண்டிருந்தன. புதுக்கலை வெள்ளத்திலே எத்தனையோ நட்சத்திரக் குஞ்சுகள் தோன்றின. நாட்டியராணிக்குப் போட்டியாகப் பலப்பலர்! மின்னும் லட்சோப லட்சம் தாரகைகளுக்குள்ளே ஒருவளானுள் நாட்டியராணி! கலைவானிலே ஒரே நிலவான நாட்டிய ராணி..போட்டியால் தாரகைகளிலே ஒருவளானுள் தரத்தைத் தாழ்த்திக்கொண்டு, புகழ்பாடிய கூட்டம் எங்கோ கண்பார்வையில் படமுடியாத தூரத்திலே! அவள் கழுத்திலே விழுந்த வாழ்த்துமாலை இப்போது வேறு யார் யாருக்கோ போய்க்கொண்டிருந்தது. பாலைவன ரோஜாவானுள்! குமுறி வெடித்து கலை உலகத்தையே சபித்ததோடு......நாட்டிய உலகிலிருந்தே நிரந்தரமாக விடை பெற்றுக்கொண்டாள்!

★

அவளது இழந்தகால கனவுகள் நெஞ்சிலே நெருப்பைக் கொட்டிக் கொண்டிருந்த ஒருநாள்...'சித்திர மாளிகை'யை விட்டு வெகுதூரத்துக்கு உலவச் சென்ருள்.

பாதையிலே பூஞ்சோலை! தாமரைத் தடாகத்தருகே அமர்ந்து அப்பாவி சித்திரக்காரனின் சீடன் ஓவியமெழுதிக் கொண்டிருந்தான். தாமரையை வரைந்திருந்தான். அதற்கருகிலேயே தளிர்மேனியாளொருவளின் மதிமுகத்தை எழுதி அழித்துத் திருத்திக்கொண்டேயிருந்தான். எதிரே ஓசைப் படாமல் நடந்து வந்து நின்ருள் - மாஜி நாட்டியராணி! அந்த முகத்தைப் பார்த்துப் பார்த்து எழுதினுன்- எழுதினுன்.....சித்திரம் முற்றுப் பெறும்வரை எழுதினுன். வரைந்து

மா. தங்கவேலர்

முடிந்த ஓவியத்தை உற்றுப்பார்த்தான்...வந்து நின்ற வடிவழகியையும் மாறி மாறிப் பார்த்தான். இன்னும் சற்றுக் கூர்மையாகவே அகலமாகக் கண்களைத் திறந்து பார்த்தான். துடிதுடித்தான்! எழுதிய சித்திரத்தைப் படபடப்போடு அழித்துவிட்டுத் தாமரைத் தடாகத்திலே வீசியெறிந்தான்.

அவளோ, முன்போல குறும்புப் புன்னகையை அல்ல - ஜீவனற்ற ஒரு சிரிப்பைச் சிந்திவிட்டு அவனருகிலே சென்று அமர்ந்தாள். நெருங்கிவரும் நெருப்பைப்பார்த்துவிட்டவனைப்போல ஓடிவிட அவசர

(30-ம் பக்கம் பார்க்க)

அதுவரையில் வெற்றிப் பாதையில் நடந்துகொண்டிருந்த படைகள் எதிர்பாராத விதத்தில் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது. படை வரிசையிலே இருந்த கட்டுப்பாடு சிதறி, தப்பினோம் பிழைத்தோம் என்று கால்போன திக்கிலே ஓடத்தலைப்பட்டனர் துருப்புகள். அதுவரை வாழ்நாளில் தோல்வியே கண்டிராத தளகர்த்தனின் முகம் வாடி வதங்கிவிட்டது. அந்த வெற்றி தோல்வியில்தான், மகத்தானதொரு நாட்டின் எதிர்காலம் இருந்தது. தளகர்த்தன் ஓடோடி வந்தான். கூடாரத்தில் ஒருவர் அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

"என் அருமைத் தோழனே! உன்னைத் தோழா என்று அழைப்பதிலே நான் எவ்வளவு பெருமை கொள்ளுகிறேன் தெரியுமா? என்னுடைய கடைசிநேர நம்பிக்கை நட்சத்திரமாக எண்ணி உன்னிடம் வந்திருக்கிறேன். சோகமும் சோர்வு மடைந்து சோபிதமிழந்து கிடக்கும் இந்த வீரர்களை மட்டுமல்லாது, இந்த நாட்டு மக்கள் எல்லோரையுமே வீரர்களாக்கச் செய்ய இந்த நெருக்கடி நேரத்தில் உன்னால் மட்டுமே முடியும்" என்று தளகர்த்தன் துடித்தான்.

"நானா? உனக்கா? விசித்திரமாக இருக்கிறதே" என்றாராம் அந்த அமைதியான ஆசாமி.

"ஆமாம். நீங்களேதான். ஏதாவது எழுதித் தாருங்கள். அது போதும். உங்களுடைய எழுத்து ஒன்றே போதும் கோழைகளை வீரர்களாக்கிவிடும். கூனர்களை நிமிர்த்திவிடும். கட்டாயம் இப்போது ஏதாவது எழுதுங்கள்" என்றாராம் தளகர்த்தர்.

உடனே அவர் பேனாவை எடுத்தார். தன்னிடமிருந்த போர்ப் பறையையே மேஜையாக்கிக் கொண்டு எழுதத் தொடங்கினார். எழுதிக் கொண்டிருக்கையிலேயே முகாம் போட்டிருந்த போர் வீரர்களெல்லாம் வந்து உரக்கப் படிக்கலாயினர். அவர்கள் உள்ளமெலாம் உணர்ச்சி வெள்ளத்தால் பொங்கி வழிந்தது. உடம்பிலே ரத்தம் கொதித்தது. தளர்வு இருந்த இடத்திலே துடிப்புப் பாய்ந்தது. சோகத்தைப் புன்முறுவல் விரட்டியது. அன்றன்றுள்ள ராணுவ நிலைமைகளைக் கவனித்து அந்தந்த நிலைமைக்கு ஏற்றவண்ணம் வரிசையாக 16 இதழ்கள் எழுதி வெளியிட்டார். இவற்றிற்கு "நெருக்கடி இதழ்கள்" என்று பெயர். இந்த இதழ்களில் காணப்பட்ட சொற்களின் சக்தி அந்நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தது.

அமெரிக்க விடுதலைப் போராட்டத்தின் சுவை மிக்க வரலாற்றிலே அழியாப் பெயர்களாக விளங்குகிற வாஷிங்டனுக்கும், பேனா மன்னர் தாமஸ் பெயினுக்கும் நடந்த உரையாடல் தான் ஆரம்பத்தில் இருப்பது.

வாஷிங்டன் அமெரிக்க மண்ணிலே பிறந்து, அந்தக் காற்றையே சுவாசித்து, அந்த மொழியையே கற்று வாழ்ந்தவர். எனவே, அமெரிக்க விடுதலைப் போராட்டத்தில் அவர் உற்சாகத்துடன் கலந்து கொண்டதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் தாமஸ் பெயின் அமெரிக்கரல்லர். ஆங்கிலேயர். என்றாலும் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆணவக்கோட்டைமீது வெடி குண்டுகளை வீசுவதில் பேரார்வம் காட்டினார். 'கொடுமை செய்பவர் எவரானாலும் எதிர்த்தே தீருவேன். எங்கிருந்தாலும்சரி அதிகார மமதைதான் என் முதல் எதிரி' என்று முழக்கிய பரந்த உள்ளம் கொண்ட இத்தகைய பெருந்தகையை நாங்கள் கண்டதில்லை' என்று அமெரிக்கர் நாவாரக் கூறி மனமாரப் புகழ்ந்தனர்.

அமெரிக்க மக்கள் மன்றத்தில் நெருக்கடியான சமயத்தில் ஆனந்தத் தென்றல் வீசச் செய்த தாமஸ் பெயின் லண்டன் நகருக்கு அண்மையில் உள்ள தெட்போர்ட் என்னும் இடத்தில் 1737-ம் ஆண்டில் எளிய குடும்பத்தில் பிறந்தார். தந்தையைப் போலவே ரவிக்கை தைத்துக் கொடுக்கும் தொழிலில் பெயின் இருந்தார். பிறகு செருப்புத் தொழிலுக்கு மாறினார். கொஞ்சகாலம் நெசவுத்தொழில் செய்தார். கலால் இலாகா, ஆசிரியத் தொழில், வியாபாரத்துறை, தச்சுவேலை ஆகு பெயின் புகுந்து பார்க்காத துறை இல்லை. மலருக்கு மலர் தாவிப் பார்க்கிற தேனீயைப்போல நிலைத்திராமல் இருந்தார். தான் ஒரு எழுத்தாளனாக விளங்க வேண்டுமென்ற ஆசை மட்டும் மனதில் பலமாக வேரூன்றி விட்ட பிறகு, எந்தத் தொழிலிலும் நிலையாகத் தங்கமுடியாமல் தவித்தது இயற்கைதானே!

"ஏதேனும் தொழில் செய்து குடும்பத்தைக் காப்பாற்று. வீணில் கெட்டலையாதே. எட்டமுடியாத எழுத்தாளன் நிலையை எண்ணி எண்ணி பேராசைக் கோட்டை கட்டாதே" என்று வாட்டும் வறுமை எச்சரித்தது.

"இம்சைக்கு ஆளானாலும் இலட்சியவாதியாக வாழ்க்கை நடத்து. ஊரையும் உலகத்தையும் திருத்துகிற உயர்ந்த பணியைச் செய்யப் புறப்படு. முயற்சி திருவினையாக்கும். தயங்காதே! மனத்திண்மை இல்லாதவர்கள் சொல்லுகிற உபதேசங்களில் மனம் மயங்காதே" என்று ஆர்வம் தன் அன்புக்கரங்களை நீட்டி அழைத்தது.

வறுமையின் எச்சரிக்கைக்கும் ஆர்வத்தின் அழைப்புக்குமிடையே, தாமஸ் பெயின் 'ஊஞ்சலா'டினார். பிறகு சிறிதுகாலம் கழித்து ஆர்வத்தின் அழைப்புக்கு அடிபணிந்து அமெரிக்காவில் செல்வாக்கு மிகப் பெற்றவரும், அப்போது இங்கிலாந்தில் இருந்தவருமான பெஞ்சமின் பிராங்க்லின் அவர்களிடம் சென்று ஒரு சிபார்சுக் கடிதம் வாங்கிக் கொண்டு அமெரிக்காவுக்குக் கப்பலேறினார். வந்த சில நாட்களுக்கெல்லாம் "பென்சில்வேனியா மாகஸின்" என்ற இதழுக்கு ஆசிரியரானார். அப்போதுதான் இவர் கிளர்ச்சியின் உருவமானார். புரட்சியின் தூதுவரானார். இவரது லட்சியங்களும் கொள்கைகளும் ஒரு திட்டமான வடிவும் தெளிவும் இந்தச் சமயத்தில்தான் அடைந்தன. அடிமைத்தனம் அகல வேண்டிய அவசியத்தையும், அக்கிரமம் ஒழிக்கப்படவேண்டிய அவசரத்தையும் பகுத்தறிவுக்கு ஒத்த முறையில் திருமணச் சடங்குகள் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்று அந்த இதழில் இடைவிடாமல் எழுதிவந்தார். பெயின் அமெரிக்காவை அடைந்த சமயத்தில்தான் அங்கு போர் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகிக்கொண்டிருந்தது. திடீரென்று ஒருநாள் வெளிப்படைப் போராட்டமே தொடங்கி விட்டது. மாசாசூசெட்ஸ் மாவட்டத்தில் உள்ள லெக்சிங்டன் என்ற கிராமத்தில் அமெரிக்க உழவர் படைக்கும் பிரிட்டிஷ் ராணுவத்தினருக்குமிடையே போர் மூண்டது. பிறகு அது பரவிற்று.

ஜார்ஜ் வாஷிங்டன்

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் தாமஸ் பெயின் "சாமானிய அறிவு" என்ற பெயர் படைத்த ஒரு புத்தகத்தை எழுதினார். அந்தப் புத்தகத்தை 'சீந்து'வார் யாரும் இருக்கமாட்டார்கள் என்றே நினைத்தார். எழுத எழுத சில சமயம் சந்தேகம் வந்துவிடும். 'விற்பனை நிலையங்களுக்குப் போய் இது விற்குமா' என்ற பயம் வந்துவிடுமாம். இருந்தாலும் எழுதினார். எழுதி முடித்த பிறகு "பென்சில்வேனியா மாகஸீன்" உரிமையாளரிடம் காட்ட, அவர் வெளியிட முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். இன்னொரு அச்சுக்கூட உரிமையாளர் வெளியிட ஒப்புக்கொண்டார். ஆனால் பெயினுக்கு ஒரு ஷில்லிங் பணம்கூட தரமுடியாதென்று கூறிவிட்டார். ஆர்வம் நிரம்பிய தாமஸ் அதற்கும் சரி என்றார்.

பெரும் நஷ்டம் வரும் என்று வெளியிடுபவரும் அஞ்சினர். விற்பனையாகாது என்று எழுதியவரும் அஞ்சினர். ஆனால் இருவருடைய அச்சமும் பரிதிகண்ட பனிபோல் மறைந்தது. புத்தகம் வெளியான ஒருவார காலத்தில் ஏராளமான பிரதிகள் கேட்டு, தினமும் 'ஆர்டர்'கள் வந்து குவிந்த வண்ணமிருந்தன. இவ்வளவு 'கிராக்கி'யைக் கண்டதும் புத்தகம் வெளியிட்டவருக்கு பயம் வந்துவிட்டது. என்ன ஆபத்து நேருமோ என்று அஞ்சிக்கொண்டிருந்தார். பெயினின் "சாமானிய அறிவு" 5லட்சம் பிரதிகளுக்குமேல்விற்பனையாயின. இவ்வளவு புத்தகங்கள் செலவாகியும்பெயின் தமக்கென்று அதிக ஊதியத்தை எடுத்துக்கொண்டாரில்லை. வருமானம் முழுவதையுமே அமெரிக்க விடுதலைப் போராட்டத்திற்கே நன்கொடையாக அளித்துவிட்டார்.

அமெரிக்கா முழுவதும் 'சாமானிய அறிவு' அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துவிட்டது குருமார்கள் கையிலே, உழவர்கள் வீட்டிலே, விடுதலை விரும்பிகள் உள்ளத்திலே, 'சாமானிய அறிவு' குடியேறி நிலைத்தது. பஞ்சாங்க ஏடுகளை விலை கூறிக்கொண்டிருந்தவர்கள், 'சாமானிய அறிவை' விற்க ஆரம்பித்தார்கள். காதலர்கள் சாமான்ய அறிவிலிருந்து மேற்கோள் காட்டினார்கள்.

அதன் பெயரைப் போலவே சாதாரண விஷயங்களைத்தான் அந்தப் புத்தகம் சொல்லிற்று. சொல்லுவதை ஆணித்தரமாகச் சொல்லிற்று. தீப்பொறி பறக்கச் சொல்லிற்று. பிறர் மறுத்துக் கூறமுடியாதபடி தர்க்க ரீதியான முறையில் சொல்லிற்று. அமெரிக்கர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அலைமோதிக்கொண்டிருந்த எண்ணங்களையே அது சொல்லிற்று. ஆவேசமான நடையிலே ஜீவசக்தி மிகுந்த வார்த்தைகளிலே அவற்றைச் சொல்லிற்று. மின்சார வேகத்தில் பாய்ந்து தாக்கும் எண்ணங்களை எழிலோடு எடுத்துச் சொல்லிற்று.

"சாமானிய அறிவில்" எழுதப்பட்ட பல வாசகங்களை அமெரிக்க மக்கள் திருப்பித் திருப்பிப் படித்து ஒப்புவிக்கலாயினர்.

அமெரிக்க சுதந்தர சாஸனத்தை தயாரித்துக்கொண்டிருந்த தாமஸ் ஜெப்பர்சன் பெயினைப் புகழ்ந்தார். பெஞ்சமின் பிராங்க்ளின், 'மக்களின் கேள்விகட்கெல்லாம் இந்தப் புத்தகம் விடை சொல்கிறது' என்று சாமானிய அறிவைப் பாராட்டினார். அமெரிக்க சுதந்தர சாசனத்தில், சாமானிய அறிவிலிருந்து பல வாசகங்கள் எடுத்துக் கையாளப்பட்டன.

சுதந்தர சாஸனம் வெளியிடப்பட்டதே தவிர முழுச் சுதந்தரம் இன்னும் அமெரிக்காவுக்குக் கிடைக்கவில்லை. 'சாமானிய அறிவை' எழுதி முடித்ததும் பெயின் அளவற்ற உற்சாகம்

—: உடுமலையான் :—

கொண்டு, பேனாவை மூடிவிட்டு நேரிடையாகப் போராட்டத் தீயில் குதித்துவிட்டார். அப்போது ஒரு சந்தர்ப்பத்தில்தான் நாம் கட்டுரையின் ஆரம்பத்தில் கூறிய நிகழ்ச்சி நடந்தது.

விடுதலை பெற்ற அமெரிக்காவில் இருக்க, புரட்சித்துடிப்பு கொண்ட பெயினால் முடியவில்லை. அப்

(30-ம் பக்கம் பார்க்க)

எண்ணிய எண்ணியாங்கு

தருமத்து தி. சங்கரம், பி.காம்.

முன்னுரை :

இற்றைக்கு 65 ஆண்டுகளுக்கு முன் மனோன்மணீயம் என்னும் தமிழ் நாடகம், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, **M. A.** அவர்களால் எழுதப் பட்டது. இப்பெரியார் திருவனந்த புரம் அரசர் கல்லூரியில் அறிவு நூல் புலவராக விளங்கியவர் ; ஆயினும் தமிழ் நூல்களைப் பழுதறப் படித்தவர் ; சைவ சமயப்பற்று மிக்குடையவர் ; சைவ சித்தாந்த சாத்திரங்களில் வல்லவர். இப்பேராசிரியர் கல் வெட்டு ஆராய்ச்சியிலும் சிறந்த புலமை உடையவர். இப் பெருமகனார் விட்டன் பிரபு எழுதிய 'இரகசிய வழி' என்னும் சிதியன் கதையை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் முறைக்கேற்ப, மனோன்மணீயம் என்னும் நாடக நூலை இயற்றினார்.

இந்நாடக நூல் ஐந்து அங்கங்களையும் பத்தொன்பது களங்களையும் உடையது. இந்நூலில் ஆசிரியப்பா, வெண்செந்துறை, கொச்சகக்கலிப்பா, மருட்பா, முதலிய பாவகைகள் இடம் பெற்றுள்ளன. ஏறத்தாழ 4500 அடிகளில் இந் நூல் அமைந்துள்ளது.

தமிழ்த் தெய்வ வணக்கம்

சுந்தரம் பிள்ளை இந்நூலில் பாடியுள்ள தமிழ்த் தெய்வ வணக்கம் பொருளாற் சிறந்து விளங்குவதாகும். நிலத்தை ஓர் பெண்மணியாகவும். இந்திய நாடு அவளது முகமாகவும், விந்த மலைக்குத் தென்பாற்பட்ட நிலப்பகுதி அவளது நெற்றியாகவும். திராவிட நாடு (தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசும் நிலப்பகுதி) அப் பெண்மணியின் திலகப் பொட்டாகவும், தமிழ் மொழியை அத்திலக வாசனையாகவும் உருவகப் படுத்தி,

> 'நீராருங் கடலுடுத்த நிலமடைந்
> தைக் கெழிலொழுகும்
> சீராரும் வதனமெனத் திகழ்
> பரத கண்டமிதில்
> தக்கசிறு பிறைநுதலும் தரித்த
> நறுந் திலகமுமே
> தெக்கணமு மதிற்சிறந்த திரா
> விடநல் திருநாடும்
> அத்திலக வாசனைபோ லனைத்
> துலகு மின்பமுற
> எத்திசையும் புகழ்மணக்க
> இருந்தபெருந் தமிழணங்கே.

என்று அழகாகவும் தெளிவாகவும் பாடியிருத்தல் பாராட்டத்தக்கது.

கடவுள் பல உலகங்களையும் பல உயிர்களையும் படைத்துக் காத்து அழிக்கின்றார். ஆயினும் அவர் என்றும் இளமை குன்றாமல் இருக்கின்றார். தமிழிலிருந்து கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் முதலிய மொழிகள் தோன்றின. ஆயினும் தமிழ் மொழியின் இளமை நலம் சிறிதும் குன்ற... வடமொழியிலிருந்து பல ...கள் தோன்றின. அதன் ...வடமொழி பேச்சு வழக்கு அற்றுவிட்டது. ஆனால் தமிழ், கடவுளைப் போல் இளமை நலம் குன்றாமலும், வடமொழியைப் போல அழிந்து ஒழியாமலும் விளங்குகின்றது என்பதை இவ்வாசிரியர்,

> 'பல்லுயிரும் பலவுலகும் படைத்
> தளித்துத் துடைக்கினுமோர்
> எல்லையறு பரம்பொருள்முன்
> இருந்தபடி இருப்பதுபோல்
> கன்னடமும் களிதெலுங்கும்
> கவின்மலையா ளமுந்துளுவும்
> உன்னுதரத் துதித்தெழுந்தே
> ஒன்றுபல ஆயிடினும்
> ஆரியம்போல் உலகவழக் கழிந்
> தொழிந்து சிதையாவுன்
> சீரிளமைத் திறம் வியந்து செயல்
> மறந்து வாழ்த்துதுமே'

என்னும் பாவின் வாயிலாகத் தெளிவாகவிளக்கியிருத்தல்காண்க.

அகத்தியனும் தமிழும்.

அகத்தியன் வட நாட்டிலிருந்து தென்நாட்டிற்கு வந்து தமிழ் மொழியில் முதல் இலக்கணம் செய்தான். அதன் பெயர் 'அகத்தியம்' என்று ஒரு சாரார் கூறுவதுண்டு. இக்கூற்றை வன்மையாக மறுத்தவன் கம்பன். அவன், அகத்தியன்

'என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்' என்று கூறியுள்ளான். எனவே, 'அகத்தியனால் தமிழ் சிறப்படையவில்லை ; தமிழால் அகத்தியன் சிறப்படைந்தான்' என்பதே கம்பனது கருத்து. மேலும், 'தமிழ்நாடு நாகரீகத்திற் சிறந்தது; மொழிவளம் பெற்றது ; அங்கு சென்று தமிழ் மொழி அறியாத யான் என் செய்வேன் ! ' என்று அகத்தியன் அலறியதாகக் காஞ்சிப் புராணம் கூறுகின்றது. இந்த உண்மைகளை நன்கறிந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை,

> 'கடல்குடித்த குடமுனியுன்
> கரைகாணக் குருநாடில்
> தொடுகடலை யுனக்குவமை
> சொல்லுவதும் புகழாமே'

என்று பாடியிருத்தல் படித்து இன்புறத்தக்கது. கடலைக்குடித்த அகத்தியன் தமிழ்க் கடலின் கரையைக் காண ஓர் ஆசிரியரின் உதவியை நாடினான் என்றால், அவனால் குடிக்கப்பட்ட கடலைத் தமிழ் மொழிக்கு உண்மையாகக் கூறுவது தமிழைப் புகழ்வதாகாது என்று ஆசிரியர் கூறியிருப்பது எவ்வளவு சுவையுடையதாக இருக்கின்றது!

தமிழின் பழைமை

வடமொழி இந்தியாவிற் புகுமுன் இந்தியா முழுவதிலும் பழந்தமிழ் என்னும் திராவிட மொழியே வழக்கில் இருந்திருத்தல்வேண்டுமென்று கிரியர்ஸன், கால்டுவெல் முதலிய மொழியாராய்ச்சி வல்லுநர் மொழிந்துள்ளனர். பின்னர் வடமொழி வட இந்யாவில் கால் கொண்ட காரணத்தால், திராவிடமும் வடமொழியும் கலந்து பல்வேறு சிறு மொழிகளும் கலந்து இன்றைய வடநாட்டுமொழிகளாகத் தோற்றமெடுத்தன என்பது மொழி ஆராய்ச்சியாளர் கருத்து. இதனை உளங்கொண்டே இப்பேராசிரியர்,

> சதுமறையா ரியம்வருமுன் சக
> முழுது நினதாயின்
> முதுமொழிநீ அநாதியென
> மொழிகுவதும் வியப்பாமே
> (சகம்-இங்கு இந்தியா என்பது
> பொருள்)

என்று பாடித் தமிழின் பழைமையைப் பாராட்டுகின்றார்.

திருக்குறள்

'ஒரு சூத்திரன் பிராமணனுக்கு அறத்தை உபதேசிப்பானேயானால் அரசன் அச் சூத்திரன் வாயிலும் காதிலும் காய்ச்சிய எண்ணெய்யை ஊற்றவேண்டும்' என்று மனுதர்ம சாத்திரம் கூறுகின்றது. இந்நூலில் ஒரு குலத்துக்கு ஒரு நீதி கூறப்பட்டுள்ளதே தவிர, எல்லாவகை மக்களுக்கும் ஒத்தநீதி கூறப்படவில்லை. ஆயின், தமிழ் அறநூலாகிய திருக்குறளில் சாதி, குலம், வருணம் என்ற பெயர்களே இல்லை.

'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதுதான் திருக்குறளில் காணப்படும்உயர்ந்தகருத்து. அறிவு படைத்த மனிதன் திருக்குறளைப் பழுதறப் படித்த பிறகு, ஒரு குலத்துக்கு ஒரு நீதி கூறும் மனு, ஆபஸ்தம்பர், கௌதமர், முதலியோர் செய்த (நீதி) நூல்களை மனத்தாலும் நினைப்பதும் பாபம் என்று எண்ணியவராய் இப்பெரும் புலவர்,

> 'வள்ளுவர்செய் திருக்குறளைமறு
> வறநன் குணர்ந்தோர்கள்
> உள்ளுவரோ மநுவாதி யொரு
> குலத்துக் கொருநீதி'

என்று உளமுருகிப் பாடியுள்ளார்.

முடிவுரை

இவ்வாறே ஆசிரியர், தாம் உணர்ந்த உண்மைகளைச் சிறிதும் அஞ்சாமல் எடுத்துரைக்கும் இடங்கள் பலவாகும். அவை இந்நூல் முழுவதும் பரந்து கிடக்கின்றன. நுண்ணறிவுடையோர் அவற்றை ஊன்றிப் படித்து, ஆசிரியர் நுண்ணறிவையும் புலமைச் சிறப்பையும் போற்றுவார்களாக.

தீ அள்ளிப் போடு

ஒரு முறை கவி காளமேகம் பசியோடு அலைந்து கொண்டிருந்தான். இரண்டு நாட்கள் சாப்பாடே இல்லை. மிகவும் தளர்ச்சியோடு ஒரு வைணவர் வீட்டுத் திண்ணையில் போய் அமர்ந்தான். பசிதாளாமல் 'அம்மா அம்மா' என்று முணகினான். கதவைத் திறந்துகொண்டு அந்த வைணவர் தோன்றினார். நீயாரென்றார், என்ன உன் பெயரென்றார், எந்த ஊரென்றார். காளமேகம் ஈனக்குரலில் தான் திருவரங்கத்தைச் சேர்ந்தவன் என்றும் பெயர் காளமேகம் என்றும் கூறினான். அந்த வைணவர் பரிதாபத்தோடு, அவனை உள்ளே அழைத்துக் கொண்டு போனார்.

வைணவர்கள் எப்பொழுதும் எதையும் நேரடியான வார்த்தைகளைக் கொண்டு பேசமாட்டார்கள். மதசம்பந்தப்பட்ட வார்த்தைகளை வைத்துக்கொண்டு குழூஉக் குறியாகவே பேசுவார்கள். அதே முறையில் அந்த வைணவரும் தன் மனைவியைப் பார்த்து, ' அடியே, அலமேலுமங்கை, அந்தத் திருமங்கை ஆழ்வாரிலே திருப்பள்ளிச்சாறு கொண்டுவா' என்று உத்தரவிட்டார். அந்த அம்மையாரும் பணிவோடு சென்று, ஒரு மூளி மரக்காலில் சோறு வடித்த கஞ்சியைக் கொண்டுவந்தார். அதைக் காளமேகத்தின் முன் வைத்தார். காளமேகம் தேடித் தேடிப் பார்த்தான். அதில் ஒரு பருக்கைகூடக் காணோம் ! வெறும் கஞ்சியே இருந்தது. தாளமாட்டாத பசி, ஆத்திரம் பீறிட்டது அவனுக்கு ! அந்த மூளி மரக்காலை ஒருமுறை பார்த்தான். அலமேலு மங்கையை ஒருமுறை பார்த்தான். வடித்த கஞ்சியை ஒருமுறை பார்த்தான். உடனே கவி மழைபொழிந்தான். அது இது.

> மூளிமரக்காலா திருமங்கை ஆழ்வார்—இந்த
> மூதேவி முண்டையாம் அலமேலு மங்கை
> வடித்த கஞ்சியா திருப்பள்ளிச் சாறு—உங்கள்
> வைணவ மதத்திலே தீயள்ளிப் போடு.

மீர்சாகிப்பேட்டை, அழகிரி நாடக மன்றம் அளிக்கும்.

'அத்தான்'

(சமூக நாடகம்)

கதை, வசனம் : எஸ். எஸ். தென்னரசு

பாடல்கள் : கண்ணதாசன்,
பூவை. செங்குட்டுவன்,
இரா சாரங்கராசன்,

பயிற்சி : ஏ. தன்ராஜ்

இடம் ? தேதி ? எதிர்பாருங்கள் !

சுந்தரம் கண்ட திராவிடம்

திராவிடப்பித்தன்

உலகில் பல மொழிகள் வழங்கப் படுகின்றன. மக்களால் வழங்கப்-படும் இம்மொழிகள் பல வற்றுள் ளும் வளமிக்க சிறந்த மொழிகள் சிலவே. இப்படித் தேர்ந்தெடுக்கப் பட்ட மொழிகள் சிலவற்றுள்ளும் தலைசிறந்தது தமிழ்மொழியே.இவ் வுண்மையை அரிதின் முயன்று கண்டு எடுத்துரைத்து உலகப் புகழை ஒருங்கே பெற்றுத்தந்தவர் பிஷப் கால்டுவெல் ஆவார்

தந்நிகர் இல்லாததும் தமிழ்
தரணியிற் சிறந்ததும் தமிழ்
இலக்கியம் நிறைந்ததும் தமிழ்
இலக்கணம் கண்டதும் தமிழ்
இயல்வளஞ் செறிந்ததும் தமிழ்
இசைவளம் இணைந்ததும்தமிழ்

என்றெல்லாம்தண்டமிழ் நாட்டவர் பண்ணிசைத்து வந்தனர். பொதி யில் தென்றலினும் மதுரைத் தென்றலே சிறப்புடைத்தென கன் னித்தமிழில் கலிப் பாப் பாடினர். இம்மொழிப் போற்றலில்உண்மைப் போற்றுதலே சிறந்திருக்கக் காண கின்றோம். இம்மெய்க் கூற்றுடன்

பாரிற் சிறந்ததும் தமிழ்-உலக
மொழிகளில் சிறந்ததும் தமிழ்

என்னும் ஒப்பற்ற உண்மையையும் இணைத்து பாட்டாலும் உரையாலும் புகழ்தற்குரிய நம்தம் தமிழ்மொழி யின் மற்றொரு சிறப்பைக்கண்டு முழக்கமிட்டார் **பேராசிரியர் சுந்தரம் (பிள்ளை)** அவர்கள்.

நீண்டகால வழக்காற்றில் உள்ள ஒரு மொழியானது, காலக்கழிவில் தாய்மை நிலையை அடைவதும், தாய்மைநிலை அடைந்துவிட்ட காரணத்தால் உலக வழக்காற் றினின்றும் படிப்படியே மறைந்து விடுவதும் இயல்பேயாகும். இவ் வுலக வியல்புகளுக்கு ஹீப்ரு, கிரேக்கம், லத்தீன், ஆரியம்போன்ற மொழிகள் இலக்காகிவிட்ட வர லாறுகள் நாம் தெரிந்தனவே. இவ்வியல்புகட்கு விதிவிலக்கு ஒன்றை ஏற்படுத்திவிட்ட பெரும் புகழ் தமிழ்மொழிக்கே உண்டு. இவ்வுண்மையை உணர்த்தியவர் பேராசிரியர் சுந்தரம் (பிள்ளை) அவர்களே யாவார்கள்.

பண்பார் தென்றமிழ் இந்திய துணைக்கண்டம் முழுவதும் தன் னாட்சி நடத்திய காலம் உண்டு. அது மட்டுமன்று. உலக நாடுகள் பலவற்றுள்ளும்பரவி வளம்பெற்று சிறந்தோங்கிய காலமும் உண்டு. மொழி ஆராய்ச்சி வல்லுநர்கள் ஆய்ந்து தெளிந்து கழறியுள்ள ஒப்பற்ற முடிவுகள் யாவும் தமிழின் தொன்மையினையும் சிறப்பினையும் தெரிவிப்பனவாகும். தக்க அடிப் படையின்மீது கண்டுள்ளஇவ்வொப் பற்ற ஆராய்ச்சி உண்மையை கண் டறிந்த பேராசிரியர்:

"சதுமறையா ரியம்வருமுன்
சகமுழுது நினதாயின்
முதுமொழிநீ யனுதியென
மொழிகுவதும் வியப்பாமே"

என முழங்குவாராயினர்.

தமிழானது ஆரியம் தோன்று வதற்கும் முன்னரே உலகச் சிறப்புப் பெற்று விளங்கிய தொன்மொழி யாகும். அதற்கு வெகுகாலத்திற் குப் பின்னர் தோன்றியதே ஆரியம். ஆயினும் காலத்தாற் பிற்பட்டிருந் தும்கூட ஆரியம் விரைவிலேயே உலக வழக்கொழிந்துவிட்டது. ஆனல், காலத்தால் முற்பட்ட தமிழோ இன்றும் கன்னித்தமி ழாகவே நிலைபேறு பெற்றுள்ளது! உலக இயல்பின் வழக்காற்றை வென்றுவிட்ட இவ்வுண்மையைத் தான் **திராவிட நல் திருநாட்டு** அறிஞர் அவர்கள் உணர்த்தினார் கள்.

இன்னுமொன்று. காலத்தால் தொன்மை பெற்ற தமிழானது பல சேய்களைப் பெற்றெடுத்ததாலும் முதிர்ந்த முதுமொழியாகும். கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் தன் உதிரத்தினின்றும் உதித் தெழச் செய்து தாய்மைநிலை அடைந்துவிட்ட பின்னரும் வியத் தகு சீரிளமைத் திறத்துடன் திகழ் கின்றது!

இப்படியெல்லாம் தமிழ்மொழி யின் சிறப்பினைப் பாராட்டும் பிஷப் கால்டுவெல் அவர்களும் பேராசிரி யர் (சுந்தரம் பிள்ளை) அவர்களும் தலையாய சிறந்த கருத்தொன்றை யும் கூறியுள்ளார்கள்.

திராவிட மொழிக் குடும்பம்

இது கால்டுவெல் கூறும் சிறப்பு.

திரவிட நல் திருநாடு

இது பேராசிரியர் கூறும் சிறப்பு.

தமிழ்மொழியின் உலகச் சிறப்பை வியந்து கூறிய கால்டு வெல் அவர்கள் அம்மொழியினை மற்ற உலக மொழிகள் பலவற் றுடனும் ஒத்திட்டுப் பார்க்கும் பெரும் ஆற்றலையும் மேற்கொண் டார். மலர் மணம் மன்னிய கன்னட மும், தேனினும் இனிய தெலுங் கும், இசை இனிமை இணைந்த மலையாளமும், நாடகத்தமிழாம் துளுவும் செந்தமிழ் மொழியுடன் இணைந்தும் பிணைந்தும் இயங்கும் உண்மையினைக் கண்டார்.இலக்கண அமைப்பை ஆராய்ந்தார். சொற் களின் ஆணிவேர் சல்லிவேர் எல்லா வற்றையும் ஆய்ந்து பார்த்தார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலை யாளம், துளு ஆகிய மொழிகள் யாவும் ஒன்றுக்கொன்று உறவும் முறையும் கொண்ட உடன்பிறந்த மொழிகள் எனக்கண்டார். தென் னிந்திய நிலப்பரப்பில் வழங்கும் இவ்வைந்து உடன்பிறந்த மொழி களும் ஒரே குடும்ப மொழிகளாகும் என்று அறுதியிட்டுக் கூறினார். இவ்ஒரே குடும்ப மொழிகளை **"திராவிட மொழிக் குடும்பம்"** என வழங்கினார். தமிழும் தமி ழுடன் பிறந்தனவான தெலுங்கு முதலிய மொழிகளும் வழங்கி வரும் நாட்டை **திராவிடநாடு** எனும் பெயரில் உலக அரங்கில் புகழ் எய்தச் செய்தார்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களோ கால்டுவெல் அவர் களைக் கடந்து ஒருபடி முன் சென் றார்கள். தமிழின் தொல் சிறப்பை யும் உலகச் சிறப்பையும் கூறிய பேராசிரியர் அதன் தாய்மைச் சிறப் பினைக் கூறுமுகத்தான்,

"கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்"

எனப் பாடிப் புகழலானார். தமிழ் மொழியைத் தாய்மொழியாகவும் கன்னடம் தெலுங்கு மலையாளம் துளு ஆகிய மொழிகளை சேய்மொழி களாகவும் கூறினார். தமிழ்மொழி யின் வரலாற்றையும் அதன் இலக் கிய வரலாற்றையும் கண்டறிந்த துடன் நில்லாது, தெலுங்கு முதலிய மொழிகளின் வரலாற்றை யும் இலக்கியங்களின் வரலாற்றை யும் கண்டறிந்ததினின்றுமே இவ் வுண்மையைக் கூறலாயினர். தெலுங்கு முதலிய மொழிச் சொற் கள் யாவும் தமிழ்ச்சொற்களையே வேர்ச் சொற்களாகக் கொண்டுள்ள உண்மையினையும், அம்மொழி இலக்கணங்கள் யாவும் தமிழ் இலக்கணத்தையே அடிப்படை யாகக் கொண்டுள்ள உண்மையினை யும் அசைக்கமுடியாத ஆதாரங் களாகக் கொண்டதாகும் பேராசிரி யர் அவர்களின் கூற்று. தமிழின் தொல்லிலக்கணமாகிய தொல் காப்பியமும் மற்ற இலக்கியங்களும் கிடைத்து ஆராய்ந்திருப்பின் கால்டு வெல் அவர்களின் முடிவும் பேரா சிரியரின் முடிவையே ஒத்திருக்கும்.



மொழி வழி திராவிட நாடு

தமிழின் உதிரத்தெழுந்த கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும் துளுவும்தாம் வழங்கிவந்தநிலப்பகுதிகட்குத் தம் பெயர்களையே தோற்றுவித்து கன்னடநாடு என்றும், தெலுங்கு நாடு என்றும்,மலையாளம்என்றும், துளுநாடு என்றும் வழங்கச் செய் திருப்பினும் இந்நிலப் பகுதிகள் யாவும் 'திராவிடம்'என்றதாய்மைச் சொல்லில் அடங்கிவிடுவனவேயா கும் எனும் உண்மையை பேராசிரி யர் உணர்த்தியுள்ளார்.

விந்திய மலையையும் நர்மதை யாற்றையும் வடவெல்லைகளாகவும் குமரிமுனையை தென்னெல்லையாக வும் கொண்டுள்ள அகன்ற நிலப் பரப்பானது **தெக்கணம்** எனச் சிறப் புற அழைக்கப்படுவதாகும். மிகுதி யும் உயர்ந்த மேட்டு நிலப்பகுதியை உடையதாதலின் இதனை தெக்கண பீடபூமி எனவும் வழங்குவர். இத்தெக்கணத்தின் கண்ணேயுள்ள நாடுகளிலெல்லாம் தமிழும் தெலுங் கும் கன்னடமும் மலையாளமும் துளுவும் வழங்கும் ஓரினமொழி நாடே சிறந்துவிளங்கும் நாடாகும். தெக்கணத்தின் திலகமெனும் சிறப்பிற்குரியதான இவ்வோரின மொழிநாட்டை **திரவிடநல்திருநாடு** என வழங்குவர் மொழி இயல் பறிந்த அறிஞர்.

தமிழம் எனும் தொன்மை வழக்காறுனது திராவிடம் என ஆந்திரம் கன்னடம் மலையாளம் துளு ஆகிய மொழி நாடுகளையும் உள்ளடக்கி வழங்கப்பட்டு வந்த வரலாற்று உண்மையை,

"நீராறுங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழி லொழுகும்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த
திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோ
லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கு"

எனப் புகழ்ந்து கூறுவாராயினர் பேராசிரியர்.

பிற்காலத்தே வந்தடைந்ததும் வடமொழி என வழங்கப்பட்டது மான சமஸ்கிருதமும் அதன் பாகத மொழிகளும் ஆரியம் எனும் வழக் காற்றை அடைந்ததுவும், தொன் மைக் காலந்தொட்டே வழங்க பட்டு வரும் முதுமொழியா தமிழும் அதன் பிறப்பா தெலுங்கு-கன்னடம்-மலைய

(14ம். பக்கம் ப

காலமே! அழகுமிக்க கன்னிப் பெண்ணே! நீ என் இப்படி நாடோடியாகத் திரிகிருய்? என்ன பொருள் வேண்டி, இத்தனை வேகமாக ஓடுகிருய்? உனது காற்றிலும் கடிதே செல்லும் குதிரைகளை நிறுத்தி இறங்கிவா. என்னுடன் இன்று விருந்துண்டு மகிழ்ச்சியாக இருந்துவிட்டுப் போ!

வானத்தை முத்தமிடும் மலைகளுக்கு மேலே, வளங்கொஞ்சும் வயல் வெளிகளைக் கடந்து, நீலக் கடல் வெளியில், நெளிந்தோடும் ஆறுகளைத் தாண்டி, சிட்டுக்கள் இசையெழுப்ப, தென்றல் தாளம் போட, மலர்க்கொடிகள் நடனமாடும் சோலைகளைக் கண்டும் காலமே! நீ எங்கே செல்கிருய்?

பரந்த வெளியினையே பட்டு மெத்தை யாகவும் கைகளையே தலையணையாகவும் மரத்தடியையேமாளிகையாகவும் எண்ணி அதோ உறங்குகிருர்களே அவர்களைப்பார்! அவர்கள் எல்லாம் நிம்மதியுடனே உறங்குகிருர்களே. மரத்தடியாக இருப்பினும் மகிழ்ச்சி கூத்தாடுகிறதே! நீ மட்டும் மன அமைதியின்றி, ஏன் இப்படி அலைகிருய்? உனக்கென ஒரு வீடு இல்லையா? திராவிடத்தார் கருணை உள்ளம் கொண்டவர்களாயிற்றே! ஆயிரக்கணக்கான ஆண்டவர், அழகிய மாளிகைகளிலே தம் குடும்பத்துடன் வாழும் போது உனக்குத்தாஞ வீடில்லை? இல்லை! நிச்சயம தருவார்கள். நீஇனிமேனும் அலைவதை விடுத்து இங்கே வா!

வான் மீதிலே வண்ண நிலவு வலம் வருகிறது, தாரகைகள் நிலவை விட எட்டாத உயரத்திலே இருப்பதை எண்ணியபடி நிலவைக் கேலி செய்துக்கொண்டு அங்கும் இங்கும் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருக்கின்றன. மெல்லிய செழுங்காற்று வீசுகிறது இன்பமே! இங்குவா! இன்று மட்டுமேனும் தங்கிச் செல்!

கனிமொழியே! என் இத்தனை வேகமாக ஓடுகிருய்? உனது ஓட்டத்தின் வேகத்திலேஎத்தனைபேர் நிலைமாறுகின்றனர். வாலிபமிழந்து ...ாதிகராய் மாறி வாடுபவர் எத்...பேர்? உந்தன் வேகத்தைக் ...பாது, ஐயோ? எனக்கு ...ருக்கிறதே! ஒளிச் சுடரே குளிர்நிலவே! ஓட்டத்தை, அதன் வேகத்தைச்சற்று தணித்துக்கொள். வயோதிகத்தை எண்ணும்பொழுதே நெஞ்சம் புண்ணுகிறது. அன்பே! இங்கேயே தங்கி விடு. வேண்டியவற்றை விருப்பமுடன் தருகிறேன்.

மலர்க்கொடியே! நீ தங்குவதாக இருந்தால் என்ன வேண்டுமோ கேள்? அத்தனையும் தருகிறேன். தமிழகத்து முத்து தனிச் சிறப்புடையது. தமிழகத்துப் பொற்கொல்லர் மட்டும் சிறப்பில்லாதவர்களா? உன்னை அழகு செய்யும் பொருள்கள் அத்தனையும் இங்கிருக்கிறது. இங்கேயே தங்கி விடு. உனது மலர்க் கரத்திற்கு ஏற்ற ஒரு மோதிரம் தருகிறேன்! பார்! இதுவரை எங்கும் பார்த்திருக்கமாட்டாய்! இறங்கி வா! என்னருமைப் பெண்ணே! குதிரையை நிறுத்து. மறுக்காதே! இன்று மட்டு மேனும் இங்கு தங்கிச் செல்!

காலமே! நீ என்றும் இளமை மாருது அழகுடன் மிளிர்கிருயே? இது எப்படி உனக்கு மட்டும் இயைவதாகவிருக்கிறது? அந்த இரகசியத்தை என்னிடத்து அருள் கூர்ந்து கூறிவிட்டுப்போ! சிலர் என்றென்றும் இன்பமாகவும் துன்பமேதும் இல்லாது வாழ்கின்ருர்கள். மற்றும் பலர் பாடுபட்டும் பயன் கிட்டாது, பட்டினியால் வாடுகிருர்களே! இது ஏன்? "காலம் ஒரு கூர்வாள்" எனச் சிந்தனையாளர்கள் செப்புகிருர்களே! உண்மையா? அப்படியாயின் மாமருந்தே! நீ இங்கு வா! பொதுமையைப் புதுமையின் வழியே இட்டு வந்து இங்கு வாடும் மக்களுக்கு வழிகாட்டு! நாடோடிப் பெண்ணுக இருந்தாலும் நல்ல கனிந்த இதயமிருக்கும் எனும் எண்ணத்தால் சொல்லுகிறேன், வா!

இன்பமே! திருவிடர்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்து கொண்டிருந்தபோது, எகிப்து, யவனத்துக் க்ப்பல்கள், திருவிடத்துக் கடற்கறைகளிலே காத்துக் கிடக்குமாம! இங்கிருந்து முத்தும், சந்தனமும், மிளகும், ஏலக்காயும் ஏற்றுமதியாகும். பொன்னும், மணியும் இறக்கிக் கொண்டிருப்பார்களாம்! இன்றும் அன்பே! ஏற்றுமதியாகிறது! வாழமுடியாத தமிழர்கள் வேற்று நாடுகளுக்கு வேலை தேடிக் கப்பல் ஏறுகிருர்களே! அது தான். இலங்கை, தென்னுப்பிரிக்கா முதலிய நாடுகளினின்று விரட்டப்படுகிற தமிழர்கள்தான் இங்கு இறக்கப்படுகிருர்கள். காலமே,இது ஏன்? எப்படி இந்த மாற்றம் நிகழ்ந்தது? வளங்கொஞ்சும் வாழ்வு, வகை கெட்டுப் போனது ஏன்? அன்பே! இந்த நிலையை மாற்ற நீ இங்கு வா! வந்து யோசனைகள் கூறு! திருவிடரை நல்வாழ்வு வாழச் செய்! வழி காட்டு!!

உனது அழகிய குதிரைகளை நிறுத்து, காலமெனும் கன்னிப் பெண்ணே! நீ என் இவ்வளவு அவசரப்படுகிருய்? இறங்கி வா! இங்குதங்கிப் போகலாம் !வா ! வா!!

ப. முல்லைவழுதி.

சுந்தரம் கண்ட திராவிடம்

(13ம் பக்கம் தொடர்ச்சி)

துளுவமும்,திராவிடம் எனும் வழக்காற்றை அடைந்ததுவும் சரித்திர வரலாறுகளாகும். மேனுட்டுமொழியாராய்ச்சிக்காரர்கள் தொடக்கத்தில் தென்னிந்திய மொழிகளைத் "**தமிழ்**" என்றே இனமொழிக் குறியீடு கொடுத்து வழங்கிவந்த வரலாற்றிற்கு பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்தே வடமொழியாளர்களும் "**தமிழம்**" என்றே வழங்கி வந்ததும்பின்னர் **த்ரமிளம்** என்றும் **த்ரமிடம்** என்றும் முடிவில் **த்ரவிடம்** என்றும் வழங்கி வந்துள்ளனர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய ஓரினமொழிகளை திராவிடம் என்றே வழங்கப்பட்டுவந்த வரலாற்றைத் தான் பேராசிரியர் உறுதிப்படுத்தினுரென்க. ஆகவே, தெலுங்கு வழங்கும் தெலுங்கு தேசத்தையும், கன்னடம் வழங்கும் கன்னட நாட்டையும், துளு வழங்கும் துளு நாட்டையும், மலையாளம் வழங்கும் மலையாள நாட்டையும், தமிழ் வழங்கும் தமிழ்நாட்டையும் ஒன்று சேர்த்தே மொழிவழியமையும் திராவிடநல்திருநாடாக இலக்கணம் அமைத்துப் பாடுவாராயினுர் பேராசிரியர்.

இந்திய மொழி வரலாற்றை ஆராய்ந்த **கிரியர்சன்** அவர்கள் தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் துளு ஆகிய மொழிகளை திராவிட இனமொழிகள்எனக்கூறி, இம்மொழிகள் வழங்கும் நிலப்பகுதியை திராவிடநாடு எனப் பெயரிட்டு இந்திய மொழிவழிப் படத்தில் காட்டியுள்ளார். இன இலக்கண அடிப்படையையும் கிரியர்சன் அவர்களது மொழியாராய்ச்சி உள்ளடக்கிக் கொண்டுள்ளது. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களது மொழிவழி திராவிடக் கருத்தும் இன இலக்கண அடிப்படையையும் கொண்டுள்ளதாகும். இவர்களது கருத்துக்களை பழைய "**இந்தியன் ஆண்டிக்வரி**" (**Indian Antiquary**) மாத இதழ்களில் காணலாம். உயர்திரு **வெள்ளக்கால் சுப்ரமணிய முதலியார்** அவர்களது '**இராமாயணமும் - தென்னிந்திய சாதி வரலாறும்**' என்ற நூலிலும் காணலாம். ஆகவே கிரியர்சன் அவர்களது கருத்து பெரிதும் பேராசிரியர் கருத்தையே உறுதிப்படுத்துதல் விளங்கும்.

இவ்வாராய்ச்சி அடிப்படை உண்மைகளை வைத்தே **நீதிக்கட்சியினர்** தெலுங்கு கன்னடம் மலையாளம் துளு தமிழ் ஆகிய மொழிகள் வழங்கும் நிலப்பரப்பை **திராவிட நாடெனப் பிரித்துத் தனியாட்சி ஏற்படுத்த விழைந்தனர். 1940 ல் திருவாரூரில்** நடைபெற்ற நீதிக்கட்சி "**கான்படரேஷனில்**" திராவிடநாடு பிரிவினையை வற்புறுத்தித் தீர்மானம் நிறைவேற்றினர். இதற்கு முன்பாக திராவிடநாடு பிரிவினைக் கோரிக்கையை வற்புறுத்துதற்கெனவே **தனி மாநாடு** ஒன்று **காஞ்சியில்** சேலம் **திரு. நெட்டோ** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டின் திராவிடநாட்டு பிரிவினை தீர்மானத்தைத்தான் திருவாரூரில் நடைபெற்றநீதிக்கட்சி"கான்படரேஷன்" உறுதி செய்தது. திராவிடநாடு பிரிவினை கோரிக்கையில் சென்னை மாகாணம், திருவாங்கூர், கொச்சி, மைசூர், கிட்டத்தட்ட வங்காளம் வரையில் உள்ள கீழ்க்கடற்கரை நாடு, கோவா வரையுள்ள மேற்குக் கடற்கரை நாடு, குடகு, காரைக்கால், புதுச்சேரி, மாஹி முதலிய பகுதிகள் உள்ளடங்கினவாகும். கன்னடமும் தெலுங்கும் மிகுதியான ஐதராபாத் ராஜ்யம் தனி ராஜ்யமாகவே காட்டப்பட்டிருப்பினும் அது அரசியல் காரணமாக அவ்வாறு காட்டப்பட்டிருந்தது என்க.

ஆகவே இவ்வாறெல்லாம் கூறியவாற்ருல் மொழிவழி திராவிடநாடு அடையவேண்டிய முயற்சியைத் தோற்றுவித்தவர் பேராசிரியர் என்பதும், அவர் காட்டிய அம் முயற்சியில் ஈடுபட்டு வாகை சூடும் நாளே பேராசிரியரின் குறிக்கோள் நிறைவேறிய நாளாகும் என்பதும் தெரியவரும்.

இதுதான் காரணம்!

நான் மனிதரை மட்டுமல்ல, பறவைகளையும், விலங்குகளையும் கூட நேசிக்கிறேன். பசு, பட்சிகள் எதற்கெடுத்தாலும் முணுமுணுப்பதில்லை; பாவத்திற்காக அழுவதில்லை. யாரையும் தொழுவதில்லை. கடவுளையும் குருக்களையும் பற்றிப் பேசிப்பேசி என் காதைத் துளைப்பதில்லை. அவைகளுக்கு இல்லை என்ற கவலையுமில்லை.

—வால்ட் விட்மன்.

பேராசிரியர் கண்ட பெண்கள்

முன்னுரை

நல்ல நாடக நூல்கள் தமிழில் இல்லையென்ற குறையைப் போக்கிய பெருமை பேராசிரியர் சுந்தரனருக்கே உரியதாகும். "மனிதப் பண்பாட்டை விளக்காத எந்த ஒரு செயலும் பகுதியும் நாடகத்தில் இருப்பது பயனற்றது" என்று "ஆங்கில நாடகத்தின்மறுமலர்ச்சி" என்னும் நூலில் ஹென்றி ஆர்தர் ஜோன்ஸ் கூறியுள்ளதற்கு ஒப்ப எந்த ஒரு குறையுமில்லாது இறவாப் புகழோடு இலங்குகின்றது பேராசிரியரின் மனோன்மணீயம். நூலின் சுருக்கத்தை முதலில் தந்து நாடகத்தில் அறிவும் அன்பும் உடைய செல்வியராய்த் திகழும் மனோன்மணி, வாணி என்னும் இருவர் தம் சிறப்பியல்புகளைத் தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மன்னனும் சிலரும்

சீவகன் என்பவன் பாண்டிய மன்னன். அவன் மகளே **மனோன்மணி** என்பவள். தாயற்ற அவளைப் பேரன்புடன் தகுந்தவாறு பேணி வளர்த்தான் மன்னன். அரசனிடமும் மனோன்மணியிடமும் பெரிதும் அன்பும் அருளும் கொண்டவர் **சுந்தரமுனிவர்.** மனோன்மணியின் உயிர்த்தோழியாகவும் கற்பார்க்கு அறிவுடை நங்கையாகவும் விளங்குபவள் **வாணி**. மன்னனின் நற்குண நற்செயல்களைப்பாராட்டி **நடராசன், நாராயணன்** என்ற ஒழுக்கமிக்க வீரர் இருவர் ஊழியம் செய்தனர். நடராசனின் நற்பண்புகளைப் பாராட்டி வாணி அவன்பால் காதல் கொண்டாள், அவனையே மணந்து வாழ்தல்வேண்டும் என்ற உறுதியும் கொண்டாள். **சகடர்** வாணியின் தந்தையார். அவர் வாணியின் காதலை மதியாது செல்வமுடையவன் கசடனே ஆயினும் அவனே தன் மருமகனுதற்கு உரியவன் என்ற எண்ணம்கொண்டு, குடிலன் மகனுன பலதேவனுக்கு அவளை மணமுடிக்க எண்ணினர்.

குடிலன்

குடிலன் என்பவனே சீவகனின் அமைச்சன். இவன் வஞ்ச நெஞ்சினன்; சூட்சியறியாத அரசனைத் தன் போலிப்பணியினுலும், அடக்கத்தினுலும் தன் வயப்படுத்திக் கொண்டான்; ஒழுக்கமும் நேர்மையுமறியா நிலையில் வளர்ந்த பலதேவனுக்கு மன்னனின் மாசிலா எச்சமான மனோன்மணியை மணமுடிக்க எண்ணி, அவ்வுறவின் வழிநாட்டாட்சியைப் பெறத் துணிந்தான். எனவே அவன் தன் எண்ணம் செயலாகிப் பயன்தரக்குரிய முயற்சிகளை மேற்கொள்ளலானுன்.

தலைநகர் மாற்றம்

பாண்டியர்க்குத் தலைநகராயிருந்து தமிழ்வளர்த்த பெருமை மதுரைக்கே உரியது. எனவே, மதுரைமா நகர் தன் சூழ்ச்சிகள் சிறப்புறற்கேற்ற இடமாயமையாதெனக் குடிலன் கருதினன். இதனுல் தலைநகரையே மாற்றும் எண்ணம்கொண்டான். எண்ணம், சூழ்ச்சி இரண்டும் உந்த, குடிலன் அரசனை அண்மி, "நாஞ்சில் நாடு நம்நாடு. அது இடைப்போது சேரரால் கொள்ளப்பட்டது. அதனைப் பெறல் நம் பிறப்புரிமை. அரசன் அறமுறைக் கஞ்சி நாடு நல்குவனுயின் பெற்று மகிழ்வோம். இன்றேல், களத்தில் கண்டு நம் உரிமையை நிலைநாட்டிக்கொள்வோம். அங்ஙனம் போர் அமையின் மதுரையில் நாமிருப்பது பயன் தாராது. எனவே நம் தலைநகர் நெல்வேலிக்கு மாற்றப்படல் வேண்டுமென்றனன். மன்னவன் ஒப்பினன்

தூதும் போரும்

குடிலன் தன் மகன் பலதேவனைச் சேரமன்னனிடம் தூதனுப்ப எண்ணினன். சுந்தரமுனிவர் கூற்றுப்படி மனோன்மணிக்கு மணாளனுகக் கொள்ளற்குரிய சேரமன்னன் புருடோத்தமனிடம் பெண்வீட்டாரே சென்று மணம்பேசல் நன்றன்று என்று கூறி, நாஞ்சில்நாடு கேட்டு, நாடு நல்கானுகில் நங்கையைக் கொள் என்பதை மறைமுகமாகக் கூறலாம் என்று மன்னனிடம் கூற, மதியழி மன்னனும் ஒப்பினன். பலதேவன் வஞ்சியான் உள்ளம் புண்ணுகும் வகையில் சொல்லாட, மன்னன் போராடத் துணிந்தான். சேரனது இந்த மாற்றம் குடிலன் உள்ளத்தே அச்சத்தை விளைவித்தது.

அரசத்துரோகம்

போர் துவங்கிற்று. குடிலனுல் படைகள் அணிவகுப்பு செய்யப்பட்டன. மன்னனை எளிதில்மாற்றுர் தாக்க, மாற்றுர் தாக்குதற்குள்ளாகி மன்னன் மடிய, தான் சேரலர் தம்மிடம் சரண்புகுந்து, நாடாளும் நிலைபெறல் வேண்டுமென்பதே குடிலனின் இறுதித் திட்டமாயமைந்தது: அரசன் ஆபத்தான நிலையிலிருப்பதை அறிந்த நாராயணன் படையுடன் களம்போந்து மன்னனைக் காத்தனன். இதனுல் வெகுண்ட குடிலன், 'அரசத்துரோகம்' என்ற பழியினை நாராயணன்பால் சுமத்தி அவனைச் சிறையிலிட்டான்.

புதிய முயற்சி

போராடி வெல்வதினும் சூழ்ச்சியால் வெல்வதுதான் சிறந்ததெனஎண்ணிய குடிலன், சேரனையடுத்து அவனைச் சுந்தரமுனிவர் அமைத்த 'மறைவழி' வழியாய் அரண்மனை அழைத்துவந்து, வழுதியைக் கொல்வித்து, நாட்டை அவனுக்குரித்தாகச் செய்து, ஆளுமுரிமையைத்தான் பெறல்வேண்டும் என எண்ணி அதற்காவன செய்யத்துணிந்தான்.

முனிவரின் செயல்

இன்னல்கள் மன்னனின் ஆய்வறிவற்ற நிலையால் அடுத்தடுத்து வ்ருவன கண்ட முனிவர், மனோன்மணியைக் காக்க, அவளைத் தம்முடன் அழைத்தேக அரசன் கருத்தினை வேண்டினர். அரசன் குடிலனைக் கலக்க, அவன் அவளை மணமுடித்து அனுப்பலே நலமெனக் கூறி, பலதேவன் அவளை மனைவியாக்கொள்ள நயப்பதாய்ச் சொல்லி, மன்னனைப் பலதேவனுக்கே தன் மகளை மணம்புரிவித்தற்கு இசையுமாறு செய்தனன்.

குடிலன் எங்கே?

அரண்மனையில் மணவிழா. அதன் முன்னர் குடிமக்களுடனும் முனிவர், நடராசர், நாராயணர் ஆகியவருடனும் அரசன் உரையாடுகின்றுன். குடிலனைக் காணுது யாவரும் திகைக்கின்றனர். குடிலனின் இருப்பிடமோ அன்றிச் செல்லிடமோ கூற இயலா நிலையில் பலதேவனும் தயங்கினுன். இங்ஙனம் யாவரும் குடிலன் வரவை எண்ணி யேங்கும் வேளையில் அவன் எங்குற்றனன்?

சேரன் மாண்பு

புருடோத்தமனைக் கண்டு, தன் சூழ்ச்சியின் இறுதிப் பகுதியை முடிக்க எண்ணிய குடிலன், அவன் பாசறை சென்றுன். சேரனைக் கண்ட குடிலன் தன் எண்ணத்தை இயம்பினுன். சேரன் சிந்தித்தான்; குடிலனுக்கு விலங்கு பூட்டி, அவனுரைத்தமறைவழியாய் அரண்மனையை அடைந்தான்.

மணமும் மகிழ்வும்

அரண்மனையில் நள்ளிரவில் பேரொளியும் பேரொலியும் மிக்கிருத்தலைக் கண்ட சேரன் வியந்தனன். பின்னரே மணவினைக்குரிய செயல்கள் நடப்பதை அறிந்தான். மனோன்மணியும் பலதேவனும் கைகளில் மாலை தாங்கி, மாற்றிக் கொள்ளவேண்டிய நிலையிலிருந்தபோது, அவையோர் யாவரும் வியப்புற, சேரன், தனக்கும் மணவினையிலீடுபட்டோர்க்கும் இடைப்பட்ட திரையினை விலக்கி, வெளிவந்தனன். கனவினில் வந்து தன் உளம்கொண்ட உயிரோவியம் தன் எதிரே நிற்றல் கண்டு வியந்தான். அவையோர் ஆரவாரத்திற்குக் காரணம் காண விழைந்த மனோன்மணி, தன் உள்ளம் கொள்ளை கொண்டானைக் கண்டு வியந்தாள். அவள் கைமாலை சேரன் கழுத்தில் விழுந்தது. சேரனைக் கண்ட அவையோர் திடுக்கிட்டனர். சேரனை அடுத்து விலங்குடன் நின்ற குடிலனைக் கண்டு திகைத்தனர். சுந்தரமுனிவரின் உரைகேட்டு அமைதியுற்றனர்.

குடிலனின் சூழ்ச்சியை யாவரும் அறியும் வகையில் சேரன் செப்ப, பாண்டியன் வெகுண்டு தண்டிக்க எண்ண, முனிவர் தடுத்து, 'மனோன்மணியும் புருடோத்தமனும் இணைபிரியாக் காதலர்கள், அவர்களை வாழ்த்துக' என்று கூற, மன்னவன் வாழ்த்துகின்றுன்," என்ற அளவில் நாடகம் முடிகின்றது.

இதுவரை நாம் நாடக நூலோடு ஒன்றி, இதயம்கொண்டு உணர்ந்தோம்; நாடகாசிரியர் உணர்ந்து போற்றி எழுதிய புனையா ஓவியம் அவர் உணர்ந்தவாறே உணர்ந்தோம். ஏன், எப்படி என்ற ஆய்வு வினுக்களற்ற நிலையில், நாடகப் புலமையாளர் காட்டிய வழிநின்று நம்மை மறந்து கண்டோம். அறிவு பணிய, உணர்வு முன்நின்று உணர்த்த, உணர்ந்து கற்ற நாம், இனி ஆய்ந்தறிய வேண்டும்.

ஆய்ந்தறிதல்

ஆய்ந்தறிதல் என்பது அறிவு கொண்டு நுணுகி நுணுகி இலக்கியத்தைக் கற்பது; நாடகாசிரியர் உணர்த்தியவற்றை இன்றிய உண்மைகளைக் கொண்டு சீர்தூக்கிக் கற்பது; எதற்கும் காரண காரியப் பொருத்தம் கண்டு கற்பது; அறிவு தலைமையேற்க உணர்வு அவ்வப்போது உதவிடக் கற்பதே ஆராய்ந்து கற்கும் முறையாகும். எனவே மனோன்மணியின் பண்பு நலனைக் காண விழைவோர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை காட்டுமாறு மனோன்மணியைக் காணவேண்டும்; அதற்காகச் சில முறையேனும் மனோன்மணீயத்தை உணர்ந்து படித்தல் வேண்டும்; பின்னரே ஆராய்ச்சியில் ஈடுபடல் சிறந்தது. இத்தகைய அடிப்படையுடன் மனோன்மணீயத்தை இனிக் காண்போம்.

பேராசிரியர் கண்ட பெண்கள்

பேராசிரியர் சுந்தரனுர் படைப்பில் பெருமை பெறும் பாவையர் இருவர். அவர்தம் படைப்பு வளர்ச்சி முதலியன சுந்தரனுரின் நாடகப் புலமையை விளக்க வல்லன. மனோன்மணி, வாணிஎன்ற அவ்விரு நங்கையர் தம் திறனை ஆசிரியர் உளம் ஒன்றிக் காண்போம்.

மனோன்மணி

மன்னன்மகள்மனோன்மணி குணநலம்கொண்ட நங்கையாய் நாடக முழுதும் விளங்குகின்றுள். நாடகத் தலைவியான இவளைப் பற்றிச் சிறப்

— மா. ரா. —

இளங்கோவன்

பித்துக் கூறற்குரிய ஆசிரியர் கூற்றுக்கள் பலவுள.

காதல்-எண்ணம்

தந்தையைப் போன்றே இவளும் காதல் மணத்தின் சிறப்பினை உணர்ந்து போற்றும் பண்பினைப் பெற்றவளில்லை என்பதனை,

"காதலென் பதுவென் ?
பூதமோ பேயோ ?
வெருட்டினு லுய்போ
லோடிடும்; வெரு...
துரத்துங் குரைக்கும்
தொடரும் வெகுநெ...
என்று கூறுகின்றுள்.

(24-ம் பக்கம் பார்...

பிடி சாம்பல் பேசினால்...!

[பிறந்தகதை:- ஆவி உலகத்தில் நம்பிக்கையில்லாத நான், மனமறிந்து தவறொன்றைச் செய்ய விழைகிறேன். வெறும் பொழுது போக்கானதாகவின்றி, கொள்கைப் பிடிப்புடையோராக விளங்கும்வாசக நண்பர்கள், இதனைப் பொறுப்பார்களாக!

தவறொன்றைச் செய்வதால், அதன் பயனாக நூறு நல்லன நடப்பதாக இருந்தால், அந்த 'ஒரு தவறைச் செய்வதிலும், தவறில்லை, என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் தான் இதனை எழுதத்துணிந்தேன். இறந்தும் இறவாப் புகழுடன் விளங்கும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, மறைமலைஅடிகளார் தமிழ்த்தென்றல் திரு. வி. க. இவர்களையவரின் சாம்பலோடு, சமீபகாலமாக தமிழகத்தின் கட்டாயப் புகழுக்கு ஆளாகி வரும் டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயரின் சாம்பலையும் கலந்து பிடி சாம்பலாக்கி, உயிர் ஊட்டினேன்; அவர்களை உரையாடவும் விட்டேன். அதன் விளைவே, இது!]

[உரையாடல் நிகழும் இடமோ வானியெல்லாம் நீரும், வீதியெல்லாம் தமிழ் மணக்கும் தமிழ் கூறும் நல்லுலகம். அங்கே, ஆற்று நீரும் ஊற்று நீரும் கலந்து நிற்கும் நீரோடை உண்டு. அதன் கரையகத்தே, தென்றல் தவழும் தென்னஞ் சோலை! நறுமணம் கமழும், சிறு குடிலொன்று, அதன் மையத்தில்! அந்தச் சிறு குடிலில்!

மறைமலை அடிகளார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் திருக்குறளுரையை உரக்கப் படிக்க, பார்வை இழந்த திரு. வி. க. காதுற்று கேட்கவும், பேராசிரியர் சுந்தரனார் புறநானூற்று ஆய்வில் ஈடுபட்டிருந்ததுமான வேளை-நிலை! அது காலை, வேற்றுள் யாரோ வருகை தரவே, ஏறிட்டுப் பார்க்கிறார் பேராசிரியர்]

பேரா:- (கேலியாக) வருக, ...க! தமிழ் காத்த தண்ட...வல!

...தள்:- (இடைமறித்து) ...ராசிரியரே! தமிழ் காத்த தண்டமிழ் கிழவ, என்றழையும்!

திரு. வி. க:- யாரது? வந்திருப்பது, தாமோதரம் பிள்ளையா?

பேரா:- நன்றாகக் கேட்டீர்கள்! (கிண்டலாக) தமிழ் நாடென்ன, அவ்வளவு நன்றியுள்ள நாடாவென்ன? ஒரு பிள்ளைக்கு இருதாய்-தமிழுக்கு இரு கிழவர்கள்-இருக்க முடியுமா? தமிழுக்கு ஒரேயொரு கிழவர்தான்; அந்த ஒரு கிழவரும், சுவாமிநாத ஐயரவர்களைத் தவிர, வேறு எவராயிருக்க முடியும்?

திரு. வி. க. :-நன்று! வந்திருப்பது ஐயரவர்களா? ஏது இந்தப் பக்கம் வருவதே, அபூர்வமாய் விட்டது.

உ. வே. சு:- வரமலென்ன-வேலை மிகுதி! அத்தோடு டி. கே. சி யும் சேர்ந்து விடுகிறார்; கேட்கவா வேண்டும்! பொழுது கழிவதே தெரிவதில்லை!

பேரா. :-அது மட்டுமா! தமிழகத்திலிருந்து வரும் பாமாலைகளைப் படிக்கவும், பூமாலைகளை எண்ணவுமே தங்களுக்கு பொழுதிருக்குமோ என்னவோ? அடடா, என்ன பாராட்டு! என்ன புகழுரை! தமிழ் மூச்சுவிடும் இடமெல்லாம் தங்களைப்பற்றி பேச்சுதான்! அகத்தியன் கெட்டான், போங்கள்! கோவில் கட்டி, கும்பாபிஷேகம் செய்யாததுதான் பாக்கி.

உ. வே. சு:- (கோபமாக) கேட்டீர்களா, திரு. வி. க! பேராசிரியருக்கு எப்பொழுதும் என் மீது எரிச்சல்தான்! நானென்றும் ஆற்றிலொரு கால், சேற்றிலொரு கால் வைத்தவனல்லவே! தமிழுக்காகப் பிறந்தேன்—தமிழுக்காகப் பாடுபட்டேன்-தமிழால் பலனடைகிறேன். இதிலென்ன தவறு? பழஞ்சுவடிகளைத் தேடி, நான் பட்டபாடு எனக்கல்லவா தெரியும்?

பேரா:-ஐயரவர்களே! பாடுபடும்-பலனடையும்! ஆனால், பலன் உம்மோடு நின்றதா? யார் யாருக்கோ வல்லவா கிடைத்திருக்கிறது! "ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும் மாண் தகை மகளிர் கருச்சிதைத்தோர்க்கும் குரவர் தப்பிய கொடுமை யோர்க்கும்" என்ற பாடலில், குரவர் என்ற இடத்தில் "பார்ப்பார்" என்று புகுத்தினீர். ஏன் என்றுகேட்க தமிழ் நாட்டில் நாதியில்லை; நெஞ்சில் உரமில்லை.

உ. வே. சு. :- அபாண்டம் அபாண்டம்! பேராசிரியரே! ஜாதீயக் கண்ணோட்டத்தில் பேசாதீர்கள்! இந்தக் குறுகிய புத்தி என்றுமே என்னிடம் இருந்ததில்லை; இருந்திருந்தால், மீனாட்சிசுந்தரம் பிள்ளையை என் குருவாகவும் தியாகராயச் செட்டியாரை என் நண்பராகவும் அடைந்திருப்பேனா? அவர்கள் மீது நான் கொண்டிருந்த பக்தியும் ஈடுபாடும் கொஞ்சமா? குறைவா?

பேரா :- இல்லையென்று யார் சொன்னது? நீர் கட்டிய வீட்டிற்கு கூட தியாகராய விலாசம் என்று பெயரிட்டீர்; எழுதிய நூற்களிலெல்லாம் குருவையும் நண்பரையும் போற்றிப் புகழ்ந்தீர்! சோளியன் குடுமி சும்மாவா ஆடிற்று! சங்கீத வித்வானாகப் போகவேண்டிய உம்மை, தமிழறிந்தவராக்கிய பெருமை - என் உரிமை கூட மீனாட்சி சுந்தரம் பிள்ளையைச் சேர்ந்ததல்லவா? அதற்குக் கைமாறாக அவருக்குக் கோவில் கட்டினால் கூட தகுமே! ஆனால் நடப்பதென்ன? மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு தமிழ் கற்றுக் கொடுத்ததே, சுவாமிநாத ஐயர்தான் என்று சொல்லப்போகிறார்கள்; வருங்கால தமிழகம் நம்பத்தான். போகிறது! கரையான் புற்றெடுக்க, கரு நாகம் குடிகொண்ட கதையாகி விட்டது!

உ. வே. சு. :- பேராசிரியரே! இந்த ஏழைப் பிராமணனை வருத்துவதில், உமக்கென்ன லாபமோ? யார்யாரிடமோ இருக்க வேண்டிய குரோத உணர்ச்சி, அறிஞர்களிடம் இருக்கலாமா? "பார்ப்பார் நோவன செய்யார்" என்பது புறநானூற்றுப் பழமொழி. கையில் புறநானூற்றை வைத்துக் கொண்டிருக்கும் நீரோ, தீயெனப் பேசுகின்றீர்!

பேரா :- தவறு சுவாமிகளே! பார்ப்பார் உடற் சிரமந் தரும் எந்த வேலையையும் செய்யார் - ஆனால், பலனை அனுபவிக்க மட்டும் முன்வரிசையில் தோன்றுவர், என்பதே அப்பழமொழிக்கு நான் கொண்ட கருத்து. அதாவது, உம்மைப்போல என்று வைத்துக்கொள்ளுமே! தேடிய இடத்தில், கையில் கிடைத்த பழஞ் சுவடிகளைப் பெற்று, எளிதில் பட்டமும், பாராட்டும் பெற்றீரே, அந்தக் கதைதான்!

உ. வே. சு. :- கேலி வேண்டாம், பேராசிரியரே! பேஷாக நீங்களும் இந்தக் காரியத்தைச் செய்து, தமிழைக் காத்திருக்கலாம்; வளர்த்திருக்கலாம்! உங்களைத் தடுத்தது எவர்?

பேரா :- எவரும் தடுக்கவுமில்லை - எவரும் இத்துறையில் இறங்காமலுமில்லை. உமக்கு முன்னதாகவே, இத்துறையில் தமோதரம் பிள்ளை போன்றோர் இறங்கினார்கள். எத்தனையோ இலக்கியச் சுவடிகளை தமிழகத்துக்குத் தந்துதான் போனார்கள். ஆனால், உமக்கு கிடைத்த பாராட்டும்பு கழுரையும்அவர்களுக்கு கிடைத்ததா? கிடைக்காததன்மர்மம் என்ன? அதுதான் என் கேள்வி? அவர்களது பெயராவது எவருக்கேனும் தெரிந்திருக்கும் நிலை உண்டா?

உ. வே. சு :- அதற்கு நானென்ன செய்வது, பேராசிரியரே! இலக்கியப்பணி யென்ன புகழை எதிர்பார்த்துச் செய்யக்கூடிய காரியமா? 'என் கடன் பணி செய்து கிடப்பதே!' என்ற போக்கில் இருக்க வேண்டுமே தவிர, ஏதேனும் எதிர்பார்த்தால் ஏமாற்றம் நிச்சயந்தான்

பேரா :- ஏமாற்றம் எல்லோருக்குமே இருந்தால் நாட்டையும் அதன் மக்களனைவரையும் குறை கூறலாம்; சந்தேகிக்கலாம்; ஏமாற்றம், ஒரு சாராருக்கு மட்டும் ஏற்படும்போதுதான் அங்கு சிந்திக்க வேண்டியிருக்கிறது!

உ. வே. சு :- சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்! நன்றாகச்சிந்தியுங்கள் ஆனால், அதன் முடிவை மட்டும் நானறிவேன்!

பேரா :- என்ன முடிவு?

உ. வே. சு :- தமிழால் நான் உயர்ந்தேன் என்பீர்; தமிழை பிழைப்புக்காகக் கற்றேன், என்று சாடுவீர்-இதுதானே!

பேரா :- சேச்சே! சிலந்தி வலையில் ஈ சிக்கித் தவித்த போது, அதைத் தப்புவிக்க வாயால் ஊதி பெருமை கொண்டானொருவன். அதைப்போலத்தான் நாம் செய்த தொண்டும், பெற்ற புகழும்! ஆனால், சிலந்தி வலையையே அறுத்தெறிந்து ஈயை தப்புவித்தவனைப் பற்றி எவருமே எண்ணுவதில்லை. பகைப் புலத்தில் மாற்றானுடன் வாள்கொண்டு, வேல்கொண்டு போரிட்டு உயிர் விடுவான், முன் வரிசைப் போர்வீரன். முடிவில் புகழ் சேருவதெல்லாம், அவனுக்கல்ல; அவன் ஊழியம் செய்த அரசனுக்கு! அதைப்போல, யாரோ கட்டிக்காத்த தமிழால் நாம் பயனடைகிறோம் - போர்க்களம் காணா அரசனைப்போல! போரில் மடிந்த போர் வீரனைப்போல, அந்தக் காரண கர்த்தர்களும் மறைக்கப்படுகிறார்கள்.

உ.வே.சு:- பேராசிரியரே! எதையும் என் மறைத்துப் பேசுகிறீர்கள்!

—: சந்தனத் தேவன் :—

அந்தக் காரணகர்த்தர்கள் யாரென்றுதான் சொல்லுமே!

பேரா :- சொல்வதில், எனக்கேதும் தடையில்லை; அவர்களையே இங்கு அழைத்து வரவும் என்னால் முடியும். அவர்கள் இங்கு வந்தால், நீர் இங்கு இருப்பீரா என்பதுதான் சற்று ஐயப்பாடு!

உ.வே.சு:- அவர்களென்ன, அப்படி அசுரர்களா?

பேரா :- அப்படியானால், சரி, தைரியத்தை வரவழைத்துக் கொள்ளும்.

[பேராசிரியர் சுந்தரனார் எழுந்து போய், 'தாளமுத்து-நடராசா' என்று கூப்பிட்டார். கூப்பிட்ட குரலுக்கு, இரு இளைஞர்கள் விரைந்து வந்து வணங்கி நின்றனர். அவர்களைக் கண்டதுமே, உ. வே. சு. ஐயர் மெதுவாக நழுவினார். இதைக் கண்டு பேராசிரியர் சிரித்த சிரிப்பில் திரு. வி. க. வும், அடிகளாரும் சேர்ந்து கொண்டனர். காரணம் புரியாமல், இரு இளைஞர்களும் விழித்தனர்!]

வீரம் மிக்கோன், வீராங்கனையை மணந்தோன், களம் பல கண்ட கர்மவீரன், பத்தொன்பதாம் நூற்றுண்டு வாலிப இத்தாலியின் இளஞாயிறு தளபதி கரிபால்டியின் வாழ்க்கைப் படப்பிடிப்பு.

விடுதலைவீரன் கரிபால்டி

உலகத்தின் எந்தப் பாகத்தில் வதியும் எந்தத் தனி மனிதனும் தன்னை அடிமைத்தளையிலிருந்து விடுவித்துக்கொண்டு, தான் சுதந்திரத்துடன் வாழ வேண்டுமென்பதற்காகவே போரிடுவான்-இயற்கையில் எழும் இயல்பு. ஆனால் மற்றவர்களும் அடிமைத்தளையிலிருந்து விடுபட்ட சமுதாயத்தினராக ஆவதற்குப் பாடுபடுபவனே உண்மை வீரனாகின்றான்.

"இத்தாலியைப் பெறுவோம், ஒன்றுபடுத்துவோம்! இன்றேல் அம்முயற்சியில் நாமனைவரும் ஒழிந்துபடுவோம்" என்று முழக்கமிட்டான் அவர்களது தலைவன். அம்முழக்கத்தை அவனைச் சூழ்ந்து நின்ற வீரர்கள் கேட்டனர்; எதிரிகள் கேட்டனர்; இத்தாலி கேட்டது-ஏன்? உலகமே கேட்டது.

முழக்கத்தின் கர்த்தா, இத்தாலிய மக்களுக்கு சுதந்திர வாழ்வளித்த மாவீரன் கரிபால்டி 1807-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் நாள் பிறந்தான். சுதந்திரத்திற்காக பழைய உலகத்தில் (வடதென் அமெரிக்கா நீங்கிய மற்ற கண்டங்கள்) மட்டுமின்றி புதுஉலகத்திலும் (அமெரிக்கா) சமரிட்டான். எழில்மிக்க இத்தாலியின்பிரதிபிம்பமாக விளங்கினான் கரிபால்டி. ஆனால் அவன் தோன்றிய காலத்தே வல்லரசுகளாலும் அவற்றின் கைப்பாவைகளாலும் இத்தாலி துண்டாடப்பட்டு ஆளப்பட்டு வந்தது,

வடக்கே வெனிஸ் நகரத்திலிருந்து மிலான் வரை பரவியிருக்கும் சமவெளிப் பகுதி ஆஸ்ட்ரியாவின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. மதகுரு போப்பின் செல்வாக்குப் பிறிதோர் புறம் ஓங்கியிருந்தது. இத்தாலிய தீபகற்பத்தின் தென் பகுதியும் சிசிலித்தீவும் அரசன் 'பாம்பா'வினுடைய (இரண்டாவது பெர்டினன்ட்) ஆட்சியிலிருந்துவந்தது. தனது ஆட்சிக்குட்பட்டமக்களை, நினைத்தபோது பாம் (வெடிகுண்டு) களால் தாக்கிக் கொல்லும் கொடூரகுணம் படைத்தோனென்பதே அப்பெயரின் பொருள். யாங்கணும் ஒற்றர்கள், எந்நேரமும் போலீஸ் சோதனைகள், வழக்கோ விசாரணையோயின்றி கடுங்காவல் தண்டனை, சுற்றிலும் சுட்டுக் கொல்லும் பட்டாளங்கள் - இவையே ஆங்கே தினசரி வெறியாட்டங்களாயிருந்தன. சிறிதளவு சுதந்திர அரசாங்கமாக விளங்கிய சர்டீனியாவில் (பிரான்ஸ் தேசத்திற்கு அடுத்துள்ள வடமேற்குப் பிரதேசம் உட்பட) மட்டும் சுதேச அரசன் ஆண்டு வந்தான்.

'தாயகம் துண்டாடப்பட்டு - அடிமைப்படுத்தப்பட்டு, பல்வகை வளங்களையும் இழந்து நலிந்துபோய்க் கொண்டேயிருப்பதா? என்ற கேள்வி இத்தாலி தேசத்து இளைஞர் பலரது உள்ளங்களிலெல்லாம் பரந்து நின்றது. உரிமைக்குரல் கேட்கத் தொடங்கிவிட்டது. அதன் விளைவாக நாடு கடத்தப்பட்ட மாஜினி (Mazzini) யின் தலைமையின்கீழ் வாலிப இத்தாலி (Young Italy) என்ற ரகசியஇயக்கம் உதயமாயிற்று. இலட்சிய புருஷன் மாஜினி நாடு கடத்தப்பட்டதிலும், அவன் இத்தாலியை சுதந்திர ஐக்கியக் குடிஅரசாக ஆக்கக் கருதி முயற்சியெடுத்துக்கொண்டதிலும், விடுதலை இயக்கங்கள் தோன்றி நடைபெற்ற வரலாறுணர்ந்தோர் அதிர்ச்சியேதுங்கொள்ளார்.

விடுதலை வேட்கையால் தாக்குண்ட தாயகத்தின் மைந்தன் கரிபால்டிக்கு வாலிப இத்தாலி நாவரட்சியால் நாடியும் நடையும் தளர்ந்து பாலையின் கண் செல்பவனுக்கு ஊற்று நீர் கிடைப்பது போன்றிருந்தது. கரிபால்டி அறிவாளி மாஜினியையடைந்து அவனது மாணவனானான். ஆசானிடமிருந்து தாயக விடுதலைக்கான விளக்கங்கள் பல பெற்றான்.

சர்டீனியாவின் கொலுமண்டபத்திலிருந்து கோலோச்சும் அரசனை விரட்ட திட்டம் தயாரிக்கப்பட்டது விடுதலை இயக்கத்தாரால். சர்டீனிய கடற்படையில் கரிபால்டி சேர்வது என்றும், குறித்த காலத்தில் அவனும் அவனுடைய சகாக்களும் கப்பலொன்றைக் கைப்பற்றி ஜெனோவா (Genoa) நகரத்தின் அரண்களை நிர்மூலமாக்குவதென்றும்வேலைத்திட்டம்குறிக்கப்பட்டது. ஆனால், திட்டம் செயல்படாமலே வீணாகியது. மாஜினி குறித்தநேரம் தவறாகிவிடவே- கரிபால்டி தன் உயிர் தப்பினால் போதுமென்றஎண்ணத்துடன் கைது செய்யப்படுவதிலிருந்து தப்பி பிரான்சு நாட்டின் எல்லையை அடைந்துவிட்டான்.

'அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் சதித்திட்டம்தீட்டிய கரிபால்டிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது' என்ற செய்தியை பிரான்சு நாட்டின் எல்லையிலிருந்த கரிபால்டி செய்தித்தாளொன்றில் கண்டான்.

கரிபால்டி 29-ஆவது வயதில் நாடற்றவனானான். இருக்க இடமற்று எங்கு செல்வதெனத் தெரியாது. அமெரிக்கா சென்றான். ரியோ டி ஜெனீரோவில் ஒரு பழைய மரக்கலத்தைப் பெற்று அதனைப் பழுது பார்த்து கடலிற் செலுத்துவதற்குத் தகுதியுடையதாக்கி மாஜினி என்ற பெயர் சூட்டினான். அருந்தலைவனை அமெரிக்காவிலும் மறந்தானில்லை. அச்சமயம் பிரேசி (Brazil) லில் இரு புரட்சிகள் நடந்துகொண்டிருந்தன. சான்டா கேடரினா (Santa-Catarina) ராஜ்யமும், ரியோ கிராண்டி டொ சுல் (Rid Grande do Sul) ராஜ்யமும் போர்த்துகீசிய சக்கரவர்த்தியின் ஆட்சியிலிருந்து விடுபட விடுதலைப்போர் நடத்திக்கொண்டிருந்தன. நாடற்ற கரிபால்டி நாட்டு விடுதலைக்காகப் போரிட்ட மக்களுக்குப் பெருந்துணையானான்.

அந்த சமயத்திற்றான் கரிபால்டியின் இதயத்தில் என்றென்றைக்கும் இடம்பெற்ற சம்பவம் நிகழ்ந்தது. கப்பலிலிருந்தவாறு தூரதிருஷ்டிக் கண்ணாடிமூலம் வெளிஉலகைப் பார்த்துக்கொண்டிருந்த கரிபால்டி, கரையோரத்தின் கண் எழில் மிகுந்த ஓரணங்கினைக் கண்டான். குதிரைச் சவாரிசெய்து பழகியதால் அமைந்த அவள் கட்டுடலைக் கண்டதும் தன் கருத்திழந்தான். உடனே படகில் குதித்துக்கரையையடைந்து காரிகையைத் தேடினான். அவள் யாண்டு சென்றனளோ அவனால் அறிந்திட முடியவில்லை. சிறிதுநேரங்கழித்து கயிறு வியாபாரி ரிபெய்ரோ Ribeird வை சந்தித்தான். விருந்தோம்பலுக்குப் பெயர்பெற்ற பிரேசில் நாட்டு வழக்கப்படி வியாபாரியின் மகள் முட்டை வடிவான முகத்தாள், பதினெட்டு வயதுப்பாவை அனிட்டா காபி கொண்டுவந்தாள் தந்தைக்கும் தந்தையிடம் வியாபாரம் செய்யவந்த காப்டனுக்கும். தன் இதயத்தில் பதிந்துவிட்ட இளமங்கையைக் காணவே, அதுவரையில் சரளமாகப் பேசிக்கொண்டிருந்த கரிபால்டியின் பேச்சில் தடையேற்பட்டது. கண்கள் அகல விரிந்தன. அவள் அருகே வர அவனிதயம் வேகமாக அடித்துக்கொண்டது. கரிபால்டியின் நிலையில்தான் அப்பருவ மங்கையும் இருந்தாளென்பது அவளுடைய நடையிலேற்பட்ட தடுமாற்றம் தெளிவாக்கியது. அவளை அருகில் பார்த்தவுடனே உலகத்தின் கண் தனக்கெனத் தோன்றியஓரேவாழ்க்கைத்துணை அவளேதான் எனத் தீர்மானித்துவிட்டான் தளபதி. பாசமும் அன்பும் பரந்து நின்றன அவளுடைய மலர்விழிகளில். அவளது பார்வை கரிபால்டியை சொர்க்கவாசலுக்கு இழுத்துச் சென்றது. 'அன்ப, என்னை உந்தன் உரிமையாக்கிக்கொள்வதற்கு தயக்கம் ஏதேனுமுண்டோ? என்று கேட்பது போன்றிருந்தது. அந்தப் பார்வையில் கண்களுக்குத்தான் எவ்வளவு சக்தி! வியர்வைத்துளிகள் முகமெங்கும் அரும்பி நின்றன! அவன் உள்ளத்திலும் உடலிலும் புத்துணர்ச்சி தோன்றவே 'நீ என்னுடையவளே' என்று இத்தாலிய மொழியில் மர்மமாக அவன் கூறியதைக் கேட்டுக் கொண்டே சென்றாள், தந்தையின் குறிப்பறிந்து உள்ளே மறைந்த சிற்றிடையாள். அங்கேயே அப்போதே ரிபெய்ரோவிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்து அனிட்டாவைத்தான் மணந்துகொள்ள அனுமதி கோரினான். ரிபெய்ரோ மறுத்தான்; அது மாத்திரமல்லாமல் கரிபால்டி வெளியே சென்றதும் அனிட்டாவை அவள் அறையிலே அடைத்து, காவல் காக்க தனது மைந்தர்களையே ஏற்பாடுசெய்தான்.

தந்தைதளிர்மேனியாளைத்தள்ளி அறையைப் பூட்டிவிட்டாலும், சகோதரர்கள் சகோதரி பால்பூண்ட அன்பால், காதலின் தூய்மையையும் சக்தியையும் உணர்ந்து தலைவனுக்கும் தலைவிக்குமிடையே தூதர்களானார்கள். சகோதரர்களின் உதவியால் ஒருநாளிரவு கடற்கரையை யடைந்தாள். அங்கே தன் இன்னுயிரைக் கண்டாள். கலகக்காரக் கப்பல் தலைவன் என்றன்றோ கரிபால்டிக்கு ஆளும் வர்க்கம் பட்டங்கொடுத்திருந்தது. எனவே, மேலும் அந்தப் பிரதேசத்திலிருப்பது உசிதமல்லவென்று கருதி, அனிட்டாவை அழைத்துக்கொண்டு தனது மரக்கலங்களை கடலின்மீது வேக வேகமாய்ச் செலுத்திச் சென்றான்.

புரட்சித் திட்டங்களில் ஈடுபட்டுள்ள இணையற்ற இத்தாலிய வீரனையும் அவன் 'சிறை' பிடித்து வந்த புதுப்பெண்ணையும் கண்டு செல்லலாமென்று நிலாவழகி தனது நேத்திரங்களை அகலத் திறந்து பவனிவந்துகொண்டிருந்த நேரம். பரந்த கடலின்கண் மிதந்து கொண்டிருந்த கப்பலிலே கரிபால்டி தனதாருயிரின்கண்களோடு தனது கண்களைப் பேசவிட்டுக் கொண்டிருந்தான். எதிர்பாராது கரிபால்டியின் கப்பல்மீது குண்டுகள் மாரிபோல் பொழிந்தன. பிரேசிலின் மூன்று யுத்தக்கப்பல்கள் மும்முரமாகத் தாக்கின. எதிர்பாராத இத்தாக்குதலை எதிர்த்து கரிபால்டியின் சகாக்கள் யுத்தக் கப்பல்களைத் திருப்பித்தாக்கினர். அதிர்ச்சியால் தாக்குண்டு கொஞ்சநேரம் அடிபட்டு இறந்துகிடந்த உடல்களின்மீது அனிட்டாவும் நிலைவிழுந்து வீழ்ந்துகிடந்தாள்.. சுயநினைவு பெற்றதும் குண்டடிபட்ட வீரர்களுக்கு முதற் சிகிச்சை செய்வதிலும் தனது ஆடையைக்கிழித்து காயக்கட்டாக மாற்றுவதிலும் முனைந்தாள். கரிபால்டியின் படைவீரர்களில் பலர் அடிபட்டு வீழ்ந்துவிடவே அனிட்டா சிதறிக்கிடந்த துப்பாக்கிகளில் ஒன்றையெடுத்துக் குறிவைத்து எதிரிகளைச் சுட்டாள்; தலைவன் 'நிறுத்து' என்று சொல்லும்வரை சுட்டுக்கொண்டேயிருந்தாள். அனிட்டா இலட்சிய வீரனின் துணைவியாயிற்றே! பலத்த தாக்குதலுக்கிடையேயும் கரிபால்டியின் கப்பல் யுத்தக்கப்பல்களிடமிருந்து தப்பிவிட்டது. இதுதான் அவர்கள் தேன்மதி! பத்தாண்டு காலம் கணவனும் மனைவியுமாய்வாழ்ந்த அவர்கள் போகக்களத்தில் புரண்டு கொண்டிருந்தார்களில்லை. போர்க்களத்தின் முன்னணியிலே, குமுறியெழும் கடலின் மத்தியிலே, ஆதிக்கபுரியினர் வீசியகுண்டுகளின் ஆர்ப்பாட்டத்திலே பெரும் பகுதியைக் கழித்தார்கள்.

"கதிரன்"

கரிபால்டியும் அவன் தோழர்களும் அனிட்டாவுடன் தென் அமெரிக்காவின் பரந்த புல்தரை சமவெளிக்குச் சென்றுவிட்டார்கள். பிரேசிலில் புரட்சி வெற்றி பெறாது போனமையால் அவர்கள் தப்பிச் செல்லவேண்டியவர்களானார்கள். மனித சஞ்சாரமற்ற ஓர் தோப்பில் கரிபால்டியின் காதல் கனிந்தது. அனிட்டா தனது முதற் குழந்தை மெனொட்டியைப் பெற்றெடுத்தாள். பிரசவித்த பன்னிரண்டாம் நாளே குன்றுகள் நிரம்பிய வனாந்தரங்களில் தப்பியோடிப் பிழைக்க வேண்டியவர்களானார்கள். பச்சிளங்குழந்தையை சேணமுகப்பில் வைத்த வண்ணம் வீராங்கனை விடாது பெய்தமழையிலும் குதிரை மீதேறிப் பாய்ந்து செல்லவேண்டியவளானாள் இந்த அவலநிலை உருக்குவே Uruguay குடி அரசின் எல்லையை அடைந்து அங்கு புகலிடம் கிடைக்கும்வரை நீடித்தது.

தலைநகரமாம் மான்டிவிடியோவில் குடும்பத்தோடு வாழத்தொடங்கினான்; ஆனால் நிம்மதி அவனுக்கு வளத்தைத் தந்ததா என்... அதுதானில்லை. உபாத்தி... என்ஜினியர், கப்பல் தரக... பல துறைகளில் ஈடுபட்...

கையை நடத்த முயன்று படு தோல்வியடைந்தோனாயினன். எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் அவன் கண்டபலன் பூஜ்யமே. உடல் உழைப்பே உருவான உலகின் கண் கரிபால்டியின் திறமைதேவையற்ற தாயிருந்தது.

1843-ல் உருக்குவேமீது அர்ஜன் டைனாவின் சர்வாதிகாரி ரோஸாஸ் (Rosas) போர் தொடுத்தான். ஐந்து ஆண்டு காலம் போர் நீண்டது. தங்களுக்குப் புகலிடமாயமைந்த நாட்டின் நன்மைக்காக, தற்காப்புக் காக கூலியோ, சன்மானமோ வேண்டாமென்று சபதம்பூண்டு, தொண்டர்கள் திரண்டனர் கரிபால் டியின் தலைமையில். செஞ்சட்டை யணிந்து போராடிய காரணத்தால் செஞ்சட்டை வீரர்கள் எனப்பெயர் பெற்றனர். செஞ்சட்டைத் தொண் டர் கூட்டத்தை இத்தாலியப்படை (Legion Italian) என்று கூறிக் கொண்டனர். அனிட்டாவும், இத் தாலியப் பெண்களும் செஞ்சட்டை களைத் தைத்துக் கொடுத்தனர். அன்று முதல் கரிபால்டியுடையவும், அவனைப் பின்தொடர்ந்தோருடைய வும் போர்ச்சட்டையாக - இராணுவ உடுப்பாக செஞ்சட்டையமைந்தது.

ரோஸாஸ் தன் படைவரிசைகளின் முன்னேற்றத்திற்குத் தடையா யமைந்த செஞ்சட்டைப் 'பிசாசுகளை' பொடிப் பொடியாக்கி விடுவதாக வெகுண்டான். செஞ்சட்டைகளின் வீரதீர பராக்கிரமங்கள் உருக்குவே சுதந்திர நாடாக நீடித்து இருக்கப் பயன்பட்டன. ரோஸாஸ் சோர் வுடன் திரும்பினான். சூசகமான ஓர் குறிப்பாகவும், கௌரவிக்கும் சின்னமாகவும் வாலிப இத்தாலிய சொஸைட்டியின் (Young Italy Society) பரிசாக கரிபால்டிக்கு ஒரு வீரவாள் அனுப்பப்பட்டது.

எனவே, குறிப்பறிந்து 1848-ல் இத்தாலிய மண்மீது மீண்டும் அடி யெடுத்து வைத்தான். அவனை அறுபது செஞ்சட்டை வீரர்கள் பின்தொடர்ந்தனர். சர்டீனிய அர சாங்கத்தால் விதிக்கப்பட்ட மரண தண்டனை வாபஸ் பெறப்படாமலே தானிருந்தது. ஆனால், அடியெடுத்து வைத்த அருமை வீரனை ஆயிரமா யிரம் மக்கள் கையொலி செய்து, வாழ்த்தொலி கூறி வரவேற்றனர். ஆஸ்ட்ரியா சக்கரவர்த்தியின் மிரட்டலைக் கண்டு அஞ்சி, அஞ்சி பதுங்கிக்கொண்டிருந்த சர்டீனியா வின் அரசன் தன்னை வந்து காணும் படி அழைப்பு விடுத்தான். இதை அவன் எதிர்பார்த்துத் தானி ருக்கமுடியாது! ஆனால், சாமான்ய னான கரிபால்டிக்குப் படையின் தலைமைப் பதவியை அளிக்க அரசன் மறுக்கவே, அவன் உதவி எது மில்லாது ஆஸ்ட்ரியாவை எதிர்த்து மாவீரன் தன் படையை நடத்திச் சென்றான். அரசனுடைய படைகள் மிலான் நகரினருகில் ஆஸ்ட்ரிய சேனையால் தோல்வியுறவே சர்டீ னியா வெள்ளைக்கொடி உயர்த்தி சமாதானம் என்பதன் பெயரால் ஆஸ்ட்ரியாவிற்கு அடிபணிந்துவிட தீர்மானித்துவிட்டது. இதைக்கண்ட கரிபால்டி தனக்கு அங்கு வேலை யில்லை என்றுணர்ந்து 'அடுத்து நாம் செல்லவேண்டியது எங்கே? என்ற வினா எழுப்பினான்.

அவன் வினாவிற்கேற்ற விடையை இத்தாலியின் இதய பீடமான ரோம் அளித்தது. அங்கே மக்கள் சுதந்திரக் கொடியை உயர்த்தி [illegible]ட்டனர். ஒரு காலத்தில் புகழ் [illegible]று விளங்கிய ரோமானியக்குடி [illegible] (Roman Republic) 1800 ஆண்டு [illegible]றப்பின் மீண்டும் ஸ்தாபிக்கப் [illegible]தான பேரர் தொடங்கி [illegible] அந்த மறுமலர்ச்சிக் [illegible]ர் முகமாக ஆஸ்ட்ரிய சாம்ராஜ்யம், போப், அரசன் பாம்பா, அவசியமில்லாத நிலையில் தலை யிட்ட ஸ்பெயின், பிரான்ஸ் ஆகியவை அமைந்தன. அரசன் பாம்பாவின் ஆதரவை நாடி அவனைத் தஞ்சமடைந்தான் போப். பிரான்ஸ்நாட்டு மன்னன் லூயி நெப்போலியனின் கட்டளையின் பேரில் ரோம் அருகே கரையோரத் தில் 10,000 படைவீரர்கள் சமயம் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

ரோமின் தற்காப்புக்காக விரைந்து சென்றான் கரிபால்டி. அவனைப் பின்தொடர்ந்து செஞ் சட்டை வீரர்களும்; நீலச்சட்டை யணிந்த இளைஞர் பட்டாளமும், உழவர்கள், தொழிலாளிகள், கடை சிப்பந்திகள் ஆகிய குடிமக்களும் போர்முரசு கொட்டிச் சென்றனர். அவர்கள் நடுவில் யூகோ பஸ்ஸி என்றபாதிரியாரும் (Father Ugo Bassi) வீர நடையுடன் சென்றார். செஞ்சட்டையணிந்த அப்பாதிரியார் மாதாகோவில்களிலேயே புரட்சி யின் அவசியத்தைக் குறித்துஆண்ட வனைப் பற்றித் தெரிந்துகொள்ள வந்து கூடும் மக்களிடம் இதோ உபதேசம் புரிந்தார். கசாப்புக் கடைக்காரன் 'ஜீவபந்து'வாக மாறிவிடுவதைவிட அதிசயமான சம்பவமல்லவா இது?

ஆதிக்கபுரியினர் ஏளனமாகப் பெயரிட்ட 'குப்பை' (Riffraff)யைச் சேர்ந்த 2000 வீரர்கள் நகரின் எல்லையிலே கேந்திரஸ்தானமாக விளங்கிய ஜானிகுலும் (Janiculum) அணைக்கட்டைப் பாதுகாக்கப் புறப் பட்டார்கள். எப்ரல் 30 உ பிரான்சு நாட்டின் மின்னலையொத்த 7000 ஈட்டிகள் எதிர்ப்புறத்தில் பட்டாள நடைபோட்டு வருவதை கரிபால்டி கண்ணுற்றான். நண்பகலில் தொடங்கிய சமர் இரவு வரையில் நீடித்தது. சமரின் முடிவில் பிரான்சு நாட்டின் அச்சம் மேலிட்ட முகம் வெளுத்த படைத்தலைவன் சமாதானத்திற்குத் தூதனுப் பினான்.

தென் திசையிலிருந்து அரசன் பாம்பாவினுடைய படைகள் விரைந்து வந்தன. அவற்றின்முன் னேற்றத்தைத் தடுக்க அனுப்பப் பட்ட கரிபால்டி அவற்றைக் களத்தி லிருந்து விரண்டோடும்படி விரட்டி யடித்தான். பாம்பாவின் படைகள் புறமுதுகிட்டோடின. அந்த உத் வேகத்தில், குடிமக்களின் விடுதலை உணர்ச்சி உயர்ந்தோங்கியிருந்த நிலையில், போர்ராட்டத்தைத் தளர்த் தாது இயற்கை வழி விட்டிருந்தால் கரிபால்டி கண்டிக்கப் படாமலிருந் தால், அந்தநல்ல தருணத்திலேயே இத்தாலியின் தென்பகுதி முழுவ தும் விடுதலைப் பெற்று சுதந்திரப் பண் இசைத்திருக்கும். ஆனால் சுதந்திரப் போரின் ஒரு கட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ரோம் குடியாட்சி யின் பொறுப்பு வாய்ந்த முக்கியஸ் தர்கள் (triumvirs) தங்கள் அனு மதி யில்லாமலே எதிரிப் படைகளைத் தாக்கி விரட்டியதற்காக கரிபால்டி யைக் கண்டித்தனர்! எனவே எதிரிகளைக் கடல் வரை விரட்ட வேண்டுமென்று முன்னே செல்லக் கருதிய கரிபால்டி பின் வாங்கி ரோம் நகருக்குத் திரும்பினான். மேலும் ஒரு மாதம் இந்தப் போர் நீண்டது. அருமை நண்பர்கள் பலர் போரில் உயிரிழந்து விட்ட சம யத்தில், திடீரென்று ஒரு நாள், பிரசவத்திற்காக நைஸ் நகரில் இருந்து வந்த அனிட்டா, பிள்ளை பெறு முன்னரே கணவன் பக்கத் திலிருக்க வேண்டுமென்ற எண் ணத்தில் கரிபால்டியின்பாசறையில் தோன்றினாள். அம்மாதர் திலகம் குதிரை மீதமர்ந்து கரிபால்டி போர் முகாம்களைப் பார்வையிடச் செல்லு கையில் அவளும் வேறோர் குதிரை மீதமர்ந்து அவனுக்குத் துணை யாகச் சென்றதுடன் நில்லாமல் அவனுக்கு அவசியமான பணிவிடை களைச் செய்தாள்.

இறுதியில் குடியரசான ரோம் பணிந்தது. மாஜினி பிரான்சுக்கும் அங்கிருந்து சுவிட்சர்லாந்துக்கும் ஓட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அங்கிருந்துகொண்டு ரோம் நகரைத் தலைநகரமாகக் கொண்ட ஐக்கிய இத்தாலியை எவ்வாறு உண்டாக்

(38-ம் பக்கம் பார்க்க)

சாவும் வாழ்வும்

ஒளியில் ஒளிந்துகொண்டிருக் கும் இருளைப்போல வாழ்வில் மறைந்திருக்கும் சாவே! உன் வல்லமை சொல்லுந் தரத்ததல்ல!

ஒளி ஒடிப்போன இடத்தில் நின்று இருள் பாடிக்கொண் டிருப்பதுபோல, வாழ்வு மறைந்த இடத்தில்வந்து சாவே! நீ நிறைந்து விடுகிறாய்!

சாவே! உன்னுடைய குணங்களை யும்,

வாழ்வே! உன்னுடைய குணங் களையும், எண்ணிப் பார்த்தால்.

வாழ்வு பிறக்கும்போது 'குவா குவா' என்று அழுகிறது!

சாவு பிறக்கும்போது அது அழுவ தில்லை; அதைச் சுற்றிக் 'குப்யோ முறையோ' என்று அழுகுரல் எழு கிறது!

வாழ்வு நிர்வாணமாக வருகிறது.

சாவு பட்டுத்துணியால், பகட்டான ஆடையால் தன்னை மூடி மறைத் துக்கொள்ளுகிறது.

வாழ்வு வந்ததை அறிவிக்கக் கற்கண்டு வழங்குகிறது.

சாவு கண்ணீரை வாரிக்கொள்ளு கிறது.

வாழ்வு விழித்துக்கொண்டிருக் கிறது.

சாவு தூங்குகிறது!

வாழ்வு வரவேற்கிறது.

சாவு விடை கூறுகிறது.

வாழ்வு கூட்டத்தில் சேர்கிறது.

சாவு தனியிடத்துக்கு ஓட்டமெடுக் கிறது.

வாழ்வு ஒரு வாயாடி.

சாவு குரலில்லாத ஓர் ஊமை.

வாழ்வு காதலனைத் தழுவவரும் கட்டழகியின் தோள்.

சாவு களத்தில் பாய்ந்துவரும் பகைவனின் வாள்.

வாழ்வு நிகழ்காலத்தை வளர்த் தெடுக்கும் தந்தை.

சாவு இறந்த காலத்தைப் பெற் றெடுக்கும் தாய்.

வாழ்வே! நீ இருக்கும் இடத்தை யும்,

சாவே! நீ இருக்கும் இடத்தை யும், எண்ணிப் பார்த்தால்.........

செடியில் கூத்தாடும் மலர் களிலே, சேல்விழியாளின் கூந்த லில் குடியிருக்கும் மலர்களிலே, செழுங்கொடியில் குலுங்கும் மலர் களிலே குந்தியிருந்து கும்மாளம் போடுகிறது வாழ்வு!

கதிரவன் எழுந்ததும் கட்டிலி லிருந்து எழும் கமலக்கண்ணழகி களின் சரியும் கூந்தலிலிருந்து உதிரும் மலர்களிலே, ஆடித்திங் களில் ஓடிவரும் வெள்ளத்தில் புது மணமக்கள் பூரிப்பு வழிய பணிவோடு வீசியெறியும் பாது காத்த மலர்களிலே சங்கீதம் பாடு கிறது சாவு!

மங்கலம் முழங்கும் மணவீட்டில் மதுரகீதமிசைக்கிறது வாழ்வு!

முரசு முழங்கும் போர்க்களத்தில் அரசு நடத்துகிறது சாவு!

தத்திச் செல்லும் தவளைமீது சத்தம் செய்யாது தாவும் பாம்பின் வயிற்றில் சாப்பாட்டுக்கு அமர் கிறது வாழ்வு!

அந்தப் பாம்பின் வாயில் சிக்கிச் சத்தமிடும் தவளையின் பரிதாபமான கதறலில் கைகொட்டிச் சிரிக்கிறது சாவு!

ஆடிவரும் வெள்ளத்தில், பாடித் தலையசைக்கும் பரந்த வயல் கதிர் களில், ஜோடிப் பறவைகளின் கூட்டத்தில் முட்டைக்குள்ளிருக்கும் குஞ்சாகக் கட்டுப்பட்டிருக்கிறது வாழ்வு!

அணையுடைத்து வரும் வெள்ளத் தில், பகையரசன் யானைகள் மிதித் துத் துவைக்கும் பச்சைவயல்களில், இணைபிரிந்த அன்றில் பறவை யிடத்தில், வில்லிலிருந்து விடுபட்ட அம்பாக இருக்கிறது சாவு!

அகநானூற்றில் இலக்கணஉடை உடுத்திக்கொள்ளுகிறது வாழ்வு!

புறநானூற்றில் இலக்கிய மலர் சூடிக்கொள்ளுகிறது சாவு!

ஏழைக்கு வார்க்கப்படும் கஞ்சி யில், எழுத்தறிவற்றவனுக்கு வழங் கப்படும் கல்வியில், பழந்தமிழ் படிப்போர் பெறும் புலவர் பட்டத் தில் வள்ளலாக வீற்றிருக்கிறது வாழ்வு!

நாகத்தின் நச்சுப்பல்லில், வேக மாக உருளும் 'மோட்டார் புகை வண்டி-ஆலைச்' சக்கரங்களில், ஒரு துளி விஷத்தில், ஒரு முழக்கயிற் றில் இங்கெல்லாம் பால்பானையை உருட்டுவதற்காக இருட்டை எதிர் பார்த்துப் பரணில் பதுங்கியிருக்கும் திருட்டுப்பூனையாக உட்கார்ந்திருக் கிறது சாவு!

வாழ்வே! உன்னுடைய செயலை யும், சாவே! உன்னுடைய செயலை யும்எண்ணிப்பார்த்தால்..........

எல்லோரையும் ஒன்றாகவே பார்க் கிறது வாழ்வு - குழந்தைகள் யாவரும் ஒன்றுதானே?

எல்லோரையும் வேறுபடுத்து கிறது சாவு. இறக்கும் மனிதர்கள் யாவரும் ஒன்றா? இவன் ஆண் டான், இவன் அடிமை, இவன் செல்வன், இவன் செல்லாக்காசு, இவன்கவிஞன், இவன்கலைஞன், இவன்அறிஞன், இவன்அரசன் என் றெல்லாம் சாவு பிரித்துச் சொல்லு கிறது.

வாழ்வே! நீ ஒரு நளினமான நாட்டிய நங்கை-விண் படைத்த உலகில் கண்படைத்த எல்லோரும் நீ திரும்பிய இடத்திலெல்லாம் விரும்பி வரவேற்கிறார்கள்!

சாவே! நீ ஒரு நளினமான நாகப்பாம்பு-உன்னைக் கண்டு படை நடுங்குகிறது. மக்கள் தொடை நடுங்குகிறது! உன்னைக் கண்டால் கால்பிடரியில்பட ஓடுகிறார்கள்; அல்லது கழியெடுத்துத் தேடுகிறார் கள்!

வாழ்வே! உன்னை எல்லோருமே வரவேற்கிறார்கள்.

சாவே! உன்னை வரவேற்போர் இரண்டே பேர்தான் - மயிர்நீத்த கவரிமான், மானம்விட்ட மறத் தமிழன்!

நா. பாண்டுரங்கன், எம்.ஏ.



இராசேந்திரன் கைது செய்யப்பட்டான் என்ற செய்தி அவர்களுக்கு முதலில் அதிர்ச்சியைத்தான் அளித்தது. ஆனால், தளநாயகனோ, இராசராசனோ, அச்செய்தியை நம்பவில்லை. அரிசங்கமன் மீது தளநாயகனுக்கு எப்பொழுதுமே சந்தேகம் உண்டு. இலங்கைப் படையெடுப்பின்போது மரகதத்தைச் சந்திக்க முயன்றான் தளநாயகன். அவளிடமிருந்து நந்தினியைப் பற்றிய விபரம் அறிய ஆவல்கொண்டான். சித்தினி மூலம் ஒருநாள் மரகதத்தைத்தெருவிலே சந்தித்தான். ஆனால் அரிசங்கமன் பின்தொடர்ந்து அங்கு வந்துவிட்டதைத் தெரிந்து கொண்டான்.

அரிசங்கமன் ஏன் பின் தொடர்ந்து வந்தான்? இடைதுறையான் வந்தால், புரோகிதப் புஞ்சராயர் வீட்டில்தான் தங்குவதுண்டு என்பதையும் அவன் கேள்விப்பட்டிருக்கிறான். ஒருவேளை அரிசங்கமனும் இடைதுறையானும் சதி செய்திருப்பார்களோ என்ற சந்தேகம் அவனுக்கு. சூழ்ச்சியால் இராசேந்திரனைக் கைது செய்து, சோழநாட்டைக் கைப்பற்ற, அவ்வளவு பலவீனமான நாடல்ல அது. ஆனால் அரிசங்கமனின் மகள் மரகதமே இங்கு வந்திருக்கிறாள். பக்கத்தில் முன்பின் அறிமுகமில்லாத ஒருவன் நிற்கிறான். அவன்யார்? இவர்கள் இங்கு ஏன் வந்தார்கள்? இதுவும் சூழ்ச்சியாக இருந்தால்?

"நீ யார்?" என்று தளநாயகன் கேட்டான்.

"நான் யார் என்பது இப்போது அவசியமல்ல! நாட்டை முதலில் காப்பாற்று" என்றான் அந்த வீரன்.

"கேட்பதற்கு மட்டும் பதில் சொல்!" என்று சீறினான் இராசராசன்.

"நீங்கள் கேட்பதற்குப் பதில் சொல்ல நான் வரவில்லை. என் கடமை-நாட்டில் நடந்ததைத் தெரிவிக்கவே வந்தேன்" என்றான் அந்த வீரன். "நான் யார் தெரியுமா?" என்று கேட்டுக்கொண்டே அந்தவீரனை நெருங்கினான் இராசராசன்!

"தெரியும்! தாங்கள் இளவரசர்; அவர் தளபதி! ஆனால் இந்தத் தீவுக்கல்ல! இதை ஆள்வது வேறொருவர். அவருடைய குடிமகன் நான்!" என்றான் அந்த வீரன்.

இளவரசன் என்று தெரிந்தும் இப்படிப் பேசுகிறானே என்று துடித்தான் இராசராசன். வாலிப முறுக்கு; இளங்காளை; நன்மை தீமைகளைப் பகுத்துணரும் பொறுமையற்ற வயது. வீரனின் அலட்சியமான பதிலால் ஆத்திரங் கொண்டது அவன் உள்ளம். துடிதுடிக்கும் கை இடுப்பிலிருந்த கட்டாரியை உருவியது. தளநாயகன் தடுக்குமுன்பே, அந்தக் கட்டாரி வீரனின் மார்பில் சொருகப்பட்டது.

அந்த வீரன் ஒருகையால் கட்டாரியைப் பிடித்துக் கொண்டான். மற்றொரு கையால் மரகதத்தின் தோளை அணைத்துக்கொண்டான். அப்போதும் அவன் அழவில்லை. வேதனையால் முனகினான். ஆயினும் அவன் முகத்தில் புன்னகை ஒளிர்ந்தது.

தளநாயகன் இச்செய்கை கண்டு பச்சாதாபப்பட்டான். மரகதத்தைப் பார்த்தான். மரகதமோ இச்செய்கையால் இதயம் தாக்குண்டு நின்றாள். அவள் உடல் நடுங்கியது. இன்னும் என்ன விபரீதம் நேருமோ வென்று பயந்து கொண்டிருந்தாள்.

தளநாயகன் அந்த வீரனின் அருகில் வந்தான். அவனைத் தோளைத் தட்டிக்கொடுத்தான். "இப்போதாவது சொல். நீ யார்?" என்றான். அப்போதும் அந்த வீரன் வாய் திறக்கவில்லை. ஆனால் மரகதம் இன்னும் வாயடைத்துப் பேசாமல் நிற்கவிரும்பவில்லை.

"இவர் நந்தினியிடமிருந்து தங்களுக்கு நற் செய்தி கொண்டு வந்தவர்," என்றாள். "உண்மையாகவா? நந்தினிஎங்கிருக்கிறாள்?"! என்று பதட்டத்துடன் கேட்டான் தளநாயகன்.

பொறுக்க முடியாத வலியுடன் மீண்டும் கேலியாகச் சிரித்தான் அந்த வீரன். "இளவரசர் இன்பவல்லியுடன் காதல் புரிகிறார். தளபதியோ நந்தினியைப் பற்றி ஆவலாக விசாரிக்கிறார். இவர்களே இப்படி இருந்தால் சோழ நாடு என்னாவது? சொல்ல வந்த எனக்கும் நல்ல பரிசு கிடைத்தது. மரகதம்! நீ எப்போதாவது நந்தினியைச் சந்தித்தால் அவளுக்காக நான் உயிரைப் பலிகொடுத்து விட்டதாகத் தெரிவி" என்றான். இனியும் அவனால் நின்று கொண்டிருக்க முடியவில்லை. தரைமீது சாய்ந்தான்.

சாய்ந்த வீரனை தளநாயகன் தாங்கி, தரையில் படுக்க வைத்தான்: பிறகு அவன் அருகில் அமர்ந்தான். இளவரசனையும் மரகதத்தையும் அருகில் உட்காரச் சொன்னான். இன்பவல்லி கூட ஒதுங்கி உட்கார்ந்தாள்.

பிறகு அந்த வீரனைப் பார்த்து "நண்பரே! ஆத்திரத்தால் நேர்ந்து விட்டது. மன்னியுங்கள். இனி நீர் பிழைக்க முடியுமானாலும் உண்மை இப்போதே தொந்தரவு செய்ய நாங்கள் விரும்பவில்லை. இல்லையேல் உம்முடைய வரலாற்றையும், நந்தினியைப் பற்றிய விபரத்தையும் கூறுங்கள்" என்றான் தளநாயகன்.

அந்த வீரன் தழதழத்த குரலில் விட்டுவிட்டுப் பேசினான். எல்லோரும் அவன் பேசுவதைக் கவனித்துக் கேட்டனர்.

"ஐயா! நான் சோழ நாட்டில் பிறந்தவன். இடைதுறை நாட்டில் ஒற்றனாக அமர்த்தப்பட்டேன். இடைதுறையான் ஒரு நயவஞ்சகன். அவனுக்கு ஆதரவு காட்டி, சோழ ஆட்சியைக் கைப்பற்று மளவுக்கு உதவி செய்தவன் அரிசங்கமன், இவற்றை நான் வேவு பார்த்துக் கண்டு பிடித்தேன். ஆனால் இச்செய்தியைச் சோழ நாட்டிற்கு அனுப்ப முடியவில்லை. காரணம் என வாழ்வில் ஒரு பெண் குறுக்கிட்டு விட்டாள். அவள் பெயர் மங்கை. அவளும் சோழ நாட்டைச் சேர்ந்தவள்தான். ஒரு காலத்தில் தஞ்சையிலிருந்து அன்னையின் படைகளால் அவள் கடத்தப்பட்டாள். பிறகு அன்னையின் படையில் அவளும் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். அன்னையிடம் சோழ நாட்டிற்குச் சேவை செய்வதாகச் சத்தியம் செய்து கொடுத்தாள்.

"அன்னையின் படை சோழ நாட்டிற்கும் இடைதுறை நாட்டிற்கும் நடுவில், ஆலங்காட்டுப் பகுதியில் தங்கியிருந்தது. இடைதுறை நாட்டில் நான் அறிந்த உளவுச் செய்தியை சோழ மன்னரிடம் தெரிவிக்க அவசரமாகச் சென்றுகொண்டிருந்தேன். ஆலங்காட்டுப் பகுதியை அடையும்போது நன்றாக இருட்டி விட்டது. திடீரென சில வீரர்கள் தீப் பந்தங்களுடன் என்னைச் சூழ்ந்துகொண்டனர். தனிமையில் சென்ற நான் அவர்களுடன் போராடி மீள முடியாது என்பதைக் கண்டேன். மறு விநாடியில் நான் கைது செய்யப்பட்டேன்.

"என்னை ஒரு பெண்ணின் முன்னால், கொண்டுபோய் நிறுத்தினர். அவள் கழுத்திலே ஒரு கருநாகம் சுற்றிக்கொண்டிருந்தது. அவளைப் பார்த்ததுமே அவளுடைய அழகில் மயங்கினேன். அவளும் என்னை வெறித்துப் பார்த்தாள். பின்பு என்னை விசாரணை செய்தாள். நீண்ட நேரம் எங்களுக்குள் தர்க்கம் நடந்தது. கடைசியில், நா[illegible] சோழநாட்டு ஒற்றன் என்ப[illegible] அறிவித்தேன். அவள் தான்[illegible] நாக மங்கை. என்னை இ[illegible] விசாரணை செய்ய வேண்[illegible]

அங்கேயே நிறுத்தி வைத்து விட்டாள்.

"நாங்கள் இருவரும் அடிக்கடி சந்தித்தோம். கைதி என்ற முறையில் அவள் என்னைச் சந்திக்கவில்லை. காதலின் சக்தி எங்களைப் பிணைத்தது. அவள் தன்னுடைய வரலாற்றை என்னிடம் தெரிவித்தாள். அவர்களும் சோழநாட்டின் நன்மைக்காகவே வேலை செய்வதாகக் கூறினார்கள். அதை நான் நம்பினேன். நம்புவதற்குரிய சான்றுகளைக் கண்டேன். முடிவில் நானும் அவர்களுடன் ஒருவராக ஆலங்காட்டில் தங்கினேன்.

"அதன் பிறகுதான் நீங்களும் மன்னரும் இடைதுறை நாட்டின் மீது படையெடுத்தீர்கள். ஆலங்காட்டிற்கும் வந்தீர்கள். நான் உங்களைப் பார்த்தேன். இருட்டிலே பல வீரர்களுடன் நான் கலந்து நின்றதால் என்னை நீங்கள் நினைவு வைத்திருக்க முடியாது." இதைக்கேட்டபொழுது அந்த வீரன் சொல்வது அனைத்தும் உண்மையென்பதை நம்பினான் தளநாயகன். ஆலங்காட்டில் இராசேந்திரனுடன் தளநாயகன் கண்ட அதிசய அனுபவம் அவன் நினைவிற்கு வந்தது., அந்த வீரன் மேலும் கூறினான்.

"இடைதுறைநாடு வீழ்ந்தது. இடைதுறையான் ஓடிவிட்டான். சோழ நாட்டிற்கு அடிமையாகி விட்டது இடைதுறை நாடு. அதன் பிறகுதான் நாங்கள் அன்னை இருக்கும் பகுதியாகிய சாந்திமத் தீவிற்குப் புறப்பட்டோம்.

"அன்னையின் அனுமதி பெற்று மங்கையை நான் மணம்புரிந்து கொண்டேன். ஆனால் நாங்கள் மணம் செய்து கொண்டாலும் நிம்மதியாக இன்பவாழ்வு நடத்த முடியவில்லை. அன்னையின் பெண்கள் படைக்காக, எத்தனையோ சோழநாட்டுப் பெண்கள் கவர்ந்து செல்லப்பட்டிருக்கின்றனர். அவர்களில் பலர் சாந்திமத்தீவில் உள்ள ...ர்களை மணந்து வாழ்கின்றனர். ...ாறு கவர்ந்து செல்லப்பட்ட ... ஒருத்திதான் நந்தினியும்!

"அன்னையின் சொந்த மகள்தான் நந்தினி. தாயைச் சந்திக்க ஆவலோடுதான் இருந்தாள் நந்தினி. அவளைச் சந்தித்த பிறகு அவளுடைய காதலனை—உங்களைச் சந்திக்க ஆவலாயிருக்கிறாள்."

இதைச் சொல்லும்போது தளநாயகனின் கண்கள் கண்ணீர் வடித்தன. உதடுகள் துடித்தன. "நந்தினி நலமாயிருக்கிறாளா? தாயைக் கண்டாளா? கயல்விழி எங்கே இருக்கிறாள்?" என்றெல்லாம் கேட்டான் தளநாயகன். இராசராசன் ஒன்றும் புரியாதவனாய் தளநாயகனையும் அந்த வீரனையும் மாறிமாறிப் பார்த்தான். வீரன் மேலும் தொடர்ந்தான்:

"அன்னையின் படையிலுள்ள அத்தனைபெண்களும் சகோதரிகளாகக் கருதப்படுவார்கள். அதே முறையில்தான் மங்கையும் நந்தினியும் பழகினார்கள். ஆனால் அவர்களுடைய பாசமும் நேசமும் உடன் பிறந்தோரைவிட அதிகமாக நெருங்கிப் பழகச் செய்தது. நான் கருநாக மங்கையை மணந்ததும் மங்கை என்னுடனேயே அதிக நேரத்தைப் போக்கினாள். இது நந்தினிக்குத் துன்பத்தைத் தந்தது. மங்கையிடம் தன்னைச் சுட்டெரிக்கும் காதலைப் பற்றிக் கூறினாளாம். 'நீ மட்டும் மணம் செய்து கொண்டாய். நானோ காதலனைப் பிரிந்து வாடுகிறேன்' என்று சொல்வாளாம்.

"அன்னையின் மகள்தான் நான். ஆயினும் செயலிழந்தவளாயிருக்கிறேன். என்னைப்பற்றி, என் காதலனுக்கு யார் தூதுபோய் சொல்வர்?" என்றெல்லாம் சொல்லுவாளாம். நந்தினியுடன் நெருங்கிப்பழகிய மங்கை இச்சொற்களைக் கேட்டுச் சும்மா இருக்க முடியவில்லை. மங்கை இதையெல்லாம் என்னிடம் கூறுவாள். மங்கைக்காக உங்களிடம் தூது வரச் சம்மதித்தேன். நந்தினி இதைக் கேட்டுக் கூத்தாடினாள். என் தூது வெற்றியடைந்தால், உங்களிடம் சொல்லிப் பரிசு வாங்கித் தருவதாகச் சொன்னாள். அதற்கு முன்பே, இளவரசர் எனக்குத் தகுந்த பரிசை அளித்துவிட்டார்."

இதைச் சொன்னதும் இளவரசனின் கண்களும் கலங்கி விட்டன. தளநாயகன் அழுதேவிட்டான். மரகதமும் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அந்த வீரன் தொடர்ந்து சொன்னான்:

"நீங்கள் ஏன் கண்ணீர்விட வேண்டும்? எனக்காகக் கண்ணீர் விடக் கருநாக மங்கை காத்திருக்கிறாள். என் உயிர் இப்போதோ, இன்னும் கொஞ்ச நேரத்திலோ போய்விடும். அதற்குள் முழுத் தகவலையும் கூறிவிடுகிறேன். இல்லையேல் என் கடமையிலிருந்து பிறழ்ந்தவனுவேன்.

"நந்தினிக்கும் மரகதத்திற்கும் நட்பு உண்டாம். அதனால் நான் தஞ்சையை அடைந்ததும் மரகதத்தைக் காண ஆவல் கொண்டேன். அவளுடைய தோழி சித்தினியின் குடும்பத்தை எனக்குத் தெரியும். அங்கு சென்றேன். நந்தினியைப் பற்றி நான் செய்தி கொண்டுவந்ததும், சித்தினி மரகதத்தைக் கூட்டிவரச் சம்மதித்தாள். ஆனால் நான் சென்றிருந்த சமயம்தான் சதியும் மும்முரமாக நடந்தது- நொடிக்கொரு செய்தி எங்களுக்குக் கிடைத்துக்கொண்டே இருந்தது.

"முதலில் மன்னர் கைது செய்யப்பட்டார். முக்கிய அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர். நகரக்காவற் படைத்தலைவன் துரோகியாக மாறினான். அரசகுடும்பமே சிறை வைக்கப்பட்டது. இடைதுறை மன்னனுக்கு இடம் கொடுத்தவன் அரிசங்கமனும். இடைதுறை மன்னன் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான்.

"என்னை இடைதுறை நாட்டான் என்று, நகரக் காவற்படைத் தலைவனிடம் தெரிவித்தேன். வேவு பார்ப்பதில் தீரன் என்றும் தெரிவித்தேன். அவன் பல கேள்விகள் கேட்டான். எனது பதில்கள் அவனை திருப்திப் படுத்தின. என்னையும் அவனது படையில் ஒருவனாகச் சேர்த்துக் கொள்ளச்சம்மதித்தான். மரகதத்தின் மூலம் சித்தினிக்கு அவ்வப்போது சதி பற்றிய செய்திகள் கிடைக்கும். சித்தினி என்னிடம் தெரிவிப்பாள். நான் ஓடி வந்து நகரக் காவற் படைத் தலைவனிடம் தெரிவிப்பேன். இதனால் என்னிடம் மிகுந்த நம்பிக்கை வைத்தான் தலைவன்.

"நான் தெரிவிக்கும் செய்திகள்தான் புதுமையாக இருக்கும். மன்னர் இராசேந்திரன் கைது செய்யப்பட்டதையும் நான்தான் முதலில் வந்து தெரிவித்தேன். இதற்கிடையில் இளவரசரும், நீங்களும் பெரும்படையுடன் ஈழம் சென்றதாகக் கேள்வியுற்றேன். நான் திரும்பிப் போயிருக்கலாம். ஆனால் நாட்டிலேநடக்கும் சதிவேலைகளைநான் அறிந்து செல்ல வேண்டும். அதை அன்னையிடம் தெரிவிக்க வேண்டும்.

"நந்தினியின்தோழி மரகதத்தையும் எப்படியாவது சந்திக்க வேண்டும். அரிசங்கமனையும், அவனுடைய சதி வேலைகளையும் மரகதம் வெறுப்பதாகச் சித்தினி சொல்லுவாள். மன்னர் கைது செய்யப்பட்ட அன்று, அரிசங்கமனுக்கு அரண்மனையில் அதிக வேலைகள் இருக்குமென்பதை நான் அறிவேன்.

"அதனால் சித்தினியிடம் மரகதத்தைக் கூட்டிவரும்படி சொன்னேன். மரகதம் வந்து விட்டாள். நடந்ததைத் தெரிவித்தேன். நந்தினியைப் பார்க்க அவளும் என்னுடன் வருவதாகக் கூறினாள். இருவரும் குதிரையேறி காவல்களைக் கடந்து வெளியேறினோம். கடற்கரையை நெருங்கியதும்தான் எங்கள் பயமும் எங்களைவிட்டு நீங்கிற்று.

"படகேறிப் புறப்பட்டோம். வழியிலே பல தீவுகளைக் கண்டோம். ஆனால் சாந்திமத் தீவு எது என்று புரியவில்லை. தூரத்தில் வரும்போது கரையருகில் கப்பல் ஒன்று நிற்பதைக் கண்டோம். அதனால்தான் இங்குவர நேர்ந்தது" என்று கூறி முடித்தான் அந்த வீரன். தளநாயகனும், இராசராசனும் தண்ணீர் கொண்டுவரச் சென்றனர். இன்பவல்லி மாளிகை நோக்கி நடந்தாள். மரகதம் மட்டும் வீரனின் துணிவையும், நாட்டுப் பற்றையும் எண்ணினாள். அவளையறியாமல் அவளுடைய கண்கள் கண்ணீரைப் பெருக்கின.

அந்த வீரன் நிலை மிகவும் மோசமாகி விட்டது. அவனுடைய தலையைத் தன் மடிமீது தூக்கி வைத்துக் கொண்டாள் மரகதம். "தண்ணீர்! தண்ணீர்!" என்றான் அந்த வீரன். இராசராசனும் தளநாயகனும் சென்ற வழியையே பார்த்துக் கொண்டிருந்தாள் மரகதம். "அன்னை... அன்னை... வாழ்க!" என்று கடைசியாக முணகினான் வீரன். மறுவிநாடியே ஆவி அவனைவிட்டுப் பிரிந்தது. தலை சாய்ந்தது. மரகதம் "கோ" வென்று கதறினாள்.

தளநாயகனும் இராசராசனும் தண்ணீருக்காகச் சுற்றிவிட்டு மாளிகைக்கு வந்தனர். இன்பவல்லியும் மாளிகைக்கு வந்து சேர்ந்தாள். ஆனால் அங்கே நூறு படை வீரர்கள் காத்து நின்றார்கள். அத்தனை பேரும் தளநாயகனுக்குப் புதியவராகக் காணப்பட்டனர்.

இன்பவல்லியை மாளிகைக்குள் அனுமதித்தனர் அந்த வீரர்கள். இராசராசனும் தளநாயகனும் உள்ளே செல்ல முயற்சிக்கும்போது வீரர்களால் தடுத்து நிறுத்தப்பட்டனர். இளவரசனுக்கும் தளநாயகனுக்கும் என்ன செய்வதென்று புரியவில்லை. ஈழத்திலிருந்து திரும்பியதிலிருந்து நடக்கும் நிகழ்ச்சிகள் விநோதமாகவே இருக்கின்றன. இருவரும் சுற்றுமுற்றும் பார்த்தனர். சிறிது தூரத்தில், சோழனுடைய கப்பலில் இருந்தவர்களும் கைதுசெய்யப்பட்டு அங்கே நிறுத்தப்பட்டிருந்தனர். இது இன்னும் அவர்களுக்கு வியப்பாக இருந்தது.

தளநாயகன் அவர்களைப்பார்த்து "நீங்கள் யார்?" என்றான். உடனே அந்தப் படைவீரர்களின் தலைவன் முன்வந்து "நாங்கள் கேட்கவேண்டிய கேள்வி இது! நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"நான் சோழனின் படைத் தலைவன், தளநாயகன். இவர்தான் இளவரசர் இராசராசன்" என்றான் தளநாயகன்.

"உங்களைச்சந்தித்ததில் மகிழ்ச்சி" என்று சொல்லி படைத் தலைவன் அவர்களை வணங்கினான். "இத்தீவு அன்னையின்ஆளுகைக்கு உட்பட்டது. நாங்கள் அன்னையின் படைவீரர்கள். தூரத்தில் கப்பல் நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டு இங்கு வந்தோம். எங்களுடைய

அனுமதியின்றி இத்தீவில் நீங்கள் இறங்கியதே தவறு” என்றான் தலைவன்.

“தவறு, சரியா, என்பதைப்பின்னர் தீர்மானித்துக்கொள்ளலாம். உங்களைச் சேர்ந்த வீரன் ஒருவன் அங்கே உயிருக்காக மன்றாடிக் கொண்டிருக்கிறான். அவனுக்குத் தண்ணீர் எடுத்துச் செல்லவே இங்குவந்தோம், முதலில் தண்ணீர் வேண்டும்” என்றான் தளநாயகன்.

படைத்தலைவன் ஒரு வீரனிடம் கண்களைஅசைத்தான். அந்தவீரன் மாளிகைக்குள் சென்று தண்ணீர் எடுத்துவந்தான். பிறகு அந்தவீரனும் தளநாயகனும் மட்டும் சென்றனர். படைத்தலைவன் இராசராசனை அனுமதிக்கவில்லை: சிறிது நேரத்தில் அந்த வீரன் மங்கையின் காதலனைச் சுமந்துகொண்டு வந்தான்.அவனுக்குப்பின்னால்தளநாயகனும், மரகதமும்வந்தார்கள் படைவீரர்களுக்கு முன்னால் வந்ததும் மங்கையின் காதலனைக் கீழே கிடத்தினான் அந்த வீரன். பிறகு அந்த உடலை வணங்கி எழுந்தான்.

அங்கு நின்ற எல்லோரும் பார்த்தனர். எல்லோர் வாயிலிருந்தும் ‘ஆ’ என்ற சப்தம் ஒரே நேரத்தில் வெளியாயிற்று. “இந்த வீரனைக் கொன்றது யார் ?” என்று படைத் தலைவன் கேட்டான் கலக்கத்துடன்.

“நான்தான் கொன்றேன் !” என்றான் இராசராசன்.

“மன்னியுங்கள். உங்கள் இருவரையும் கைது செய்கின்றேன்” என்றான் தலைவன்.

மறுவிநாடியே இராசராசனும் தளநாயகனும் கைதுசெய்யப்பட்டனர்.

6

“அழிந்ததோ நம்மரண்? ஒழிந்ததோ நம்படை?”

பூவின துயர்வு பொய்கையி னுழத்
தளவா வதுபோல், உளமது கலங்கா
ஊக்க மொருவன தாக்கத் தளவெனத்
துணிவார்க் குறுதுயர் தொடுமுன் எவ்வும்
அணியார் பந்துறு மடிபோல், முயற்சியில்
இயக்கி இன்பம் பயக்குமென் றிசைக்குஞ்
சான்றோர் சொல்லுஞ் சான்றே யன்றோ ?

—மனோன்மணீயம்

நந்தினி செய்திகேட்டுத் திடுக்கிட்டாள். தூது சென்ற, மங்கையின் காதலன் கொல்லப்பட்டான். தளநாயகனோ அன்னையின் படைகளால் கைதுசெய்யப்பட்டான். இதைவிட அவளை வருத்தும் செய்தி வேறு என்ன இருக்கிறது ? மங்கையோ இரண்டு நாட்களாகப் படுக்கையிலிருந்து எழவில்லை. அழுதழுதுகண்கள் சிவந்திருந்தன. இனி அழுவதற்கும் அவளிடம் சக்தி இல்லை. தலையணை கண்ணீரால் நனைந்துவிட்டது. பூமுடிக்கும் குழல் அலங்கோலமாய் கிடந்தது. சமீபத்தில் மலர்ந்த அவளுடைய வாழ்வு இவ்வளவு சீக்கிரம் கருகிவிடுமென்று அவள் எதிர்பார்க்கவில்லைதான்.

தன்னைப்போலவே நந்தினியும் இன்பமடையவேண்டும் என்ற நல்லெண்ணத்தில்தான், தன் காதலன் தூதுசெல்லச் சம்மதித்தாள். ஆனால் நாளெல்லாம் நாட்டிற்கு உழைத்து, வாழ்வையே நாட்டிற்குக் காணிக்கையாக்கத் துணிந்த அன்னையும், அவளைச்சார்ந்தோரும் இப்படியே துன்பமும்,துயரமும்அடையவேண்டியதுதானா? இதற்கு முடிவே யில்லையா ? அந்தோ ! அன்னையின் படையில் அணிவகுத்து நின்ற எத்தனையோ பெண்கள் நாட்டிற்காக தங்களின்மானத்தை இழந்தனர். அதனால் வாழ்வையே துறந்தனர். இதையெல்லாம் கண்டும் கேட்டும் அன்னை ஏன் மௌனம் சாதிக்கிறாள் ?.

அன்னையின் படையில் முக்கிய பதவி வகிக்கிறாள் மங்கை. இன்று அவளுடைய வாழ்வுக்கே சோதனை ஏற்பட்டு விட்டது. கமலினியும் அப்படித்தான்இருந்தாள். மானத்தை இழந்து உயிர்வாழ விரும்பாமல் மறைந்து விட்டாள் அவள். அன்னையின் சொந்த மகள்தான் நந்தினி. நந்தினியைப் பிரிந்திருந்தது முதல் அவள் நினைவாகவே இருந்தாள் அன்னை. நந்தினியும் அன்னையின் நினைவாகவே இருந்தாள். தன்ஆருயிர்க்காதலன் தளநாயகன் எத்தனையோ முறை மணம் செய்யத்தூண்டியும், அன்னைபற்றிய செய்தியறிந்த பின்னர்தான் திருமணம் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள் நந்தினி. காதலனைவிட தாயின்மீதுதான அளவற்ற பாசம் வைத்திருந்தாள் அவள்.

இப்பொழுது அன்னையிடம்வந்துவிட்டாள். அவளுடைய மிகப்பெரிய ஆசை நிறைவேறிவிட்டது. இதோ தளநாயகனும் வந்துவிட்டான் தீவுக்கு. ஆனால் மணமகனாக வரவில்லை. கைதியாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறான். அதுவும் அன்னையின் கைதியாக. தாய்க்குஉள்ள உரிமை மகளுக்கில்லையா ? அன்னையின் கைதி என்றால் நந்தினிக்கும் கைதிதானே ? ஆனால் அதை ஏற்றுக்கொள்ள அவள் மனம்மறுத்துவிட்டது.

காதலன்-தளநாயகன் விடுதலை செய்யப்படவேண்டும். அவனை நந்தினி சந்தித்துப் பேசவேண்டும். இதுதான் நந்தினியின்வேண்டுகோள். ஆனால், அன்னை பிடிவாதமாக மறுத்துவிட்டாள். தளநாயகனைச் சந்திக்கவே கூடாது என்று சொல்லிவிட்டாள். இனி என்ன செய்வது ? மங்கையிடமாவது சொல்லலாமென்றால், அவளோ கணவனையிழந்து, கைம்பெண்ணாகி, நொந்து உருகுகிறாள். இனியும் அவள் உயிர்வைத்திருப்பாளா என்பதே சந்தேகம். இந்நிலையில் ஆறுதலும் தேறுதலும் சொல்ல ஆளின்றி, அனற்பட்ட மெழுகுபோல் உருகினாள் நந்தினி.

தளநாயகனும், இராசராசனும் கோமளத்தீவிலே சிறைவைக்கப்பட்டனர். அவர்களுக்குவேண்டிய பணிகளைச்செய்ய, சில காவலர்களும் நியமிக்கப்பட்டனர். தளநாயகனுடன் கைதுசெய்யப்பட்ட மற்ற சோழநாட்டு வீரர்கள் சாந்திமத்தீவிற்குக் கொண்டுவரப்பட்டு,தனியே ஓரிடத்தில்வைக்கப்பட்டனர்.

அந்த வீரர்களுக்கு அன்னையின் வரலாறு எடுத்துரைக்கப்பட்டது. எல்லா வீரர்களும் அன்னையின் படைவீரருடன் சேர்ந்து சோழநாட்டின் மீட்சிக்காக, அதன் நல்வாழ்வுக்காக வேலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

அன்னையின் உள்ள முருக்கும் வரலாற்றையும், நாட்டின் மீது அவளுக்கிருக்கும் பற்றுதலையும், அதற்காக அவள் செய்யும் கடமையையும் அறிந்த சோழனின் படைகள் “அன்னை வாழ்க” என்று கோஷித்து, தங்களுடைய சம்மதத்தைத் தெரிவித்தனர்.

“தாயின் மீது ஆணை !”

“தமிழின் மீது ஆணை !”

“தாயகத்திற்கு நலமே புரிவோம்”

என்று சபதம் எடுத்துக்கொண்டனர்.

சாந்திமத்தீவு மிகவும் சுறுசுறுப்புடன் விளங்கியது. தெருக்களில் போவோரும், வருவோருமாக மக்கள் கூட்டம் கூட்டமாக நடந்தனர். சோழநாட்டு வீரர்கள் அன்னையின் படையுடன் சேர்ந்து நடைபோட்டனர். ஆனால் மங்கையின் மாளிகையிலும், அன்னையின் மாளிகையிலும் சோகமே குடிகொண்டிருந்தது. மங்கை தன்கணவன் இறந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளவில்லை. நந்தினியோ ஏக்கமே உருவாக இருந்தாள்.

ஒருநாள் திடீரென்று அன்னையின் ஒற்றர்கள் சிலர் சாந்திமத்தீவிற்குவந்து சேர்ந்தனர். அவர்களில் ஆண்களும் பெண்களும் இருந்தனர். அவர்கள் வந்ததும் தெரிவித்தமுதற்செய்தி இதுதான்.

“இராசராசன் கைது செய்யப்பட்டான். அரசகுடும்பம் சிறைவைக்கப்பட்டது. இடைதுறையான் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டான். ஈழப்போருக்குச் சென்ற தளநாயகனும் இளவரசனும் ஊர்திரும்பும்போது, புயலினால் கடலில் மூழ்கி இறந்துவிட்டார்கள் என்று பேசிக்கொள்கிறார்கள். பல படைகள் புயலினால் சின்னாபின்னப்பட்டுவிட்டன. திரும்பிவந்த சில படைவீரர்கள்இடைதுறையானுக்கு அடிபணிந்துவிட்டனர். சிலவீரர்கள் இடைதுறையானின் படைகளுடன் மோதி மாண்டனர். பல வீரர்கள்இதைக்கேள்வியுற்று,தஞ்சைக்குச் செல்லாமல் ஆங்காங்கே தங்கிவிட்டனர். இடைதுறையான் சோழநாட்டில் இருப்பதால் இடைதுறை நாட்டில் அவனுடைய பிரதிநிதி ஒருவன் இருக்கிறான். எல்லாப் படைகளும் சோழ நாட்டிற்குச் சென்றுவிட்டதால் இடைதுறை நாட்டில் இருக்கும் படைகள்சொற்பம்.”

இச்செய்தி அன்னைக்குப் பெருமகிழ்ச்சியளித்தது. தன் கடமை நிறைவேற இதுதான் தக்கதருணம். இதையும் வீணாக்கிவிட்டால் மறுசமயம்வாய்ப்பதரிது. மீண்டும் காத்திருக்கவேண்டியதுதான் என்ற முடிவுக்குவந்தாள் அன்னை.

அன்று இரவு எல்லாப் படைவீரர்களும் அழைக்கப்பட்டனர். அவர்களுக்கெதிரே ஒரு ஆசனம் போடப்பட்டிருந்தது. அதில்யாரும் அமரவில்லை. ஆசனத்திற்குப்பின்னால் ஒரு மெல்லிய திரை தொங்கியது. அதற்குப் பின்னால் அன்னை அமர்ந்திருந்தாள். மெல்லியதிரைகளினூடே அன்னையின் கண்களை மட்டுமே வீரர்கள் பார்க்கமுடிந்தது. சொல்ல முடியாத பலரகசியங்களைத் தன்னுள்ளே அடக்கி வைத்திருப்பதுபோல் அந்தக் கண்கள் தோன்றின. அந்தக் கண்களுக்குத்தான் என்ன அரியசக்தி. ஆனால் அவளுடைய வாயை கருப்பு ஆடையால் மூடியிருந்தாள். ஆம் அன்னை அணிந்திருப்பதும் கருப்பு ஆடைதான்.

ஏன் வாயை மூடியிருக்கிறாள் ? ஏன் திரைக்குப் பின்னால் காட்சியளிக்கிறாள் ? இதெல்லாம் சோழனின்படைகளுக்குப்புதுமையாகவே இருந்தன. ஆனால் அன்னையின் படைகள் அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. அன்னையின் உத்தரவை எதிர்பார்த்தே காத்திருந்தனர்.

திரையின் ஒருபுறத்திலிருந்து நந்தினி மட்டும் வந்தாள். அவள் கையிலே அன்னையின் அறிவிப்பு ஓலை இருந்தது. இதைவழக்கமாகச் செய்பவள் மங்கைதான். ஆனால் மங்கைக்கு இரண்டு நாட்களாகக் காய்ச்சல். எழுந்து நடக்கமுடியாத நிலை. கணவனை இழந்த கவலை. உண்ணாத குறை. அதனால் அன்னையின் கட்டளைபடி நந்தினியே ஓலையுடன் வீரர்களுக்கு முன்னால் தோன்றினாள். அன்னையின் அறிவிப்பு ஓலையை அந்த ஆசனத்தில் வைத்தாள். அதற்கு முன்னால் நின்று மண்டியிட்டு வணங்கினாள். உடனே வீரர்கள் அனைவரும்

எழுந்து நின்றனர்; பிறகு மண்டியிட்டு வணங்கி அமர்ந்தனர்.

நந்தினி அந்த ஓலையை எடுத்துப் பிரித்தாள். அருகிலிருந்த படைவீரனை அழைத்தாள். அதை உரக்கப்படிக்குமாறு உத்தரவிட்டாள். உடனே அவனும்படித்தான்:

"சகோதரர்களே! சகோதரிகளே! வீரர்களே!

நாளை நமது படை மீண்டும் இடைதுறை நாடு நோக்கிச் செல்ல வேண்டும். இதுவரை நமக்குப் போதிய படைபலம் இல்லாதிருந்தது. அக்குறையைப் போக்க நமது சகோதர வீரர்களும் உங்களுடன் வந்து சேர்ந்துவிட்டனர். இடைதுறையான் சோழநாட்டில் இருக்கிறான். பெரும் படை அவனுடனேயே இருக்கிறது. அவனுடைய பிரதிநிதி ஒரு சில படைகளுடன் இடைதுறை நாட்டில் தங்கியிருக்கிறான்; நீங்கள் அனைவரும் முன் போல் ஆலங்காடு சென்று, உருமாறி, இடைதுறை நாட்டில் புக வேண்டும். அங்குசூழ் நிலைக்கேற்ப நடந்துகொண்டு ஆட்சியைக் கைப்பற்றவேண்டும். அதன்பிறகு நடக்க வேண்டிய விபரத்தை நான் தெரிவிக்கிறேன். முள்ளை முள்ளாலேயே குத்தி எடுக்கவேண்டும். சதியைச் சதியாலேயே வெல்லவேண்டும். நீங்கள் இதுவரை காத்திருந்த தருணம் இதோ வந்துவிட்டது.

"உங்களுடைய இந்தப் பிரயாணம் புனிதமானதாக இருக்கட்டும். தாய்நாட்டு மண்ணில் நீங்கள் நிச்சயம் காலெடுத்துவைப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்த நம்பிக்கை நிறைவேறுவதும் உங்கள்கையில்தான் இருக்கிறது. இனி சோழநாடுதான் உங்கள் தாய்நாடு. அதை மீட்கும்வரை தளரக்கூடாது. இந்தப் புனிதமான போராட்டத்திலே, பலர் உயிரையும் இழக்கலாம். இதுவரை நாம் புரிந்துவந்த பணியில் எண்ணற்ற சோழ நாட்டுப்பெண்கள் பங்குகொண்டனர். பலர் மானமிழந்து இறந்தனர். பலர் எதிரிகள் வசம்சிக்கி இறந்தனர். பலர் துணிவுடன் கடமையாற்றித் திரும்பினர். ஆனால் பலதுயர்களிடையே கடமையைச்செவ்வனே நிறைவேற்றினர். அவர்களுக்கெல்லாம் சோழநாடு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. அந்தப் பெண் திலகங்களுக்கு என் நன்றி. வீரர்கள் பலர் தாய் நாட்டிற்காகப் பணி புரிந்து தங்கள் உயிரையும் ஈந்திருக்கின்றனர். அவர்கள் அமைத்துக்கொடுத்த பாதையிலே நீங்கள் அணிவகுத்துச் சென்று, அவர்கள் செய்துவந்த பணியை நிறைவேற்றவேண்டும். இதுதான்என்வேண்டுகோள்.

இங்ஙனம்,

அங்கயற்கண்ணி.

இதைப் படித்து முடித்தான் வீரன். "அன்னை வாழ்க! மன்னர் வாழ்க! சோழ நாடு வாழ்க," என்ற கூட்டுக்குரல் வானதிர நீண்ட நேரம் ஒலித்தது. இதைப் பார்த்ததும் அன்னையின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கியது. நந்தினிகூட இதைக் கண்டதும் தன் காதலனைச் சிறிது நேரம் மறந்தாள். அவள் மனம் உணர்ச்சி வசத்தால் பொங்கியது.

அன்னையின் படைகள் அணி ...குத்தன. இரு பெண்கள் பாடி ...ர்.

...னை காவிரித்
திருப்பெயர் ஆணை!
...ர்த்திடும்
தென்னவன் ஆணை!
முன்னம் வைத்த கால்
அகற்றி லோம்!
மூளும் போரில் தாதகி
சூடு வோம்!"

என்று பாடிவிட்டு மீண்டும் "அன்னை வாழ்க! சோழ நாடு வெல்க!" என்றனர். படை வீரர்களும் பதிலுக்கு "வெல்க!" எனக் கூவி நடை போட்டனர். உண்மையிலேயே அவளை, இதுவரை காணாத இக்காட்சியைக் கண்டு, உள்ளம் பூரித்து, ஒரு விநாடி மெய்மறந்து நின்றாள்.

மறுநாட் காலை படைகள் அணிவகுத்துப் புறப்பட்டன. ஏராளமான படகுகளில் வரிசை வரிசையாக அமர்ந்திருந்தனர் வீரர்கள். பெண்களும் பல படகுகளில் அமர்ந்திருந்தனர். நந்தினிகூட ஒரு படகில் அமர்ந்திருந்தாள். படகுகள் அத்தனையும் புறப்படத் தயாராக இருந்தன. இந்த நேரத்தில் ஒரு பெண் அங்கே ஓடி வந்தாள். நந்தினியின் காதில் ஏதோ ரகசியம் கூறினாள். இதைக் கேட்டதும் நந்தினி ஆச்சரியத்தால் நிமிர்ந்து பார்த்தாள். நந்தினி அமர்ந்திருக்கும் படகுதான் முதலில் புறப்பட வேண்டும். படகோட்டி குனிந்து "புறப்படலாமா?" என்று பணிவுடன் கேட்டான். "சற்றுப்பொறு" என்றாள் நந்தினி. பிறகு படகை விட்டு இறங்கி, தனியே கரைக்கு வந்தாள்.

தூரத்தில் ஒரு பல்லக்கு தெரிந்தது. நான்குபேர் அதைச் சுமந்து வந்தனர். திரைகளால் மூடப்பட்டிருந்ததால் உள்ளே இருப்பவர் யாரென்று தெரியவில்லை. நந்தினி நிற்கும் இடத்தை நோக்கியே அந்தப் பல்லக்கு வந்துகொண்டிருந்தது. அன்னைதான் அவசரமாக வருகிறாள் என்றே எல்லோரும் எண்ணினார்கள். அன்னை வாழ்க என்று கோஷமிட்டார்கள். ஆனால் முதலில் நந்தினியல்லவா 'அன்னை வாழ்க!' என்று கூவ வேண்டும். அவளோ பல்லக்கைப் பார்த்தபடி பேசாமல் நின்று கொண்டிருந்தாள்.

பல்லக்கைத் தூக்கி வந்தவர்கள் நந்தினிக்கு அருகில் அதை இறக்கி வைத்தனர். அதிலிருந்து திரையை விலக்கிக் கொண்டு மங்கை வெளியே வந்தாள். கூந்தல் அவிழ்ந்திருந்தது. நெற்றியில் திலகமில்லை. முகம் வாடி சோபையிழந்திருந்தது. தூய, வெண்மையான ஆடை அணிந்திருந்தாள். உடல் மெலிந்திருந்தது.

மங்கையைக் கண்டதும் "அக்கா!" என்று கட்டிக்கொண்டாள் நந்தினி! பொங்கி வரும் வேதனை உணர்ச்சியை அடக்க முடியவில்லை மங்கைக்கு. "நந்தினி!" என்றாள். அவளை இறுகக் கட்டியணைத்துக் கொண்டாள். இருவரும் கண்ணீர் வடித்தனர். இக்காட்சியைக் கண்டு அத்தனை வீரர்களும் பெண்களும் கண்ணீர் வடித்தனர்.

நந்தினி சிறிது தேறி. மங்கையின் கண்ணீரைத் துடைத்தாள். "அக்கா! உன்னைச் சந்திக்காமல் புறப்படுவதென்றே தீர்மானித்தேன். மன்னித்துக்கொள். உன்னைப் பார்த்துவிட்டால் என் மனம் தளர்ச்சியுறும். நீயோ என்னைக் கண்டு அழுது புலம்புவாய். ஆற்றுது கண்ணீர் விடுவாய். உனக்குத் தேறுதல் கூறும் சக்தி எனக்கு உண்டா என்பதே சந்தேகம். என்னால் புண்பட்ட உன் இதயத்திற்கு சாந்தியளிக்க, என்னால் முடியாது என்று நினைத்தேன். ஆயினும் புறப்படு முன்பு நீ வந்துவிட்டாய். உன்னைக் கண்டதும்-உன் நிலையை-கோலத்தைப் பார்த்ததும் என் மனம் வேதனையடைகிறது. படைகள் புறப்படும் நேரம் வந்துவிட்டது. திரும்பிப்போ! நாங்கள் புறப்படுகிறோம். அன்னை உனக்கு ஆறுதல் கூறுவார்கள்" என்றாள் நந்தினி.

மங்கை புன்னகை செய்தாள். ஆனால் அந்தப் புன்னகையில் வரட்சியும் கடுமையும் காணப்பட்டது. "நந்தினி! காதலனை இழந்தேன். ஈடு செய்ய முடியாத நிலைதான். வாழ்க்கைக்குத் துன்பம் தான். ஆனால் என் கடமை? அன்னையிடம் செய்த சத்தியம்? அதை மறந்து சாந்திமத் தீவில் நான் என்ன செய்யப் போகிறேன்? சோழநாட்டின் மீட்சிக்காக-அன்னையின் சபதம் நிறைவேற - இத்தனை காலம் உழைத்தேன். இதோ விடி வெள்ளி தோன்றிவிட்டது. இந்த நேரத்தில்-முக்கியமான இத்தருணத்தில் நானும் உடன் வர வேண்டும். நீயோ அனுபவமில்லாதவள். வா! படகுக்குச் செல்வோம்" என்றாள் மங்கை.

இருவரும் படகிலேறி அமர்வதை எல்லோரும் கண்டனர். மங்கை எழுந்து நின்றாள். "அன்னை வாழ்க!" என்று மெதுவாகக் கூறினாள். அவள் குரல் கம்மியது. ஆனால் சிறு நெருப்பு பெருந் தீயாவது போல 'அன்னை வாழ்க' என்ற மங்கையின் குரல், ஆயிரக் கணக்கான குரல்களாக மாறி வானளாவ ஒலித்தது.

படகோட்டிக்கு மங்கை கண்ணசைத்தாள், முதற் படகு புறப்பட்டது. பிறகு எல்லாப் படகுகளும் புறப்பட்டன. சிறிது நேரத்தில் கண்ணுக்குத் தெரியாத தூரத்திற்குச்சென்று மறைந்தன ஆயிரந் தீவுப் படகுகள்!

தொடரும்

நெல்லையப்பர் கலா நிலைய பள்ளிக்கூட உதவி நிதிக்காக

புரட்சி நடிகர்

எம். ஜி. இராமச்சந்திரன்

நடிக்கும்

"இன்பக்கனவு"

16-4-55 கரூர் டாக்கிடாக் தியேட்டரில்
17-4-55 மணப்பாறை கனி திறந்த அரங்கம்
19-4-55 பெரியகுளம் குமாரவேல் அரங்கம்

அறிஞர் சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.

அவர்கள் தலைமைதாங்க இசைந்துள்ளார்கள்.

கல்விக்கான இந்த நற்பணிக்கு உங்களனைவருடைய ஒத்துழைப்பும் நல்கி வெற்றி தரக்கோருகிறேன்.

மீ. சு. இளமுருகுபொற்செல்வி,
அமைப்பாளர்.

வெளிவந்துவிட்டது! விற்பனைக்குத்தயார்!

நாவலர் நெடுஞ்செழியன், எம்.ஏ.

தீட்டிய

மதமும் மூடநம்பிக்கையும்

விலை ரூ. 1—0—0

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி

மணிமேகலை பேசுகிறாள்

பெருமக்களே,

வணக்கம். நீங்கள் என் இலக்கியத்தைச் சுவைத்திருப்பீர்கள். இன்னும் எத்தனை ஆயிரம் மக்கள் உள்ளனரோ அதைச் சுவைக்க, உங்கள் எல்லோருக்கும் ஒரு வேண்டுகோள், முக்கியமாகக் கதாசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள். தயவு செய்து இனிமேல் நான் கொண்டதாகப் பேசப்படும் துறவு நெறியை எதற்கும் சான்று காட்டிப் பேசவேண்டாம். இயற்கையின் பரிசு இளமை-அதை எவராலும் அழிக்க முடியாது. ஆதலால் இளமையை அழித்துக் கனவில் கூட கற்பனை செய்யாதீர்கள். அது மாபெருந் தவறு. மனித உணர்ச்சியைத் தடைசெய்வது, செய்ததாகக் கற்பனை செய்வது இவை எதுவுமே மனிதப் பண்பிற்கு முரண்பட்டது. பெண்மைக்கு விலங்கு பூட்ட நினைக்கும் கயவர் கூட்டத்தின் செயலன்றி வேறில்லை இது. கேளுங்கள். ஒரு புதுக்கதையைச் சொல்கிறேன்... கேட்டபிறகாவது மனித உணர்ச்சிகளை, இளமையின் இன்ப உணர்ச்சிகளைக் கொன்றுகுவித்து மாசு படிந்த தங்களது கொள்கைகளுக்கு மெருகு கொடுக்கும் கசடர் வேலையில் இறங்காதீர்கள்.

ஆடலங்கணிகை, அழகுராணி, கோவலன் கொண்ட குணப்பெருங்குன்று என்றெல்லாம் உங்களுக்குச் சொல்லப்பட்ட மாதவி, துறவு பூண்டது உண்மையென்றாலும் அதன் பொருட்டு அவள் தன் இளமை இன்பங்களை இழக்கவேயில்லை. ஆனால் என் துறவு...? என் தாய், உலகின் இன்பங்களைக் கண்ட பிறகு துறவு பூண்டாள். ஆனால் நானோ ......

அது ஒரு மலர்வனம். என் தலைவனை முதல் தடவையாக அங்குதான் சந்தித்தேன். ஒரு வார்த்தை ...! நான் சொல்லும்சம்பவங்களுக்குச் சான்று-ஆராய்ச்சி என்றெல்லாம் இறங்கி விடாதீர்கள். உண்மையை நானே சொல்லும் போது சான்று எதற்கு? பேசாமல் என் கதையைக் கேட்டு விட்டு முடிவில் சிந்தியுங்கள்.

கிணின்-கிணின் என்ற என் தண்டைச் சிலம்பொலி அந்த அமைதியான மலர்வனம் முழுதிலும் வியாபித்து நின்றது. அமைதி என்னோடு உறவாட வந்தது-தென்றல் என் மேலாடையைச் சரிந்து சரிந்து விழச்செய்தது. மலர் பறிக்க வந்த நான், என்நிலை மறந்து அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தேன். என் இதயம், சொல்லி விளங்க வைக்க முடியாத ஒரு ஆவலை அன்றுதான் வென்று கொண்டிருந்தது. அருகிலே ஒரு தடாகம். அல்லியும் தாமரையும் நெய்தலும் குவளையும் அத்தனையுமிருந்தன அதிலே. அந்த மலர் வனத்தை ஆட்டிப்படைத்த ஒரு இன்பமணம் என் தலையில் ஏதோ ஒரு போதைச் சுனையை பெருகவைத்தது. தடாகத்தின் தெளிந்த நீரிலே என் முகம் தெரிந்தது. என்னைக் கண்டு வெட்கியது போலும் அந்த நீர்ப்பிம்பம்! தண்ணீர் ததும்ப நிமிர்ந்து பார்த்தேன் அருகிலே ஒரு முல்லைக்கொடி.. தழுவக் கொம்பில்லாமல் தவித்தது!

அன்றுமிகவும் அதிகமாகவே மலர்களைப் பறித்துக் கொண்டிருந்தேன். அவ்வளவும் தேவையில்லைதான்; என்னசெய்வது? நான்தான் என் நிலையில் இல்லையே!

"இவ்வளவு மலர் எதற்கு" கணீரென்ற குரல் கேட்டது. நான் பயந்து திரும்பினேன். ஒரு எழில் உருவம் நின்று கொண்டிருந்தது.

"அரசாங்கச் சொத்திலே ஆவலதிகமோ?" உதயகுமாரன் கேட்டார். "எது அரசாங்கத்துச் சொத்து" கேட்டுவிட வாயெடுத்தேன். ஆனால், இளவரசரே பேசினார்.

"ஏனம்மா ...... மலர்ந்த மலர்களை வீணடிப்பதில்உனக்கு ஏன் இவ்வளவு விருப்பம்?"

"வேண்டுமானால் ஒட்ட வைத்து விடட்டுமா" சட்டென்று கேட்டேன். நான் பேசவில்லை ...என் இளமை மதாகம் பேசியது. அவர் கலகலவென்று சிரித்தார்.

"உன்பெயர் ......" மிக அருகில் நின்றிருந்தார்.

"மணிமேகலை..." நாணம் என் தலையைக் கனக்கச் செய்தது, "ஓகோ... அந்த சந்நியாசியின் மகளா? ..." கேலியாகக் கேட்டார். அவமானம் என்னைச் சுட்டெரித்தது. "நான் வருகிறேன் ..." சென்றுவா என்று சொல்லி விடுவாரோ என்று பயந்து கொண்டே சொன்னேன். "எங்கே மணிமேகலை?" உரிமையோடு கேட்டது அவர் குரல். சிறிது நேரம் அவர் என்னை விழுங்கிவிடுபவர்போல் பார்த்துக் கொண்டிருந்தார். நான் எனது இடது கால் பெருவிரலால் பூமியை வருடிக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் எனது இரண்டு கைகளையும் பற்றிக் கொண்டு நின்றிருந்தார். இப்போதுதான் நான் உறங்கத் தலைப்பட்டேன் அவரது இதயம் இன்பத் தாலாட்டுப் பாடியது. உங்களுக்குச் சொல்லப்பட்டிருப்பதுபோல்மணிபல்லவத்தீவிற்கு நான் எடுத்துச் செல்லப்படவுமில்லை... ஒன்றுமில்லை... எல்லாம் வெறுங்கற்பனை! கடைசியாக ஒன்றுகேட்டேன் அவரை "ஆமாம்! அரசாங்கத்துச் சொத்து என்றீர்களே! எது மலர்வனமா-மலர்க்கொடியா?" புரிந்துகொள்வார் என்றுதான் கேட்டேன். புரிந்து கொண்டு தான் பதில் சொன்னார், இளவரசர். அதையெல்லாம் உங்களிடம் எப்படிச் சொல்லுவது? கொம்பு தழுவத்தவித்த கொடியை கொம்பு தழுவிக் கொண்டிருந்தது,

உன் குழலோரம் அகிற்காடோ,
அளிநிரையோ
நின் விழிச்சாயல் வேல்முனையோ
கூர் வாளோ

நீ சிரித்த செயல் மின் வெட்டோ நல்லொளியோ... இப்படியெல்லாம் பேசுகின்ற நிலைக்கு வந்து, எனக்கும் அஞ்சாமை தந்தார் அவர். ஆனால்... ஐயோ... கருமை சூழ்ந்தது எங்கள் வாழ்வில். காவியுடையணிந்த கூட்டம், அது கையிலே வேல் கொண்டு அரசாங்கத்தைக் காவல் காத்தது. இல்லையில்லை அப்படிநடித்தது;

சோமவர்மன்

எங்களது இன்பவாழ்வை பறித்துவிட்டார்கள் பாவிகள். கொலையுண்டார் உதயகுமாரன். குழல் அவிழ்ந்தது எனக்கு. கொலைசெய்தது யார் தெரியுமா? மதத்திற்குஆக்கம்தேட முனைந்த புழு ஒன்றுதான் இந்த வேலையைச் செய்தது. தொடர்ந்து எனக்கு வேஷமிட்டது; கையிலே திருவோடு கொடுத்து சோற்றுச் சுரபியென்று கதைத்தது; காவியுடையணிய வைத்தது ......!

கேட்டீர்களா முடிவை?

அவள் ஒரு பேரழகி. இளமைப் பெட்டகம். புதுமலர். நறுமணந்தரும் நங்கையவள் தன் மதத்திற்காக தன்மனித உணர்ச்சிகளை-இளமை உணர்ச்சிகளை பணயம் வைத்தாள். என்றால் எத்தனை பித்துக்குளிப்பெண்கள் நம்பமாட்டார்கள்? அப்படித்தானே உங்களுக்கும்கூறப்பட்டிருக்கிறது? உண்மையை இப்போதாவது உணர்ந்தீர்களே அதுவே போதும். இனி விழிப்போடு இருங்கள்.

என் புதுக்கதை மதவாதக் கும்பல்களுக்கு ஓர் எச்சரிக்கை விளக்காக இருக்கட்டும்.

எல்லோருக்கும் என் [illegible] வணக்கங்கள்.

அ[illegible]
மணி[illegible]



பேராசிரியர் கண்ட பெண்கள்

(15-ம் பக்கம் தொடர்ச்சி)

மனோன்மணியின் செவிலித்தாய் மனோன்மணியைப் பார்த்து,

“ தாயே ! வந்துபார் !
நீயே வளர்த்த
முல்லையு நறுமுகை
முகிழ்த்தது வல்லை
காதலிற் கவிழ்வை போலும் !”

என்று கூறியபோது மனோன்மணி,

“ போடிநீ ! யாது
புகன்றனை ? தவத்தை
நாடிநா னிருக்க
நணுகுமோ வென்மனந்
துச்சமா மிச்சையாற்
சோர்வு ?
நெருப்பையுங் கறையா
னரிக்குமோ நேர்ந்தே ”

என்று மறுத்துக் கூறுதல் அவ ளின் உள்ளத் தெளிவையும் சூழ லின் தன்மையையும் விளக்கவல்ல தாயுள்ளது.

எண்ணத்தில் மாற்றம்

இங்ஙனம் காதலை வெறுத்துக் கூறியவள் காதலுக்கடிமையாகும் நிலையினை ஆசிரியர் உண்டாக்கி நமக்கோர் உண்மையை உணர்த்து கின்றார்.

காரோட்டி ஒருவன் தன் காரை வெகு வேகமாகச் செலுத்து கின்றான். அவன்தான் புறப்படும் இடத்திலிருந்து கண்ணுக்கெட்டிய தொலைவில் உள்ள பாதையைநோக் கிய அளவில் செல்லும் பாதையும் செம்மையானதாகவே இருக்க வேண்டுமென எண்ணுகிறான். அந்த எண்ணத்தின் விளைவால் காரை வேகமாகச் செலுத்துகின் றான். ஆயின், திடீரென்று பாதை யில் வளைவுகண்டதும் அவன் திடுக்கிடு வான். எண்ணாது கண்ட மாற்றத் திற்கு அடிமையாகி, வாழ்வின் நெருக்கடியான கட்டத்தைப் பெறு கின்றான். ஆயின், அவனே அறி வுடையவனுயிருந்தால் பாதையைப் பார்த்துக் காரோட்டி, வளைவு கண்டபோது காரை வளைத்து ஓட்டிச் சென்று, வளைவேதும் பாதையில் இராதென எண்ணிய தன் அறிவை நொந்து, புயல் காற்றின்போது வளைந்து தந்து வாழும் நாணல் போல வாழும் நிலையளித்த வான் பொருளை வாழ்த்தி மகிழ்வான். இவ்வாறு அமையும் மாற்றங்கட் கெல்லாம் மனநிலையே காரணமா யுளது.

இவ்வாறே மனோன்மணியும் ஆரம்பநிலையில் தந்தையினும் முனிவரது சூழலில் பெரிதும் பழ கியவளாதலால், அச் சூழலுக் கேற்ற மன நிலையைப் பெறுகின் ருள். அதாவது வாணியின் காத லைக் கேட்டு எள்ளி நகையாடும் நிலை யிலுள்ளாள். காதலை நம்பாது, பெற்றவர் விரும்பியவாறே மணந்து வாழ்வதுதான் மாண்புடை நெறி யென நம்பினுள். இங்ஙனம் சிறந்த எண்ணங்களின் சூழலில் அமைந் தது மனோன்மணியின் ஆரம்ப வாழ்க்கை.

கனவு

ஆனால், ஒருநாள் கனவில் அழ கிய ஒரு ஆடவனின் உருவினைக் கண்டாள்; அவ்வளவில் தன்னை …றந்தாள்; அவனைப் பற்றிய விவ …கள் அறியத் துடித்தாள். நட …ன்பால் காதல் கொண்டு, … எண்ணி அவ்வப்போது வருந்திய வாணியைக் கண்டு எள் ளிய அவள், அதே நிலை தனக்கு வந்துற்றதை எண்ணியபோது கண் டறியாத ஒன்றனை - நினைப்பினும் அறியாத ஒன்றனைக் கண்டது குறித்து மகிழ்ந்தாள். அவ்வாறு வாணியிடம் கூறுவது என்று எண் ணியபோது தயங்கினுள்; பல இரவு களை உறக்கமின்றிக் கழித்தாள்.

பொறாமை

ஒருநாள் உறங்காத மனோன்மணி அதே நிலையிலிருந்த வாணியை அழைத்துக்கொண்டு, நிலா முற் றத்தை அடைகின்றாள். காதல் கொண்ட இருவரும் இங்ஙனம் துஞ்சாமையை எண்ணும்போது அகப்பொருளுரை ஒன்று அறிதல் வேண்டும். நிலா முற்றமடைந்த அவள் ஊரிலிருந்த அரவத்தைக் கேட்டு ‘கண்டதோ நகருங் **காணுக் கனவு’** என்கின்றாள். உடனே வியந்த வாணி, ‘கண்டது கனவோ தாயே?’ என்று கேட்க,

“……………….கண்டது
கனவெனிற் கனவு மன்று; மற்று
நனவெனில் நனவு மன்று ”

என்கின்றாள்.

இவ்வுரையால் மனோன்மணி தான் கண்ட கனவால் கலக்கமுற்றுள் ளாள். நாம் கண்டது இது, எண் ணுவது இது என்று எடுத்துரைக்க இயலா நிலையில் உள்ளாள் என் பது வெளிப்படை. இவள் உள்ளம் கனவிலே கண்டவனை நினைவிலே காண முடியவில்லையே என எண் ணியது. நினைவு வாணி நடராச ரைப் பற்றி எண்ணியது; முன்னி லும் மிகுதியாகக் கலங்கினுள். ஆயின் இவள் கலக்கம் அவள் உள் ளத்தளவில் இடம் பெறவில்லை. உள்ளத்திலேயே பல போராட்டங் கட்கு இடம்தந்து நொந்து, நொந்து மாறுவதை விரும்பாத அவள், வாணியை நோக்கி, “பாக்கிய சாலி நீ! பழகியும் உனையே!” என்று கூறும்போது நம்மையும் அறி யாமல் அவளின் நிலைமை குறித்து இரங்க வேண்டியவராகினறோம்.

இசையில் விருப்பம்.

இனி இசையனுபவிப்பதில் இவள் வல்லவள் என்பதையும் ஆசிரியர் அறிவிக்கின்றார்.

“ யாழுடன்
தேக்கிய இசையிற்
செப்பொடு சரிதம் ”

(அங்3. களம் 3.வரி 35.6)

“ வீணையி னிசையும்
விளங்குநின் குரலும்
தேனினும் இனியவாய்ச்
சேர்ந்தொரு வழிபடர்ந்து
ஊனையு முயிரையு
முருக்கும் ஆ! ஆ! ”

(வரி 39-41.)

காதல்-அடிமை

“ போடிநீ யாது
புகன்றனை ? தவத்தை
நாடிநா னிருக்க
நணுகுமோ வென்மனந்
துச்சமா மிச்சையாற் சோர்வு ?
நெருப்பையுங் கறையா
னரிக்குமோ நேர்ந்தே!”

(அங்1,களம் 2. வரி 103-7.)

என்றும்,

காதலென் பதுவென் ?
பூதமோ ? பேயோ ?
வெருட்டினு ளுய்போ
லோடிடும்; வெருவில்
துரத்துங் குரைக்கும்
தொடரும் வெகுதொலை ”

(அங்! களம் 2, வரி! 03-5)

என்றும் காதலைக் கடிந்திட்ட அவள்,

“ தெளிந்தவை கொண்டு
தெளிதற் கரியவை
யுளந்தனில் நம்பி
உறுதியாய்ப் பிடித்துச்
சிறிது சிறிதுதன்
னறிவினை வளர்த்தே
அனுபவ வழியா
யறிவதை யந்தோ
அனுமா னுதியால்
ஆராய்ந் திடுவோம்
அலதெனி னிலையென
அயிர்ப்போம் எனத்திரி
வாதிய ரன்பொரு
போதுமே யறியார்
தாய்முலைப் பாலுள்நஞ்சு
ஆய்பவ ரவரே ”

(வ 111-119)

என்று கூறுவது காணத்தக்கது. இது அடிப்படையான மன வளர்ச் சியை விளக்குதற்குரிய சான்றாகும். உலா முதலிய நூல்களுள் பருவங் களை வருணிக்குங்கால், பேதைக்கும் பெதும்பைக்கும், பெதும்பைக்கும் மங்கைக்கும் இடைப்பட்ட நிலையில் பெரிதும் வேறுபாடாகக் கூறிப் புல வர்கள் யாத்துள்ளமை காணத் தக்கது.”

தியாகச் செல்வி.

இங்ஙனம் காதலை அறியாத வளாய், அறிந்தும் வெறுத்த வளாய், துறவைப் போற்றியவ ளாய் இருந்த மனோன்மணி, காத லுக்கு அடிமையாகி. அதாவது உணர்வுக்குத் தலை வணங்கி வாடும் நிலைபெற்ற பின்னரும், உணர்வை யும் அறிவையும் சமநிலையில் பயன் படுத்தி வாழ்ந்தாள். அவளே இறு தியில், நாட்டு நலன் ஒன்றே கருதி, கனவில் கருத்தினைக் கொண்டானை மணக்க வேண்டுமென்ற எண் ணத்தை விடுத்துத் தந்தை சீவகன் கூறிய பலதேவனை மணக்க ஒப்பு கின்றாள். தியாக சிந்தனைமிகுந்த, கற்றவர் போற்றவல்ல தியாகச் செல்வியாய் நாம் காணும் மனோன்மணி கூறுவன பல, விழு மியபொருள் பயப்பனவாயுள்ளன.

வாணி வருந்துகின்றாள் மனோன் மணி பலதேவனை மணக்க ஒப்பி னள் என்பதைக் கேட்டு. ஆனால், வாணியின் வருத்தத்தைப் போக்கு கின்றாள் அவள்.

“ வருந்தலை வாணி !
வாவா இன்னுந்
தெரிந்திலை ஐயோ
சிறுமியாம் நீயும் ?
உண்மையா னுரைத்தேன்
உணருதி உறுதி.
என்மன மாரவே
இசைந்தேன் மெய்மை ”

என்று கூறி ஆசிரியர், இங்ஙனம் மனோன்மணியைத் தியா கச் செல்வியாய் மட்டும் அமைத் தமையோடு நிலை பெறுது அறி வுடை நங்கையாகவும் நாம் காணச் செய்கிறார்.

துறவறம்

“… ……தவமென் உணருவை ?
உடுப்பவை உண்பவை
விடுத்தா ணடைந்து
செந்தீ யைந்திடை
செறிந்தமைந் துறைதல்
ஆதியா வோதுப
அல்ல, அவற்றைத்
தீதறு தவமென
செப்பிடார் மேலோர்.”
“ சொந்தமா மிச்சைகள்
துறந்து மற்றவர்
கெந்தநா ளுஞ்சுக
மியைந்திடக் கடமையின்
முந்துகின் றவரே
முதற்றவ முனிவர். ”

என்று துறவறம் பற்றியும் முனி வர் பற்றியும் மனோன்மணி கூறி யன நினைந்து நினைந்து உணரத் தக்கனவே.

வாழ்ந்தனள்.

இறுதியாக, குடிலனது சூழ்ச்சி யால் அவையடைந்த புருடோத் தமன் தான் கனவில் கண்டு மகிழ்ந்து எண்ணி, ஏங்கி ஏக்கத்தினைமிகுதிப்படுத்திய உருவம் எதிரே நிற்பதைக் கண்டு, ‘இங்கோ நீயுளை! என்னுயிரமிர்தே’ என்று கூறக் கேட்ட அவள், அவனைக் கண்டு கருத்தும் உள்ளமும் ஒருங்கே கொண்ட அவனுக்கு மாலையிட்டு மகிழ்ந்தாள். மன்னன் முனிவர் ஆசீர்வதிக்க வாழ்ந்தனள் என்ற அளவில் மனோன்மணி நம் கருத் தைக் கவர்கின்றாள்.

தயாராகிறது !

சிந்தனைச் சிற்பியின் புதிய எழுத்தோவியம்.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள்

எழுதிய

“ வீரமங்கை ஜோன் ”

(Joan of Arc)

கண்ணைக்கவரும் மூவண்ண அட்டையுடன் பிரான்ஸ் நாட்டு “ வீரமங்கை ஜோன் ஆப் ஆர்க் ” வாழ்க்கை வரலாறு விரைவில் வெளிவருகிறது. விடுதலைவிரும்பிகள் ஒவ்வொருவரும் விரும்பி படிக்கவேண்டிய உணர்ச்சிமிகுந்த நூல்.

வெளியிடுவோர்

பைந்தமிழ்ப் பண்ணை

குளித்தலை P.O. திருச்சிமாவட்டம்

'வாணி'

வாணியும் கண்ணகியும்

கற்பின் கொழுந்தே;
பொற்பின் செல்வி,
சீறடிச் சிலம்பி
ஞென்றுகொண்டி யான்போய்
மாறி வருவன்
மயங்கா தொழிகென......"

கூறிச் சென்ற கோவலன், கல்லாக் களிமகன் ஒருவன் தேரா மன்ன னின் உரைகொண்டு, வாளால் வெட்டினன் எனக் கேட்டு, வெகுண் டவளாய், செற்றனள் போலும், செயிர்த்தனள் போலும் சிலம்பொன் றேந்திய கையளாய், செழியன முன் சென்று, தீவேந்தன் திறங் கேட்டு. சிலம்புடைத்து, மன்னன் தவறினை உணரச் செய்து

"யானமர் காதலன்
தன்னைத் தவறிழைத்த
கோனகர் சீறினேன்
குற்றமிலேன் யானென்று"

எண்ணி மதுரைமா நகரை எரி யுண்ணச் செய்தாள் இளங்கோவின் காவியத்தலைவி. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நெடுஞ் செழி யன் அவையில் **கண்ணகி**, மன்னன் ஆராயாது செய்த தவற்றைக் காட்டி வழக்காடி, வழக்கில் வாகைசூடிய போதும் துயர் தாளாது நகரெரித்து உளம் நிறை கொண்டமை முன் னர்க் கண்டோம்.

நாற்பதாண்டுகட்கு முன்னர் பேராசிரியர் சுந்தரனார் தம் கற்பனை நூலில் கண்ணகியினும் விஞ்சும் முறையில் வாணியை அமைத்துள் ளார். கண்ணகி இறந்த கணவ னுக்காக மன்னனிடம் வாதாடி னள். வாணி விரும்பும் ஆடவனு டன் வாழவேண்டுமென சீவகனு டன் வாதாடுகின்றாள்.

சீவகனும் வாணியும்

"மின்னேய்.........
மருங்குல் வாணி!
வாராய் இப்புறம்'

என அழைத்து 'பலதேவனை மணந்துகொள், பித்தன் போலக் கண்டதையே கண்டும், பேசி யதையே பேசியும் இருக்கும் நடரா சனை மறந்து விடு, என்று சீவகன் கூறியபோது,

"அகலிடந் தனிபுரந்
தாளும் வேந்தே
நிகருமென் சிறிய
நினைவெலாம் விரித்து
விநயமாய் நின்பால்
விளம்ப எனது
நாணம் நாவெழா
தடக்கு மாயினும்
பேணி யொருமொழி பேசுவன்
நேசமில் வதுவை
நாச காரணமே"
(அங் 1, களம், 4, வரி 71-76)

என்று கூறுகின்றாள். எண்ணியன கூற எண்ணுவதாயும், ஆயின் கூற இயலா நிலையில் பெண்மைக்குரிய நாணம் தடுப்பதாயும், இருப்பினும் எண்ணுவன யாவும் சுருக்கி ஒரு மொழியில் விளம்புவதாகவும் சொல்லி, 'நேசமில் வதுவை நாச காரணமே' என்று கூறுவது போற் றத் தக்கதாயுள்ளது.

இல்வாழ்க்கை

'நேசமில் வதுவை நாச கார ணமே' என்று வாணி கூறியது கேட்ட மன்னன், பெற்றோர் எண் ணப்படி மணம் புரிந்து வாழலே பெண்கள் கடனெனக் கூற, வாணி இல்லறத்தைப் பற்றியும், காதலின் ஆற்றல் பற்றியும் கூறுவது, கற் றோர் வாணியின் உளமொடு இயைந்து, பல காலும் படித்துப் படித்துச் சுவைக்கும் அளவில் உள் ளது.

"நேயமும்...............
ஆக்கப் படும் பொரு
ளாமோ? நோக்கில்
துன்பமே நிறையும்
மன்பே ருலகாம்
எரியும் கானல்
விரியும் பாலையில்
திரியும் மனிதர் நெஞ்சஞ் சிறிது
தங்கி அங்கவர் அங்கங் குளிரத்
தாருவாய்த் தழைத்தும்
ஓயாத் தொழிலில்
நேரும் தாகம் நீங்குவான் நிமல
ஊற்று யிருந்தவ
ருள்ளம் ஆற்றியும்
ஆறலைக் கள்வர் அறுபகை மீறில்
உறுதுணை யாயவர்

நெறிமுறை காத்தும்
முயற்சியாம் வழியில்
அயர்ச்சி நேரிடில்
ஊன்றுகோலாயவர்
ஊக்க முயர்த்தியும்
இவ்விதம் யாரையும்
செவ்விதிற் படுத்தி,
இகத்துள சுகத்திற்கு
அளவுகோ லாகி
பரத்துள சுகத்தை
வரித்த சித்திரமாய்
இல்லறம் என்பது............"

"நின்ற காதலின்
நிலைமை: நினையில்
இரும்புங் காந்தமும்
பொருந்தும் தன்மைபோல்
இருவர் சிந்தையும்
இயல்பா யுருகி
ஒன்றுந் தன்மை
யன்றி, ஒருவரால்
ஆக்கப் படும் பொருளாமோ"
(அங் 1, களம் 4, வரி 83-104)

இவ்வளவும் கேட்ட மன்னன் விடுக் கொடுக்கும் மனமற்றவனாய் பலதேவனை மணக்குமாறு கூறிட, மணவா விடின் கன்னியாயிருத்தல் வேண்டுமெனக் கூற, வாணி மகிழ்ந்து '**சம்மதம்**' என்று சொல் லும்போது காதலின் ஆற்றலை நாம் உணர முடிகின்றது: அன்பு அள வற்றது என்ற உண்மை தெள்ளி திற் புலனாகின்றது; வாணியின் உறுதியான உள்ளத்தின் முன் நாம் வணங்க வேண்டியுள்ளது. சிறந்த காதலர்கள் வாணியின் நிலைபெற விழைதல் உண்டு.

வாணி கூறிய 'சம்மதம்' என்ற சொல் மன்னனையே திடுக்கிட வைத் தது; அவன் வாணியின் உள்ளத் திண்மை கண்டு வியந்தான். அவன் வியப்பிடை அழகிய ஒருவினா உருக் கொள்கின்றது.

"பேதாய்
கன்னியா யிருக்கில்
உன்னழ கென்னும்?
அரைக்கி லன்றோ
சந்தனங் கமழும்?"

என்று அமைநத மன்னர் வினா விற்கு வாணி அளிக்கும் மாற்றம் நகைச்சுவை பயப்பதாயும் பொருள் பொதிந்த தாயும் உள்ளது.

"விரைதரு மோசிறு
கறையா னரிக்கில்"

இனி, இறுதியாக அவள் மன்ன வனிடம் தன் திண்மை உள் ளத்தை

"இறக்கினும் இறைவ!
அதற்கியா னிசையேன்,
பொறுத்தருள் யானிவண் புகன்ற
மறுத்துரை யனைத்தும்
மாற்றல ரேறே"

என்று கூறிப் புலப்படுத்துகின்றாள்.

நினைப்பும் வருத்தமும்

ஏதேனும் சில நிகழ்ச்சிகள் சில ரின் வாழ்வில் நிலைபெற்று எண் ணுந்தோறும் எண்ணுந்தோறும் அந்நிகழ்ச்சிகள் நல்லதாயின் மகிழ்ந்தும், அல்லதாயின் வருந்தி தியும் இருத்தலுண்டு. வாணியின் கனவு வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி அவளுக்கு மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் கலந்து அளிக்கும் ஆற்றல் பெற்றதாய் அமைந்தது.

"உனது காதலன் எங்குளனோ? உணர்வை கொல்? என்ற மனோன் மணியின் வினா வாணியின் நினைவு அலைகளைக் கிளப்பின. பேசாது, சிந்தனை கொண்ட முகத்தினளாய் இருந்த அவள், மனத்திடை இருந்த துயரம் தீரப் பேசலானாள். அன் றொரு நாள் என்ற கதைப் போக் கிலேயே நடந்த அந்த நிகழ்ச்சியைக் கூறுகின்றாள். வாணியே கலங்கு மளவில் அமைந்தது அந்நிகழ்ச் எனின் அதனை வாணியின் வா லாய் அறிந்து நாமும் வருந் வோம்.

"ஒருநா ளந்தியில்
இருவரு மெதிர்ச்சை
கடிபுரி கடந்துபோய்,
நெடுவயற் பாயு
ஒருசிறு வாய்க்காற்
கரைகண் டாங்
பெருமலை பிறந்த
சிறுகாற் செல்
தெண்ணீர்க் கன்னி
பண்ணிய நிலாநிழ
சிற்றில் பன்முறை
சிதைப்பவன் போன்
சிற்றலை யெழுப்பச்
சிறுமி முறுமுறுத்
அழுவது போல விழுமிய பரல்மேல்
ஒழுகுந் தீம்புன
லோதையுங் கேட்டு
பழுதிலாய் பால்நிலா
விழுவது நோக்கி
இருவரும் மௌனமாய்
நெடும்பொழு திருந்தோம்.
கரையிடை அலர்ந்த
காவியொன் றடர்த்தென்
அருகே கொணர்ந்தெனக்
கன்பா யீந்தனர்
வருவதிங் கறியா
மதியிலி யதனைக்
கண்ணிணை யொற்றிலன்;
உள்மணம் முகந்திலன்;
மார்பொடு சேர்த்திலன்,
வார்குழற் சார்த்திலன்;
ஆர்வமும் அன்பும்
அறியார் மான
ஓடுந் தீம்புனல் மாடே விடுத்துச்
சிறுமியர் குறும்பு
காட்டிச் சிரித்தேன்.
முறுவலோடு அவரும்
ஏதோ மொழிய
உன்னு முன்னரென்
னன்னையங் கடைந்தாள்,
திமொழி பலவுஞ்
செப்பினள். யானோ?
நாவெழ லின்றி
நின்றேன். நண்பர்
மறுமொழி யொன்றும்
வழங்கா தேகினர்
அதுமுத லிதுகாறும்
அவர்தமை ஐயோ!
கண்டிலேன் இனிமேற்
காண்பனோ? அறியேன்"

என்று தன் கடந்த காலநினைவை உரைக்கும் பொழுது அவள் தன் காதலனைக் கண்ட இடம், நிலைத்த இன்பத்திற்கு நிலைக்களனான சிறிது நேர உரையாடல், ஊடலின் பின் இன்பவுரை என்ற படிப்படியான நிலைகளை நாமறிகிறோம். வாணியின் உள்ளம் நடராசர்க்குரியதா யமைந் ததாயினும் அவளைப் பயந்தார்க்கு அவள் பகையானாள்.

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 7

ஈற்றடி : பூவைமே லெத்தனைப் பூ !

குறிப்பு : நேரிசை வெண்பாக்கள் மட்டும்
ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு தேதி 23-4-55

நீதிபதி 'சகி' தென்றல் : : சென்

சிறந்த தோழி

"நான் பல தேவனை மணந்து கொள்ளப் போகின்றேன்: நீ நடராசனை மணந்துகொள்" என்று மனோன்மணி சொன்னபோது

" அவனைநீ
அணையுநா ளடியேன்
மணநாள் அன்றேல்
இணையிலா உன்னடிக்
கின்றுபோ லென்றும்
பணிசெயப் பெறுவதே
பாக்கிய மெனக்கு"

என்று கூறுகின்றாள். வாணியின் உள்ளம் தூய உள்ளம், தானும் பிறரும் வாழவேண்டுமென்ற பொதுமை பாராட்டும் சிறந்த உள்ளம் என்பதை விளக்கமுற அறிய இறுதிக் காட்சி சிறந்த சான்றாயுள்ளது.

" மற்றிவர் கவலை
மாற்றிட வொருபா
சாற்றிசைத் திடுவளோ
வாணி? சாற்றுதி !"

என்று கூறியபோது வாணிபாடிய பாக்கள் இறைவனை வேண்டுவனவாய் அமைந்ததோடு அமையாது, 'இன்னோர்க்குஇன்னவிதத்தில்இன்னல் போக்கிய இனிய பொருளே, என் தோழி மனோன்மணிக்கு வந்துற்ற இடர் களையலும் நின் கடனன்றோ? என்று ஆண்டவனை விளித்துப்பாடுவது அவளது உயர்ந்த உள்ளத்தைக் காட்டவல்ல ஆடியென மிளிர்கின்றன. அவற்றுள் ஒன்றனைக் காணுவோம்.

"பாரரசர் துகிலுரியப்
பரிதவிக்கு மொருதெரிவை
சீர்துவள நகர்கருதிச்
சிதைவொழிந்தா ளெனவுரைபபர்;
ஆர்துணையு மறவிருக்கு
மறிவிலியா ளழைப்பதற்குன்
ஊர்தெரியே னுயிடினு
முறுதிதா லுனக்குரித்தே"

மணமா ?

வாணி மணந்தாளா? மகிழ்ச்சி நிலவியதா என்ற வினாக்கட்குரிய விளக்கம் நூலில் இல்லை. வாணி மணந்தனள், மகிழ்ச்சி அவளின் வாழ்வின் அடிப்படையாய் அமைந்தது என்பதை,

" அவனை நீ
அணையுநா ளடியேன் மணநாள் "

என்று மனோன்மணியிடம் கூறியதை எண்ணி, அவளுக்கு மணம் முடிந்தமையால், முன்னரே மன்னன் ஒப்பியவாறு வாணி தன் உளம் நேர் காதலனை மணந்து மகிழ்ந்திருப்பாள் என்பது வெளிப்படை.

வாணி மங்கையர் குல திலகம்

சுந்தரனார் கண்ட பெண்டிர் இருவர் தம் ஆற்றலை இதுவரையும் கண்டோம். அவ்விருவரும் ஆற்றல் மட்டுமல்லாது அமைதியும் அறிவும் கொண்டு விளங்குகின்றனர். ஆண் மூளையில் சிறந்தவன் என்றும் பெண் மனத்தில் சிறந்தவள் என்றும் மேலைநாட்டுக் கவிஞர் கூறியதற் கொப்ப மனம் சிறந்தாராக மனோன்மணியும் வாணியும் அமைகின்றனர், இவ்விரு படைப்புக்களும் ஆசிரியரின் புலமையை விளக்குவனவாய் உள்ளன.

★

வாணியின் காதல்

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

பேச்சைவிடு; மிஞ்சாதே; தந்தை சொற்படி நட.

வாணி:-அங்ஙனம் நடவாவிடின்?

மன்னன் :-என்றும் நீ கன்னியாயிருப்பாய்.

வாணி :-சம்மதம்.

மன்னன் :- கன்னியாயிருப்பின் உன் அழகு பாழாகும். அரைக்கில் அன்றோ சந்தனம் கமழும் ?

வாணி:-அச்சந்தனக் கட்டையைக் கரையான் அரித்தால் மணக்குமா?

மன்னன் :-நீ பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்று சாதித்தால் என் செய்வது ?

வாணி :-இப்பிடிவாதம் பெற்றோரிடமிருந்தால் பெண்கள் எவ்வாறு பிழைப்பர் ?

மன்னன் :-சகடன் சொற்படி நாம் திருமணத்தை நடத்துவோம். ஆயினும் உன் கருத்தை அறிய ஐந்துநாள் தவணை கொடுக்கிறோம்.

வாணி :-பெருமானே, **யான் இறப்பதாகயிருந்தாலும் இத்திரு மணத்திற்கு இசையேன்.** யான் மறுத்துக்கூறிய அனைத்தும் பொறுத்தருள்க.

முடிவுரை

ஐந்துநாட்களுக்குள் சேரனுக்கும் பாண்டியனுக்கும் போர் மூண்டது. சூழ்ச்சியை அரசன் உணர்ந்தான். தன் மகளான மனோன்மணி காதலித்த சேரநாட்டு மன்னனுக்கே தன் மகளைப் பாண்டியன் மணம் புரிவித்தான். அவ்வாறே, வாணியின் விருப்பப்படியே நடராசன் அவளுக்கு மணமகனானன். இப்பகுதியில் வாணியின் நுண்ணறிவும், களங்கமற்ற காதலின் உறுதியும் நன்கு அறிந்து மகிழ்தற்குரியனவாகும். அவளது அறிவுரை நம் சமுதாயத்திலுள்ள பெற்றோர்களுக்கு நல்லறிவினைத் தருமா ?

◉



அறிஞர் அண்ணாவும், எஸ். எஸ். பி. லிங்கமும்

தென்றல்

அடுத்த இதழில்

ஆசைக் காதல் ராஜா !
- சுவைமிக்க கற்பனை

பாண்டி மண்டலச் செல்வம்
- உண்மை நிகழ்ச்சிகளின் கோவை

வில்லங்கப்பண்ணை
- அரசியல் கட்டுரை

பாவைக்கூத்து
- முடிமன்னன் முடங்கல்

தொடர்கதை - வெண்பாப் போட்டி - கேள்வி பதில்

இன்னும் பல.

தென்றல்

திரை

பலருடைய வேண்டுகோளுக்கிணங்க ஒவ்வொரு ஆங்கில மாதமும் முதல் தேதியன்று வெளிவரும்.

அடுத்த இதழ்

1-5-55-ல் எல்லா ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

விலை அணா 4
ஆண்டு சந்தா ரூ. 3.



1

எழில் நங்கையின் வாய்விட்ட முல்லைச் சிரிப்பை நினைவூட்டும் மொட்டவிழ்ந்த மலர்களின் நறுமணத்தை அள்ளி யளிக்கும் பூங்கா! அதன் மருங்கே தாமரை மலர்ந்த தடாகம்! அந்த வாவியின் பளிங்கு நீரில், மெருகிட்ட வெள்ளித்துண்டுகள் சிதறுவதைப் போலத் துள்ளியோடும் சேலினங்கள்! உச்சி வானத்திற் கருகில் கீழ்த்திசையில் தண்ணொளியைச் சொரிந்துகொண்டிருக்கும் அரைவட்ட நிலா! கண் சிமிட்டி நகைக்கும் தாரகைகள்!

விடிய அரைச்சாம மிருக்கும். அந்த நேரத்தில், வழக்கப்படி புலவர் பெர்தூசி குளிக்க அந்த அழகுக் குளத்திற்கு வந்தார். தினந்தோறும் கண்டு அனுபவித்த அந்த இயற்கைக் காட்சிகள், இன்றுமட்டும் அவருக்கு இல்லாத புதிய பூரிப்பைத் தந்தன! அவர் முகத்தில் பெருமிதம் நிழலாடிக் கொண்டிருந்தது. ஏறு நடையுடன் கேணற்றினுள் இறங்கிச் சென்றார். தடாகத்தின் அழகுக் காட்சி அவர் விழித்திரையில் மின்னியது!

"ஏ, அழகு நிறைந்த வாவியே! என்றுமில்லாத புது மகிழ்ச்சி என்னைப் போலவே நீயும் பெற்றிருப்பதை நானறிகிறேன். நாளை முதல் உன் அணைப்பில் ஏழைப் புலவன் பெர்தூசி இருக்கமாட்டான். அறுபதினாயிரம் தங்க நாணயங்களுக்கு அதிபனான செல்வச்சீமான் பெர்தூசி உன்னைக் காண வருவான்! அதை நீயும் அறிந்ததால்தானோ என்னவோ, என்றையும்விட இன்று என்னை முகமலர்ச்சியுடன் வரவேற்கிறாய்! உள்ளத்தில் சூதும், உதட்டில் உறவும் அறியாத பளிங்குத் தடாகமே! பொழுது விடிந்தால் நான் அரசாங்கக் கவி! இன்னும் சிறிதுகாலத்தில், அகில உலகமே என்னையறிந்து வாழ்த்தப் போகிறது! என் புகழ் மங்காதது; மேதினியுள்ளவரை நிலைத்து நின்று ஒளி வீசுவது! உலகம் போற்றும் மேதைகளில் நானும் ஒருவனாகப் போகிறேன்............ அழகுத் தடாகமே! அப்போது நான் உன்னை மறந்துவிடுவேனென்று நினைக்கிறாயா? அதனால் தான், அதற்குள் முகம் சுருங்கி வேதனையால் சிற்றலையாகக் குமுறுகிறாயா? அப்படி நினைக்காதே! என்றென்றும் எனக்கு இதமளித்த உன்னை நான் என்றுமே மறக்க மாட்டேன்......!"

கரைகாணாத மகிழ்ச்சி உள்ளத்தில் கூத்தாட, பெர்தூசியின் உதடுகள் படபடவென்று இவ்வாறு வார்த்தைகளைச் சொரிந்தன! குளத்தின் குளிர்ந்த நீரில் குளித்ததால் அவர் மேனி குளிர்ந்தது; கிடைக்கப்போகும் கீர்த்தியை யெண்ணி யெண்ணி அவர் இதயமும் குளிர்ந்தது! அறிஞர் ஏடுகளைப் பன்முறை படித்தாலும், படிக்கும் ஒவ்வொரு முறையும் புத்தம் புதிய கருத்துக்கள் நம் இதயங்களி லிடம் பெறுவதைப் போல, பன்முறை கண்டு பழகிப் போன இயற்கைத் தோற்றங்கள், பெர்தூசியின் இதயத்தில் இனிய, புத்தம்புதிய இன்பத்தைத்தந்தன!

2

ஷாநாமா!--முப்பதாண்டுகளாக இரவு பகலென்றில்லாமல் பெரும் உழைப்பைச் செலவிட்டு, புலவர் பெர்தூசி இயற்றிய பாரசீக ஏடு! பாரசீகத்தின் பூர்வீக சரித்திரம் தெளிவாகவும், மிக அழகாகவும், தேன் நடையிலும் அந்த மாபெருங் கவியால் உருவாக்கப்பட்டது! பெர்தூசி வெறும் பொன்னுக்காக மட்டும் ஷாநாமாவை இயற்றியிருந்தாரானால், கவிதையில் நயம் காட்டாற்று வெள்ளமாய்க் கரை புரண்டோடியிராது. புகழொன்றையே குறியாகக் கொண்டோரல்லவா புலவர்கள்! அந்தப் புனிதத் தன்மையால் தானே இலக்கியங்கள், விலைமதிப்பற்ற பொருள்களில் உயர்ந்த வகையாக இடம்பெற்றன!

கஜினி பட்டனத்தில் மன்னனது அரண்மனை! மன்னன் கஜினி முகம்மது அரியாசனத்தில் அமர்ந்திருந்தான். அருகிலிருந்த ஆசனங்களில் பிரதானிகளும், புலவர்கள் அபுரிகான் முகம்மதுவும் அன்சாரியும் அமர்ந்திருந்தனர். எதிரே அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையில் புலவர் பெர்தூசி கம்பீரத்தோடு அமர்ந்திருந்தார். ஷாநாமா, அவர் கரத்தை அலங்கரித்தது!

முல்லைவழுதி

மன்னன் சிந்தனையில் மூழ்கியிருந்தான். முப்பதாண்டுகளுக்கு முன்பு, இதே அரியாசனத்தில்-இதே நேரத்தில் அமர்ந்திருந்து, "புலவர் பெர்தூசியாரே! பாரசீகத்தின் பூர்வீக சரித்திரத்தை ஓர் சிறந்த இதிகாசமாகத் தாங்கள் இயற்றவேண்டும்! தாங்கள் பாடும் ஒவ்வொரு பாட்டிற்கும் ஒரு பொன் நாணயம் தரப்படும்!" என்று, தான் கூறியதை இப்போது எண்ணிப் பார்த்தான்.

புலவர் பெர்தூசி இயற்றியிருக்கும் பாடல்கள் ஒன்று இரண்டல்ல; அறுபதாயிரம்! ஒரு பாடலுக்கு ஓர் பொன்நாணயம் வீதம் அரசன் முகம்மது, புலவர் பெர்தூசிக்கு அறுபதினாயிரம் பொன் நாணயங்கள் தந்து ஆகவேண்டும்! ஆம்; அறுபதினாயிரம் பொன் நாணயங்கள்!

"அரசே! பாடலைத் தொடங்கலாமா?"-அவையின்முன், மேடையின்மீது அமர்ந்திருந்த புலவரின் கனிவும் பெருமிதமும் பணிவும் கலந்த கம்பீரமான குரல், அரசனை விழிப்புறச் செய்தது!

"என்ன?..."—தூக்கக் கலக்கத்திலிருந்தவனைப்போல மன்னன் கேட்டான்.

"பாடலைத் தொடங்கலாமா அரசே?"

"சரி."

புலவர் பெர்தூசி ஷாநாமாவைப் பாடத் தொடங்கினார். மன்னனின் இதயம் மீண்டும் சிந்தனை யுலகில் பவனி புறப்பட்டது! கானமுகில் பொழிந்த கவிதைத்தேன் மாரியிலே, அவையினரும் அபுரிகான் முகம்மதுவும் அன்சாரியும் உள்ளங்களை நனையவிட்டிருந்தனர்! விழித்திருந்த அவையோரின் கண்கள், வெளியுலகைக் காண மறுத்து, கவிதையின் இன்பத்தை யனுபவிக்க இதயத்திற்கு ஒத்தாசை செய்தன!

பாடல் ஒன்று பாடி முடிந்தது.

சிந்தனை யுலகிலிருந்து யாவரும் விடுபட்டனர். அனைவரின் கண்களும் அரசனின் முகத்தைக் கூர்ந்து நோக்கின. அரசன் சிந்தனையிலேயே யிருந்தான். கவிதையின் இன்பத்திலே மூழ்கிக் கிடக்கிறான் மன்னன் என்று எண்ணி, பக்தியுடனும் பூரிப்புடனும் அனைவரும் புலவர் பெர்தூசியை நோக்கினார்கள். பெர்தூசியின் முகத்தில் புன்னகை யரும்பியது. மகிழ்ச்சியால் அவரிதயம் மலர்ந்து குவிந்தது!

சில கணநேரம் மௌனம்.

அவையில் நிலவிய அமைதி, அரசனைச் சிந்தனையிலிருந்து மீட்டது! திடுக்கிட்டு அவையை நோக்கிய அரசன், "ஏன்? ஏன் பாடலை நிறுத்திவிட்டீர் கவிஞரே!" என்று வியப்பும் திகைப்பும் கலந்த குரலில் கேட்டான்.

"அரசே! முதல் பாடல் முடிந்துவிட்டது!"

"முதல் பாடல் முடிந்துவிட்டதா? முதல் பாடல் முடிந்துவிட்டால், இரண்டாவது பாடல் பாடுங்கள்!"

"அரசே!"

"என்ன பெர்தூசியாரே?"

"தாங்கள் தந்த வாக்கு......"

ஓ! அதுவா? ஆம்; மறந்தே விட்டேன்!" என்று சொல்லி, அருகிலிருந்த சேவகனிடம் ஏதோ கூறினான். அவன் சென்றுவிட்டான். "புலவரே! நான் தந்த வாக்கு தவறாது. தங்கள் திறமைக்கேற்ற சன்மானம் நிச்சயம் தரப்படும். தாங்கள் பாடலாம்!" என்று மன்னன் கூறியதும், கைகுவித்துப் புலவர் வணங்கிவிட்டுப் பாடத் தொடங்கினார். மன்னன் முகத்தில் மீண்டும் எண்ணத்தின் கீறல்கள் பட்டுத் தெறித்தன!

அருகில் அமர்ந்திருந்த அபுரிகான் முகம்மதுவின் காதில் மன்னன் ஏதோ இரகசியமாகக் கூறினான். மன்னனின் கூற்றைக் கேட்டதும் புலவர் முகம் சுருங்கியது! விவரமறிந்த அன்சாரியின் முகமும் அனலிலிட்ட அல்லி மலராகியது!

பற்பல போர்க்களங்களைக் கண்டு, இந்தியக் கடவுள்களின் மண்டைகளையெல்லாம் உடைத்து, ஆண்டவர்களுக்கே ஆயுளை நிர்ணயித்த மாவீரன் முகம்மது கஜினி, 'மிகச் சாமானியரான' கவிவாணர்களின் நேர்மையான பார்வையைக் காண முடியாதவனாய்த் தலைகவிழ்ந்தான்.

இரண்டாவது பாடல் பாடி முடிந்தது.

பணமுடிப்பைச் சேவகன் மன்னனிடம் தந்து வணங்கிப் பக்கலில் நின்றான். மன்னன் திருவாய் மலர்ந்தருளினான்:

"புலவர் பெர்தூசி அவர்களே! நீங்கள் இப்போது பாடிய இரண்டே இரண்டு பாடல்களிலிருந்தே, தங்கள் புலமையை நாம் தெரிந்துகொண்டோம். ஷாநாமா சாதாரண காவியமல்ல. பாரசீகத்தின் புகழை; மேதினியுள்ளவரை நிலைத்து நிற்கச் செய்துவிட்டீர், உமது கவி வன்மையால்! உமது திறனை, யாம் எவ்வார்த்தைகளைக் கொண்டு போற்றிப் புகழ்வதெனத் தோன்றாது திகைக்கிறோம். ஆனால்......

"உமது திறனுக்கேற்ற சன்மானத்தை உமக்கு வழங்கமுடியாமையை யெண்ணும்போதுதான், எமது இதயம் வேதனையால் வெடித்துவிடும் போலாகிறது. யாது செய்வது? பண்டாரத்திலோபோதிய பணமில்லை. ஆகவே, உமக்குத் தருவதாகக் கூறிய தங்க நாணயங்களுக்குப் பதிலாக, வெள்ளி நாணயங்களை வழங்குகிறோம்.....

"நீர் இயற்றியிருக்கும் இதிகாசம் பணத்தின் பொருட்டு உருவாக்கப் பட்டதல்ல என்பதை யாமறிவோம். புலவர் மனம் பணத்தை விரும்புவதல்ல; புகழையே நாடுவது என்பதையும் அறிவோம் நாம். தங்கள் மனம் இதனால் புண்படாது; மகிழ்ச்சியுடன் நாமளிப்பதைப் பெற்றுக்கொள்வீர் என்பதை யாமறிந்தாலும், சொன்னபடி தங்க நாணயங்களைத் தரமுடியவில்லையே என்றெண்ணும்போதுதான், எமது உள்ளம் துயரத்தால் கொந்தளித்துக் குமுறுகிறது......"

மன்னன் முகம்மது சாகசமாகப் பேசினான். அவனை உற்றுநோக்கியவாறே மேடையில் அமர்ந்திருந்த புலவர், மேடையை விட்டுக் கீழே யிறங்கினார்.

"மன்னர் மன்னா! வருந்த வேண்டாம். என் காவியத்தி[illegible] பெருமையை அவையறியக் கூ[illegible] பெருந்தகையே! பதினாயிரம்[illegible] நாணயங்களென்ன; எ[illegible] வியலாத் தங்கக்காசுகளு[illegible] அமுதவாயுதிர்த்த [illegible]

களுக்கு ஈடாகுந்தகுதியுடையனவாகுமா? 'ஷாநாமா சாதாரண காவியமல்ல!' என்ற ஒரு வார்த்தை போதுமே என் நெஞ்சம் நிறைய! புலவனுக்கு அதைவிட வேறென்ன பொன்னும் பொருளும் தேவை? நீ அகமகிழ்ந்து தரும் வெள்ளிக் காசுகளையே, விலை மதிப்பிடமுடியா வைரக் காசுகளாக என் உள்ளம் மதித்து மகிழ்கிறது!" என்றுதான் கவிவாணர் கூறப்போகிருர் என்று மன்னன் எண்ணிஞன்; அவையிலிருந்த பலரும் எண்ணினர். ஆனல், உள்ளத்தை மதிப்பிடத் தெரிந்த புலவர், அதற்கு நேர் மாருஞர்! ஏமாற்றத்தாலும் சினத்தாலும் அவர் உடலில் அதிர்ச்சியேற்பட்டது! உடல் வெப்பமேறியிருந்தது. கால்கள் தள்ளாடின. உதடுகள் துடிதுடிக்கப் பேசிஞர்:

"அரசே! புரிந்துகொண்டேன் உங்கள் உள்ளத்தை! நான் இயற்றிய இதிகாசம் பணத்தின்பொருட்டு உருவாக்கப்படாததையும், புலவர் மனம் பணத்தை விரும்பாமல், புகழையே நாடுவதையுமாவது தாங்கள் அறிந்திருக்கிறீர்களே என்று வியப்படைகிறேன். உங்கள் பாழும் நிதிக்களஞ்சியம், என் காவியம் அரங்கேற்ற மடையும் போதுதான் நிறைவிழந்திருக்க வேண்டுமா? இனி அது எப்போதுமே நிறையாதா? நிதிக்களஞ்சியம் நிரம்பும் அரசே! நிதிக்களஞ்சியம் நிரம்பும்! உமது பேராசை இதயம் தான் என்றுமே நிறையாது!

"ஷாநாமா சாதாரண காவியமல்லவென்று உமது வாய் கூறி விட்டதே தவிர, உமது இதயம் அதனை யறியவில்லை! 'பாரசீகத்தின் புகழை மேதினியுள்ளவரை ஷாநாமா நிலைத்து நிற்கச்செய்யப் போகிறது; ஷாநாமா உள்ளவரை பாரசீகத்தின் பெருமை அழியாது'- என்ற உண்மைகளை என் அருமைக் கவிவாணத் தோழர்கள் அபுரிகான் முகம்மதுவும் அன்சாரியும் அறிவார்கள்!

"முப்பதாண்டுகளாக நான் வெகு சிரமப்பட்டு எழுதிய இந்த இதிகாசம் விலைமதிப்பற்றதானல், வெறும் வெள்ளிக்காசுகளை இதற்குச் சன்மானமாக நான் பெறமாட்டேன். உமது இறுதி நாளிலும், உமது பேராசை உம்மை விட்டுப் போகாமலிருக்கட்டும்! வருகிறேன் அரசே! வணக்கம்!"

புலவர் பெர்தூசி அரசவையை விட்டு வெளியேறிஞர். மௌனமாக மன்னன் ஆசனத்தை விட்டெழுந்து, அந்தப்புரம் சென்ருன். அவை கலைந்தது.

3

நாட்கள் சில சென்றன.

கஜினிப் பட்டனத்தைவிட்டுத் தம் சொந்தவூராகிய கோராசனுக்குச் சென்ற புலவர் பெர்தூசி, எந்நேரமும் மனப்புயலில் சிக்கித் தவித்தார். சோகத்தை வருணித்து எழுதி, படிப்போர் இதயங்களைக் குமுறச்செய்த மகாகவி பெர்தூசி, தம் இதயக்குமுறலை அடக்கிக் கொள்ள வழியின்றித் தத்தளித்தார். மனத்துயரத்திற்கேது மருந்து?

"முப்பதாண்டுகளாக முழு முயற்சியுடன் எழுதப்பெற்ற காவியம், அவையோர் முன்னிலையில் அவமதிக்கப்பட்டதே அரசனல்!" என்று எண்ணுந்தோறும், ...போதாவது இதயத்தில் சிறி...வு ஓய்ந்திருக்கும் புயல், ...ரக் கூச்சலிட்டுக் கொக்கரித்...ந்தெழுந்த வண்ணமிருந் ...ழந்துவிட்டு எரியுந் தீயில் ...ய விட்டாற்போல, ஓயாது அவரிதயத்தில் புயல் சுழன்றடித்தது!

"முப்பதாண்டுகள் - மன்னனின் வாக்கு-அறுபதாயிரம் பாடல்கள் - அறுபதாயிரம் பொன் நாணயங்கள்-துரோகம்-வெள்ளிக்காசுகள்!" புலவரின் வாய் இப்படி அடிக்கடி முணுமுணுத்துக்கொண்டிருந்தது!

துயரசாகரத்தில் மூழ்கியிருக்கும் ஓர் கவிஞனுக்கு தனிமையும் இயற்கைக் காட்சிகளும், மேலும் வேதனையையே தருகின்றன என்பதற்குச் சான்ருக விளங்கிஞர் புலவர் பெர்தூசி. உடல் மெலிந்து உருக்குலைந்து ஓர் பித்தனைப்போலக் காணப்பட்டார் கவிஞர்.

ஊரின் மருங்கே யிருந்த இளமரக் காவில் ஓர்நாள் உலவிவரச் சென்றிருந்த புலவர், நெடுநேரம் தனிமையில் அச்சோலையில் அமர்ந்திருந்தார். விசுவிசு என்று வீசிய குளிர்காற்று, அவரிதயத்தில் எரிந்துகொண்டிருந்த செந்தணலுக்குச் சுறுசுறுப்பை யூட்டியது! "துரோகம்! துரோகம்!" என்று அவர் அடிக்கடி முணங்கிக்கொண்டிருந்தார். வானம் இடியும் மின்னலுமாக இருப்பதைத் திடீரென்று அறிந்த புலவர், திடுக்கிட்டுத் தமதில்லம் நோக்கி வேகமாக நடந்தார். மழையும் பெய்யத் தொடங்கியது! இயற்கையின் பூரணவுரிமையைப் பெற்ற பேய்மழை, தன் கோரச் சக்தியைக் காட்டியது! இது போதாதென்று, இடிவேறு இதயத்தைக் கலக்கியது!

கொட்டும் மழையில், வீசும் புயலில், மின்னும் மின்னலில் சிக்கிய புலவர், வெறி பிடித்தவரைப்போல வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தார். "ஐயோ! என் ஷாநாமா, என்ன வாயிற்ருே!" என்று அவர் இட்ட கூக்குரல், இடிக்கு இரையாகியதால், எவர் செவிக்கு மெட்டவில்லை. எப்படியோ புலவர் வீடடைந்தார். வீட்டினுள் நுழைந்ததும் முதன் முதலில் அவர் தேடியெடுத்தது ஷாநாமாவைத்தான்!

ஏற்கெனவே எலும்புக் கூடாக இளைத்திருந்த பெர்தூசி கடுமழையில் நனைந்த காரணத்தால், அவருக்குக் காய்ச்சல் கண்டது! மனவமைதி யின்மையாலும், தகுந்த பராமரிப் பின்மையாலும் புலவரை அந்தக் கொடுங்காய்ச்சல் பயன்படுத்திக் கொண்டது! தன் சுயநினை விழந்து புலவர் படுக்கையில் படுத்துக் கிடந்தார். அவர் மார்பில் ஷாநாமாவை அணைத்துக் கொண்டிருந்தார். சுரத்தின் கொடுமைக்காளான புலவருக்குச் சன்னி கண்டுவிட்டது!

கவிவாணரின் ஆற்றலையும், ஷாநாமாவின் சிறப்பையும் நன்ருக அறிந்திருந்த ஒரு சிலர், அறிவுவிளக்கு அணைந்து விடப் போகிறதே என்று விம்மி வெதும்பிய வண்ணம் எந்நேரமும் பெர்தூசியின் அருகிலேயே யிருந்து, அவருக்கு ஆவன செய்தனர். சுரவேகத்தால் புலவர் தம் சுயநினை விழந்தார். "மன்னன் முகம்மது ஒரு துரோகி!" துரோகி! என்று அவர் வாய் அடிக்கடி முணுமுணுத்த வண்ணமிருந்தது!

மாலை நேரம்! நினைவற்றுப் புலவர் படுக்கையில் கிடந்தார். உற்றவர் அவரருகில் சோகத்தோடு கூடிய முகத்துடன் அமர்ந்திருந்தனர். இனிப் புலவர் பிழைக்க மாட்டார் என அறிந்ததால், அவ்வனைவர் முகங்களிலும் சாவுக்களை பிரதிபலித்துக் கொண்டிருந்தது!

படுத்திருந்த புலவர் திடீரென எழுந்தார், "பேராசை கொண்ட மன்னனே! என் ஷாநாமாவை வெள்ளிக் காசுகளுக்கு ஈடாகவா மதிப்பிட்டாய்? இதோ பார் என் ஷாநாமா! சோமநாதபுர ஆலயத்தையும் மதுராவையும் அழித்து நாசமாக்கியதைப் போல, என் ஷாநாமாவையும் அழித்துவிட முடியாது உன்ஞல்! விக்ரக நிக்ரகஞன முகம்மது கஜினி! தலைவணங்கு என் ஷாநாமாவுக்கு!" என்று ஆவேசம் வந்தவரைப் போலக் கூறிஞர். மீண்டும் படுக்கையில் சாய்ந்தார். அந்த நிலையிலேயே அவர்விழிகள் நிலைபெற்று நின்று விட்டன! அந்தோ! புலவர் பெர்தூசி என்னும் ஒப்பற்ற கலை விளக்கு அணைந்து விட்டது!

4

தேவலோக நங்கை என்று புகழப்பெற்ற கஜினிப் பட்டனத்தின் பள்ளிவாசல், பொன் வெள்ளி இவைகளாலமைத்த அழகிய கிளை விளக்குகளால், ஒளி மழையில் பிரகாசித்துக் கொண்டிருந்தது! விலையுயர்ந்த கம்பளம் விரிக்கப்பட்ட ஓர் அழகான அறையில், மன்னன் கஜினி முகம்மது உலவிக் கொண்டிருந்தான். "புலவர் மனதைப் புண்படச் செய்தோமே! பேராசையால் பொன்நாணயம் தர மறுத்து, புலவரின் வஞ்சினத்திற் காளாஞேமே; ஐயோ! முப்பதாண்டுகளாக அருஞ்சிரமப்பட்டு ஷாநாமாவை இயற்றிய புலவர், எத்தகைய புகழ் தமக்குக் கிடைக்குமென எண்ணி இறுமாந் திருந்தாரோ! அவர் எண்ணத்தைக் கனவுக் கோட்டையாக்கி விட்டோமே! அவமானத்தைத் தாளாமல் அவர் மனம் எப்படி அனலிலிட்ட சிறு புழுவெனத் துடிதுடித்ததோ! மாபெருந் துரோகி நான்! புலவரின் புண்பட்ட மனம், நான் செய்துவிட்ட துரோகத்தை மன்னிக்க ஒப்புமா? நான் இப்போது அனுப்பியிருக்கும் நூருயிரம் பொன் நாணயங்களையும் பெற்று, சித்தங் குளிர்ந்து என்னைவாழ்த்துவாரோ; அன்றி, வேதனையாலும், வெஞ்சினத்தாலும் என் மீது வசை மழை பொழிவாரோ! ஐயகோ! மாவீரர்களான ஜெயபாலனையும் அனந்தபாலனையும் வீழ்த்தியபோதும், சோமநாதபுரம், மதுரா போன்ற சிவாலயங்களை அழித்தபோதும், தம் கணவன் மாரை யிழந்து கதறியழுத இந்தியப் பெண்களின் கண்ணீரைக் கண்ட போதும் கலங்காத என்மனம், ஓர் புலவர் மனதைப் புண்படுத்தியதைத்தாங்கவில்லையே: யுத்தத்தில் தோல்வி கிட்டுமோ ரவென்று ஐயுற்ற நேரத்திலெல்லாம் அன்னியனுக்கு அடிபணிய மறுத்த என் நெஞ்சம், மனச் சாட்சிக்கு மண்டியிட்டுவிட்டதே! வெல்லமுடியவில்லையே மனச்சாட்சியைஎன்ஞல்! தலைகுனிந்த வண்ணம் உலவிக் கொண்டிருந்த மன்னன், துயரத்தைத் தாங்க முடியாமல் -- மனச்சாட்சிக்கு மறு மொழி கூற முடியாமல், இவ்வாறு முணங்கிக் கொண்டிருந்தான்.

தான் செய்த தவற்றிற்குக் கழுவாயாக அறுபதிஞயிரம் பொன்னுக்குப் பதிலாக நூருயிரம் பொன்னைப் புலவருக்கு அனுப்பியதில் மன்னனுக்கு ஓரளவு நிம்மதி இருப்பினும், புலவர் அதை முழு மனதுடன் ஏற்பாரோ, அன்றிப்புறக்கணிப்பாரோ என்றெண்ணி வேதனையால் வெய்துயிர்த்தான். பொன்னை யெடுத்துச் சென்ற தூதர்கள் என்ன செய்தியைக் கொண்டுவரப் போகிருர்களோ என்று ஒவ்வொரு கணமும் அரசன் நிம்மதியைத் தளரவிட்டுக் கொண்டிருந்தான். ஏதோ பயங்கர நிகழ்ச்சியைச் சந்திக்கப் போகிருேம் என்று அவனிதயம் அவனுக்கு ஓல மிட்டு அறிவித்துக் கொண்டிருந்தது!

"அரசே!" என்ற குரல் கேட்டு தலை நிமிர்ந்து திரும்பிப் பார்த்த மன்னனின் முன்பு, பெர்தூசியைக் காண கோராசனுக்குச் சென்ற சேவகர்கள், தலை வணங்கி நின்றிருந்தனர்.

"என்ன! புலவர் பொன்னைப் பெற்றுக்கொண்டாரா?" என்று ஆவலும் ஆவேசமும் கலந்த குரலில் அரசன் கேட்டான்.

"இல்லை அரசே!"

"என்ன? மறுத்து விட்டாரா?" --- ஏமாற்றம் நிறைந்த தழதழத்த குரலில் மன்னன் வினவிஞன்.

"இல்லை அரசே! புலவர் பெர்தூசி இறந்து விட்டார்!"

"என்ன? என்ன சொன்னீர்கள்? பெர்தூசி இறந்து விட்டாரா? மன்னன் குரல் பயங்கரமாக ஒலித்தது!

"அரசே! புலவரைக் காணப் பொன் மூட்டையுடன் கோராசனுக்குச் சென்ற நாங்கள், அங்கு புலவரைக் காணவில்லை. எங்களெதிரில் அவர் பிரேதம் பாடை மீது தூக்கிவரப் படுவதைக் கண்டோம்.

மன்னன் கோவெனக்கதறிஞன். "ஐயோ, மகாகவி பெர்தூசியாரே மறைந்து விட்டீரா! உமது ஆசை நிராசை யாக்கப்பட்டு விட்டதே எனது பேராசையால்! பாரசீகம் பெற்றெடுத்த மாணிக்கமே! இந்தத் துரோகியை மன்னிப்பீரா?" என்று கூறி அழுது கண்ணீர் விட்டான். "ஷாநாமா என்னவாயிற்று? எங்கே ஷாநாமா?" என்று ஆவேசம் வந்தவனைப் போலக் கேட்டான். "இதோ இருக்கிறது அரசே! கவிஞருடன் இதனையும் மயானத்திற்கு எடுத்துச் சென்றனர். நாங்கள் நிர்ப்பந்தப் படுத்தி வாங்கி வந்தோம்!" என்று கூறி, ஷாநாமாவை அரசனிடம் சேவகர் தந்தனர். பக்தியுடன் இரு கரங்களையும் நீட்டி, அந்தச் சுவடியை மன்னன் வாங்கிஞன்! அன்னியர்களின் வாளுக்கும், இந்திய ஆண்டவர்களின் தாளுக்கும் பணியாத மன்னன் முகம்மதுகஜினி கவிஞரின் காவியத்திற்குத் தலை வணங்கிஞன்! பின் உடைபட்ட சோமநாதபுர ஆலய இலிங்கம் கட்டப்பட்ட படிக்கட்டுகள் வழியாக, பள்ளி வாசலை விட்டு வெளியே வந்தான்! அண்ணந்து வான வெளியை நோக்கிஞன். வானத்திலே பிரகாசித்துக் கொண்டிருந்த முழு நிலவும், விட்டு விட்டு மினுங்கிக் கொண்டிருந்த நட்சத்திரங்களும், துயரில் சிக்கியிருந்த மன்னனின் மனதை, வேதனையின் அடிவாரத்திற்கு வலை போட்டு இழுத்துச் சென்றன!

◉

முன் பணம்

கார்டு கையில் கிடைத்தபோது குமாரன் மகிழ்ச்சியடைந்தான். சிறிதும் எதிர்பாராமல்தான் அந்த உத்திரவு வந்தது. உத்தியோகத்திற்கு மனு அனுப்பின போது இப்படியொரு கார்டு கிடைக்குமென்ற நம்பிக்கை குமாரனுக்கு இல்லாமலிருந்தது. விளம்பரம் கண்ட பல தடவையும் அவன் விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிருன். பலவற்றிற்கும் பதில் கிடைப்பதில்லே.சிலவற்றிற்குக் கிடைப்பதோ ஏமாற்றமான பதில்களே.

மஞ்சள் நிறத்திலுள்ள இந்தக் கார்டு ஒரு மன்றல் மடல்போல குமாரனுக்குத் தோன்றியது. அதில் அழகிய ஆங்கில எழுத்துக்களில் இவ்விதம் 'டைப்' செய்யப்பட்டிருந்தது ' '' தங்களுடைய படிப்பும், யோக்கியதாம்சமும் திருப்திகரமே. 27உ காலே பத்து மணிக்கு எங்கள் ஆபீஸில் ' இன்டர் வியூ 'க்கு வரவும்.''

குமாரன் பி.எ., முதல் வகுப்பில் தான் தேறியிருந்தான். அதனுல், ' படிப்பு, யோக்கியதாம்சம் திருப்திகரமே '. ' இன்டர் வியூ ' வை' பற்றி அவனுக்குக் கொஞ்சமும் பயமில்லே. கணக்கில் அவன் புலி. எவ்வளவ குழப்பமான கணக்கையும் எளிதில் செய்து முடிப்பான்.

அவன்தான்குடும்பத்தின் ஆசைக் கேந்திரம். அம்மா அவனேப் படிக்க வைத்தது வழியிருந்ததனுல் அல்ல. ஏழாவது வகுப்பிலும், பத்தாவது வகுப்பிலும் அவன் ' ஸ்காலர்ஷிப் 'பிளுல் படித்தான். சொந்தத் திறமையும், தாயின் இடைவிடா உழைப்பும் அவனே ஒரு பட்டதாரியாக்கிற்று. அவர்கள் ஒரு குத்தகை நில்த்தில்தான் குடியிருந்தனர்-குறைவான குத்தகை கொடுத்தால் போதும், அந்த நிலத்தினின்றும் அவர்களுக்கு ஏதாவது கிடைக்கும். அது வீட்டுச் செலவுக்குப் போதாது. அந்தத் தாயும், மக்களும் சிரமப்பட்டுக் காலம் கழித்தனர்.

அவர்களுக்குப் பெரிய பிரச்னேகளொன்றுமில்லே. குமாரனுக்கு ஒரு வேலே கிடைத்தால் அந்தக் குடும்பத்தின் துன்பம் எல்லாம் நீங்கிவிடும். பி. எ., தேறியது முதல் குமாரன் அதற்குவேண்டி முயன்று ' வருகிருன். தனது தோளில் அழுத்தமாகியிருந்த பாரத்தை அவன் சரியாக உணர்ந்து கொண்டிருந்தான். பக்கத்திலிருந்த கம்பெனிக் கதவுகள் முதல், பத்திரிகைகளின் ' தேவை ' (**Wanted**) காலம் வரை குமாரன் தேடிப்பார்த்தான். அப்படியிருக்கும்போதுதான் ' ஜூப்ளி பாங்கி 'ல் காஷியருடைய வேலேக்கு ஒரு ஆள் தேவை என்ற விளம்பரத்தைக் கண்டான். கணக்கை விருப்பப் பாடமாக எடுத்துத் தேறியிருந்த குமாரனுக்கு, காஷியர் எனக்கேட்டபோது மகிழ்ச்சியாயிருந்தது-அதுவும் சொந்த ஊரில். அவன் மனுப் போட்டான்.

இப்போது ' இன்டர் வியூ ' கார்டு வந்திருக்கிறது. அவன் அந்த மகிழ்ச்சிச் செய்தியை தங்கையிடமும், அம்மாவிடமும் தெரியப்படுத்திளுன். அந்த வேலே மகனுக்குக் கிடைக்க, அம்மா கிருஷ்ணன் கோவிலில் நெய் விளக்கு ஏற்றுவதாக வேண்டிக்கொண்டார்கள். பெட்டியில் ஒரு மூலேயில் சுருட்டிவைத்திருந்த மஞ்சள் கோட்டை எடுத்து விரித்துப் பார்த்தான். அதில் அங்கங்கே கிழிசல்கள் இருந்தன. எனினும் கோட்டுப் போட்டுக் கொண்டு போவதுதான் மதிப்பு. கிழிசல்களேத் தைக்கும் பொறுப்பை அவன் தங்கையிடம் ஒப்படைத்



தான். கடையிலிருந்து ஒரு பிளேடு வாங்கி நேர்த்தியாக முகச் சவரம் செய்தான்.அதற்குள்ளாக சகோதரி கோட்டின் அரை குறை வேலேயை முடித்துவிட்டிருந்தாள். அவனுகவே அதை ' இஸ்திரி ' போட்டான்.

' இஸ்திரி 'ப் பெட்டியைத் திருப்பிக் கொடுப்பதற்காக அடுத்த வீட்டுக்குச் சென்றபோது பாரதி கேட்டாள் : '' எங்கே பயணம் ? ''

'' நாளேக்கு ஒரு ' இன்டர் வியூ ' இருக்சிறது.''

'' பெரிய உத்தியோகஸ்தராளுல் எங்களேயெல்லாம் மறக்கக் கூடாது.''

'' சே ! அப்படி மறக்க வேண்டிய அவசியம் ஒன்றுமில்லே. ''

பாரதி சிரித்தாள். குமாரனுக்கு பின்னும் என்னவோ கேட்கவேண்டுமென்றிருந்தது. ஆனுல், அவன் அதிகமொன்றும் பேசுவது வழக்கமில்லே. முதலில் அவனுடைய வாழ்க்கையில் ஒரே லட்சியம்தான் இருந்தது - பட்டதாரியாக ஆவது. பி.எ., தேறினதும் பிறகு உத்தியோகத்தைப் பற்றிய சிந்தனே. இப்போது உத்தியோகமும் கிடைக்குமானுல்...... கிடைக்குமானுல் ...... மனப்பூர்வமாக மனதில் ஒளித்து வைக்க முயற்சித்த அந்த ஆவல் வெளியே வந்தது-பாரதியை மணம் செய்வது.

அவர்கள் ஒன்ருக வளர்ந்தவர்கள். இந்த எண்ணம் மனதில் என்றைக்குத்தான் வேர் விட்டதென்று குமாரனுக்குத் தெரியாது. எனினும் அவளேப் பார்க்கும் போதெல்லாம் அவள் தன்னுடையவள்தான் என அவனுக்குத் தோன்றும். பாரதிக்கும், அவளுடைய அம்மாவுக்கும் அவனே மிகவும் பிடித்திருந்தது. அவள் வீட்டில் பலகாரம் செய்தால் அதில் குமாரனுக்கும் ஒரு பங்கு கிட்டாமலிராது.

உத்தியோகமும்,மனதிற்கிசைந்த மனேவியும்-குமாரனுக்கு இவை இரண்டும் கிடைக்கப் போகின்றன...

மறுநாள் காலே ' இஸ்திரி' போட்ட மஞ்சள் கோட்டும், வெள்ளே வேட்டியும் அணிந்து குமாரன் புறப்பட்டான்.

பட்டணத்தில் நெருக்கமான ஒரு இடத்தில்தானிருந்தது ' ஜூப்ளி பாங்க்.' குமாரன் ஆவேசத்துடன் மாடிப்படி ஏறிளுன். பித்தளேக் கம்பிகளாலான ' கௌண்டரு 'க்குள்ளிருந்து ' கிளார்க் 'குகள் தடித்த புத்தகங்களில் எழுதுகிருர்கள். ' டைப்ரைட்டரு 'டைய ' கட கட, சத்தம் கேட்கிறது. அங்கங்கே ' காலிங் பெல் ' ஒலிக்கிறது. ஒரு ' பாங்க் ' ஓடிக்கொண்டிருக்கிறது !

குமாரன் மானேஜரின் அறைக்குள் சென்ருன். தடித்து, கொழுத்த குள்ளனுன அந்த மனிதனுக்கு அவன் வணக்கம் செலுத்திளுன்.

'' உட்காருங்கள் ! '' - மானேஜர் கூறினுர்.

' குஷன் ' போட்ட நாற்காலியில் உட்கார்ந்தபோது அவனுக்கொரு குளிர்ச்சி தோன்றியது. தலேக்கு மேலே ' சீலிங் பான் ' சுழன்று கொண்டிருந்தது.

தனது சர்டிபிகேட்டுகளே குமாரன் மானேஜரிடம் காட்டினுன்.

எல்லாவற்றையும் கௌரவத்துடன் பார்த்த பிறகு மானேஜர்

கூறினுர் : '' வெரி குட். கணக்கில் நீங்கள் நல்ல மார்க் வாங்கியிருக்கிறீர்கள். அதனுல்தான் உங்களேயே தேர்ந்தெடுப்பதெனத் தீர்மானித்தோம்.''

'' மிகவும் நல்லது.''

'' காஷியராகத்தான். அடுத்த முதல் தேதியே சார்ஜ் எடுக்கலாம்.''

குமாரன் உள்ளம் குளிர்ந்தது !

'' இப்போது இங்கேயுள்ள சீனியர் கிளார்க்குதான் காஷியராக வேலே பார்த்து வருகிறார். உங்களுக்கு தற்போதைக்கு நூறு ரூபாய் சம்பளம் தரப்படும்.''

'' அப்படியே ஆகட்டும் சார் '' - மிகப்பெரிய ஒரு சாம்ராஜ்யம் கையில் கிடைத்ததுபோன்ற ஆனந்தத்துடன் குமாரன் அதைச் சொன்னுன்.

'' பிறகு, பொறுப்புமிகுந்த வேலேயென்பது தெரியுமல்லவா ? தினந்தோறும் ஆயிரக்கணக்கில்

மலேயாள மூலம் : சுகுமாரன்

தமிழாக்கம் ;
புரட்சிப்பித்தன்

ரூபாய்களே கைமாற்றம் செய்ய வேண்டியிருக்கும்...''

'' எல்லாம் சரியாகப் பார்க்கிறேன் சார் ''

'' ஓ - வேருெரு சங்கதிகூட. ஆயிரம் ரூபாய் செக்யூரிட்டி (முன் பணம்) கட்டவேண்டும். இது கண்டிப்பு.''

குமாரன் நெட்டினுன் ! ஆயிரம் ரூபாய் ! அவனுக்கு எங்கிருந்து கிடைக்கும் ? மேலேயிருந்த மின்சார விசிறிபோல அவனது தலே சுழன்றது !

குமாரன் ஒன்றும் பேசாமலிருக்கவே மானேஜர்கேட்டார், ''என், என்ன சொல்கிறீர்கள் ?''

'' ரூபாய்...'' அவன் வாய்க்குள் முணகினுன்.

'' உடனே கட்டமுடியவில்லே யென்ருல் பத்தோ பதினேந்தோ நாட்கள் தவணே தருகிறேன்.அடுத்த

15-உக்குள் ரூபாய் செலுத்தி வேலைக்குச் சேர்ந்தால் போதும்.''

குமாரன் மௌனமாயிருந்தான்.

'' ஆல் ரைட்!'' மானேஜர் வேறு வேலைகளுக்குக் கவனத்தைத் திருப்பினார்.

சர்டிபிகேட்டுகளை எடுத்து வெளியே வந்தபோது குமாரனின் உடம்பு முழுவதும் நடுங்கிக்கொண்டிருந்தது.

அதிகம் கவலையுடன்தான் அவன் மாடிப்படிகளில் இறங்கினான். ரோட்டில் வந்தபோது ஒரே அந்தகாரம். கைக்கு எட்டியவேலைதான். நூறு ரூபாய் சம்பளம். பதினைந்து தினத்திற்குள் ஆயிரம் ரூபாய் செலுத்தினால் அவனுக்கு அந்த வேலை கிடைக்கும். வீட்டிற்கு வரும்போது ஆயிரம்ரூபாய் சேர்க்கும் வழியைப் பற்றியே அவன் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

வீட்டை அடைந்தான். மூன்று தலைகள் ஒன்றுசேர்ந்து யோசனை செய்தும் ஆயிரம் ரூபாய்க்குள்ள வழி ஒன்றும் தெரியவில்லை.

விலைக்கு விற்கக்கூடிய பொருள்கள் வீட்டில் ஒன்றுமில்லை. இருந்ததெல்லாம் அவன் படிப்புக்கும், பீஸ் கட்டுவதற்குமாக செலவாய் விட்டிருந்தன. அடமானம் வைத்திருந்த தங்கையின் அட்டிகையும், பதக்கமும் அம்மாவின் உருத்ராட்சமும், நூலும் எல்லாம் பிறகு ஒரேயடியாய் விற்கவேண்டியதாயிற்று.

மறுநாள் குமாரன் நண்பர்கள் பலரையும் சந்தித்தான். பலதவணைகளாகக் கட்டித் தீர்க்கலாம் என்ற நிபந்தனையின்பேரில் எங்கிருந்தாவது ஆயிரம்ரூபாய் கிடைக்குமா என்று ஆராய்ந்தான். தேவைக்கேற்ற பதில் எங்கிருந்தும் கிடைக்கவில்லை.

இரண்டு நாட்கள் கழிந்தன. குமாரன் நிராசையடைந்தான். இந்த வேலையும் கிட்டாமற்போனால் என்ன செய்வது ? வீட்டில் மௌனமாயிருந்த குமாரனிடம் அவனது அம்மா ஒரு மகிழ்ச்சிச் செய்தியுடன் வந்தார்கள்.

'' மகனே கடவுள் கருணையுள்ளவன் தான்.''

அந்தச் சொற்கள் என்னும் வைக்கோலின் நுனியில் தொங்கி, நிலையில்லாமல் தவித்த குமாரன் கேட்டான்.

'' என்னம்மா, வழி ஏதாவது கிடைத்ததா ?''

'' நீலாண்டன் இங்கு வந்திருந்தார். ஒரு நல்ல சங்கதி சொன்னார். ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கிடைக்கும். ''

குமாரனுக்கொன்றும் விளங்கவில்லை.

'' விலாஸினியின் சங்கதியைத் தான் அவர் சொன்னார், அவர்கள் ஆயிரத்துஐந்நூறு ரூபாய் ஸ்ரீதனம் தருவார்கள். நீ 'உம்' என்றால் போதும்...''

குமாரன் பயங்கரமாக நடுங்கினான். பாங்க் மானேஜர் ஆயிரம் ரூபாய் முன்பணம் கேட்டபோதுகூட அவன் அப்படி நடுங்கவில்லை.

நீலாண்டனை அவனுக்குத் தெரி...ம், ஊரிலுள்ள பெரிய மனிதர்...ில் ஒருவர்.

...ம்மா கேட்டார்கள். '' என் ... சொல்கிறாய் ?''

... என்ன சொல்ல! ... பாரதியைப்பற்றி சிந்தித்...ந்தான் அவன். ...ந்த மனைவி.

அம்மா அந்த மிகப்பெரிய 'பாக்கியத்'தைப்பற்றி பின்னும் சொன்னார்கள். '' விலாஸினியின் வீட்டார் நல்ல பணக்காரர்கள். விலாஸினி கிடைப்பதே பெரிய பாக்கியம். பெண்ணுக்குச் சிறிது சுறுசுறுப்பு குறைவுதான்...''

அம்மா தொடர்ந்து கூறினார்கள், ''...ஆயிரத்தைந்நூறு ரூபாய் ரொக்கமாகத் தருவர். ஐந்நூறு ரூபாயைக்கொண்டு கலியாணச் செலவுகள் முடிந்துவிடும். ஆயிரம் ரூபாயை பாங்கில் கட்டினால் வேலையும் ஆச்சு. யோசனை செய்துபார். எல்லாம் ஒத்துவருகிறது. எல்லாம் ஸ்ரீ. கிருஷ்ணபகவானின் அனுக்கிரகம்.''

தான் ஒரு நீர்ச்சுழலில் சிக்கி விட்டதுபோல குமாரனுக்குத் தோன்றியது. அந்தக் குழம்பிய பிரச்னைக்கு அம்மா ஒரு பரிகாரம் கண்டுபிடித்து விட்டிருக்கிறார்கள். அதை எப்படித் தட்டிக் கழிப்பது ? தனது எல்லா ஆசைகளுக்கும் மூல காரணமான அம்மா எவ்வளவு சிரமப்பட்டு அவனைப் படிக்கவைத்தார்கள் ! வயதுகாலத்தில் அம்மாவைக் காப்பாற்ற அவனுக்கு ஒரு உத்தியோகம் கிடைக்கவேண்டும். தான் ஒரு கனவுலகில் சஞ்சரிப்பதாகக்குமாரனுக்குத் தோன்றியது. அம்மாவின் ஆசை...திருமணம்... உத்தியோகம்.....மனத்திற்குப் பிடித்த மனைவி......சிந்தனைகள் இழைக்கும் வாள்போன்று அவனது உள்ளத்தை அறுப்பது போலத் தோன்றியது.

இறுதியில் குடும்ப பாசம்தான் வென்றது.

மறுநாள் குமாரன் அம்மாவிடம் அறிவித்தான். '' அவரிடம் அந்தக் காரியத்தை முடிக்கும்படி சொல்லி விடுங்கள்.''

எல்லாம் மிகவும் துரிதமாக முடிவு செய்யப்பட்டன. அம்மாவின் நிர்ப்பந்தத்தால் 10-உயே 'விவாக முகூர்த்தமு'ம் நிச்சயிக்கப்பட்டது.

கலியாணத்தன்று ஒரு நடைப்பிணமாக அவன் விளங்கினான்: கறுத்த, பல்நீண்ட, ஒரு விகார ரூபிணியாக இருந்தாள் விலாஸினி. குமாரன் அந்த உருவத்தின் கழுத்தில் தாலிகட்டும்போது சொந்தக் குடும்ப பாரத்தைப் பற்றித்தான் நினைத்தான். வயதான அம்மா... மணப்பருவமடைந்த தங்கை......

மணப்பெண்ணின் வீட்டாருக்கும் அது ஒரு லாபமாக இருந்தது. 'செல்லாத சரக்கை' ஒரு பட்டதாரிக்குக் கட்டிவைக்கமுடிந்தது.

கலியாணத்துக்கு மறுநாள், ஒரு தடிப்பான கவருடன் குமாரன் 'பாங்கு'க்குச் சென்றான். அந்தக் கவரில் பத்துரூபாயின் நூறு நோட்டுகளிருந்தன.

அவன் மாடிப்படிகளில் ஏறி மானேஜரின் முன்பாகச் சென்றான்.

'' உட்காருங்கள் '' — மானேஜர் கூறினார்.

குமாரன் 'குஷன்'போட்ட நாற்காலியில் உட்கார்ந்தான்.

'' செக்யூரிட்டி (முன்பணம்) கட்டுவதற்குத்தான் வந்தேன். ''

'' செக்யூரிட்டி...?''

'' ஆம் '' அந்தத் தடித்த கவரை ட்டிக்கொண்டு குமாரன் சொன்னான். **'' இதோ ஆயிரம் ரூபாய்.''**

'' என்ன ?...ஓ ! நீங்களா.....? மன்னிக்கவேண்டும் மிஸ்டர்! இங்கே காஷியராக மற்றொருவரை நேற்று நியமித்துவிட்டோம். ''

குமாரன் தலைசுழன்றது. அவன் அந்த நாற்காலியினின்றும் தலைக்குப்புற வீழ்ந்தான் !

சாகாதவர்கள்...

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

பிரெஞ்சுப் புரட்சி நடந்துகொண்டிருந்தது. பிரான்சுக்குப் போனார். பாஸ்டிலி உடைபட்டு அழிவதைக் கண்டு களித்தார். புரட்சியைக் கேலிசெய்து எழுதிய இங்கிலாந்துப் பெரு நாவலர் பர்க்குக்கு பதில் தரும் விதத்தில், இங்கிலாந்து சென்று மனிதனின் உரிமைகள் என்னும் அரிய நூலொன்றை பெயின் உருவாக்கினார். புத்தகத்திற்கு ஏற்பட்ட செல்வாக்கைக் கண்டு சர்க்கார் அஞ்சி நடுங்கி, பெயினைக் கைதுசெய்ய முயற்சித்தது. மீண்டும் பிரான்சுக்குத் திரும்பினார். அங்கே அவருக்கு அமோகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. பார்க்குமிடங்களிலெல்லாம் இவரைப் பற்றியே பேச்சு. கேட்கும் ஒலியிலெல்லாம் இவர் பற்றிய புகழுரைகள். இந்தச் சமயத்தில்தான் மதக் கொடுமைகளை அம்பலமாக்கும் 'பகுத்தறிவு சகாப்தம்' என்ற நூலை எழுதினார்.

'' நான் ஒரு கடவுளை நம்புகிறேன். பல கடவுளர்களை அல்ல, நான் எந்தக் கோயிலையும் நம்புவது கிடையாது. உலகமே என் இல்லம். மனித சமுதாயமே என்னுடைய தோழன். பிறர்க்கு நன்மை செய்வதே என் மதம். என் மனமே என்னுடையகோயில்.'' இவைதான் அந்நூலின் உணர்வும் உயிரும்.

திராவிடத்தில் அண்ணாவின் நூல்களுக்கு ஏற்பட்டதுபோல, மதவாதிகள் சீறினர், மேட்டுக்குடியினர் திகைத்தனர், அரசாங்கம் அஞ்சிற்று. ஆனால் இளைஞர்களும் பொதுமக்களும் தேனென வரவேற்றனர். புத்தகக் கருத்துக்களை அள்ளி அள்ளிப் பருகி, நெஞ்சிலே குடியேற்றிக்கொண்டனர்: தமது 65ம் வயதில் அமெரிக்காவுக்கு திரும்பி, மரணப்படுக்கையில் பெயின் இருந்தபோதுகூட பாதிரிகள் பலர் சூழ்ந்துகொண்டு,''பகுத்தறிவு சகாப்தத்தை அறியாத்தனத்தால் எழுதிவிட்டேன்; கடவுளே, என்னை மன்னியுங்கள் என்று ஒரே ஒரு வார்த்தை கூறுங்கள்'' என்று மன்றாடினார்களாம். 'அதுதான் முடியாது. விலகிச் செல்லுங்கள்'' என்பதற்கு அறிகுறியாக கை யசைத்து மரணத்தை மேற்கொண்டாராம் பெயின்.

''பேனா வாளினும் வலிது என்ற உண்மையை உலகுக்கு அறிவித்த சிலரிலே முன்னணியில் நிற்கிற பெயின், அமெரிக்க விடுதலையின் முன்னோடியாக இருந்திருக்கிறார். அனலும் புனலும், தென்றலும் புயலும் அவர் எழுத்துக்களிலே கலந்திருந்தன. சிரஞ்சீவித்துவம் பெற்றுவிட்ட அவரது எழுத்துக்கள் காலத்தால் சாகாது. காலத்தின் ஏலத்தால் மாளாது. விடுதலை விரும்பிகளுக்கெல்லாம் எக்காலத்துக்கும் உணர்வூட்டும் மாமருந்தாக அவை விளங்குகின்றன. திராவிடத்தின் விடுதலை கோரி, வருநாளில் வளங்காக்கும் வீரர்கள் திருநாள் திருநாள் என்று பாடுகிற இந்நேரத்தில், செத்தும் சாகாத அந்த சிந்தனைச் சிற்பியை நினைவு கூர்வது சாலப் பொருத்தமாகும்.

நாட்டியராணி...

(10-ம் பக்கம் தொடர்ச்சி)

பட்டான். அவன் கரத்தைப்பிடித்து நிறுத்தினாள் அவள்.

...'' விடு கையை ! பாவத்தின் நிழலே போய்விடு ! என் குருநாதரைக் கலை உலகிலிருந்தே மறைத்துவிட்ட கருநாகமே!இன்னுமேன் வட்டமிடுகிறாய் !''

'' வாழ்வுக்காக அல்ல ! என் ஜீவன் எப்போதே செத்துவிட்டது!''

'' ஜீவன் செத்துவிட்டதாம்-உடல் மட்டும் நடமாடுகிறதாம்...இன்னும் யாரைத் தீண்டவோ ?''

'' தீயால் சுடுகிறாய் !''

'' இப்படித்தானே என் குருநாதரையும் வேதனைப்படுத்தினாய்!''

'' நடந்த கதை-நடந்ததாகவேயிருக்கட்டும். ''

'' இப்போது புது அத்தியாயம் துவக்கலாமென்று கூறுகிறாயா?''

'' நான் காதல் பேச வரவில்லை... திருந்திவந்திருக்கிறேன்- புதுமார்க்கம் தேடுகிறேன் ! ''

'' புத்தமார்க்கத்தை சிபார்சு செய்கிறேன் !'' '' காதல் கசந்த பிறகு - காவிப்போர்வை தேடி வரவில்லை சீடரே ! எந்தக் காதல் போர்வையிலே கலை உலகுக்கு வைரியாகயிருந்தேனோ, அதே உலகுக்குப் பாதுகாப்பாளனாகித்தீர துடிதுடிக்கிறேன். உன் குருநாதர் ஓவியக்கலை வளரப் பாடுபட்டார். இடையே நான் வந்தேன் புயலாக. கலைவாழ்வு கெட்டது. நீயோ அவர் விட்டுச்சென்ற சேவையைத் தொடர்ந்து நடத்துகிறாய் இப்போது. உலகத்தின் சவுக்கடிக்குப் பிறகு நானும் திருந்தியிருக்கிறேன். நாம் இருவருமாகச் சேர்ந்து பாடுபட்டால்-கலைக்குப் புது மெருகு ஏனோ ஏற்படாது ?''

'' உன்னோடு சேர்ந்தா ? மாடப்புறுவுக்கு வேடனா துணை ?''

'' கெட்டவள் கெட்டவளே தானென்பது உமது தீர்ப்பா! வீணையின் அறுந்த தந்திகளுக்குக் கூட வேறு போட்டு மீட்டுகிறோமே. தந்தி அறுந்துவிட்டது - வீணை தேவையில்லையென்று வீதியிலேயா எறிந்துவிடுகிறோம். நாசத்தைத் தரமாட்டேன். என்னை நம்பு. விழுந்துவிட்டவளைத் தூக்கி விடுவதற்குக்கூட மனமில்லாத கல் நெஞ்சா உனக்கு. கலை உள்ளத்துக்கு இந்தக் களங்கமிருக்கக் கூடாதே சீடா ! நான் சமூகத்தில் ஒதுக்கப்பட வேண்டியவள்தானா? சிந்தித்துப்பார் - சித்திரங்களிலே எண்ணங்களைத் திருப்புகிறாயே, வாழ்வு நிலைகளையும் நினைத்துப் பார் !''

...சீடனின் எண்ணங்கள் ஏதோ அவளோடு பேசின. வெகுநேரத்துக்குப் பிறகு முடிவான முடிவுக்கு வந்தான். அவளின் மலர்க்கரங்களை எடுத்துக் கண்களிலே ஒத்திக்கொண்டே........'ஏற்றுக்கொள்ளுகிறேன் உன்னை' என்று களிப்போடு கூறினான். அவளுக்கோ முகமெல்லாம் தாமரையாகியது ! குளிர் நிலவு இன்பமழை பெய்துகொண்டிருந்தது ! பூஞ்சோலையைவிட்டு இருவருமே கைகோர்த்துக் கொண்டு நடந்துபோய்க்கொண்டிருந்தார்கள். யாரோ பாதையிலே-பாழடைந்த மண்டபத்திலே தாடி மீசையோடு பரட்டைத் தலையோடு பிணமாகிக் கிடந்தான். அந்தச் சாவு ஓலம்-பாதையிலே பாடிச்சென்ற இருகுயில்களுக்குமே கேட்கவேயில்லை ! அவர்தான் குருநாதர் என்பது புதுவாழ்வுபெற்ற அவர்களுக்கெங்கேபுரியப்போகிறது.

வெண்பாப் போட்டி

6 கார்கூந்த லேறிக் களித்திருந்த மல்லிகையே
ஆர்செய்த வஞ்சகத்தால் அல்லலுற்றுய்?—

(இரட்டைப் புலவர் முறை)

வெண்பாப் போட்டி 7 க்கு வந்துள்ள வெண்பாக்களில் பரிசு பெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்களையும் வெளியிட்டுள்ளோம். தென்றல் முதல் இரண்டடிகளைத் தந்துள்ளதால், ஒவ்வொரு வெண்பாவின் மீதி இரண்டடிகளைப் பிரசுரம் செய்துள்ளோம்.

◉ *கார்கூந்த லேறிக் களித்திருந்த மல்லிகையே!*
ஆர்செய்த வஞ்சகத்தால் அல்லலுற்றுய்?-- தார்குழலே!
கட்டி அணைத்துனக்குக் கள்முத்தம் ஈந்தஉன்றன்
அத்தான்கை வஞ்ச மடி!

— பே. சா. பொருளரசு, பேரையூர்.

★

-- தேர்கநீ
பேரமளிப் போரினிடைப் பின்னடைந்தேன் அல்லலுறச்
சீரழித்தார் போர்வினைத்தார் சேர்ந்து

— தி. சு. கலியாணராமன், விருத்தாசலம்.

★

-- பாரில்நான்
வாடுகின்ற தன்மையினை வாய்ப்பாகப் பெற்றதல்லால்
கூடுதலாய் ஒன்றுமில்லை கூற.

— பொ. கோவிந்தசாமி, செவ்வாய்ப்பேட்டை.

★

-- ஊர்கூடிக்
கட்டழகி விம்மிடவே கைம்பெண் எனும்பட்டம்
இட்டதனு லன்ரோ இடர்!

— பி. எஸ். கண்ணன், சென்னை-2.

★

--தேர்வில்லார்
பன்றியின் மேற்போர்த்த பட்டாடை போற்சிலைமேல்
சென்றுன்னை வைத்ததாலோ செப்பு.

— இராமசாமி, புளியங்குடி.

★

-- நீர்நாட!
மல்லிகையே வெண்சங்கா வண்டூதும் மாவொலியால்
தொல்லையடா தொல்லை தொலை

— வித்துவான். அ. வெங்கடாசலம், திட்டைக்குடி.

★

-- பார்வேந்தன்
போர்புரிய சென்று புகழுடம்பு பெற்றதினுல்
சீர்கெட்டாள் மாதென்றே செப்பு!

— கே. கல்யாணி, செங்கற்பட்டு:

★

-- மார்பகத்தில்
உன்தனையே சூட்ட உலைக்களமாம் நெஞ்சனலில்
தன்தலைப்பூ தீய்த்தனளே தான்.

— க. இரா, பொரையார்.

★

-- வார்குழலாள்
கொவ்வை இதழ்வெளுப்பக் கோலக் கயல்சிவந்துன்
செவ்வி யழிந்ததேன் சொல்?

— இரா. அன்புரையன், அம்மையப்பன்:

★

-- கார்குழலாள்
நோகாமல் வீசி நடந்தாளோ காதலின்
தாகவிடாய் தீர்த்தபின் தான்

— மேகநாதன், துறையூர்.

★

-- கார்முல்லை
பூத்தும் மணசேராப் பொய்கையான் வஞ்சகத்தால்
காத்துக் கசங்கலுற்றேன் காண்.

— வித்துவான் இல. அரவரசன், இராமநாதபுரம்:

-- ஈர்ங்குழலாள்
இன்பமது துய்க்க இடைநின்று ஏன்சிரித்தாய்;
துன்பங் கொடுத்தாள் துறந்து

— கனகு, தூத்துக்குடி.

★

-- நேர்மையிலா
ஆரியர்கள் செய்தொழில்போல் அல்லல் இழைத்ததுவோ
பாரிற் பரிதி? பகர்.

— கணியன். பூங்குன்றன், கோனூர்.

★

-- கூர்மதியோய்
நாற்றம்நான் நங்கையற் கிமளவும் சூடிப்பின்
மாற்றுவதா லென்றே மதி.

— கா. சுப்பிரமணியம், எரையானூர்.

★

-- பார்போற்ற
ஓங்குபுகழ் நல்லாட்சி ஓச்சிவந்த ஒண்டமிழன்
ஏங்குகின்ற தொத்தனையோ இன்று?

— தி. சாமிநாதன், சேங்காலிபுரம்:

★

-- போர்சென்ற
காதலனைக் காணுது காத்திருந்த காதலியின்
வேதனையால் வந்த வினை.

— எஸ். குமரன், அருப்புக்கோட்டை.

★

-- சீர்தேய்ந்த
உன்றன் நிலையும் உறுதமிழர் வாழ்நிலையும்
ஒன்றென் பதுபிழையோ? ஓது.

எம். எஸ். மணி, திருக்கழுக்குன்றம்.

★

-- வார்கூந்தல்
மின்னிடையாள் தீய வைதிகத்தால் கைம்மையுற
புண்பட்டே னென்றே புகல்!

—இரத்தின. மனோகரன், கோலார் தங்கவயல்.

★

-- பார்மக்கள்
தான்மகிழ, என்காதல் தேன்வண்டை நீக்கினுல்
ஏன்வாடா திங்கிருப்பேன் நான்

— பொ. வேணுகோபால், திருப்பத்தூர்.

★

-- வீரன்
திருமதியைக் கூடிச் சிரித்திருந்த வேளையில்நான்
குறுக்கிருந்த குற்றமெனக் கொள்!

— ந. செல்லப்பன், திருச்சி.

★

-- பார்மீது
காதலனும் காதலியும் கண்ணுறங்காக் காரணத்தால்
சாதல்போல் அல்லலுற்றேன் தான்

— அ. வெங்கிடபதி, நெல்லிக்குப்பம்.

★

-- கேர்குழலார்ப்
போற்றி யுனைப்புகழ்ந்து போரில் மயங்கியக்கால்
கூற்றநீராய் நின்ருரோ கூறு.

— பி. இராசகோபால், திருக்காட்டுப்பள்ளி

★

-- சீருடையார்
தானுலகில் செய்யும் சமரத் தகப்பட்டு
நானுடைந்தேன் நைந்தேன் நலிந்து.

— சி. பழனிப்பன், வேலூர்.

★

-- போர்செய்த
வேல்விழியாள் மேனி விரகத்தால் வெம்மையுறப்
பால்நிறங்கெட் டேனுல் பரிந்து

— தங்கவேலு, கீழ்க்கப்பூண்டி.

★

-- பார்தனிலே
ஆயிழையைக் கொண்டணைத்த அன்ப னழல்மூச்சே
காய்ந்துழலக் காரணங் காண்.

— அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

-- ஆர்முதே
இன்பப் பிணைப்பிலே ஈருடலின் தீமூச்சின்
துன்பத்தால் வந்த துயர்

— எஸ். சுப்பிரமணியன், அருப்புக்கோ

◉ பரிசுபெற்றவெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்'

--நேர்இழையாள்
நெஞ்சோடு நெஞ்சிறுக்கி நேசித்தான் தன்முகத்தால்
கொஞ்சியெனைத் தேய்த்ததெனக் கொள்.
— ம. பூபதி, காஞ்சிபுரம்.

★

-- நேரிழையாள்
கட்டறுத்த காதகர்கள் கைம்பெண்ணும் பேர்சூட்டிப்
பொட்டழித்தார் ஈங்கென்னைப் போட்டு.
— நாவுக்கரசன், காரைக்குடி.

★

-- நீர்மேல்
குமிழி இளமையெனக் கூறுவதும் பொய்யோ ?
தமிழிலே நாலடியார் தான்.
— வித்துவான் தாமஸ் உடையார், தஞ்சை.

★

-- சீர்மாறி
நன்மணத்து மேனிவாட நாடும் இனத்தவர்
இன்முகத்தா லின்ன லெனக்கு.
—ல. சேதுராமன், கரூர்.

★

-- நேர்நின்று
மெய்தொட்டு அன்பால் மிகப்பயின்ற காதலரின்
கைதொட்ட காரணமோ காண்.
— பெ. சிவ. சீதாராமன், தென்காசி.

★

-- வேர்ப்பலாநீக்
தெள்ளமுதக் கன்னியர்கள் செந்தமிழ்ப்போல்
பாழ்மதத்தால்
உள்ளுருகும் கைமை யுணர்.
— வித்துவான் தா. சுப்பிரமணியம், திருக்கழுக்குன்றம்.

-- சீர்செய்த
ஒண்டொடியாள் ஊடல் உரம்பெற் றுயர்ந்ததால்
கண்டாயோ இந்த கதி ?
— கவிக்குஞ்சரப்பாவலர், வாளாடி.

★

-- போர்வென்ற
தன்தலைவன் மாற்றாள் தளுக்கில் மயங்கினதால்
என்தலைவி ஏற்றிலள் காண்.
— கா. சண்முகவேலு, திருச்சுழி.

★

-- மாருதமோ
கொட்டும் மழைநீரோ காமுகனே வெப்பமோ
பட்டு அணையோ பகர்!
— சீ. ரங்கநாதன், வேலூர்.

★

-- ஆர்வத்தால்
ஆண்டவற்குப் பக்தர் அழகாய் அணிசெய்யப்
பூண்டுமெலிந் தாயோ ? புகல்
— மலர்க்கொடி, பெரும்பாக்கம்.

★

-- நேர்மையிலாப்
பித்தர் சிலருன்னைப் பிய்த்துக் கசக்கிப்பின்
'அத்தரென'க் கொள்வதா லா ?
— கே. தனமணியம்மை, திருக்காட்டுப்பள்ளி.

★

-- போர்செய்த
அல்லியிதழ்க் கண்ணளை யன்பன்ற னின்பமுடன்
புல்லியிருந் தப்பொழுது போல் !
—பி. சுந்தரமூர்த்தி, பி. ஏ., நாமக்கல்.

★

-- கூர்வேல்
எறிந்து கொடும்புலி கொன்றுந்தன் உள்ளம்
பறித்தான் படுத்திய பாடு.
— இராதாகிருட்டிணன், ச. வி. நகரம்.

-- நேர்எனக்கு
நங்கையிவள் வெண்பற்கள், என்றவள்தன் நாயகன்
கொஞ்சிடல் கூம்பாதோ உள்ளம் ?
— வெங்கிடாசலம் பி. ஏ., முருங்கப்பட்டி.

★

-- ஆர்த்தின்ற
தண்டுறைவ ! நின்பிரிவைத் தாளா துடல்நெகிழ்வு
கொண்டதனால் ஆமிக் குறி !
—க. வீ. வரதன், சென்னை-23.

★

-- பர்ரில்
..க்குச் சுவைசேர்த்துண் ணுங்கால் கிலஞ்சேர்
..ப் பிலையானாய் காண் !
— கருப்பசாமி, சென்னை-23.

-- பீர்பூக்க
ஒண்தொடியை நீங்கி ஒளிவண்டும் மற்றோர்பால்
தண்மலரைத் தாவியதோ சொல் !
— வே. அர. சைலவாசன். வேலூர்.

★

-- பார்தனிலே
கார்கூந்தல் இக்காலம் காகிதப்பூக் கொண்டிருக்க
நேர்ந்திட்ட துன்பமிது நேர்.
— து. பெரியசாமி, திருமங்கலம்.

★

-- போர்மறவன்
கோத மகிழ்வுற்ற கோதை எனைமறந்தாள்
சூதிதிலே சொல்லுதற்கு ஏது ?
— பெ. சி. முத்து, சென்னை-1.

★

--சீர்தமிழ்போல்
உன்குலத்தை யோம்பும் உயர்கொடிகள் ஈங்கிருப்ப
என்குறித்து ஏங்கும்நீ இன்று ?
— ஆதி. சானகிராமன், விழுப்புரம்.

★

-- சேர்க்தணைய
பஞ்சணையி னூடற் பகையாற் றெடுத்திட்ட
வெஞ்சமரால் வீழ்ந்திட்டேன் வெம்பி.
— தமிழ்வேந்தன், சேலம்.

★

-- " தார்வேந்தன்
எழுடுக்கு மஞ்சத்தில் ஏந்திழையு டன் விளைத்த
வாளெடுக்கா வன்போரால் தான்"
மா. குமரேசன், மதுரை.

★

-- வார்குழலாள்
சீருகுக்குங் காதலன்பாற் சிக்குமா றுக்கினளோ ?
நீருகுக்கா(து) ஓதாயோ நீ !
— இரா. சண்முகம், பண்ணைக்காடு.

★

-- நீர்அன்ன
பாய்ந்தோடும் அவ்விருவர் வேட்கையில் வெந்துமேநீ
காய்ந்தேனென் றுண்மை கழல் !
— நாஞ்சில் நாதன், கோவை.

★

-- " தார்கொண்டாய்!
உங்களுடல் வேட்டையானுன் வேதுற்றே னன்றிவேறு
பங்கமில்லை ! பைந்தொடியைப் பார் !"
— ப. த. வேலன் ஆரை.

★

-- கார்குழலி
பொன்னிதழாற் செய்மலரைப் போற்றினளோ ?
ஆங்கிலத்தை
இன்தமிழர் போற்றியதே போன்று.
சா. பில்லப்பன், பாகனேரி.

★

-- நேர்தலைவ
நின்வரவுத் தாமதத்தால் நின்மனைவி கொண்டுஉள
அன்னவளின் ஏக்கமே ஆம்.
— சிதம்பர. வேங்கடாசலம், அரியக்குடி.

★

-- கூர்விழியே
உன்னுசை நாதன் உனைமருவும் போதில்நான்
சின்னபின் னம்பெற்றேன் சீர்.
செ. சின்னசாமிக் கவுண்டர், இ. நா. பட்டி.

★

-- "நேரிழையர்
வார்குழலில் தங்காமல் மட்சிலையிற் றங்கவைப்
பார்செயலில் நைந்தேன் பசந்து"
— வே. பவுன், விழுப்புரம்.

★

-- ஆர்வத்தால்
அன்பினளின் கூந்தல் அவன்கோதி அண்டியதால்
கண்டனையோ இந்த கதி ?
—தா. வி. பரமசிவன், சென்னை-7.

★

-- சீர்புலவீர்
வஞ்சமிலா வஞ்சிதனை வம்புசெய்து கற்பழித்த
வஞ்சன்கை பட்டேன் ; வலிந்து !
— கோம்பைச்சீரான், கோம்பை.

அக்கிராமத்தின் பெயர் சன்—டே. அவர்களிருவரும் இரு மலர்களைப் போன்று அங்கு வளர்ந்தார்கள். ஒருவள் டிரங்—டிராக்; மற்றவள். டிரங் - நிகி. இருவரும் சகோதரிகள். மூத்தவள் அதிக அழகுடையவள். ஒவ்வொருவரின் இதயத்திலும் காதல் தீயை மூளச் செய்யும் அவள் கண்கள்; புயலை எழுப்பிவிடும் அவள் புன்னகை; மலைகளையும் நடனமுறச் செய்துவிடும் அவளது குரலினிமை; உயிரினங்கள் ஒவ்வொன்றும் அவளை வட்டமிட்டுக்கொண்டேயிருக்கும். அவளை உலகம் அனைத்தும் நேசித்தது; பணிந்தது. தேசபக்தியும், தெய்வபக்தியும், இல்லறபக்தியும் பிரகாசித்து நின்றன அவளிதயத்தில்!

இளையவளும், மூத்தவளுக்கு எவ்வித்திலும் குறைந்தவளல்ல. ரோஜாவிற்குப் பக்கலிலிருக்கும் ரோஜாவை யொத்தும், தாரகைக்கு அருகிலிருக்கும் தாரகையைப் போன்றும் அவளிருந்தாள். இருவரும் அழகிலும், மனத்திலும், நிறத்திலும் ஒன்றுகவே இருந்தனர். இரு மலர்களைப்போன்று மனத்துடன் வாழ்ந்தனர். நாட்டின் பக்தியும், தந்தையின் பாசமும் அவர்களுள்ளத்தில் சுடர்விட்டன.

ஹங் - வியோங்க் பழைய மன்னன். அவன் எப்போதும் தன் முன்ஞேர்களின் கல்லறை முன் மண்டியிட்டிருப்பான். அவன் எண்ணம் தனது பகைவன், சீன கவர்னர் டா-டினை நினைந்தபடியிருக்கும்! மந்திரவாதிகளும், மதக் குருக்களும், சோதிடர்களும் அவனைச் சுற்றி எப்போதும் நிரம்பியிருப்பார்கள். அவர்கள் யோசனைப்படி இந்தக் கல்லறை பல முறை மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வேந்தனின் குமரிகள்தான் டிரங் - டிராக்கும், டிரங் - நிகியும்:

''வேந்தே! சீர்த்தியுற்ற தங்கள் தந்தையரின் கல்லறை இப்பொழுது ஓர் இரத்தின சர்ப்பத்தின் மீது கட்டப்பட்டிருக்கின்றது. ஆகவேதான் கூறுகின்றேன், இளவரசிகள் பழிக்குப்பழி வாங்குவார்கள் என்று. நம் புனித பூமியை ஆக்ரமித்திருக்கும் சீனர்களை வேட்டையாடி விடுவார்கள் நம் இளவரசிகள்'' என்று கூறினன் சோதிடன் ஒருவன்.

அதற்கு மன்னன் ''என் குடும்பத்தின் கதியைப் புத்தர் பெருமானின் திருக்கரங்களில் ஒப்படைத்துவிட்டேன்'' என்றுன்.

''மன்னவ! திவ்ய சாஸ்திரத்திலே இவைகள் நீலக் கற்களால் பொறிக்கப் பட்டிருக்கின்றன. நம் இளவரசிகள் நம் நாட்டின் அரசிகளாவர்கள் என்பது உறுதி. இது பொய்த்துவிடின் என்னைச் சிரசாக்கினை வேண்டுமோனுலும் செய்துவிடுங்கள்! அவர்களது வாட்கள் அதிக சக்தி கொண்டது! அவர்கள் சீனர்களை!வென்று வெற்றி வாகை சூடுவார்கள் என்பது திண்ணம்!'' என்று ஆவேசத்தோடு கூறினன் அச் சோதிடன்.

ஆம்! சிறு வயது முதலே சகோதரிகளிருவரும் குதிரைச் சவாரி, கத்திச் சண்டை, முதலியன கற்றுவந்தார்கள். அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அழகாகச் செய்திருந்தான் ஹங்-வியோங்க். ஓர்

சிறந்த படைத்தலைவன் அவர்களுக்குப் போதித்து வந்தான். அவர்கள் இதயத்தில் பகைவனைப் பற்றிய உணர்வு வளரலாயிற்று.

ஹங்-வியோங்க் அன்று பட்டந் துறந்தான்! டா-டின் சகலஅதிகாரங்களையும் கைப்பற்றினன். அணும் ராஜியத்தில் கொடுங்கோல் அரசும், ஆரம்பமாயிற்று. எல்லா அதிகாரிகளும் சிரச்சேதம் செய்யப்பட்டனர். கிராமங்களும் நகரங்களும் கொள்ளையிடப்பட்டன. மக்கள் பரிதவித்தார்கள். ஏழைகள் மீது அநியாய வரிகள் சுமத்தப்பட்டன. தேச பக்தர்கள் சித்ரவதைக்கு ஆளானர்கள். எங்கும் கொள்ளை! பட்டினிச் சாவு! பஞ்சம்! எங்கும் உதிரமும், தீயும் பரவின! நாம்-வியட் மக்கள் பழிவாங்கும் சமயத்தை எதிர்பார்த்திருந்தனர்.

டிரங் - டிராங்க் கத்தி வீச்சில் கெட்டிக்காரிதான்! ஆனல் காதலின் வீச்சுகள் முன் அவள் எதிர்க்க முடியவில்லை. அவள் காதலின் இன்பவேட்டைக்கு ஆளானள்.

அன்று சன் - டே கிராமத்தில் உற்சவம். சித்திரங்களும், சர்ப்பக் கொடிகளும் இளங்காற்றில் பட்டொளி வீசிப் பறந்தன. தாமரையைப் போன்று, பொற் குடைகள் விரிக்கப் பட்டிருந்தன. டமாரத்தின் சப்தம் இடிமுழக்கமென ஒலித்தது.

தட்டிலே அரிசி, மாமிச வறுவல், கோழிக் குஞ்சுப் பொறியல்; வாழைப் பழங்கள், வாழ்த்து மலர்கள், சாம்பிராணித் தூபங்கள் முதலியவை நிறைந்திருந்தன. இவைகளைக் கையிலே ஏந்திக்கொண்டு இருபாலரும் கோவிலுக்குச் சென்றுர்கள்.

இரு சகோதரிகளும் தங்கப் பல்லக்கேறி, பணியாளர் புடைசூழ, அங்கு வந்தார்கள். புத்தரை வணங்கினர்கள். தங்களைக் காக்க வேண்டுமென அப்பெருமானிடம் பிரார்த்தித்தார்கள். அவ்விஹாரத்திற்கு முன்னல் அவர்கள் நான்கு முறை வலம் வந்தார்கள். அதன் பின் பல்லக்கை நோக்கிப் புறப்பட்டார்கள்.

''இளவரசி! தங்கள் குடும்பத்தின் பேரில் நான் கொண்டுள்ள அன்பிற்கும், ராஜபக்திக்கும் காணிக்கையாக இந்தத் தாமரை மலர்களைத் தங்களுக்கு சமர்ப்பிக்க எனக்கு அனுமதி வேண்டுகிறேன்.'' டிரங் - டிராக் திரும்பிப் பார்த்தாள். அங்கே ஒரு இளம் வாலிபன் கையில் மலருடன், புன்னகை பூத்த முகத்தோடு நின்றுன்.

அவள் தயங்கினள் சிறிது நேரம்! பிறகு, அம்மலரைப் பெற்றுக் கொண்டாள். ''தாங்கள் அளித்த மலர்கள் மிக அழகாக இருக்கின்றன. எனக்கு மலர்கள் மீது மிகப் பிரியம். ஆகவேதான் இதை மறுக்க முடியவில்லை.''

அவன் சிறிது தைரியத்தோடு ''இளவரசி! தங்களை நெருங்கி, தங்கள் இனிய குரலைக் கேட்டு, தங்கள் தெய்வ மனத்தை ஸ்பரிசிக்கும் பாக்கியம் என்றும் கிடைக்கக்கூடியதில்லை. அரசி! தங்கள் புகழ் எங்கும் வியாபித்திருக்கிறது. என் ஆத்மாவோ, வானை நோக்கிப் பறந்து செல்லும் குருவியைப் போன்று, தங்களிடம் பறந்து செல்கின்றது. என் இதயமோ மாடப் புருவைப் போன்று தங்களை நோக்கி சிறகடித்துப் பறந்தோடுகின்றது. என் நினைவுகளோ தங்களைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான இன்ப மாளிகைகளை எழுப்புகின்றது. நான் தூக்கத்திலிருக்கிறேனே, விழித்திருக்கிறேனே, எனக்குத் தெரியவில்லை. உண்மையில் தாங்கள் என் முன்பு இருக்கின்றீர்களா அல்லது கனவின் காட்சியா என்பதும் தெரியவில்லை. இவ்விதமான உண்மைக்கும், கற்பனைக்குமிடையே என்னல் சிறிது வித்தியாசந்தான் காணமுடிகிறது'' என்றுன்.

''ஐயா, தங்கள் சொற்கள் இன்பத்துளிகளாக என் ஆத்மாவில் சொட்டுகின்றன. தங்கள் இனிமைச் சொற்கள் என் காதுகளைத் தழுவிச் செல்கின்றன. தங்கள் பெயர்......''

''தை - சாக்'' விரைவாகவே கூறினன் அவன்!

''தைசாக்! இப்பெயர் என் இதயப் பூங்காவிலே பதிந்துவிட்டது,' என்றுள் அவள்.

''இளவரசி! தங்கள் மொழிகள் என் வறண்ட இதயத்தில் ஓர் நம்பிக்கையையும், இன்பத்தையும் விதைக்கின்றது. தங்கள் பூங்காவைப் பாதுகாக்கும் ஒரு காவலனுக நான் இருத்தல் கூடாதா? தங்கள் விரலில் மின்னும் அந்த நீலக்கல் மோதிரமாக நான் இருக்கக் கூடாதா?''

''ஐயா, என்னை மன்னியுங்கள். என் கதியோ, ஓர் பட்டுத் துண்டைப் போன்று என் வயோதிகத் தந்தையின்கையில்சிக்கியிருக்கின்றது. அவர் ஓர் மலையைத் தாண்டு என்றுலும் நான் தாண்ட வேண்டும். கடலில் குதி என்றுலும் அவ்வாறு செய்ய வேண்டியவள்...எனக்கு நேரமாகிறது. என் சகோதரி எனக்காகக் காத்திருப்பாள். என்னைப் போக அனுமதியுங்கள்!''

தன் மனப் போராட்டத்திற்கிடையே டிரன்-டிராக் தை-சாக்கை வணங்கிவிட்டு, பல்லக்கேறி புன்னகையுடன் மறைந்து விட்டாள்.

தை - சாக் அவள் அழகிலும், அவளைப்பற்றிய இன்பக் கனவிலும் வயித்துவிட்டான்- அங்கேயே வெகு நேரம் நின்று கொண்டிருந்தான். கோயில் உற்சவமும் நடந்து முடிந்தது.

வாரங்கள் சென்றன! ஒரு நாள் தை-சாக் நீண்ட, அழகான அங்கியை அணிந்து கொண்டு, தனது குடும்பத்தவரும், பணியாளரும் சூழ ஹங்-வியோங்கிடம் வந்து தன்னையே சமர்ப்பித்தான்- அவன் கல்யாணச் சீர் கொண்டு வந்திருந்தான். அவைகள் யாவும் மன்னன் முன் வைக்கப்பட்டன. நூறு பாட்டில் நல்ல திராக்ஷை ரசமும், இருபது ஜோடி யானைத் தந்தமும், நூறு சுற்று சீனப்பட்டும், தங்கப் பாளங்கள் ஆயிரமும், முத்துக்களால் இழைத்த தாம்பூலப் பெட்டிகள் நூறும், தங்கச் சங்கிலி யொன்றும், இன்னும் அனேக விலையுயர்ந்தசமான்களும் அங்கேகாணப்பட்டன. தை-சாக் கல்வியிலும், ராணுவப் பயிற்சியிலும் தேர்ந்தவன். இவைகள் யாவையும் கண்ட மன்னன் தன் மூத்த மகளான டிரங்க்-டிராக்கை தை-சாக்கிற்கு மணமுடித்து வைத்தான்.

தை-ச்சாக் அந்த ராஜ குடும்பத்தின் தலைவனுனன். சீனர்களைத் துரத்தி, ராஜ்யத்தைக் கைப்பற்றுமாறு அவனைத் தூண்டியது அவன் உடலில் ஓடிய வீர ரத்தந்தான்! அவன் படை திரட்டி மக்களைப் போருக்குத் தயாராக்கலானன். அவன் மனைவியும், மைத்துணியும் அவனுக்கு உதவி புரிந்தார்கள்.

வியாபாரிகளைப் போன்றும், வைத்தியர்களைப் 'போன்றும், பிச்சைக் காரர்களைப் போன்றும் வேஷந்தரித்து வந்து தை-சாக்கின் ஒவ்வொரு விஷயங்களையும் உளவறிந்து சென்றனர் டாடின் ஒற்றர்கள். தை-சாக்கைக் கொன்று விட முடிவு

மூலம்: டிரான்-வான்-டங்

தமிழாக்கம்:

அனிக்கிராமனுதன்

செய்தான் டா-டின்: கபட வேடமணிந்து, தன் மாளிகையில் பெரிய விருந்தொன்று ஏற்பாடு செய்தான். தைசாக்கும் சந்தேகமின்றி, நிராயுதபாணியாய் தனியாக விருந்துக்குச் சென்றுன். தைசாக்கிற்கு நல்ல, வர வேற்பளிக்கப்பட்டது. எல்லா மரியாதைகளும் வழுவாது முறைப்படி செய்யப்பட்டன.

''கொஞ்சம் ஒயின் ஊற்றுங்கள்: தைசாக் குடிக்க கொஞ்சம் ஒயின் ஊற்றுங்கள்.'' உந்திரவிட்டான் டாடின்.

தங்கக் கிண்ணங்கள் ஒயினல் நிறைந்தன. கிண்ணங்கள் தைசாக்கின் முன் நிறைந்தன. எல்லாக் கிண்ணங்களும் காலியாயின.

'' பாடுங்கள்! என் ராஜ விருந்தினருக்காக ஓர் காதற்கீதம் பாடுங்கள்!''டாடினின் கட்டளை இது.

மதுரமான வீணை, யாழ், தம்புரா வாத்தியங்கள் முழங்கின; 'நட்சத்திரங்களைக் கொண்ட இர... களை'ப் பற்றிய பாடல்கள் பா... பட்டன. தைசாக்கின் ... இனிய சங்கீதத்தால் நி... பாடகர்கள் இன்னிசை... தை நிரப்ப, பணிப்...

னல் கிண்ணங்களை நிரப்பிக் கொண்டேயிருந்தார்கள். சிறிது நேரத்திலே மூன்று பாட்டில் ஒயின் காலியாயின.

"கொஞ்சம் நடனமாடுங்கள்! தைசாக்கிற்குக் கௌரவம் அளிப்பதற்கு ஓர் 'நாக நடனம்' புரியுங்கள்!" டாடின் உரக்கக் கூவினான்.

இசையும், தாளமும், வாத்தியமும் முழங்கின. நடனப் பெண்கள் மேகங்களினின்றும் பறந்து வருவதைப்போன்று கை, கால், தலைகளை நீட்டி நெளித்து தேவ நடனம் புரியலானார்கள். மது போதையும், ஆடலும் பாடலும், பெண்களின் ஸ்பரிசமும் தைசாக்கை யோசனையில் ஆழ்த்தின. நாடு, குடும்பம், மனைவி முதலியவர்களைப் பற்றிய எண்ணம் அவன் நெஞ்சத்தில் சிதறி எழலாயின. அவனைச் சுற்றிலுமிருந்த கூட்டம் கலைந்து விட்டது. டாடின் மட்டுமேயிருந்தான். அவனிதயத்தில் ஆத்திரம் பொங்கியெழுந்தது. தைசாக்கின் மனத்திலே பகைமைத் தீ மூண்டது. ஆவேசத்தில், டாடின் முகத்தில் காரித்துப்பினான். டாடின் மீது பாய்ந்தான் தைசாக். ஆனால் அவன் கைது செய்யப்பட்டான். அவன் மீது ராஜத் துவேசக் குற்றம் சாட்டப்பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்டு கொலைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டான். அவனது வாய், கை, கால்கள் கட்டப்பட்டு, ஜாடிக்குள் திணிக்கப்பட்டான். அவன் உடல் பூராவும் கொதிக்கும் நீரை ஊற்றினர். இரண்டு மணி நேரம் தை-சாக் சித்திரவதை செய்யப்பட்டான். அவனை வெளியே எடுத்த போது அவன் உடல் அவித்தெடுத்த கோழிக்குஞ்சை நினைவுறுத்தியது. அவனது உடல் அரண்மனைக்கு இடது புறம் புதைக்கப்பட்டது.

இச் செய்தி டிரங்க்-டிரக்கை எட்டியது. இதயம் உடைந்து போனாள். மனந்தாளாது மலையடிக்குச் சென்ற அவள் அங்கிருந்த மக்களிடம் ஓர் பிரகடனம் வெளியிட்டாள். ஆயிரக்கணக்கான அனும் தேசபக்தர்கள் அவள் கட்டளைக்குப் பணிந்து அம்மலையடியை அடைந்தனர். டிரங்-நிகி மற்றும் படைத் தலைவர்களுடன் சேர்ந்து டிரங்க் டிராக் ஓர் படையொன்று திரட்ட ஆரம்பித்தாள். அவ்விரு இளவரசிகளின் தீவிரப் பிரயாசையினால் ஓராண்டு காலத்தில் ஆயிரம் பேர் கொண்ட சிறந்த படையொன்று திரட்டப்பட்டது. அதன் பின் ஓர் நாள்கூட வீணாக்கவில்லை அவர்கள். கையில் வாளேந்தி, வெண்புரவியேறி அவ்விருவரும் டாடினை எதிர்த்து படையெடுத்தார்கள். போர் மூண்டது! அனும் நாட்டின் தேச சரித்திரத்திலேயே குறிப்பிடத்தக்க ஓர் பெரும் யுத்தம் அது. டாடின் கோட்டை தகர்ந்தது. கோட்டையினுள் ஓர் யுத்தம் மூண்டது.

அவ்விரு இளவரசிகளின் வீரம் அனுமிய வீரர்களுக்கு ஊக்கத்தை அளித்தது. ஆவேசத்தோடு போர் [illegible]ரிந்தனர். டாடின் கைதியாக்கப் [illegible]டான். ஒரு மாதத்திற்குள் [illegible]ர் அறுபது நகரங்களுக்குமேல் [illegible]றிவிட்டனர் அச்சகோதரி[illegible]ர், நாம்வியட்டின் இள[illegible]ர் தங்களைப் பிரகடனம் செய்து கொண்டார்கள் அவர்கள்.

அவ்விளவரசிகளின் வீரத்தைக் கேள்வியுற்ற சீன சக்கரவர்த்தி க்வாங்-வியூ அவர்களோடு சமாதானம் செய்துகொள்ள மூன்றாண்டுகள் முயன்றான். ஒவ்வொரு ஆண்டும் வாழ்த்துக்களும், விலையுயர்ந்த பொருள்கள் பலவும் சீன ஸ்தானிகர் அவ்விளவரசிகளுக்கு தன் சக்கர வர்த்தியின் சார்பாக அளித்து வந்தான். நாட்டின் சுபிட்சத்தை விரும்பிய அச்சகோதரிகளும் தங்கள் ஸ்தானிகர்களை சீன சக்கரவர்த்தியிடம் அனுப்பிவந்தார்கள். இது ஒரு புறம். மறுபுறம் மாவியன் என்னும் பெரிய சேனாதிபதியின் கீழ் சீனப் படைகள் நாம் வியட்டின் எல்லையைக் கடந்து வரலாயிற்று. மாவியனின் அக்ரமப் படையெடுப்பிற்குப் பணிய வேண்டும் அல்லது எதிர்த்து சமர் செய்தாக வேண்டும்!

அவ்விளவரசிகள் போர் முரசு கொட்டலானார்கள். மறுமுறை வெண்புரவி யேறினார்கள். போர் மூண்டது; ஏராளமானவர் கொல்லப்பட்டனர்! ரத்தவெள்ளம் ஓடலாயிற்று! கத்தி, ஈட்டி, உடைவாள், கட்டாரி ஆகிய கூரிய ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டன. இளவரசிகளின் எண்ணப்படி போர்புரிந்தனர் அனும் வீரர்கள். தங்கள் உயிரையும் ரத்தத்தையும் பலிதந்து, தங்கள் தாய் நாட்டின் பூமியை ஒவ்வொரு அங்குலமாகக் காத்தார்கள் அவர்கள். பாயும் அம்புகளுக்கும், பறக்கும் ஈட்டிகளுக்குமிடையே நின்று போர் செய்தார்கள் அவ்விளவரசிகள். அவர்கள் வாள்களின் வீச்சில் உருண்ட தலைகள் மரங்களினின்றும் விழும்சருகுகளைப் போன்றும், பழுத்த பழங்களைப் போன்றும் விழுந்து உருண்டோடிக் கொண்டிருந்தன. அவர்களது வீரத்தின் முன் மாவியன் சக்தியற்றுப் போனான். முடியாத அந்நிலையில் அவன் தவித்தான். உடனே புது முறை யொன்றைக் கையாள நினைத்தான். போரிட்டு அவர்களை வெல்வது கடினம்! எனவே சன்-டே மகாணத்தையும், அவ் விளவரசிகளையும் தீக்கிறையாக்கத் திட்டமிட்டான். அந் நகரைச் சுற்றி வைக்கோலையும், விறகுகளையும் போட்டு, ஆயிரக்கணக்கான பீப்பாய் மண்ணெண்ணெயை ஊற்றி காற்றுள்ள ஓர் நடு இரவில் தீ மூட்டி விட்டான். தீப்பிடிக்கலாயிற்று. காற்று உதவியது! வீட்டுக்கு வீடு மூலைக்குமூலை தீப்பரவி நகர்முழுவதும் தீப்பிடிக்கலாயிற்று. அத்தீயில் மாளவேண்டிய அவ்விளவரசிகளுக்கு அதிர்ஷ்டமிருந்தது! ஆகாயம் பூரணமாக இருண்டது! காற்றும் பலமாக வீச, வானம் மழையைக் கக்கிற்று! பெருமழை அது! தீ அணைந்தது! அவ்விரு ராணிகளும் மாவியன் படையை விரட்டலாயினர். மந்தை மாடுகளென விரட்டினார்கள். சீனர்கள் மீண்டும் போர்புரிந்தும், அது வியர்த்தமாயிற்று! கைப்பற்றின நகரங்களையும் விட்டுவிட்டு தோல்வியுடன் ஓடினார்கள். மாவியன் ஆக்ரோஷமடைந்தான்! அவன் ஆத்திரம் கடலெனப் பொங்கியது! அவன் கர்ஜனை செய்தான்!

"சீனாவிலேயே புகழ்பெற்ற மாபெரும் தளகர்த்தன் நான்; சிறந்த யுத்த வீரன். இச்சிறுமியரிடம் ஒருக்காலும் தோல்வியுறச் சம்மதிக்கமாட்டேன்! நான் இறக்கத் தயார்! ஆயிரம் முறை இறக்கத் தயார்!!"

அவன் மூன்று தினங்கள் ஒன்றும் சாப்பிடவில்லை. அம் மூன்று இரவும் அவன் கண்கள் தூக்கத்தைக் காணவில்லை. எப்போதும் ஆழ்ந்த சிந்தனைதான். மூன்றும் நாளிரவு தந்திரத்தால் வெல்வதென்ற முடிவிற்கு வந்தான். அந்த இரு பெண்களின் வீரத்தை அறிந்த அவன் போர் செய்ய விரும்பவில்லை. அவன் தனது எண்ணங்களை நெஞ்சத்தில் இருத்திக்கொண்டான்.

போர்முரசு கொட்டியது! சன்டே பூமி எங்கும் ஒரே யுத்தகளம்! அனும் வீரர்கள் யானைமீதேறி, வீர யுத்தம் செய்தார்கள். வெற்றியிலும், வீரத்திலும் நம்பிக்கை கொண்ட அவ்விரு வீராங்கனைகளும், தங்கள் வெண்புரவியேறி படைகளுக்குத் தலைமைவகித்து, முன்னணியில் போரிட்டார்கள். மாவியன் முறியடிக்கப்படும் சமயம் அது! தன் படைகளை அந்தச் செங்குத்தான மலைமீது திருப்பிவிட்டான். "அவ்விரு இளவரசிகளையும் யார் ஒருவர் உயிருடன் பிடித்துக் கொண்டுவருகிறார்களோ, அவருக்கு அவர்களிருவரையும் மணம் செய்து கொடுக்கிறேன்," என்று கூவினான் அவ்வஞ்சகன்- அவ்வளவுதான். வெறிபிடித்த அப்படையினர், கிராதகச் சொற்களை வெளியிட்டுக் கொண்டு, வெறிபிடித்த நாயைப் போன்று அப்பெண்களை நோக்கி ஓடினார்கள்.

இக்காட்சியைக் கண்ட அச்சகோதரிகள் தங்கள் முகங்களை நாட்டின் கொடியால் மறைத்துக்கொண்டு ஓடினார்கள். அவர்கள் அழகிலும், வதனத்திலும் மயங்கிய அச்சீன வீரர்கள் ஓநாய்களைப் போன்று அவர்களைத் துரத்தினர். அவ்வீரப் பெண்கள் தங்கள் வாள்களையும், ஈட்டிகளையும் உபயோகித்து அக் கிராதகக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு செல்லலாயினர். சீனர் தலைகள் உருண்டன! உடனே அவ் வீரர்கள் தங்கள் ஆடைகளை களைந்தனர்! வெட்டுக்கிளிகள் கூட்டத்தைப் போன்று அவ்வீரப்பெண்களைச் சூழ்ந்தனர். வெட்கத்தாலும், கோபத்தாலும் அப்பெண்களின் முகம் சிவந்தது. அவர்கள் ஓடினார்கள்! தனது இராக்கதச் செய்கையின் வெற்றியைக் கண்ணுற்ற மாவியனும் ஆடையைக் களைந்தான்! நிர்வாணமாய் தொடர்ந்தான் அவனும்! அவன் உடல் ரோமம் செறிந்தது. அது புயலிலடிபட்டு ஓய்ந்த சோளக்கொல்லையைப் போன்றிருந்தது. கோரமே உருவம் எடுத்தாற்போன்று தோன்றினான்- அவன்! அவனது அந்நிலையை ஓர் அரக்கனுக்கோ, வாலில்லாகுரங்கிற்கோ எளிதில் ஒப்பிடலாம். குதிரைமீதேறி, படைகளுக்கெல்லாம் முன்னதாக அவ்விளவரசிகளைத் துரத்தினான் மாவியன்! அந்நிலையில் கற்பைக் காப்பது அச்சகோதரிகளின் கடமையாயிற்று. ஆகவே இருவரும் ஓடினார்கள். அனுமிய வீரர்கள் தோல்வியுற்றுப் பின்வாங்கினார்கள். அவ்வேளையில் இளவரசிகள் தோன்றி படைகளை ஒன்று திரட்ட முயன்றனர். ஆனால் காலம் கடந்துவிட்டது!

சீனர்கள் அவர்களைச் சுற்றி வளைக்கலாயினர். அவ்விளவரசிகளிருவரும்தங்களைப்பாதுகாப்பதில் முனையலானார்கள். அவர்களது கைவாட்களுக்கு ஆயிரக்கணக்கான சீனத்தலைகள் பலியாயின. அவர்கள் உடம்பெல்லாம் காயம்! ஆயினும் சளைக்கவில்லை அவர்கள்! வீரப்போர் புரிந்தார்கள்!

டே-நதியை நெருங்கிவிட்டார்கள். படைவீரர்களோ, தலைவர்களோ இல்லாத தங்கள் நிராதரவான நிலைமையை உணர்ந்த அவ்விரு இளவரசிகளும் தங்கள் கர்ப்பைக் காக்க வீரக்கர்ஜனை புரிந்தார்கள்.

"மானமிழப்பதைவிட மடிவதே மேல்" என்று தன் சோதரியிடம் கூறினாள் டிரங்க்டிராக்.

"அவமானத்தைக் காட்டிலும் வீரமரணமே மேல்!" டிராங்நிகி பதில் தந்தாள் இவ்விதம்.

நதியில் குதித்தனர் இருவரும். வெள்ளம் அவர்களை அடித்துக் கொண்டு சென்றது. மாவியன் தன் படையுடன் டேநதிக்கரையை எய்தினான். அங்கு கரைகள் வெறுமையாக இருந்தன. மரங்கள் துக்கித்தன. இவைகளைக் கண்ட மாவியன் பூமியைத் தோண்டிப் பார்க்குமாறு கட்டளையிட்டான்! அனும் நாட்டின் அவ்விரு அழகிய வீரதிலகங்களையும் மண்ணினுள் தேடுகின்றான் அவன்!

நூற்றுக்கணக்கான படகுகளும், தெப்பங்களும் ஆற்றின் மீது சென்றன. அச்சோதரிகளைத் தேடுமாறு கட்டளை அவர்களுக்கு! தண்ணீருள் மூழ்கி, அடித்தளம் வரை தேடினார்கள். ஒருநாள் மறைந்தது. அவ்விரு ராஜகுமாரிகளின் பிரேதங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்விரு திலகங்களின் உடல்களைப் பிளந்து, அவர்களது இருதயங்களைக் கொண்டுவருமாறு கட்டளையிட்டான் மாவியன்! இறந்த அவர்களிடம் வஞ்சம் தீர்த்துக் கொள்கின்றானும்!

மேளவாத்தியங்கள் முழங்கின! அந்த இரு இருதயங்களும் மாவியனின்முன்புகொண்டுவந்துவைக்கப்பட்டன! அவைகள் தங்கக்கிண்ணங்களில் வைக்கப்பட்டன! அதன்மீது ஒயின் ஊற்றப்பட்டது! அதை மாவியன் சீன சக்கரவர்த்திக்கு வெகுமதியாக அளித்தான்! அவ்விரு இளவரசிகளின் உடல்களும் துண்டிக்கப்பட்டு காகம், கழுகு முதலியவற்றிற்கு எறியப்பட்டன.

சாங்-டேநதியின் பச்சைக்கரைகளிரண்டிலும் அந்த இருவீர இளவரசிகளான டிரங்க் டிராக்கும், டிரங்க்நிகியும் அழகிய கோயில்களில் வீரப்பெண் திலகங்களாக வைக்கப்பட்டார்கள். அதை நாம் இன்றும் காணலாம். அக்கோயில்களுக்கு "நாந்த்-தி" அதாவது "கற்பரசிகள் தகர்" என்று பெயர். அப்பெண் திலகங்களுக்கு "நாம்-வியட்டின் தெய்வங்கள்" எனவும் பெயரிடப்பட்டுள்ளது. அவ் வீராங்கனைகளை வணங்கிவந்தான், அனுமியச் சக்கரவர்த்தி!

◉

இலக்கியப் போட்டி

பல தோழர்களின் விருப்பத்திற்கிணங்க தென்றல் இலக்கியப் போட்டியின் முடிவு தேதியை 30-6-55 ஆக நிர்ணயித்துள்ளோம். 14-5-55 தேதி இதழில் இலக்கியப் போட்டியின் நீதிபதிகள் விபரமும் பரிசு வழங்குவோர் விபரமும் வெளிவரும்.

ஆசிரியர்

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் *எம்.ஏ.எல்.டி.*

பதில் தருகிறார்

வீ. மருதமுத்து, திருச்சி

கண்ணகி பாண்டியன் தலைநகரை எரித்தது தன் பதிவிரதைத் தன்மையினலா? அல்லது அறம் பாடியா? விளக்கம் தருக.

கற்பின் தன்மை, அறம் பாடுதல் இரண்டும்ஒரே பண்புதான். அதைக் கையாள்வோர்கள் கற்புடை மாதர், புலவர் என்ற வேறுபாடுதான் உண்டு. இந்த இரண்டு ஆற்றல்களும் பெண்டிர்க்கும் புலவர்க்கும் இருப்பதாகப் பொதுமக்கள் நம்பினர், நம்புகின்றனர். இது மூடநம்பிக்கையேயானலும் அவ்வளவு பண்பற்ற நம்பிக்கையல்ல. ஆசிரியர் இளங்கோவடிகள், இதை கண்ணகி கதையைத் தெய்வக் கதையாகக் கொண்ட குறவர் மனப்பாங்காகவே எடுத்துக் காட்டுகிறார். அறிவுக் கண்கொண்டு பார்ப்போருக்கு இங்கே தெய்வப் பண்பென்பது மக்களை இயக்கும் பண்பாகக் காட்சியளிக்கும். கண்ணகி எழுப்பிய தீ பருவடிவான காட்சித் தீயல்ல. அது புரட்சித்தீ. மக்களை இயக்கி எதிர்ப்பை உண்டுபண்ணிற்று.

◉

வேண்ணிலா, சுல்தான்பேட்டை

1. பண்டைத்தமிழ்ப் பெண் புலவர்கள் யார்? பெண்களின் இன்ப வாழ்க்கைக்குரிய பாடல்கள் எவை?

2. காவியம்-ஓவியம்! இவற்றில் கருத்தை எது வளப்படுத்தும்? ஏன்?

3. பெண்களைக் கண்டால் ஏன் கண்கள் பாய்கின்றன?

சங்க காலத்திற்குப் பின்னும் பல பெண் புலவர்கள் இருந்தனர். முன்னும்இருந்திருக்கக்கூடும். சங்க காலத்துப் பெண் புலவர்களாக நமக்குத் தெரிந்தவர் 30பேர். அவர்கள் பெயர்கள் வருமாறு: அஞ்சியத்தை மகள் நாகையார், அஞ்சில் அஞ்சியார், ஆதிமந்தி, ஊண்பித்தை, ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், கழார்க்கீரனெயிற்றியார், காமக்கண்ணியார், காவற்பெண்டு, குமிழிஞாழலார் நப்பசலையார், குறமகள் இளவெயினி, குறமகள் குறியெயினி, தாயங்கண்ணியார், நக்கண்ணையார், நப்பசலையார், நன்முல்லையார், நெடும்பல்லியத்தை, பாரிமகளிர், பூங்கணுத்திரையார், பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு, பேய்மகள் இளவெயினி, போந்தைப் பசலையார், மாற்பித்தியார், மாறோகத்து நப்பசலையார், வருயாரித்தி, வெண்ணிக்குயத்தியார், வெண்பூதியார், வெண்மணிப்பூதி, வெள்ளிவீதியார்.

வரிப்பாடல்கள், பொன்னூசல், பொற்சுண்ணம், தாலாட்டு, கந்துகவரி, அம்மானை, கழங்கு முதலிய எண்ணற்ற துறைப்பாடல்கள், பெண்கள் இன்பவாழ்க்கைக்கென்றேதமிழில் அமைந்துள்ளன. இவை தமிழுக்குத் தனிச்சிறப்பு. பெண்களுக்குத் தமிழ்ப்பயன் தருவன.

2. இரண்டும் வளப்படுத்தும். காவியமே இதில் மிகச் சிறப்புடையது. ஏனெனில் அது மக்கள் உள்ளத்தையே பின்னணியாகவும், வாழ்க்கையையே பின்னணி வண்ணமாகவும், அறிவு, உணர்ச்சி, ஆகியவற்றையே கலைப்பொருளாகவும் கொண்டது. ஓவியத்தின் பின்னணி தாள் அல்லது திரைபோன்ற உயிரில்லாப் பொருள். கலைப்பொருளும் உயிரில்லாத மை போன்ற பொருள்களே. மேலும் தலைசிறந்த ஓவியக் கலைஞன்தான் காவியக்கலைஞரின் பண்பை ஓரளவு அணுகமுடியும். தவிர, காவியத்தை அறிய மொழி உதவும். ஓவியத்தை அறிய இயற்கைக் கலைத்திறம் வேண்டும்.

3. இயற்கையின் மாயம்அன்பரே. காந்தத்தைக் கண்டால் இரும்பு பாய்வது அதற்கு உண்மையும் விளக்கமும் ஆகும்.

◉

அ. அங்கமுத்து, அரியலூர்.

தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய ராஜராஜசோழன் அக்கோவிலினுள்ள பிள்ளையார் கோவிலை கட்டுவித்தாரா? அன்றி அவருக்குப்பின் ஆண்ட யாரேனும் ஏற்படுத்தினார்களா? அவர் காலத்தில் தமிழகத்தில் பிள்ளையார் வணக்கமுண்டா? மேற்படி கோவிலில் உள்ள (கருவூரார் கோவில்) அவர் யார்? விளக்கம் தருக.

தஞ்சைக் கோயிலைக் கட்டிய ராஜராஜனே பிள்ளையார் கோவிலைக் கட்டியதில் எவ்வகையான முரண்பாடும் இல்லை. பிள்ளையார் வணக்கம் தமிழ்நாட்டில் கி. பி. 7-ம் நூற்றுண்டில் தோன்றியது, ராஜராஜன் 11-ம் நூற்றுண்டில் வாழ்ந்தவன்.

ராஜராஜன் தேவாரம் பாடிய மூவருக்கும் பிற்பட்டவன். மூவர் பாடலைக் கட்டளையாக்கியவன் அவனே. ஆனல் அவன் கட்டிய 'பெருவுடையார் கோயில்' பாடல் பெறவில்லை. அவன் காலத்தில் வாழ்ந்த கருவூரார் அதைப் பாடினார். அதன் பின்னரே கருவூரார் கோயில் கட்டப்பெற்றிருக்க வேண்டும்.

◉

அபூபக்கர், வாணியம்பாடி

கவிஞனின் மிகைப்பாட்டுப் பொய் அபாயம் விளைவிப்பதில்லை என்று கூறுகிறீரே, புராணங்கள் இதிகாசங்கள் இவைகளைப் புனைந்த கவிஞர்களின் வாதங்கள் சமுதாயத்திற்கு எவ்வளவு அபாயத்தை விளைவிக்கின்றன என்பது தங்களுக்குப் புலப்படவில்லையா?

முகம் என்ற சொல் தமிழ்ச் சொல்லா அல்லது வடமொழியா? விளக்கம் தேவை

கவிஞன் கற்பனை பொய்போலத் தோற்றினும் உண்மையில் மெய்யின் மற்றொரு வகையே ஆகும். இயல் நூலார் இயற்கையை மெய்யாகத் தீட்டுகின்றனர். கவிஞன் பெரும்பாலும் உள்ளத்தின் மெய்ப்பாடுகளையே (பாவங்களையே) தீட்டுகிறன். இவை புறத்தே உள்ள மெய்யை அடிப்படையாகக்கொண்டு அகத்தே உள்ள மெய்மை கலந்து கவிதைத் தோற்றம் தருகின்றன.

பொய் இருவகைப்படும். ஒன்று கூடாதது(Improbable)மற்றொன்று முடியாதது (Impossible). கவிஞன் மெய்ம்மை பெரும்பாலும் முன்னதனைக் கற்பனைப் பின்னணியாகக் கொண்டது. நாவல்களில் வரும் சித்திரங்கள் இவ்வகையானவை. அத்தகைய பாத்திரம் இருந்ததில்லை, ஆனல் இருக்கக்கூடும். இருக்கிற பாத்திரங்களை அது நம் முன் கலை உருவில் காட்டவும் செய்கிறது.

புராண இதிகாசங்கள் கூடாதது மட்டுமல்ல, முடியாததையும் கூறுகின்றன. அவற்றுள் பலவற்றில் மெய்ப்பாட்டு மெய்மையும் இல்லை. அழகுணர்ச்சிகூட இல்லை. சமூகத்திற்கோ அவை தீங்கு பயக்கின்றன. மூன்றாவது, பல புராணங்கள் கலை உணர்ச்சியுடைய கலைஞரால்எழுதப்படாமல் அப்பண்பெற்ற பலரால் பல காலத்தில் பல நோக்கத்துடன் மனம்போல சேர்க்கப்பட்ட அவியல் கூளங்களாக இருக்கின்றன. இந்நிலையில் அவை சமுதாயத்திற்கு அபாயத்தை விளைவிப்பவை மட்டுமல்ல, மக்கள் கலை உணர்ச்சியையும் மிகவும் மழுங்க வைப்பவை.

2. முகம் என்ற சொல் தமிழிலும் இருக்கிறது. வடமொழியிலும் இருக்கிறது. பொதுச்சொற்களை வடமொழிச்சொற்கள் என்று கூறுவது இடைக்கால மரபு: ஆனல் முகம் தமிழ்ச்சொல் என்றே கூறத்தகும். வடமொழியில் அதன் பொருள் 'வாய்' என்பதே. முகம் என்ற பொருளுடைய தனிச்சொல் வடமொழியில் இல்லை. தவிர முகம் என்பதற்கு வடமொழியில் வேர்ச்சொல் கிடையாது. மேலும் ஆரிய மொழிகளில் அதற்கு இனமான சொல் கிடையாது. தமிழிலோ அது 'முன்' என்பதை அடியாகக் கொண்டு பிறந்த சொல் ஆகும். இதே வேர்ச்சொல் அடியாகப் பிறந்த தமிழ்ச்சொற்கள் எண்ணற்றவை. முகடு, முளை, முகறை, முகப்பு முதலிய சொற்கள் காண்க. இறுதி இரண்டு சொற்கள் முகம் என்பதனுடன் இணையான பொருளுடைய பிற தனித்தமிழ்ச் சொற்களாகும். ஆகவே முகம் என்பது தமிழில் இருந்து நேரடியாகவோ பிறதிசை மொழிகள் வழியாகவோ வடமொழிக்குச் சென்றுள்ள ஆயிரக்கணக்கான சொற்களில் ஒன்றாகும்,

◉

மா. ஆறுமுகம், சென்னை

மனிதன் என்ற சொல் இருபாலையும் குறிக்குமா என்பதை விரிவுடன் சொல்லுங்கள்.

'அன்' இறுதி ஆண்பாலைக் குறிப்பது இக்காலத் தமிழில்தான். 'அன்' இறுதி பெறாத ஆண்பால் சொற்களும் அவ் இறுதிபெற்ற ஒன்றன்பால் பெண்பால் சொற்களும் தமிழில் உண்டு. இம்முறையில் மனிதன் இருபாலுக்கும் பொதுவான சொல் என்று கூறலாம். ஏனென்றால் அதற்குப் பெண்பால் வேறு இல்லை. இதன் ஆங்கிலச் சொல் (Man) கூட இந்நிலைப்பட்டதே.

தவிர தமிழில் மனிதர் என்று அதைப் பலர் பாலாக மட்டுமன்றி ஒன்றன்பால் பொதுமையாகவும் வழங்கலாம்.

◉

எஸ். ஏ. கப்பார், சென்னை 3

சிறிய நீர்நிலைகளுக்கே கரை இருக்கும்போது-அல்லது அமைக்கும்போது மிக ஆழமாகவுள்ள அலைகடலுக்குக் கரையில்லாதது எவ்விதம்? ஏன்? விளக்குக.

பள்ளத்தில் இருக்கும் நீருக்குக் கரை தேவையில்லை. சமநிரப்பில் தேக்கி வைப்பதற்குத்தான் கரை கட்டவேண்டும்: கடல் இயற்கையாகவே பள்ளமான இடத்தில்தான் தேங்கி நிற்கிறது. உலக நிலப்படத்தைப் பார்த்தால் நிலவுலகம் முழுவதும் கடற்பரப்புக்கு மேற்பட்ட உயரம் உடையதாகவும் கடற்பரப்பு முழுவதும் அதிலிருந்து பலபடி மிகைபட்ட ஆழமுடையதாகவும் இருப்பது காணலாம். ஆழமும் உயரமும் பல படங்களில் குறிக்கப் பட்டுள்ளன.

தவிர பள்ளத்தில் நீர் ஓடுவது நிலவுலகத்தில் மையக் கவர்ச்சி (Force of Gravitation) காரணமாகத்தான். கடல்நீர் நிலவுலகத்தின் பெரும் பகுதியும் பரந்திருப்பதால் அம் மையக் கவர்ச்சி அதை நிலவுலகத்தில் போர்வை போலவே இறுக்கிப் பற்றிக் கொள்கிறது. ஆகவே, அதற்குக் கரை வேண்டுமென்ற எண்ணம் பாமரர்களுடைய எண்ணமேயன்றி விஞ்ஞானக் கருத்தாகாது. ஏனெனில் அண்டத்தின் கவர்ச்சி ஆற்றலாலேயே (Force of Gravity) நிலவுலகமும் நிலைபெறுகிறது; திங்களும் கோள்களும் ஞாயிறும்வான்மீன்களும் அதனலேயே நிலைபெறுகின்றன.

◉

வி. பாசுராமன், பேரம்பூர்.

சிதம்பர ரகசியம் என்றால் என்ன? இதை விளக்குக.

புரோகிதர் காசு பெற்றுக்காட்டும் ஒரு காட்சி சிதம்பர ரகசியம். ஒரு நிலைக்கண்ணாடிமுன் ஒரு விளக்கைக் காட்டி இதுதான் சிதம்பர ரகசியம் என்று கூறி புரோகிதர் காசு பெறுகின்றனர். எளிதாகப் பார்க்கமுடியாதது என்ற பொருளிலும், பார்த்தால் ஏமாற்றம் தருவது என்ற பொருளிலும் பொதுமக்களும் எழுத்தாளரும் இதைப் பயன்படுத்துவதுண்டு. பெரிய ரகசியம்என்ற பொருளிலும் பயன்படுத்துவதுண்டு.

சமயத்துறை அறிஞர் இதற்கு ஒரு பொருள் கூறுகின்றனர். உருவத்தோடு கடவுளை வணங்கும் ந... நாட்டு மக்களுக்கு கடவுள் உருவ... அற்றவர் என்பதை சிதம்பர மூ... கோயில் விளக்குகிறது... அவர்கள் கூறுவர்.

முத்தமிழ்ப்பித்தன், நாஞக்கிணறு:

புருவுக்காகத் தசையை ஈந்தவன் "தன் மரபின் முன்ஞேன்" என ராமன் கூறுகிருன்.

"பிறந்தநாள் தொடங்கி யாரும்
துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநாள் உண்டோ என்னைச்
சரண்என வாழ்கின்ருனைத்
துறந்தநாட் கின்று வந்து
துன்னிஞன் சூழ்ச்சியாலே
இறந்தநா ளன்றே என்றும்
இருந்த நாளாவ தென்றுன்."

என்று கம்பரும்,

கிள்ளிவளவனைப் புகழும் மாரோகத்து நப்பசலையார் புறநானூற்றுப் பாடலிலே, "நின்மரபில் வந்தவனே சிபி," என்ற பொருள்பட "புறவின் அல்லல் சொல்லிய கறையடி, யானைவான் மருப்பெறிந்த வெண்கடைக் கோல்நிறை துலாஅம்புக்கோன் மருக, ஈதல்நின் புகழும் அன்றே" என்றும் கூறுகின்றனரே! அப்படியாஞல் உண்மையிலேயே சிபிச்சக்கரவர்த்தி எந்த மரபினன்? கம்பர், நப்பசலையார்கள் கூற்றில் எதைக் கொள்வது? எதைத் தள்ளுவது?

சோழ மரபில் முன்ஞேர்கள் பற்றிய பெயர்களும் கதைகளும் பல இடங்களில் இராமன்முன்ஞேர்கள் பற்றிய பெயர்களையும் கதைகளையும் ஒத்து இருக்கின்றன. சிபியின் கதை அவற்றுள் ஒன்று, அதஞல்தான் சங்க இலக்கியத்தில் சிபிச்சோழன் கதையாகவும் கம்பராமாயணத்தில் சிபியின்கதையாகவும் ஒரே வரலாறு கூறப்படுகிறது.

இராமனின் இக்ஷவாகு மரபு, சூரியமரபு என்று இதிகாசம் குறிக்கிறது. சோழர்மரபும் அதுவேஎன்று சோழர் பற்றிய புராண உரை குறிக்கிறது. இரண்டுமே வரலாறு அல்ல. ஆதலால் ஒரு புராண மரபைப் பார்த்து மற்ருெரு புராண மரபு எழுந்தது எனலாம். எது முந்தியது என்று இன்று முடிவாகக் கூறுவதற்கில்லை. ஆயினும் சங்க இலக்கியம் இன்று இருக்கின்ற புராணங்களைவிட பழமையானது. ஆகவே சோழருக்குப் புராணமரபு ஏற்படுத்திய புரோகிதரே அதை இராமன் மரபுக்கும் இயற்றி இருக்கக்கூடும்.

◉

ஒய். ஜேகப், லோயர்ப்பாரு எஸ்டேட்

1. 'கடவுள்' என்ற இந்த நான்கு எழுத்துக்களுக்கும் தங்களின் கருத்துப்படி அர்த்தம் என்ன? விளக்கம் தேவை.

2. மனிதன் (பிற உயிர்கள் உட்பட) பிறக்கிருன், வாழ்கிருன், இறக்கிருன் இறந்தபின் அந்த உயிரின் நிலை! என்ன?

3. மனித சரீரம் 'ஜடம்' என்ற ஓர் அசேதனப் பொருளால் கட்டப்படுகிறது என்றும், அதை ஆறு அறிவுடன் இயக்குவதற்கு 'ஆத்மா' என்றும் ஓர் அரிய சக்தி சேர்ந்து இருக்கிறது என்றும் விஞ்ஞானிகள் கருதுகிருர்கள்.

4. மேலும் ஏதேனும் ஓர் காலத்தில் ஒரு பரம அணுவை சிருஷ்டி செய்து, அதற்கு ஆறு அறிவுகள் கொண்ட அந்த ஆத்மசக்தியை விஞ்ஞானியால் அளிக்கமுடியுமா? அந்த ஆத்ம சக்தியை 'மதவாதிகள்' கடவுள், என்கிருர்கள் அர்த்தம் தெரியாமலேயே. அர்த்தம் தெரிந்த 'பகுத்தறிவு வாதிகள்,' இல்லை, அது ஓர் 'சக்தி'தான் என்கிறார்கள். அந்தச் சக்தி என்பதன் ...ாருளென்ன?

... கடவுள் என்ற சொல்லின் ...த்திற்கு முன் தென்றல் ...ம்.

2 மனிதன் உடலும் பிற உயிர்களின் உடல்களும் கோடிக்கணக்கான உயிர் அணுக்களின் சேர்க்கையால் தோன்றியவை. இந்த உயிர் அணுக்களின் முழு வளர்ச்சிபெருத ஒரு பகுதி உயிரின் கருவாகி அந்த உயிரின் பின் மரபின் வாழ்வாக அழியாது நிலைபெறுகிறது. இதை இனஉயிர் என்று கூறலாம். இந்தப் பகுதி போக, மற்றைய உயிர் அணுக்கள் இயற்கையுடன் கலந்து வேறு உயிர்களின் உணவாகச் சென்று அதன் உடலில் உள்ள உயிர் அணுக்களாகின்றன. ஆகவே 'இறந்தபின் உயிரின்நிலை' என்ற தொடர் உயிரின் இயல்பு அறியப்படாத அக்காலக் கற்பனைக் கூற்ருகும். அது உயிர் அணுவடிவில் இன உயிர்களாகவும் பிறஉயிர்ப் பகுதிகளாகவும் மாறுபடுகிறது.

3. மனித சரீரம் ஜடம் என்பதும் அதற்கு ஆருவது அறிவாக ஆத்மா இயங்குகிறது. என்பதும் பழங்காலக் கருத்து உயிர் அணுக்கள் ஒன்றுபட்டு இயங்கும்வரை உடல் இயங்குகிறது. அந்த இயக்கத்தையே உயிர் என்கிறோம். வேறு ஆத்மா என்று ஒன்று இல்லை. அதுவும் ஒரு இயக்கமே.

4. அக்கால விஞ்ஞானிகள் காணுத விமானத்தையும் அணுகுண்டையும் இக்கால விஞ்ஞானிகள் கண்டுள்ளனர். அதுபோல இக்கால விஞ்ஞானிகள் காணுத பலவற்றை வருங்கால விஞ்ஞானிகள் வளர்க்கக்கூடும். காணுததைப் பொய்யென்று கூறுவது விஞ்ஞான முறையல்ல. மெய்யென்று கூறுவதும் விஞ்ஞான முறையல்ல கற்பனையே ஆகவே ஒரு பரம அணுவை விஞ்ஞானி படைக்கமுடியுமா என்ற கேள்வி பொருளற்றது. கிட்டத்தட்ட படைக்கின்ற நிலைக்கு அவன் வந்துகொண்டிருக்கிருன் என்பது மட்டும் உண்மை.

இயற்கையைப் பழிப்பது விஞ்ஞானத்தின் முறையல்ல. விஞ்ஞானி இயற்கையைப் பின்பற்றி, கூர்ந்து நுணுகி அதன் இரகசிய உண்மைகளை அறிய முயல்கிருன். அந்த இயற்கையைத் தூண்டி, மூலத்துக்கு மூலத்தை கற்பனை செய்யும் துணிச்சல் அறிவுடைய மதவாதிக்குக்கூட இயல்பல்ல. விஞ்ஞானி அதைக் காணும் காலம் அணுகி வருகிறது. இதுபற்றிய கட்டுரைகள் தென்றலில் வேண்டும் போது வெளிவரும்.

சென்னை தியேட்டர்கள்

சித்ரா, பிராட்வே, காமதேனு, மஹாலட்சுமி & திருமகள்

மற்றும் தென்ஞடெங்கும் நடைபெறுகிறது.

அட்வான்ஸ் புக்கிங் இப்பொழுது நடைபெறுகிறது.

கன்னிமாடம்

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

அந்தப் புனிதவதிதான் - பருவத்தின் பூரிப்பால் பளிங்குச் சிலை மேனியாளாகி புதுப் பொலிவு பெற்று, இறுதியிலே ஏமாந்து, அந்த ஏக்கத்தை மறக்க ஏசுவின் பாதம் பணிந்திருக்கும் புஷ்பாதான் கதவைத் தட்டினாள்.

"ஆனந்த்!"-புஷ்பாவின் இந்தக் குரல் சுற்றுச் சுவர்களில் மோதி எதிரொலித்தது.

"புஷ்பா, எட்டிநில்! இப்போது நான் ஆனந்தனல்ல; பாதிரி பரவசம்! பரிசுத்த வாழ்வைப் பரமனின் பிள்ளைகளுக்கு எடுத்தோதும் மத குரு! நினைவிருக்கட்டும்! போ! போய்விடு! செத்துப்போன ஆசைகளுக்குப்புத்துயிர் தந்துதவஉன்னை நான் வேண்டவில்லை! போ! யாராவது பார்த்தால் எனக்கும் அவமானம்! உனக்கும் அவமானம்! நம்முடைய தவறு, நாம்சார்ந்திருக்கும் மதத்தையே சாடலாம்! ஓடிவிடு புஷ்பா! ஓடிவிடு!"

"இலட்சியம் காப்பதில், ஆடவரைக் காட்டிலும், பெண்கள் மனோதிடம் பெற்றவர்கள். நான் உம்மை நாடி வந்தது, கல்லூரி வாழ்வின் காதல் நாடகங்களை நினைவுககு இழுத்துவர அல்ல பாதிரியாரே! இன்று பாதிரியாகி, பல நாடு சுற்றி வந்திருக்கும் பரவசம், ஆனந்தன் தானா என்று பார்த்துப் போகத்தான் வந்தேன். உத்தமி புஷ்பாவை உலுத்துப் போன கருத்துக்களின் உறைவிடமென்று நீர் எண்ணியிருந்தால் தயவு செய்து மாற்றிக்கொண்டு விடும்" என்று சொல்லிவிட்டு புஷ்பா வெளியேறிவிட்டாள். ஆனால், சற்று நேரம் கடந்து மீண்டும் கதவு திறக்கப்பட்டது. புஷ்பா வரவில்லை. கன்னிமாடத்தின் தலைவி ஊர்மிளா இறந்துவிட்டதாக மரண ஓலையைத் தந்தான் மரியதாஸ்.

★

புஷ்பாவும். ஆனந்தனும், மதுரையில் ஒரே கல்லூரியில், ஒரே வகுப்பில் படித்துத் தேறியவர்கள். அழகுக்காகவும், எடுப்பான தோற்றத்திற்காகவும் கல்லூரி மாணவர்களிடையே, 'ராஜகுமாரன்' என்ற பட்டப் பெயரைப் பெற்ற ஆனந்தனிடம் புஷ்பாவுக்கு அளவுகடந்த பிரியம்! ஆசை! காதல்! ஆனந்தனிடம் பன்முறை வேண்டிக் கேட்டுக்கொண்டாள், "நான்உங்களுக்கு மாலை சூட்ட விரும்புகிறேன்" என்பதாக. "புஷ்பா, நீ யுவராணிதான்! ஆடவரின் உளம் கவரும் பேரழகுப் புதையல்தான்! ஆனால்...?"

"ஆனால்? என்ன?"

"நான் உனக்கு வகுப்புத் தோழன்! நீ எனக்கு வகுப்புத் தோழி! அவ்வளவுதான் புஷ்பா! உரையாடிக் கொண்டே, கல்லூரிக்கு ஒன்றாகச் செல்வோம், வருவோம்! அந்த(!) உறவு வேண்டாம் புஷ்பா! என்னை மன்னித்துவிடு!"

இப்படிப்பட்ட உரையாடல்கள்-கெஞ்சிக் கேட்டுக் கொள்ளும் பரிதாபத்திற்குரிய காட்சிகள் அடிக்கடி நிகழ்வதுண்டு. ஆனால் ஆனந்தன இதற்கெல்லாம் இடம்தரவில்லை. ஏன்? ஆனந்த் முற்றும்துறந்த முனிவனாகிவிடத் தீர்மானித்தானா?

★

ஊர்மிளா, அந்தக் கல்லூரி இசைப்பயிற்சிக் கழகத்தின் தலைவி. தனது இனிய குரலை போதை நீராக்கி இளைஞர்களைத் தடுமாறச் செய்திடும் சக்தி பெற்றவள். ஆனந்த், ஊர்மிளாவின்இசையிலே மயங்கினான முதலில்! ஊர்மிளாவின் சாதாரண உடல் கட்டு, அவளுடைய இசை தந்த புகழின் துணைபெற்று வாலிபப் பட்டாளத்தினருக்கு அழகுத் தேவதையாக மின்னிக்காட்டியது. இசையை சுவைத்த ஆனந்த், அவளுடைய அழகை ரசிக்க ஆரம்பித்தான் அடுத்தபடியாக!

புதியதொரு இசைக் கழகத்தின் உறுப்பினனானான்ஆனந்தன்.வீணை கற்றான். வீணையின் இன்ப ஒலியைக்கொண்டே அந்த இளங்கொடியைத்தன்மீது படர வைத்துவிடலாமென்று எண்ணினான். ஆனால் அவள்? அந்த ஊர்மிளா?

★

வெங்கடாசலம்!—மதுரையில் பெரிய நூல் வியாபாரியின் ஏகப் புதல்வன். செல்வந்தர் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுக்குக் கலைஞானம் பூஜ்யம்! மெருகு குறையாத காரிலே பவனிவர வேண்டும்; மேனி மினுக்கிக்கோடு ஆடிப்பாடி காலங் கழிக்க வேண்டும்; இதுதான் வெங்கடாசலத்தின் வாழக்கையின் இலட்சியம். அவனைத்தான் ஊர்மிளாவின் உள்ளம் எப்படியோ கவ்விக்கொண்டது. ஆனால் அந்த வெங்கடாசலமும் ஊர்மிளாவை விரும்பத்தான் செய்தான்; நிரந்தரமாக அல்ல! அவளை 'ஒருநாள் ராணி' யாக்கிக்கொள்ளத்தான் வெங்கடாசலத்தின் வெறிக்குணம் இடம் தந்தது. ஊர்மிளா அதை விரும்பவில்லை! வெறுத்தாள்.

★

முடிவு என்னவாயிற்று? நால்வரின் எண்ணக் கோட்டைகளும் நொறுங்கி உமியாகிவிட்டன. ஒவ்வொருவரும் தனித்தனித்திசையை நோக்கி பயணமாயினர். அதில், மாசுஉள்ளம்கொண்ட வெங்கடாசலம், கெட்டு, உளம்வெந்து, தரம் கெட்ட வாழ்வினரின் வரிசையில் கடைக்கோடியிலே நிற்கிறான் இன்று! வைகை நதியின் நடுவே உள்ள மணற்திட்டில் அமர்ந்து கொண்டு ஆற்றுப்பாலத்தில், மிதப்பதைப்போல ஊர்ந்துகொண்டிருக்கும் நவநாகரீகமான மோட்டார்களைப் பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறான்.

தூய்மையானவாழ்க்கையைபின் பற்றவிரும்பிய மற்ற மூவரும்-எண்ணம் ஈடேறாமல் தோல்வி கண்ட அந்த மூவரும்-நிம்மதி தேடி ஓடி அலைந்து மதாபிமானிகளானார்கள்.

இசைவாணியின் கருணையைப் பெற முடியாமல், ஆனந்தன் பாதிரியாகி 'பரவசமானார். ஆனந்தனின் அன்பைப்பெறுவதில் தோல்விகண்ட பேரழகி புஷ்பா கன்னிமாடம் புகுந்தாள். ஆசையை காசுக்குரியவனின்மேல் வைத்து முடிவிலே எதிர் நீச்சல் போட்டு துறவுமடத்தின் தலைவியானாள் இசைவாணி, ஊர்மிளா.

★

அந்தஊர்மிளாதான்மாரடைப்பு நோயால் மரணமடைந்தாள். கிறித்துவர்களையே மிகக்கொண்ட அந்தக் கிராமத்தை சோகம் கப்பிக்கொண்டது. மெழுகு திரிகள், முழுதும் எரிந்து தரையில் உருகி ஓடுவதைப் பார்த்தால் அவைகள் கூட அழுகின்றதாகத்தான் தோன்றியது. மாதாகோயில் மணி அலறிற்று.

★

இரண்டு வில்வண்டிகள் கோயிலின் முன்பாக வந்து நின்றன. புஷ்பாவும் மற்றவர்களும் ஒரு வண்டியில் ஏறிக்கொண்டார்கள். பாதிரி பரவசம் இன்னொருவண்டியில் ஏறிக்கொண்டார். வண்டிகள் கன்னிமாடத்தை நோக்கிக் கிளம்பின.

தோல்விக் கதையின் முக்கிய கதாநாயகர்களான பரவசமும், புஷ்பாவும் அடிக்கடி பார்த்துக் கொண்டார்கள். என்றாலும், அவளுடைய கன்னத்தை இறுக்கும் நீலத் துணிக்கட்டும், பரவசத்தின் இடுப்பிலே புரளும் சிவப்பு நாடாவும் அவர்கள் இருவரையும் வேறு வேறு திசைக்குத் திருப்பிக்கொண்டிருந்தன.

வண்டி ஓடிக்கொண்டிருந்தது. கன்னிமாடத்தின முகப்பில் ஓங்கி வளர்ந்து நின்ற பன்னீர் மரம் கண்ணுக்குத் தெரிந்தது.

கண்மணி

கண்மணி கூத்தாடிதான்-ஆனால் கலையை விற்றுப் பிழைக்கும் காசுப்பேயல்ல!

★

புவனா-புதுமை மணம் பரப்பும் பூச்செண்டு-பெண்மைக்கு இலக்கணம் கூறும் கலாராணி!

★

மேகநாதர், மோசக்கார வசந்தகுமார்,-இவர்கள் தென்புலத்தின் மாண்புக்கு கரை பூசக் கிளம்பிய 'நீறுபூத்த நெருப்புத்துண்டுகள்'!

★

இன்பக் காவியத்தின் கதாநாயகர்கள் துன்பக்கடலில் சிக்கித் தவிக்கிறார்கள்! முடிவு, யாரும் எதிர்பாராத புதுமையில் முடிகிறது!

விலை ரூ. 1.

கண்மணி

எழுதியவர்:
எஸ். எஸ். தென்னரசு

கிடைக்குமிடம்:
தமிழகம்
40, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14

ஸ்ரீ மீனாக்ஷி மில்ஸ் லிமிடெட்

மதுரை அண்டு மணப்பாரை

மூலதனம்

அதிகாரம் பெற்றது	ரூ.	60,00,000
கையொப்பமாகி வசூலானது	ரூ.	48,81,240

மொத்தம் கதிர்கள்	66,988
விசைத் தறிகள்	144

16 நெம்பர் முதல் 40 நெம்பர் வரை

கைத்தறிகளுக்கும், இயந்திரத் தறிகளுக்கும்,

பனியன் பாக்டரிகளுக்கும்

தேவையான

நூல்களும், மற்றும் மல், லாங்கிளாத்துகளும்

தயாரிக்கப்படுகின்றன.

நிருவாக கருத்தர்கள்:

தியாகராஜ செட்டி அன் கோ.,

திருப்பரங்குன்றம் ரோடு, மதுரை.

தந்தி விலாசம்: 'கருமுத்து'
டெலிபோன் நெ. 1 347
தபால்பெட்டி நெ. 1

விடுதலை வீரன் கரிபால்டி

(18-ம் பக்கம் தொடர்ச்சி)

குவது என்று மேலும் சிந்தித்து, கனவை நினைவாக்குவது எவ்வாறு என்று யோசித்துக் கொண்டிருந்தான். மாஜினி தேசத்தைவிட்டு ஓடவேண்டிய நிலைமை ஏற்பட்ட போதும், பணிந்து விட்டது ரோம் என்றபோதிலும் பணிந்தானில்லை கரிபால்டி ; பயந்தானில்லை பார் புகழ்வீரன். ஒருவாறாக ரோமின் குறுகிய கால சுதந்திர வாழ்வின் கடைசி நாளன்று கரிபால்டியும் மனைவி அனிட்டாவும், அவர்களைப் பின் தொடர்ந்து 4000 செஞ்சட்டை வீரர்களும் துக்கமே உருவானவர்களாக, ஆனால் சுதந்திர உணர்ச்சியில் சிறிதும் மங்காதவர்களாக ரோம் நகரின் எல்லையைத்தாண்டிச் சென்றார்கள். இதுதி மூச்சு உள்ள வரை 'சுதந்திரம் எமது பிறப்புரிமை' என்று போர்ப்பரணி பாடிடும் அந்த நாலாயிரம் நல்லவர்களை எல்லா திசைகளிலிருந்தும் மொத்தம் 65000 ஆதிக்கக்காரரின் சேனை வீரர்கள் அழித்தொழிக்க பாய்ந்த வண்ணமிருந்தனர். முட்புதர்கள் மொய்த்த தரை யெல்லாம் நடந்து எதிரிகளின் கண்களுக்குப் படாமல் அபினைன் (Appennine) மலைகளைக் கடந்து சான் மரினோ (San Marino) குடியரசின் வாசலிலே வந்து சேர்ந்தவர்கள் 1500 தேசபக்தர்கள் தாம். இவர்களை சஞ்சலத்திற்கோ மற்றெதற்கோ அஞ்சாதவர்களென்றும், எதற்கும் துணிந்த கர்ம வீரர்களென்றும் எந்த உண்மைத் தேசபக்தனும் கூறத்தயங்க மாட்டான்.

சான் மரினோ சிறியதோர் சுதந்திரக் குடியரசு. அந்த நாட்டின் சுதந்திரத் தன்மையை மதிக்க மறுத்தார்கள் ஆஸ்ட்ரிய படை வீரர்கள். ஆஸ்ட்ரிய படைத் தலைவன் அந்தச்சிறிய நாட்டைத் தரைமட்டமாக்குவதாக மிரட்டவே கரிபால்டியும் அவனது தோழர்களும் அந்தப் பிரதேசத்தை விட்டும் ஓடவேண்டியவர்களானார்கள். இதற்குள் செஞ்சட்டைப் படையினில் பெரும் பகுதியினர் இறந்தனர். எஞ்சியவர்கள் 'போ' என்றநதியி முகத்துவாரத்தை வந்தடைந்தனர். இன்னும் கொஞ்தூரம் சென்றிருந்தால் வெனிஸ் நகரத்திற்குக் கப்பலில் செல்லக்கூடிய வாய்ப்புப் பெற்றிருக்கலாம்.

ஆனால் அன்று முழுவதும் ஆகஸ்டு மாதக் கடுஞ் சூரியனின் வெப்பத்தைத் தாங்க மாட்டாது, மலேரியாவால் பீடிக்கப்பட்டு ஜன்னியால் அவதியுற்ற வண்ணம் பரிதாபமாகக் குடிககத் தண்ணீர் கேட்டவாறிருந்தாள் அனிட்டா. இறக்குந்தறுவாயிலிருந்த அனிட்டாவைச் சுமந்த வண்ணம் தன் பயணத்திற்கென இருந்த கப்பலையடையுமுன்னர், ஆஸ்ட்ரியர்கள் வேட்டை நாய்கள் போல் அங்கும் தோன்றினர். கரிபால்டியர்கள் நாலு பக்கங்களிலும் சிதறுண்டு [illegible]டினார்கள். ஆஸ்ட்ரிய குண்டு [illegible]க்கு ஒவ்வொருவராக இரை [illegible] கொண்டேயிருந்தனர். [illegible] விலே அனிட்டா கரிபால்டி [illegible] ழுவிய வாறே உயிர் நீத் [illegible] கேயே ஒரு சதுப்பு நிலத் [illegible] புதைத்துவிட்டு ஒரு நண்பனுடன் ஆஸ்ட்ரியக் கெடுமதியாளர் வேட்டை நாய் போன்றார் வசம் சிக்கி விடாமல் எங்கோ எவ்வாறோ விரைந்தோடினான்.

இவ்வாறாக சுதந்திர ஐக்கிய இத்தலியை ஏற்படுத்த வேண்டுமென்ற கனவு கனவாகவே முடிந்துவிட்டது போலும் என உலகம் நினைத்தது. சில ஆண்டுகள் கடந்தன. நியூயார்க் நகரிலே மெழுகுவர்த்தி வியாபாரியாய், மணிலாவிலே, பாஸ்டனிலே கப்பல் வியாபாரியாய்க் காலம் கழித்த கரிபால்டியை அக்காலத்தில் மக்கள் கவனித்திருக்க மாட்டார்கள்.

இந்தத் தருணத்தில் சர்டீனியாவிலே அரசனாக இருந்த உதார குணம் படைத்த வாலிபன் இரண்டாவது விக்டர் எமானுவல் (Victor Emmanuel II) கரிபால்டி திரும்பி வருவதை விரும்பினான். அதற்கேற்ப 1855-ஆம் ஆண்டில் சர்டீனியாவை அடைந்து சிறிய தீவான காப்ரீரா (Caprera) வில் விவசாய நிலத்தை விலைக்கு வாங்கி ஆர்பாட்டமின்றி சாதாரணமானவனாக வாழ்க்கையைநடததத்தொடங்கினான் கரிபால்டி. தாயற்ற தன் குழந்தைகளுடன் எளிய வாழ்வை மேற்கொணடான்.

விக்டர் எமானுவலின் பிரதம மந்திரியாக அப்போது அமைந்தவர் கெவோர் பிரபு (Count Cav[illegible]) ராஜ விசுவாசமும் புத்தி கூர்மையும் பெற்றிருந்தார். ஆஸ்ட்ரியாவுக்கும் இத்தாலிக்கு மிடையே புதியதாக ஏற்பட்ட போரில் பிரான்சு மன்னன் லூயி நெப்போலியன் இத்தாலியின் கட்சியையே ஆதரித்தான். இந்த நிலையில், 'காத்திருப்போம் காலம் வரும்' என்று எண்ணி காப்ரீராவில் காத்துக்கிடந்த கரிபால்டிக்கு அழைப்பு விடுத்தான் கெவோர். கெவோரை சந்தித்தபின், இனி சித்திபெற வேண்டிய வெறும் தத்துவமாக இருந்த குடியாட்சியை எதிர்பார்த்து ஐக்கிய மடைவரென நம்புவதைக் காட்டிலும், அன்றைய நிலையில் இத்தாலிய மக்கள் செயற்றிறன் வாய்ந்த கோனாட்சியின் கீழ் மிக விருப்பத்துடன் ஐக்கியம் பெறுவார்கள் என்ற உண்மையை கரிபால்டி உணர்ந்தான்.

தென்பகுதி அடிமைத்தளையிலிருந்து அந்த நாளிலும் மீளவில்லை. பாம்பாவின் புதல்வன் பிரான்ஸிஸ் (Francis) சிறைகளையெல்லாம் நிரப்பினான். 'தாயைப் போல் சேய், நூலைப்போல் சேலை' என்ற முதுமொழிக் கொப்ப பயங்கர ஆட்சியை 'அப்பழுக்' கின்றி நடத்தி வந்தான். நேரடியாக அவனுடன் போரில் ஈடுபட விக்டர் எமானுவல் விரும்பவில்லை தைரியமற்ற காரணத்தால். விடுதலை வீரன் கரிபால்டிக்கு அரசனும் முதன் மந்திரியும் ஆதரவு தந்தார்கள் உதட்டளவில்; ஆனால் உதவி செய்ய மறுத்தார்கள்.

'நீ அவல் கொண்டுவா ; நான் உமி கொண்டு வருகிறேன். இரண்டையும் கலந்து ஊதி ஊதி சாப்பிடுவோம்' என்றானும் ஒரு எத்தன். அதைப்போன்று, கரில்பால்டி தன்னந்தனியாக, தன்னையே நம்பி கப்பல்களைக் காண வேண்டும் தொண்டர்களைச் சேர்க்க வேண்டும்; பிரான்சிஸை எதிர்த்துப் போரிட வேண்டும். பிரான்ஸிஸ் தோல்வியடைந்தால், அவ் வெற்றி விக்டர் எமானுவலைச் சார்ந்ததாகும் ; கரிபால்டி தோற்றால் அதற்கு அவனே தான் பொறுப்பாளி-அவனேதான் தோல்வியால் ஏற்படக் கூடிய சங்கடங்களை சமாளிக்க வேண்டும். அரசனுக்கும் விடுதலை வீரனுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கை இதுவே !

கண்துஞ்சாது, பசி நோக்காது, சிரமம் பாராது ரகசியமாய்த் தனது படைவரிசைக்குத் தொண்டர்களைக் கூட்டினான். ஆயிரம் வீரர்கள் திரண்டனர். இன்றைக்கும் இத்தாலி 'அந்த ஆயிரம்' (The Thousand) என்றே உவகையுடன் அழைக்கிறது. சிசிலிய மக்கள் அவன் சங்கநாதத்தைக் கேட்டு அவன் பக்கம் திரண்டனர். தந்திக் கம்பிகளை அறுத்தனர்; காவலாளிகளை செயலற்றவர்களாக்கினர். அரசன் பிரான்சிஸினுடைய சேனையில் குழப்பம் மேலோங்கியது. ஆனால் நன்கு பயிற்சி பெற்ற 4000 ராஜாங்க படை வீரர்களுடன் மலைப் பிரதேசத்தில் மோதுண்டபோது கரிபால்டியின் வீரர்கள் பலர் அடிபட்டு வீழ்ந்தனர், தலைமகன் மெனொட்டி உட்பட. "தளபதியே, நாங்கள் இனி செய்வது யாது ?" என்று தேசபக்தர்கள் கேட்டபோது தான் ஆரம்பத்தில் குறித்தவாறு "இத்தாலியைப் பெறுவோம் ; ஒன்று படுத்துவோம் ! இன்றேல் அம் முயற்சியில் நாமனைவரும் ஒழிந்து படுவோம்" என்று முழக்கமிட்டான் கரிபால்டி. அம் முழக்கத்தை அவனைச் சூழ்ந்து நின்ற வீரர்கள் கேட்டனர் ; எதிரிகள் கேட்டனர் ; இத்தாலி கேட்டது-ஏன் ? உலகமேகேட்டது.

முழக்கமிட்டதும் பின்னால் சென்று பதுங்கினானில்லை. உருவிய வாளுடன் முன்னே சென்றான். பிரான்சிஸ் அரசனின் வீரர்கள் நன்கு பயிற்சி பெற்றிருந்தார்களாயினும், எண்ணிக்கையில் மேம்பட்டவர்களாயினும் ஏறுபோன்ற கரிபால்டியின் கர்ஜனையில் ஊக்கமும் உறுதியும் உணர்ச்சியும் பெற்ற தாயகமைந்தர்களின்எதிர்த்தாக்குதலை அவர்களால் சமாளிக்க முடியவில்லை. இந்தத் திருப்பத்திற்குப் பின்னர் 'வெற்றி யெட்டுத்திக்கு மெட்டக் கொட்டுமுரசே' என்பதே எப்பக்கத்திலும் எதிரொலித்தது.

1860-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 7-ம் நாள் விடுதலை வீரன் கரிபால்டியுடன் நேபிள்ஸ் (Naples) நகரிலே வெற்றி விழா நடத்தி ஊர்வலமாகச் சென்றான் விக்டர் எமானுவல். கரிபால்டியின் தாயகப் பற்றையும், போராடுந்திறனையும் அருந்தொண்டினையும் பாராட்டிப் புகழ்ந்து விக்டர் தந்த விலைமதிக்க முடியா பரிசில்களை ஈடு, இணையற்ற வீரன் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டான். பயன் கருதாது செயல் புரியும் பண்புடையான் தான் என்பதை உலகுக்கு உணர்த்திவிட்டான்.

"தன்னைப் பெற்றெடுத்த தாயகத்திற்குத் தொண்டு செய்வதே தான் பெற்ற விலைமதிக்கமுடியா வெகுமதியாகும்" என்று சொல்லவில்லை - எண்ணினான் கரிபால்டி. ஜூலியஸ் சீசருக்குப்பின்தோன்றிய இத்தாலிய மாவீரனென மக்கள் அவனை மனமார வாயாரப் போற்றினர். அத்தகையோன் விதைத் தானியங்கள் கொண்ட பைகள் சிலவற்றை மட்டும் தன்னுடன் கொண்டு காப்ரீராவில் உள்ள தன திருப்பிடம் நோக்கிச் சென்றான். ஆயினும் கரிபால்டியால் விதைக்கப்பட்ட சுதந்திரார்வம் விரைவிலேயே சுதந்திரத்துடன் ஐக்கியப் பட்ட மக்கள் சமூகத்தை உண்டாக்கியது.

கரிபால்டி தனது 75-வது வயதில் காப்ரீராவில் தனது அறையில் இறந்தான். சாளரத்தின் வழியாய் கடலைப் பார்த்த வண்ணமே அவன் மூச்சு நின்றது. குறிப்பிட்ட தனக்குச் சரி என்று பட்ட கொள்கைக்காக எந்தத் தனி மனிதனும் கரிபால்டியைப்போல் அவ்வளவு சிரத்தையுடன் தன்னை அர்ப்பணிக்கவில்லை என்பதே வரலாறு கண்ட முடிபு;

ஆதாரங்கள்:

எழுத்தாளர் டி. குல்ரோஸ் பீட்டி அவர்களும், ஆசிரியர் ஆர்தர் குவில்லர் கௌச் அவர்களும் கரிபால்டியைப் பற்றி வரைந்த வாழ்க்கை வரலாறுகள்.

தமிழர்களின் தலைமீது விழவிருக்கும்
இந்தியெனும் பேரிடியைத் தடுத்து
நிறுத்தத் தனித்து நின்று போராடும்
தனித் தமிழ் நூல் !

த மி ழ்

(எழுதியது : எஸ். சதாசிவம்)

விலை ரூ. 1-0-0 விற்பனைக் கழிவு 25-

விற்பனையாளர்க்குமட்டும் எங்கள் செலவில்
நூல்கள் அனுப்பிவைக்கப்படும்.

இன்பவாழ்வுப் பதிப்பகம்,

ரத்தினசபாபதிப்புரம் P.O.

இலக்கியம்

தன்னைக்கொடுமைகள் சூழ்ந்தபொழுது ஆழ்ந்து சிந்தித்து அவைகளை அகற்றப் பார்ப்பான் அறிவாளி ! ஆனல் அவ்வஞ்சக வலைகளே வலுப் பெற்று விடின் அந்நிலையை பிறருக்கு உணர்த்தி நாட்டின் நிலையை நன்கு உணரும்படி செய்வான் நற்தமிழன் ! அவ்வாறு மக்களுக்கு உணர்த்தும் திறன் அவரவர்களின் அறிவின் திறன், புலமை இவைகளைப் பொருத்திருக்கும் அல்லவா ?

ஆம் ! அன்று தமிழ் நாட்டில் வஞ்சகங்களும், சூழ்ச்சிகளும் நிறைந்திருந்தன. இதுகண்ட இன்பத் திராவிடன் தனிப்பெரும் பேராசிரியர் பெ. சுந்தரம், தனது மனோன்மணீய நாடகத்தின்மூலம், வஞ்சகத்தையும் சூழ்ச்சியையும் நன்குவிளக்குகின்றார் ! அதுமட்டுமின்றி வஞ்சகம், சூழ்ச்சி இவைகட்குஎன்றும் முடிவு-அவைகள் வெளிப்பட்டு தக்க தண்டனைதான் கிடைக்கும்-என்பதை 'குடிலன்' வாழ்க்கையின்மூலமாக தெளிவாகக்கூறுகின்றார்! இந்தக் கடைசிக் கட்டத்திலல்லவா நாடு-அதுவும் தமிழ்நாடு தற்பொழுது உள்ளது !

அண்ணாவின் ஏற்பாட்டின் படி நடந்த கலைவிழா மக்கட்கு நற் கருத்துக்களை கொடுத்ததுமன்றி, ஏழைமாணவர்கட்கு உதவியாகப் பணமும் தர இயன்றதுபோல, பேராசிரியர் இயற்றிய மனோன்மணீயம் நல்ல கருத்துக்களை நமக்கு அறிவிப்பது மட்டு

கண்ட

மன்றி தமிழனின் தனிப்பெரும் பண்பாகிய வீரம்-காதல் இவைகளை விளக்குகின்றார் ; பேராசிரியர் வீரச்சுவையைவிளக்கியிருக்கும் திறனைப்பற்றி நம்மால் இயன்ற மட்டும் ஆராய்வோம்.

' அப்பெரும் புகழுடம் பிப்படி யின்றிதோ !
சுலபமாய் நுமக்கெதி ரணுகலால் ; துதித்துப்
பலமுறை நுமது பாக்கியம் வியக்தோம்.
ஒழுக்கமற் றன்றது வெனினும், உம்மேல்
அழுக்கா றுஞ்சிறு தடைந்தோம் நும்மோடு
இத்தினம் அடையு மிணையிலாப் பெரும் புகழ்
எத்தனை ஆயிர மாயிரங் கூறிட்
டொத்ததோர் பங்கே யுறுமெனக் கெனவே
யோடுமோர் நினைவிங் கதனல், வீரர்காள்!
நீடுபோர் குறித்திவண் நின்றோர் தம்முள்.
யாரே யாயினுஞ் சீராக் தங்கள்
உயிருடம் பாதிகட் குறுமயர் வுன்னிச்
சஞ்சல மெய்துவோ ருண்டெனிற் சாற்றுமின்.
வஞ்சகமில்லை, என் வார்த்தையி துண்மை
மானமோ டவரையிம் மாநக ரதனுட்
சேமமா யின்றிருத் திடுவம். திண்ணம்.
உத்தம மாதர்க ளுண்டுமற் றுங்கே
யெத்தனை யோபேர்-இவர்க்கவர் துணையாம்.'

(அங்கம் 4. களம் 1)

அழுக்காறு கொள்வது முறையல்ல எனினும் உங்கட்கு இன்று போரினல் கிடைக்க இருக்கும் புகழை எண்ணிச் சிறிது அழுக்காறு கொண்டேன். அப்புகழில் பெரும் பங்கு உங்களுக்கும், ஒரு சிறிய பங்கே எனக்கும் கிடைக்கப்போகிறது என்று பாண்டியன் தன் படையினர்க்கு வீரம் ஊட்டுவதாக இப்பாட்டை அமைக்கிறார் ஆசிரியர். அப் பாண்டியனின் கூற்றுக்குப்பிறகு கோழை உள்ளமும் அங்கு இருக்குமோ ?

'உயிருக்கோ மற்றவைகட்கோ இடுக்கண் வரும் என்று இடிந்து சாவோர் யாரேனும் உளராயின் என்னிடம் கூறுங்கள் ? என்று கேட்கின்றான் பாண்டியன். இக்கேள்வியே வீரர்கட்டு மேலும் வீரத்தை ஊட்டியிருக்காதா ? குறைவின்றி அவர்களை (கோழைகளை) பெரு நகரத்தில் உறையும் உத்தம மாதர்களுடன் சேர்க்கின்றேன். அம்மாதர்கள் போரிட துணிவிலாதவர்கட்கு துணையாவர்' என்கிறான் பாண்டியன். இவ்வடி, போர்வீரர்களின் மனத் திரையில் புறநானூற்று மகளிர்களின் வீரச்செயல் படமென ஓடச் செய்திருக்காதா ? பின்னும் அங்கு எவன் போருக்கு போகாதவன் இருப்பான் ? கோழைகள் அக்கூட்டத்

பேராசிரியர்

தில் இல்லவே இல்லை. ஆம். இவ்வாறு நமது பேராசிரியர் அமைப்பது நமக்கே வீரத்தை உண்டாக்கி விட வில்லையா ! இப்படிப்பட்ட பேராசிரியரை காலம் அவரது 42வது வயதிலேயே அழைத்துச் சென்று விட்டது. ஆனல் அவரது புகழை, நூல்களை அழைத்துச் செல்ல இயலுங்கொல் ?

—அ. சுகுமாரன்

மாதவி

ஆரிய மாக்கள் அவர்நிலம் விட்டுச்
சீரிய உயர்தனிச் செம்மொழி வழங்கும்
தமிழகம் புகுந்து தறுகண் அருள்நிறை
தமிழர்க் கெல்லாம் தகுநிறை கற்பினைச்
சொற்றனர் எனச்சில கற்றோர் செப்பினர் ;
நற்றகு மரபினர் கற்பறி யாரோ ?
நன்றோ இதுவென நானயர்ந் திருந்தேன் ;
துன்றிய அரசினைத் துறந்திடு தூயோன்
இளங்கோ என்முன் தோன்றி "மனத்தைத்
துளங்க விட்டாய் துயருனக் கேனே ?"
என்றனர் ; என்துயர் இதுவெனச் சொன்னேன்
"மதியிலி கேட்பாய் ! மாதவி வாழ்வு
புதுவ தன்றே புகல்வதை யறியாய்
ஆட்டம் பயின்றாள் அரசனும் விரும்பும்
கோட்டமில் குணத்தாள் கோவலன் றன்மேல்
நாட்டங் கொண்டாள் நல்லற மென்னும்
இல்லறம் பூண்டாள் எழில்மணி மேகலைப்
பேறும் பெற்றாள்இப் பெரிய வாழ்வு
மாறுமோர் நாளென மனத்திலும் நினையாள்
ஆயினும் அந்தோ அரசன் பிழையால்
ஆயினன் பிணமென அறைந்தனர் அறிந்தோர்
தீதிலாக் கோவலன் தீர்ந்தனன் என்ற
தீமொழி கேட்டுத் திகைத்தனள் பதைத்தனள்
போம்வழி யாதெனப் புலம்பினள் அன்புடைக்
கொழுநன் மாண்டான் குவலய வாழ்வு
தழுவுதல் வேண்டாள் தன்பொருள் யாவும்
அறத்திற் காக்கி அறவணர்ச் சார்ந்து
புறச்செல வொழிந்து புகுந்தனள் பள்ளி
இன்பந் துறந்தாள் இசைநடந் துறந்தாள்
என்பும் அன்பால் இளகிடப் பெற்றாள்
அதனுடன் அமையா தருள்மணி மேகலை
பித்துல கறுத்துப் பெருநிலை பெறவே
துறவு பூணத் தூய்மை யாக்கினள்
மறமனத் தாயின் மாற்றம் வெறுத்தாள்
இனையள் அன்னை என்னுயிர் மாதவி
அனையள் பிறந்த அருமை நாட்டில்
மானமே மதிக்கும் மாந்தர் வாழ்ந்தனர்
இங்கோ வந்தவர் இசைத்தனர் கற்பை ?
ஆரிய இலக்கியம் அரிவையர் பண்பைச்
சீரிய முறையிற் செப்பிய துண்டோ ?
இழிவாம் இழிவாம்" என்றவர் மறைந்தார்
நன்றவர் மொழியே வாழிய கற்பே !

முடியரசன்

தந்தி. "ராஜா". போன் நெ 268

சங்ககால மங்கை !

சங்ககால மங்கையர் கச்சணிந்து கூந்தலுக்கு சந்தனப் புகையும், அகிற்புகையும், ஊட்டி அதைப் பின்னி விட்டிருப்பர். காதில் குழை; கழுத்தில் ஆரம்; கைகளில் ஆம்பல் தண்டால் செய்த தொடி; விரல்களில் மோதிரம் இடையில் மேகலை; காலில் நூபுரம்; சதங்கை முதலிய அணிகள் பூண்டிருந்தனராம்!"

உயர்ந்த நகைகள் - நாணயம் - நம்பிக்கை
இதற்குச் சிறந்த இடம்

பி. ஏ. ராஜு செட்டியார்
சுவர்ண மாளிகை !

வைரம், தங்கம், வெள்ளி, நகைகள் நாணயத்தோடும் நம்பிக்கையோடும் கிடைக்கும் இடம்

பி. ஏ. ராஜு செட்டியார் & பிரதர்

சுவர்ணமாளிகை, கோயமுத்தூர்.

Edited and Published by Kannadasan, 2/127, Mount Road, Madras-6. Printed
[redacted]